
OOMAI NENJIN SONTHAM
MALLIKA MANIVANNAN


OOMAI NENJIN SONTHAM
MALLIKA MANIVANNAN

கணபதியே அருள்வாய்

# ஊமை நெஞ்சின் சொந்தம்

## அத்தியாயம் ஒன்று:

அந்த திருமண மண்டபம் பரபரப்பாக இருந்தது. காலையில் நிச்சயம் மாலையில் வரவேற்பு, நாளை காலைத் திருமணம் என்று வரிசையாக நிகழ்வுகள் இருந்ததால் ஆளுக்கொரு வேலையாக இழுத்துப் போட்டு செய்துக் கொண்டிருந்தனர்.

ஏனென்றால் மாப்பிள்ளை வீடு, பெண் வீடு என்று அங்கு தனித்தனியாக எதுவும் கிடையாது...

மாப்பிள்ளை சிபி சக்ரவர்த்தி, பெண் ராதா இருவரும் நெருங்கிய உறவு. அதாகப்பட்டது ராதாவின் தாய்மாமாவின் பையன் தான் சிபி, நெருங்கிய உறவு மட்டுமல்ல ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள் கூட....

ஆம், சிபியின் அத்தை ராஜலக்ஷ்மி தன் கணவனை இழந்து இரு பெண் பிள்ளைகள் வனிதா மற்றும் ராதாவோடு நிராதரவாக நின்ற போது சற்றும் யோசிக்காமல் சிபியின் தந்தை நடராஜன் கூட அழைத்துக் கொண்டார்.

ராஜலக்ஷ்மிக்கு அப்போது சிறு வயது தான், கைக்குழந்தையாக ராதா, வனிதாவிற்கு மூன்று வயது. அப்போது இருந்து அண்ணன் நடராஜன் வீட்டில் தான் வாசம் ராஜலக்ஷ்மிக்கு.

நடராஜனுக்கும் தேவிக்கும் மூன்று ஆண் மகன்கள், தேவி அவரின் மனைவி. சிபி சக்கரவர்த்தி நடுவில் இருக்க, பெரியவன் அருள்மொழி, சிறியவன் மாமல்லவர்மன், நடராஜனின் தந்தை ஈஸ்வரருக்கு இலக்கியங்கள் மீது தீராக் காதல். அதனைக் கொண்டே இப்பெயர் காரணங்கள்.

இந்த வயதில் அவர் தன் மனைவி சுலோக்சனாவுடன் வரவேற்பில் நின்று எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார். அவரின் முகத்தில் அத்தனை மகிழ்ச்சி. பின்பு பெரியவன் அருண்மொழிக்கு மகளின் மூத்த

பெண் வனிதாவை திருமணம் செய்து வைத்திருந்தார். அவர்களின் திருமணம் முடிந்து ஐந்து வருடமாகிறது.

சிறு வயதில் இருந்தே அருண்மொழிக்கு வனிதா மற்றும் சிபி சக்ரவர்த்திக்கு ராதா என்று சொல்லிச் சொல்லி தான் வளர்த்தனர். அவர்களும் அப்படித்தான் வளர்ந்தனர்.

அதுவும் சிறு வயதில் இருந்தே இந்த எண்ணத்தைப் பயிரிட்டதால் அது வேரூன்றி விருட்சமாகி நின்றது சிபியின் மனதில். அவன் என்றும் ராதாவிடம் வாய் விட்டு தன் காதலை சொல்லியிருக்கவில்லை என்றாலும் அது எல்லோருக்கும் தெரியும். அவன் செயல் அவன் நடவடிக்கை எல்லாம் ராதாவின் விருப்பு வெறுப்புகளைக் கொண்டே இருக்கும்.

சிபி செய்யாத ஒரே செயல், அவன் இஞ்ஜினீயரிங் படிக்க வேண்டும் என்று ராதா விருப்பப்பட, அவன் தேர்ந்தெடுத்தது விவசாயம் சார்ந்த படிப்பு. அவன் எம் எஸ் சீ அக்ரி பட்டதாரி.

அவனின் குலத் தொழில் விவசாயம். அதனைக் கொண்டும் அவன் அந்த படிப்பை தேர்ந்தெடுத்தான்... அதுவுமன்றி அவன் விவசாயி ஆனது படித்த பிறகு அல்ல, அவனின் நினைவு தெரிந்த நாள் முதல் வாய்க்கா வரப்பும், களத்துமேடும் தான் அவனின் உற்ற நண்பர்கள், அவன் உயிர் மூச்சும் விவசாயமே... நான் பார்க்குற லாபம் அடுத்தவனுக்கு உணவு கொடுக்குது, இதுதான் என் வேலை, இதைவிட என்ன வேண்டும் என்று விட்டான்.

சிபி மிகவும் பிடிவாதக்காரன், கோபக்காரன்... அவன் சொல்லிற்கு மறுபேச்சு எப்போதும் கேட்கப் பிரியப்பட மாட்டான். அப்படி ஒரு பிடிவாதம், அவன் சொன்னது தான் எப்போதும் நடக்க வேண்டும்.

வனிதாவை ஒரு டிகிரி படிக்க வைத்தனர், அவள் அதை முடித்தவுடன் அருண்மொழியுடன் திருமணம் முடித்தனர். ராதா படிக்க வேண்டும் என்று மிகவும் விருப்பப்பட்டதால், அவளை இஞ்ஜிநீயரிங் படிக்க வைத்திருந்தனர்... இதோ இரண்டு நாட்களுக்கு முன் இறுதித் தேர்வுகள் முடிய... அதற்கு தகுந்தார் போல திருமண நாள் குறித்து இன்று நிச்சயம், நாளைத் திருமணம்.

சிபி விண்ணில் தான் பறந்து கொண்டிருந்தான். இருபத்து நான்கு வயதில் அவனுக்கு திருமணம் அதிகம் தான். ஆனால் ராதாவிற்கு இப்போது இருபத்தி இரண்டு வயது என்பதால் ராஜலக்ஷ்மி திருமணத்திற்கு அவசரப்பட... இதோ நாளை திருமணம்.

முகம் பரிபூரண சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்க... சிபி மணமகளை ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தான் மனைவி என்று சொல்லி சொல்லி வளர்க்கப்பட்டாலும், அது நனவாகப் போகும் நாள் அல்லவா.

“எங்கடா நேரமாச்சு இன்னும் பொண்ணு வரலை, ஆரம்பிக்கவேயில்லை நலுங்கு வைக்க...” என்று தம்பி மாமல்லவர்மனின் காதைக் கடிக்க...

“தெரியலை சிபி... வீட்ல மேக் அப் செஞ்சு அண்ணியை இங்கே கூட்டிகிட்டு வருவாங்க” என்றான்.

சிறுவயதில் இருந்தே ராதாவை அண்ணி என்று அழைக்கவே பழக்கப்பட்டு இருந்தான். ராதாவை ஒத்த வயதினனே...

“ம், சரி!” என்று தான் சிபிக்கு வெளியில் சொல்லத் தோன்றியது. உள்ளுக்குள், “அவ மேக் அப் போட்டா மட்டும் அழகு ஆகிடுவாளா?” என்ற நக்கல் மனதினில் உதிக்காமல் இல்லை.

ராதா பார்க்க நன்றாக தான் இருப்பாள். ஆனால் சூப்பர் அழகி, ஆஹா! ஓஹோ! பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்பது போல எல்லாமில்லை.

நாம் பக்கத்துக்கு வீட்டில் பார்ப்பது போல இருக்கும் லட்சணமான பெண். ஆனால் சிபியின் காதல் அழகு கொண்டு இல்லை... அது சொல்லிச் சொல்லி வளர்க்கப்பட்டதால் வந்தது... பிறந்த குழந்தைக்கு அம்மா எப்படி இருந்தாலும் அம்மா தானே! அழகிகளா அம்மா! இல்லையே! அது போல இவள் தான் என் மனைவியாக வரப் போகிறாள் என்ற காதலோடு கூடிய உரிமை அதிகம்.

அவன் பொருள் என்ற எண்ணம்.

எண்ணங்கள் சில சமயம் வண்ணமயமாவது இல்லை.

எல்லா உறவுகளும் ஆங்காங்கே அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, சில பேர் வேலைகளை இழுத்துப் போட்டு செய்து கொண்டிருக்க...

என்னவோ சரியில்லாத மாதிரி திடீரென்று சிபிக்கு ஒரு தோற்றம். மண்டபம் அவர்களின் ஊராட்சிய விட்டு சற்று தூரமாக இருந்தது. திருமணத்திற்காக இரண்டு வேன்கள் வாடகைக்கு பேசியிருக்க, அதுதான் ட்ரிப் அடித்துக் கொண்டு இருந்தது.

அப்போதுதான் அருண்மொழியும் வனிதாவும் வந்தனர். அவர்களுடன் மூன்று வயது குழந்தை மணிமேகலையும் வந்தவள், சித்தப்பாவை பார்த்தவுடன், “சித்தப்பா!” என்று சொல்லித் தாவி வந்து ஏறினாள்.

“மேகி, இறங்கு! சித்தப்பா ஷர்ட் கசங்கும்!” என்று அருண்மொழி அவளை வாங்க முற்பட...

“இருந்துட்டு போறா! என் பாப்பா கசக்காம யாரு கசக்குவா!” என்று சிபி அவளை இறக்கி விட மறுத்தான். குழந்தைகள் என்றால் சிபிக்கு கொள்ளை பிரியம் எப்போதும்... அதுவும் மணிமேகலை அழகு குழந்தை.

சித்தப்பாவின் கழுத்தை இறுக்கி கட்டிக் கொள்ள, “மேகி! அப்பா சொல்றாங்கள்ள, இறங்கு!” என்று அம்மாவும் அதட்ட,

“அண்ணி! அவ குழந்தை! இப்படி அவ கிட்ட பேசாதீங்க! போங்க!” என்று சிபி வனிதாவை அதட்டினான்.

“என் பொண்ணை நான் அதட்டக்கூடாதாம்! இவன் என்னை அதட்டுவானாம்!” என்று வனிதா முறைத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

சிபி அப்படித்தான் யாரையும் அதட்டுவதற்கோ பேசுவதற்கோ யோசிக்கவே மாட்டான். அவன் இருக்கும் இடத்தில் அவன் தான் ராஜா. அதைத்தான் அவன் விரும்புவான்.

சிறு வயதில் இருந்து கூட வளர்ந்த போது வனிதா இதை பார்த்து வளர்ந்தவள் தான். ஆனால் அப்போது எல்லாம் ஒன்றும்

தோன்றவில்லை. இப்போது அண்ணி என்றான பிறகு, இவன் யார் என்னை அதட்டுவதற்கு என்று அவ்வப்போது தோன்றுவது உண்டு.

ஆனால் அருண்மொழியே சிபியின் வார்த்தைக்கு மறு பேச்சு பேசாத போது அவள் என்ன செய்வாள். “என் தங்கச்சி வந்தாவது, இவனை அடக்குறாளா பார்ப்போம்!” என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றாள். கூடவே அவ தான் இவனைப் பார்த்தா பேசவே தயங்குவாளே... என்றும் தோன்றியது.

ராதாவிற்கு எப்போதும் சிபியின் அதட்டல், உருட்டல், மிரட்டல்கள் பார்த்தால் பயம். ஆனால் என்ன செய்வது அது அவனின் கூடப் பிறந்தது. அதை அவன் வேண்டுமென்று செய்ய மாட்டான், சிபியின் இயல்பே அதுதான்.

“நீ சித்தப்பா சட்டையைக் கசக்குடா செல்லம்!” என்று மேகலையை உச்சி முகர்ந்தான் சிபி.. கூடவே, “அண்ணா! எங்கே இன்னும் ராதாவைக் கூட்டிட்டு வரலை!” என்று கேட்கும் போதே,

“என்ன மாப்ள உனக்கு அவசரம்... காலம் காலமா வீட்ல தங்கச்சியை பார்த்து வளர்ந்துட்டு, இப்போ என்ன?” என்றபடி தோழர்கள் வர...

மேகலை அவர்களின் குரலுக்கு பயந்து தன் அப்பாவிடம் தாவியது.

“ஏண்டா, டேய்! குழந்தையை இப்படியா பயமுறுத்துவீங்க!” என்று சிபி அதட்டினான்.

“என்ன மாப்ள பண்றது? அதையாவது செய்வோம்! உன்னை மாதிரி இந்த வயசுல கல்யாணத்தை பத்தி யோசிக்க முடியுமா! எங்கப்பா முதல்ல நான் உன்னை படிக்க வைக்க செலவு பண்ணின பணத்தைச் சம்பாரிச்சு குடுடான்னு சொல்றார்” என்று நண்பன் வாசு கவலைப்பட,

“உன் அப்பால்ல விவரமா தான் இருப்பார்! நீ எப்படியும் அதுக்கு அப்புறம் குடுக்க மாட்டேன்னு தெரியும்!” என்று சிபி நக்கலடித்தான்.

“நீ ஏண்டி பேச மாட்ட! எங்கப்பா என்னை வளர்த்த மாதிரி, நான் என் புள்ளைய வளர்க்கணுமுங்கோ அதுக்கு காசு வேணுமுங்கோ!”

“டேய்! நீ முதல்ல குடுறா! அப்போ தான் உங்கப்பா உனக்கு கல்யாணம் பண்ணுவார்! அப்புறம் தாண்டி குழந்தையே வரும்!” என்று சிபியும் விடாமல் நக்கலடிக்க,

சுற்றி இருந்த நண்பன் ஒருவன் சிரிக்க, “இவனைப் பாருடா சிரிக்கறான்! எனக்காவது நான் பணம் சம்பாரிச்சு குடுத்தா கல்யாணம்! டேய் மாப்பிள்ளை, உனக்கு அது கூட கிடையாதுடி. உன் ரெண்டு தங்கச்சிக்கும் பண்ணினதுக்கு அப்புறம் தான்”

அந்த நண்பன் வாய் மேல் கை வைத்து, மூடு வாயை என்பது போல சைகை செய்து, “வந்தியா! நாலு பொண்ணுங்களை பார்த்து சைட் அடிச்சியா! போனியான்னு இல்லாம! அங்க பாருடா..” என்று அங்கிருந்த சில பெண்களை காட்டினான்.

“ஏண்டா? எனக்கு வாழ்க்கைக்கும் கல்யாணம் ஆகக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டியா… எவன் கையிலாவது சிக்கினோம், துவைசிடுவாங்க அடங்கு!” என்று வாசு சொல்ல…

இப்படியாக நண்பர்கள் பேச்சுக் களைக்கட்டியது… நேரம் தான் போனது… எங்கே பெண்ணைக் காணோம் என்று நடராஜன் தேவிக்கு போன் செய்தார்.

நிறைந்த சுமங்கலி என்பதால் அவர் தான் ராதாவை அழைத்து வரவேண்டும் என்று ராஜலக்ஷ்மி சொல்லி இருந்தார். அதனால் அவருக்கு நடராஜன் அழைக்க,

“எங்க தேவி, இன்னும் கிளம்பலையா?”

“இல்லைங்க, அது…” என்று தடுமாறினார் தேவி, அவரின் தடுமாற்றம் நடராஜனுக்கு பதட்டத்தைக் கொடுத்தது.

“என்ன சொல்லு?” என்று நடராஜன் எரிந்து விழுந்தார்…

“ஸ்னேகிதிங்க வந்திருக்காங்க, தெரு முக்குல நிக்கறாங்க, நான் போய் கை ஆட்டினா வந்துடுவாங்கன்னு வீட்ல இருந்த என்கிட்ட சொல்லிட்டு வாசலுக்கு போச்சுங்க… ஆனா காணோம்!”

“நானும் தெரு முனை வரை போய் பார்த்துட்டு வந்துட்டேன், உங்களுக்கு போன் போடலாம்னு இருந்தேன்! அதுக்குள்ள நீங்க கூப்பிட்டுட்டீங்க!” என்றார். சொல்லும் போதே அழுகை வந்தது பதட்டத்தில்.

“என்னது ராதவைக் காணோமா?” என்று நடராஜன் பதட்டத்தில் சத்தமாகக் கேட்க... அந்த இடமே பரபரப்பானது.

பொண்ணைக் காணோம் என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவியது. அடுத்த நொடி, “படிக்கற இடத்துல ஏதாவது தொடுப்பு இருந்திருக்குமோ, இதுக்கு தான் வெளில அனுப்பி படிக்க வைக்கக் கூடாது” என்ற மாதிரி பேச்சுக்கள் இன்னும் தீயாய் கிளம்பியது...

சிபி டென்ஷன் ஆனான், என்ன என்று ஒன்றும் புரியவில்லை. அவளை கடத்திக் கொண்டு போகும் அளவெல்லாம் அங்கே எதுவும் இல்லை என்று அறிவிற்கு புரிந்தாலும், மனது அவளுக்கு என்ன ஆபத்தோ என்று பதைத்தது. தப்பாக யாராவது பேசினால் அடித்துக் துவைக்க மனம் விழைந்தது.

அவன் வேஷ்டியை மடித்துக் கட்டி தேட கிளம்பவும், “நீ இரு! ஒருவேளை அவ இங்க வந்தா?” என்று அருண் மொழியும், மாமல்லவர்மனும் கிளம்பினர்.

கூட நடராஜன், அவர் ஒரு பக்கம் மற்றொரு உறவினரோடு கிளம்பினார்.

சிபியின் நண்பன் வாசுவும் இன்னொரு நண்பனுடன் கிளம்பினான். ஐந்து நிமிடம் கூட இல்லை, ஆளுக்கொருவராக பறந்தனர் ஊருக்குள்.

ராஜலக்ஷ்மி அப்படியே அமர்ந்து விட்டார். வனிதாவிற்கு அம்மாவை பார்க்கவே சரியாக இருந்தது. ஈஸ்வரரும் சுலோச்சனாவும் மகளிடம் விரைந்தனர்.

“தேவி ஏதாவது தெரியாம சொல்லுவா! அங்க தான் இருப்பா! இப்ப கூட்டிட்டு வந்துடுவாங்க!” என்று மகளைத் தேற்ற முனைந்தனர்.

எல்லோரும் ராஜலக்ஷ்மியை கவனிக்க, சிபியை கவனிக்க மறந்தனர்.

ஒரு ஐந்து நிமிடங்கள் பொறுத்தவன்... என்னவோ ஏதோவென்ற பதட்டம் அதிகமாகவும், அங்கே இருக்க முடியாமல், அவனும் தேடிச் செல்ல, அவனின் டூ வீலர் எடுத்தான்.

உறவு முறையில் அவனுக்கு சித்தப்பாவான ஒருவர், இதைப் பார்த்து, “தனியா போகாத!” என்று அவரும் உடன் ஏறிக்கொள்ள... வீட்டை நோக்கி வண்டியை விட்டான்.

அவன் பாதி வழி செல்லுமுன்னே... வாசு அவனை எதிர்கொண்டவன், கை காட்டி வண்டியை நிறுத்தினான்.

“என்னடா?” என்று சிபி நிறுத்த,

“மாப்ள, ஒரு நிமிஷம் வாடா!” என்று அவனும் வண்டியை விட்டு இறங்கி ஒதுங்கினான்.

“என்னடா?” என்று பதட்டமாக சிபி அவன் புறம் செல்ல.

“மாப்ள! எனக்கு இதை சொல்றது சரியா இல்லையான்னு கூட தெரியலை... நான் சில தடவ தங்கச்சியை என் பக்கத்துக்கு காடுக்காரன் ஒரு பய இஞ்ஜிநீயருக்கு படிச்சானே அவன் கூட பார்த்திருக்கேன். ஒரு தடவை அவனை கேட்கக் கூட செஞ்சேன், உனக்கு என்னடா பேச்சுன்னு, அவன் படிச்ச காலேஜ்ல ஜூனியர்ன்னு சொன்னான். சரி படிக்கற பசங்க, நம்ம பொண்ணை நம்மளே தப்பா நினைக்க கூடாதுன்னு விட்டுடேன்...”

“இப்போ சந்தேகம் வரவும், அவங்க வீட்டுக்குப் போய் அவன் இருக்கானான்னு பார்த்தேன், அவன் இல்லை... அவன் தங்கச்சி அண்ணன் காலையிலயே வெள்ளனே போயிடுசுங்குது... எதுக்கும் ஒரு தரம் பார்த்துருவோமா” என்றான், கேட்கும்போது அவன் முகத்தில் அவ்வளவு பயம், எங்கே சிபி அடித்து விடுவானோ என்று.

நிமிடத்தில் கை நீட்டக் கூடியவன் சிபி, “என்னடா சொல்ற!” என்று சிபி வாய் விட்டுக் கேட்கவில்லை, அவன் பார்த்த பார்வை...

“நான் தப்பா சொல்லலைடா, ஒரு சதவிகிதம் அப்படி இருந்துட்டா...” என்றான் பயத்தோடு.

வாசு அப்படி தேவையில்லாமல், சரியாகத் தெரியாமல் யாரைப் பற்றியும் பேசமாட்டான்... அவன் பேச்சிற்கு செவி சாய்த்து, “எங்கடா போய் பார்ப்போம்” என்றான்.

“அவினாசி ரெஜிஸ்டர் ஆபீஸ்ல” என்று வாசு சொல்லும்போதே, சிபியின் முகத்தில் ரௌத்திரம்...

“என்னடா சொல்ற?” என்று சிபி கேட்ட விதம் வாசுவிற்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.

நேராக ரெஜிஸ்ட்ரர் ஆஃபிஸ் சென்றனர்.. அங்கே மணமக்கள் போல யாருமில்லை... அங்கிருந்த அட்டென்டரிடம், “இப்ப ஏதாவது இங்க கல்யாணம் நடந்ததா?” என்று கேட்க...

“தோ! நோட்டிஸ் போர்ட்ல இருக்கா பாருங்க!” என்றான்.

இருந்தது, ஸ்பஷ்டமாக இருந்தது... கண்ணன் என்று மணமகனின் பெயர் இருக்க, ராதா என்று மணமகளின் பெயர் இருந்தது. விலாசம் அவர்களின் வீட்டு விலாசமே.

இங்கே இருந்தால், அது உடனடித் திருமணம் அல்ல... கண்டிப்பாகக் ஒரு மாதத்தில் இருந்து, பதினைந்து நாட்களுக்கு முன்னமே அங்கே அந்த அறிவிப்பு போட்டிருப்பர்.

சிபியின் கோபம், அவனின் சிவந்த கண்களைப் பார்த்தாலே யாருக்கு தெரியும்.

வாசுவின் சட்டையைப் பிடித்து, “என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லாம விட்டுட்டியேடா!” என்று கேட்டு அவனை பிடித்திருந்த பிடியை விட... அவன் பிடித்த வேகத்திற்கும், விட்ட வேகத்திற்கும் வாசு தூர விழுந்தான்.

அப்போதும் விரைவாக எழுந்த வாசு, “மாப்ள கோவப்படாத... சொன்னா கேளு... முதல்ல வீட்ல சொல்லுவோம்!” என்றான்.

“வீட்ல என்னடா சொல்றது! எங்கிருந்தாலும் தேடித் பிடிச்சு அவங்களை என்ன பண்றேன்னு பாரு...”

“டேய், அந்த பொண்ணு கல்யாணம் பண்ணிக்கிச்சு, இனி நீ என்ன பண்ண முடியும்! உன் வீட்டுப் பொண்ணு, பொறுமையா இரு! வீட்ல சொல்லலாம்! அவங்க எதுனாலும் செய்யட்டும்…”

“என்னடா அவங்க செய்யறது, பொண்டாட்டி, பொண்டாட்டின்னு சொல்லித் தாண்டா என்னை வளர்த்தாங்க! என் பொண்டாட்டி அடுத்தவனோட போறதா, எவ்வளவு அசிங்கம் எனக்கு, அவங்க வீடு எங்கடா?” என்று சிபி கேட்க,

வாசு இவனைப் பேசி சமாளிக்க முடியாது என்று புரிந்தவனாக, வண்டியை எடுத்துக் கொண்டு சிபியை விட்டுப் பறந்தான். முதலில் சிபியின் அப்பாவிடம் சொல்ல…

வாசு மறந்தது, அந்த நோட்டிஸ் ஒட்டியிருந்ததில் கண்ணனின் விலாசம் இருக்கும் என்பதை…

சிபி அவனின் வண்டியை எடுத்துக் கொண்டு, அங்கே போட்டிருந்த விலாசத்தை நோக்கி வண்டியை விரட்டினான்.

அதற்குள் அவனுடன் வந்த சித்தப்பா நடராஜனுக்கு தொலைபேசியில் அழைத்து விவரத்தை சொல்லவும்… எல்லோரும் கண்ணனின் வீட்டை நோக்கி படையெடுத்தனர்…

அதற்குள் மணமக்கள் காவல் நிலையத்திற்கு சென்று காவல் ஆய்வாளரை அணுகி பாதுக்காப்புக் கேட்டிருந்தனர்.

மணமக்கள் காவல் நிலையத்தில் இருப்பது தெரிந்து… எல்லோரும் காவல் நிலையத்திற்கு விரைந்தனர்.

அவர்கள் இருவரும் அங்கே நிற்பதை பார்த்து கண்மண் தெரியாத கோபம் சிபிக்குள் பொங்கியது…

அதுவும் சிபியைப் பார்த்ததும் பயத்தில், ராதா கண்ணன் பின் மறைந்தாள்… அது இன்னும் ஒரு ஆக்ரோஷ்தைக் சிபிக்குள் கொடுக்க…

காவல் நிலையம் என்றும் பார்க்காமல். க்ஷண நேரத்தில் அவர்கள் அருகில் விரைந்து, கண்ணனும் ராதாவும் விலகும் முன், கண்ணனை ஒரு

உதை விட, அவன் அங்கேயே தூரமாக விழுந்தான். இரு போலீசார் வந்து அவசரமாக சிபியை பிடித்து மேலும் அடிக்க விடாமல் தடுத்தனர்.

## அத்தியாயம் இரண்டு :

ஒரு மாதிரி கொதி நிலையில் இருந்தான் சிபி... இரு போலீசார் பிடித்து நிறுத்தியிருந்தனர்.

“டேய், என்ன? எங்க வந்து கை வைக்கிற, போலிஸ் ஸ்டேஷன்ல வந்து அடிக்கற அளவுக்கு நீ பெரிய ஆளா?” என்று ஆணையாளர் வேறு அவனை கோபத்தோடு நெருங்கினார்.

சிபி ஆதங்கத்தோடு, “இங்க என்ன சார், அவன் எங்க இருந்தாலும் அடிப்பேன், நாளைக்கு எங்க கல்யாணம் சார், இன்னைக்கு வீடு முழுசும் ஜனம், மண்டபத்துல இருக்கோம், இப்படி பண்ணியிருக்கான்... இப்ப பண்றவங்க முன்னமே செஞ்சிருக்க வேண்டியது தானே...”

“என்னை இப்படி அசிங்கப்படுத்த இவங்க யாரு?” என்று சிபி கேட்ட விதம், ஆணையாளரின் கோபத்தைக் கூட மட்டுபடுத்தியது. அவன் கேட்பது நியாயம் தானே.

அதற்குள் ராதா சென்று கண்ணனை கை கொடுத்து தூக்கி இருந்தாள்.

மீண்டும் ஆத்திரத்தில் சிபி கண்ணன் அருகில் போக முயல, “அவரை அடிக்காதீங்க” என்றாள் ராதா தைரியமாக...

“ஏய்! நீ பேசாதடி! ஒரு வார்த்தை என்கிட்டே பேசின கொன்னே போட்டுடுவேன்... இத்தனை நாள் என் வீட்ல வளர்ந்திருக்க, என்னை அசிங்கமா பேச வெச்சிடாத.. உனக்கு என்னோட எந்த பேச்சும் கூடாது!” என்று கோபத்தில் கத்தினான்.

“உன்னை மாதிரி ஒரு பிறவியை நான் கல்யாணம் பண்ண நினைச்சதே எனக்கு அசிங்கமா இருக்கு” என்று சிபி பேச...

கேட்ட ராதாவின் கண்களில் மளமளவென்று கண்ணீர் இறங்க...

“ப்ளீஸ்! இந்த மாதிரி ஒரு நிலைமை வந்ததுக்கு நான் தான் காரணம்!

எதுன்னாலும் அவளைப் பேசாதீங்க!” என்று கண்ணன் பேசவும்...

ஆத்திரத்தில் திரும்ப வார்த்தையை விட போன சிபியை, நடராஜன் அவசரமாக வந்து அடக்கினார். “அமைதியாயிரு சிபி” என்று...

“அப்பா! இதை அப்படியே விட சொல்றீங்களா” என்று இன்னும் கோபப்பட...

“வர்மா, நீ அவனைக் கூட்டிகிட்டு வெளிய போ!” என்றார்...

சிபியைக் கை பிடித்து இழுத்துப் போனான் வர்மன்... சிபியால் உதற முடியவில்லை, வர்மனின் பிடி அப்படி...

“வா! கோபப்பட்டு ஒன்னும் ஆகப் போறது இல்லை!” என்று பிடித்து இழுத்து சென்றான்.

“உங்கம்மாவை கூட நீ நினைக்கலைல்ல, ஏன் இப்படிப் பண்ணின? ஒரு வார்த்தை எங்க கிட்ட சொல்லியிருக்கலாம்” என்று நடராஜன் கேட்க...

ராதா வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை... கண்களில் கண்ணீர் வழிய மௌனமாக தான் நின்றிருந்தாள்.

“என் பசங்களை விடவும் உங்களை தானே நான் பார்த்துப் பார்த்து வளர்தேன்! ஏன் இப்படி பண்ணின...? உங்கம்மா எப்படி இதை தாங்குவா” என்று அவர் கேட்க...

எந்த பதிலும் பேசவில்லை, அழுதபடி அமைதியாகத் தான் நின்றிருந்தாள்.

அருண்மொழி தான், “ஏதாவது இந்த பய உன்னைக் கட்டாயபடுத்திக் கல்யாணம் பண்ணிகிட்டானா?” என்று கேட்க...

“இல்லை! இல்லை!” என்று அதற்கு மட்டும் பதில் சொன்னாள்.. அதற்குள் கும்பலாக சில ஆட்கள் உள்ளே நுழைந்தனர்...

“என்னடா தம்பி இப்படிப் பண்ணிட்ட? அப்பாக் கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா அப்பா முன்ன நின்னு நடத்திக் கொடுத்து இருப்பனே! இப்படிப் பண்ணிட்டியேடா!” என்றார்.

பார்க்க பெரிய மனிதர் போல தோற்றம் தான். அவர் பேச்சில் இருந்து அவர் கண்ணனின் தந்தை என்று புரிந்தது.

ஆனால் கண்ணன் அவர் பக்கம் கூட திரும்பவில்லை... அவன் அசையாது எங்கோ பார்த்துக் கொண்டு நின்றான்.

கண்ணனின் தந்தையோடு கூட வந்தவன், சற்று அரசியல் செல்வாக்கான ஆள் போல, “வணக்கம், இன்ஸ்பெக்டர் சார்!” என்று பெரிய ஹோதாவோடு அவரோடு போய் பேசினான்.

“சார்! பேசி முடிச்சு விடுங்க சார்!” என்றும் சொன்னான்.

“நாங்க பேச ஒன்னுமில்லைங்க... பையனும் பொண்ணும் மேஜர்! கல்யாணம் பண்ணிகிட்டாங்க! இப்ப ப்ரொடக்ஷன் கேட்டிருக்காங்க...”

“சொல்லப்போனா எங்க லிமிட் கூட கிடையாது! அசிஸ்டன்ட் கமிஷனர் ஆபிஸ் தான் போகணும்! ஆனா இங்க ஜாதி பிரச்சனை கிடையாது! ஒரே இதா போயிட்டதால நான் டீல் பண்ணிட்டு இருக்கேன்..”

“பையன் சைட் ஒரு பிரச்சனையும் இல்லை... பொண்ணு சைட் என்ன சொல்றாங்கன்னு தெரியலை?” என்று அவர் நீண்ட விளக்கம் கொடுக்க...

“ஐயோ! இவன் பையனா?” என்பது போல தான் நடராஜனும் அருன்மொழியும் கண்ணனைப் பார்த்து இருந்தனர்.

அவன் தந்தை ஒரு பக்கா ஃபிராடாக தான் ஊருக்குள் அறியப்படுவார்... குடும்ப விவகாரங்கள் அதிகம் தெரியாது. ஆனால் ஊரைச் சுற்றி கடன்.. ஒருவருக்கும் பணத்தை திரும்ப கொடுக்கும் வழக்கம் இல்லவே இல்லை.

இப்போது புதிதாக இந்த மாவட்ட செயலாளருடன் சுற்றிக் கொண்டு இருக்கிறார்.

அந்த மாவட்ட செயலாளர் பஞ்சாயத்து செய்பவன் போல... “ம், என்ன சொல்றீங்க?” என்று நடராஜனை அணுக...

“உன் வேலையைப் பாரு! உன்கிட்ட சொல்லணும்னு அவசியமில்லை!”

என்று முகத்தில் அடித்தார் போல நடராஜன் பதில் சொல்ல...

“டேய், யார்கிட்ட பேசற தெரியுமா?” என்று கூட இருந்த கைத்தடிகள் இரண்டு வலுச் சண்டைக்கு வந்தனர்.

“டேய், யாரா இருந்தா என்னடா? எங்க பொண்ணு விஷயம் நாங்க பேசிக்கறோம்! நடுவுல நீங்க யாரு?” என்று சொல்ல,

“என்னடா எதுத்து பேசற?” என்று ஒருவன் அருண்மொழியின் சட்டையைப் பிடித்தான்.

ஒரு கை கலப்பு உருவாகும் சூழ்நிலை.. “கை எடு!” என்று அதட்டிய ஆய்வாளர், பிரித்து விட....

கண்ணனும் ராதாவும் ஒன்றும் செய்ய இயலாதவர்களாக நின்றனர்.

நடராஜன் இறுகிய முகத்தோடு, “என்ன பண்ண போற?” என்று ராதாவை நோக்கி கேட்டவர்... “உங்கம்மா கிட்ட நான் போய் என்ன சொல்ல” என்றும் கேட்க...

அவர் கேட்ட விதத்தில் பயந்து, ராதாவின் கண்களில் மளமளவென்று கண்ணீர் இறங்கியது.

“டேய்! யாருடா நீ? எங்க வீட்டுக்கு வாழ வந்த பொண்ணை மிரட்டுற?” என்று உதார் விட்ட கண்ணனின் தந்தை... யாரும் எதிர்பாராத வண்ணம் நடராஜனை அடித்து விட....

“டேய்!” என்று அருண் மொழி அவர் மீது பாய்ந்தான், அங்கே போலீசாரையும் மீறி ஒரு கைகலப்பு...

சத்தம் கேட்டு சிபியும், வர்மனும் வர... அங்கே இருந்ததே ஒரு ஆய்வாளர், இரண்டு காவலர்கள், சமாளிக்க முடியவில்லை.

ஆங்காங்கே தொலைபேசி அழைப்புகள் பறக்க, அவர்கள் பக்கம் இருந்தும் ஆட்கள், இவர்கள் பக்கமிருந்தும் ஆட்கள்... வந்த வண்ணம் இருக்க...

நிலைமை ஒன்றும் கட்டுக்குள் இல்லை... அது வகுப்புக் கலவரமாக

மாறிப் போனது.

இதை ராதாவும் கண்ணனும் எதிர்பார்க்கவேயில்லை.

பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல் என்று மணமகனையும் மணமகளையும் விடுத்து, அனைவர் மேலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

அதனைக் கொண்டு அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். யாரும் எதிர்பார்க்காத நிகழ்வு...

அவர்களும் ஆணையாளரிடம் எவ்வளவோ பேசிப் பார்த்தனர்... வழக்கு பதிய வேண்டாம் என்று, ஆனால் அவர் ஒத்துக் கொள்ளவேயில்லை.

வழக்கு பதிந்ததன் பின்னனியே வேறு... அந்த அரசியல் செல்வாக்கு உள்ளவன் கட்டப் பஞ்சாயத்து அது இது என்று தேவையில்லாமல் சில ஆராஜங்களில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்க, அதற்காக சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்த ஆணையாளர், இது தான் சமயம் என்று உள்ளே போட்டு விட்டார்.

வகுப்புக் கலவரம் என்று கேஸ் பதிந்தாலும், மூலக் காரணம் அந்த அரசியல்வாதி என்று ஸ்ட்ராங்காக எழுதி வைத்தார்.

அனைவரும் சிறையில் அடைக்கப் பட... சிபியின் வீட்டினருக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை... வீட்டின் அத்தனை ஆண்மக்களும் ஈஸ்வரரை தவிர்த்து எல்லோரும் சிறையில் இருந்தனர். கூட மற்ற உறவினர்கள், தெரிந்த ஆட்கள் என்று கிட்ட தட்ட இருபது பேர்.

கல்யாண வீடு சில மணிநேரங்களில் சோகத்தில் மூழ்கியது... பெண் போய்விட்டால் என்று வருத்தப்படுவதா, திருமணம் நின்று போனதற்கு வருத்தப் படுவதா, இல்லை அதையும் விட எல்லோரும் சிறை சென்றதற்கு வருத்தப்படுவதா, யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

மாமல்ல வர்மன் சட்டம் தான் படித்துக் கொண்டிருந்தான், அதன் இறுதி வருடத்தில் இருந்தான். அவன் ஒரு வக்கீலிடம் எப்போதும் மாலை வேளைகளில் சென்று உதவியாக இருப்பான்.

அவரிடம் ஈஸ்வரர் விரைந்தார். ஆனால் வழக்கு பதியப்பட்டு இருந்ததால் யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோர்ட்டை அணுகி ஜாமீன் தான் எடுக்க வேண்டும் அதற்கு எப்படியும் மூன்று தினங்களாவது ஆகும் என்று சொன்னார்.

ஈஸ்வரருடன், வாசுவும் மற்ற சிபியின் வேறு இரண்டு நண்பர்களும் எல்லாவற்றிற்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் தினசரிகளில் காதல் ஜோடி திருமணம் முடித்து போலிஸ் ஸ்டேஷனில் தஞ்சம், இருபிரிவினரும் அடிதடி... எல்லோரும் கைது என்று தலைப்புச் செய்தியாகி... ஊரெல்லாம் இதே பேச்சாக ஆகிற்று.

கணவர் இறந்த பிறகு மக்களே உலகம் என்று வாழ்ந்து விட்ட ராஜலக்ஷ்மியால் இதைத் தாளவே முடியவில்லை... ஓய்ந்துவிட்டார்..

அம்மாவை பார்க்கவென்று ராதா கண்ணனோடு வர... ஈஸ்வரரும் சுலோக்ஷனாவும் தங்கள் மகளை ராதாவைப் பார்க்க அனுமதிக்கவேயிலை.

“உன்னை அருமை பெருமையா வளர்த்த மாமனுக்கு நல்ல கைமாறு செஞ்சிட்ட.... நீ போனதும் இல்லமா சிபியோட வாழ்க்கையையும் கெடுத்து, கல்யாணத்துக்கு பணம் செலவு செஞ்சு அதையும் வீணாக்கி, இப்போ அவங்களை ஜெயில் போக வெச்சு... எங்க எல்லோர் மானத்தையும் வாங்கிட்ட! தயவு செஞ்சு எங்க கண்ல பட்டுடாதா! அப்படியே போயிடு!” என்று ஏறக்குறைய ராதாவை ஒரு வார்த்தைக் கூட பேச அனுமதிக்காமல் துரத்தி விட்டனர்.

நான்கு நாட்களுக்கு பிறகே வீட்டின் ஆண்மக்கள் மற்றும் சில உறவினர்களும் வெளியே வந்தனர். தங்களோடு நின்ற உறவினர்களும் இந்த வழக்கில் மாட்டிக் கொண்டதால் எல்லா செலவும் சிபியின் வீட்டினரே வழக்குக்கா செலவு செய்து ஜாமீன் தொகையும் கட்டினர்.

திருமண செலவே அதிகம் ஆகிவிட்ட படியால், வீட்டில் இருந்த பெண்களின் நகையை பேங்கில் அடமானம் வைத்து தான் இந்த வழக்கு செலவுகளையே செய்தனர்.

எப்படியாவது அந்த வழக்கில் இருந்து உறவினர்களை விடுவித்து

விடுவோம் என்று நடராஜன், அவரின் சார்ப்பாகவும், அவரின் மக்களின் சார்பாகவும் வாக்குறுதி கொடுத்து, மனவருத்தம், பணவருதம் என்று எல்லாவற்றிற்கும் ஆளாகி, அவர்களுக்கு அவர்களே பேசப் பிடிக்காமல் ஆளுக்கு ஒரு பக்கம் முடங்கினர்.

சிபி அன்றிலிருந்து யாரோடும் பேசவேயில்லை… உள்ளுக்குள் ஒரு ஜ்வாலை கனன்று கொண்டே இருந்தது.

அவனைத் தேற்ற யாராலும் முடியவில்லை, யாரோடும் பேசவில்லை. ஏமாற்றம் அதையும் விட தான் எல்லோர் முன்னிலையிலும் அசிங்கப்பட்டு போனாதாக தான் தோன்றியது.

வீடு வந்தவன் குளித்து, முதலில் தஞ்சம் புகுந்தது அவன் வயல்காட்டில் தான். அப்போதும் அவனின் பயிர்கள் எந்த குறையுமில்லாமல் நன்றாக இருக்கிறதா என்று சுற்றிப் பார்த்து பின்னரே ஓய்ந்து அமர்ந்தான். அது அவனின் மக்கள்.

ஒரு பாட்டுட்டுண்டு, “பிள்ளைகள் நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே” என்று. அது போல அதே மாதிரி சில சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் கூட மனிதர்களை தடம் பிறழச் செய்வது உண்டு…

மனிதனின் செயல்களை அவனுடைய அப்போதைய தேவைகளே நிர்ணயிக்கும்… இதிலிருந்து மாறுபடுபவன் மனிதன் அல்ல அதற்கும் மேலே…

சிபி கண்டிப்பாக ஒரு நல்ல மனிதன் தான். ஆனால் அவன் மனிதன் மட்டும் தான். கோப தாபங்கள் நிறைந்த மனிதன்… பெரியவர்களாகும் முன்பு வேண்டுமானால், இந்த அத்தைப் பெண், மாமன் மகன் என்பது விளையாட்டுப் பேச்சாக இருக்கலாம்…

ஆனால் அவன் விடலைப் பருவத்திலும், சரி அதைத் தாண்டி ஒரு பக்குவம் அடைந்த பின்பும் சரி, தன் வாழ்க்கைத் துணையாக ராதாவை தான் மனதினில் வரித்து வைத்திருந்தான்.

தாளவே முடியவில்லை! ஏன் இப்படி செய்தாள்? என்ன குறை என்னிடம்? பிடிக்கவில்லை என்றால் சொல்லியிருக்கலாம் தானே! என்ற

யோசனைகள் ஓட, வெட்ட வெளியில் வயல் காட்டில், ஓரமிருந்த ஒரு தென்ன மரத்தில் அடியில் படுத்திருந்தான்.

ராதா திருமணம் செய்த அந்த ஆளை மனதினில் கொண்டு வந்தான்... அவன் நன்றாக தான் இருந்தான், சிபியை விட இன்னும் நிறமாக இருந்தான்... சிபியை போல ஒரு திராவிட தோற்றமில்லாமல்... ஒரு தென்னிந்திய தோற்றத்தைக் கொண்டு இருந்தான்.

ஆனால் எந்த வகையிலும் தான் அவனுக்கு குறைவு என்பதாக சிபிக்கு தோன்றவில்லை... பின்பு ஏன் இப்படி செய்தாள்... இவள் என்ன பெரிய அழகியா? நான் இவள் பின்னால் சுற்ற! வீட்டில் சொல்லிச் சொல்லி என்னை இப்படி செய்து விட்டார்களே!" என்று வீட்டினர் அனைவர் மீதும் கோபம்.

இவன் வந்தது தெரிந்து, வாசு இவனைப் பார்க்க விரைந்து வந்தான். இவன் வயல் காட்டில் அப்படிப் படுத்திருந்த தோற்றம் பார்க்கவே மனதிற்கு என்னவோ செய்தது.

அவனருகில் சென்று அமர்ந்தவன், "போனா போயிட்டு போறா விடுடா! அதுக்கு நீயேண்டா இப்படி வாழ்க்கையே முடிஞ்சிபோன மாதிரி படுத்து இருக்க!"

"யாரு சொன்னா என் வாழ்க்கை முடிஞ்சு போச்சுன்னு? அவ வாழ்க்கையை முடிக்கணும், முடிப்பேன்! எப்படி வாழறான்னு நான் பார்க்கிறேன்! சும்மா விடப் போறது இல்லை!" என்றான்

அவன் குரலில் இருந்த தீவிரம் சொன்னதை செய்வான் என்று தெளிவாக சொன்னது.

"போயிட்டா... விடுடா! இன்னும் இழுத்துப் பிடிச்சு என்ன பண்ண போற..."

"ஊருக்குள்ள அத்தனை பேருக்கும் தெரியும், அவ தான் என் மனைவியா வரப் போறான்னு! ஊருக்குள்ள நான் எப்படி? நான் எப்படி? தலை காட்டுவேன்"

"வெளில இருந்த பொண்ணுன்னா பரவாயில்லை! என் வீட்ல

இருந்தவடா! என்னை விட்டுட்டு போயிட்டா! என்ன பேசுவான் ஊருக்குள்ள... இவன் கிட்ட என்ன குறையோன்னு தான் பேசுவான்! அவளை என்னை சும்மா விடச் சொல்றியா! மாட்டேன்!"

"எங்கப்பாவை அடிச்சிட்டாண்டா அவங்கப்பன்! அவனைச் சும்மா விட சொல்றியா! அப்போ மூணு பசங்களை எங்கப்பா பெத்துக்கே அர்த்தமில்லை".

"அவங்கப்பன் ஒரு உலக மகா ஃப்ராட் பையடா? உனக்குத் தெரியாததா?"

"அவன் எவனா வேணா இருக்கட்டும்! எங்க மேல கை வெச்சிருக்கான்! சும்மா விடப் போறதில்லை... அப்புறம் இந்த மீசையை வெச்சிகிட்டு அதை முறுக்கிவிட்டு திரியரதை விட வேற என்ன கேவலம் சொல்லு"

"அதான் கேஸ் ஆகிப் போச்சு! இன்னும் என்னடா?"

"அதெல்லாம் பத்தாது! நாங்களும் சேர்ந்து தானே அலையறோம்! வேற! வேற ஏதாவது செய்யணும்! எங்கடா இருக்காங்க...?"

"அவங்க ரெண்டு பேரும் சென்னைக் கிளம்பி போயிட்டாங்க... அங்க தான் கண்ணனுக்கு வேலை..."

"அவனை அப்புறம் பார்க்கிறேன்! இப்போ அவங்கப்பன் எங்க இருக்கிறான் அதை சொல்லு..."

"அந்த நாதாரிப் பய வெள்ளையுஞ் சொள்ளையுமா சுத்துவான்! அதைத் தவிர வேற ஒன்னும் கிடையாது! ஊரைச் சுத்தி கடன்! வீட்டுக்கு எப்ப வருவான், போவான் எதுவும் தெரியாது... இப்போ ஒரு மாவட்ட செயலாளர் கூட சுத்துறான்... அவனுக்கு மாமா வேலை பார்த்துட்டு திரியறதா கேள்வி..."

"முதல்ல எனக்கு பக்கத்துக் காட்டுகாரன் அது மட்டும் தான் தெரியும்... அவன் ஃப்ராடுன்றது ஊருக்கே தெரியும்... குடும்பத்தை பத்தி இப்ப தான் விசாரிச்சேன்".

"முத சம்சாரத்துக்கு பொறந்தது, ரெண்டு... பையன் ஒன்னு, பொண்ணு

ஒன்னு, அவன் தான் இந்த பய கண்ணன், பொண்ணு பொறந்தப்போ அவன் சமாசாரம் செத்து போச்சு... சொந்தத்துலயே இன்னொரு பொண்ணைக் கட்டியிருப்பான் போல... அதுக்கும் பொண்ணு ஒன்னு பையன் ஒன்னு...”

“இந்த பைய தான் என்ஜீனியரிங் முடிச்சு வேலைல இருக்கிறான்... மத்த மூணும் ஸ்கூல் தான் போகுது...”

“ஒரு பொண்ணு பதினொன்னாவது, ஒரு பையன் ஒன்பதாவது, இன்னொரு பொண்ணு ஆறாவது. இது தாண்டா அவன் குடும்ப செய்தி... இந்த லட்சணத்துல அந்த ஸ்கூல் போற பொண்ணுக்கு கல்யாணம்... இன்னும் ஒரு வாரத்துல... அந்த மாவட்டம், அவன் தம்பிக்கு குடுக்கறான்... அதான் அவன் கூட நின்னு இவ்வளவு உதாரு”

“என்ன கருமமோ... அந்த பயலுக்கு முப்பது வயசுக்கு மேல... இந்த பொண்ணுக்கு பதினாறு, பதினேழு தான் இருக்கும்... பாதி வயசு! அப்பன் காசுக்கு ஆசைப்பட்டு செய்யறான்... அவங்கண்ணன் நம்ம வீட்டு பொண்ணை இழுத்துட்டு போறான்... அவன் பொண்டாட்டி வாயைத் தொறந்தா ஒரு நல்ல வார்த்தைக் கூட வராதாம்...”

“அவனுங்க சேறுடா... சேத்தை வாரி நம்ம மேல இறைச்சிக்க வேண்டாம்... அமைதியா இரு! நல்ல பொண்ணா அமையும்... இதைத் தூக்கிப் போடு!” என்று சொன்னது எதுவும் சிபியின் காதில் விழவில்லை.

அவன் காதில் விழுந்தது எல்லாம், ஸ்கூல் படிக்கும் பெண்ணிற்கு திருமணம் என்பது வரை தான்... அதன் பிறகு பேசியது எதுவும் காதில் விழவில்லை.

“மொத்த குடும்பத்தையும் மறுபடியம் ஜெயிலுக்கு அனுப்பறேன்...” என்று மனதிற்குள் கருவிக்கொண்டான்.

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை
முடிந்த கதை தொடர்வதில்லை இறைவன் ஏட்டினிலே

## அத்தியாயம் மூன்று :

சிபியின் வீடு முழுவதுமாக சோகத்தில் மூழ்கியது. ராஜலக்ஷ்மி மகளின் செய்கையால் மிகுந்த உடல் நலம் பாதிக்கப் பட்டார்.

அவர் யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் முன்பே ராதா அவரிடம் தன் காதலை சொல்லி, சிபியை மணமுடிக்க விருப்பமில்லை என்று தெளிவாக சொல்லியிருந்தாள்.

ஆனால் இத்தனை வருடமாக தங்களை ஆதரித்த அண்ணன் குடும்பம் மேல் உள்ள பாசத்தால் ராஜலக்ஷ்மி தான், அதற்கு ஒத்துகொள்ளாமல் சிபியைத் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்.

மீறி யாரிடமாவது சொன்னால் தன்னை உயிரோடு பார்க்க முடியாது என்று மிரட்டி வைத்திருந்தார்.

தன்னை மீறி எதுவும் மகள் செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கை தவிடு பொடியானது. இதை யாரிடமும் சொல்ல முடியவில்லை, பெரிய மகளிடம் கூட சொல்ல முடியவில்லை.

யாரிடமும் சொல்ல முடியவில்லை... தன் கணவர் இறந்த பின்பு எப்படி ஆதரித்தார் தன் அண்ணன். எப்படி இப்படி செய்தாள் தன் பெண். நன்றி என்ற வார்த்தைக்கு இந்த உலகில் அர்த்தம் இல்லாமல் போய்விட்டதா, என்னதான் சிபியைப் பார்த்து பயம், தயக்கம் என்றாலும் ஏன் பிடிக்காவிட்டாலும் கூட... இத்தனை வருடங்களாக மனதில் பதிய வைத்து பேச்சுக்கள் எப்படி மாறும்.

ராஜலக்ஷ்மிக்கு புரியவில்லை... கணவன் மனைவியாக பல வருடங்கள் வாழ்ந்த மக்களே விவாகரத்து என்று நிமிடங்களில் பிரிந்து விட... பேச்சுக்களை வைத்து தன் மகள் உண்மையாக இருக்க வேண்டும் என்று தான் நினைப்பது சரியானதா என்று.

அப்படி ஒன்றும் சொத்துக்காரர்கள் எல்லாம் இல்லை சிபியின் வீட்டினர். ராஜலக்ஷ்மியை திருமணம் செய்து கொடுத்த போது கைக்கும்

வாய்க்கும் சரியாக இருக்கும் ஜீவனம் தான் நடராஜனின் வீடு.

ராஜலக்ஷ்மி நிர்கதியாய் நின்ற போது சற்றும் யோசிக்காமல் வீட்டினுள் அழைத்துக் கொண்டார். நடராஜன் கடுமையான உழைப்பாளி, இப்போது சற்று சொத்து பத்துக்கள் உள்ளன... எல்லாம் அவரின் உழைப்பே.

அதையும் விட சிபி... உழைப்பில் அப்பாவை விட பல மடங்கு அதிகம்... அவன் பன்னிரெண்டு வயதில் இருந்து வயல்காட்டில் தந்தையோடு இருப்பான். மற்ற இரு மகன்கள் அப்படிக் கிடையாது.

மற்ற மக்கள் போல இல்லை... அவனைப் போய் ராதா வேண்டாம் என்று சொல்லிவிட்டாளே என்பது இன்னும் மனதிற்கு அதிக வருத்தத்தை கொடுத்தது.

“நீயேன் இப்படி இருக்க? போனாப் போறா!” என்று தேவியும் சொல்ல, இன்னும் மனமுடைந்து போனார் ராஜலக்ஷ்மி... அண்ணனுக்காவது தங்கைக்கு செய்ய வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் அண்ணி இவர் தன்னை எப்படி பார்த்துக் கொண்டார்... ஒரு சிறு முக சுளிப்பு கூட இதுவரை காட்டியவர் கிடையாது.

இதையெல்லாம் விட இப்போது கோர்ட்டு கேசு என்று இவர்கள் சிக்கலிலும் மாட்டிக் கொண்டனரே. எவ்வளவு பொருள் நஷ்டம். ஆனால் இன்னும் ஒரு முகச் சுளிப்பு கூட அந்த வீட்டில் அவரைப் பார்த்து யாரும், உன் மகள் இப்படிச் செய்துவிட்டாள் என்பது போல காட்டவில்லை.

ஐயோ எல்லாம் போயிற்றே என்று நினைக்க நினைக்க அழுகை ஆறாக பெருகியது.

வீடு இயல்பு நிலைக்கு திரும்பவேயில்லை... மணிமேகலை தான் எல்லோரிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சிபியிடம் பேச முடிந்த ஒரே ஜீவனும் அவளே...

அவன் மனதினுள் ஆத்திரம், ஆத்திரம் மட்டுமே... எதையும் அவன் மனம் யோசிக்கத் தயாராகவே இல்லை. ராதா அவனிடம் தள்ளியே நிற்பாள்,

அவளுக்கு அவனோடு பேசவே பயம், எதுவும் அவன் நினைவில்லில்லை.

நடராஜன் வேறு சிபியை தனியாக அழைத்து, “போனாப் போறா, விடு, இனி அவளைப் பத்தி நினைச்சு மனசைக் குழப்பிக்காத, அவளை விட நல்ல பொண்ணா உன் வாழ்க்கையில வருவா” என்று பொறுமையாக அரை மணிநேரம் பேசினார்.

பதில் பேசாமல் அவர் பேசியது எல்லாம் கேட்டுக் கொண்டு அமர்ந்து இருந்தவன்... எழுந்து போகும் போது, “ஆனா அவ வரமாட்டா தானேப்பா” என்று சொல்லவும் அதிர்ந்தார் நடராஜன்.

“தம்பி! அவ இப்ப இன்னொருத்தனோட மனைவி!”

“இருந்துட்டு போறா! நான் என்ன திரும்பவும் அவளை என் மனைவியாவா வர சொல்லப் போறேன்! அதொன்னும் கிடையாது! ஆனா சிபியை அவ்வளவு ஈசியா ஏமாத்திட்டு போய் அவ சந்தோஷமா இருப்பாளா...”

“அவங்களை நிம்மதியா இருக்க விடமாட்டேன்... நான் இங்க நிம்மதி இல்லாம சுத்திட்டு இருப்பேன், அவங்க சந்தோஷமா இருப்பாங்களா”

“உங்களுக்கு தெரியாதுப்பா, ஊருக்குள்ள இருக்குறவங்க, என் கூட படிச்சவங்க, என்னைத் தெரிஞ்சவங்க, இப்படி எல்லோரும் என்னை எவ்வளவு கேவலமா பேசுறாங்க தெரியுமா...”

“இத்தனை வருஷம் கூட இருந்து இவன்கிட்ட பார்க்காதது அந்த பையன்கிட்ட என்ன பார்த்தாளோனு எவ்வளவு பச்சையா பேசறாங்க தெரியுமா” சொல்லும் போது குரல் கமறியது.

“தம்பி” என்று நடராஜன் அதிர்ந்து கூப்பிட... “என்கிட்டே குறைன்னு பேசறாங்க, அதனால தான் ராதாவை வீட்ல வெச்சு வளர்த்து எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க நீங்க நினைச்சீங்கலாம். அந்த பொண்ணு கடைசி நிமிஷத்துல தப்பிச்சு போயிடுச்சாம்”

“இன்னும் கூட எவ்வளவு கேவலமா பேசறாங்க தெரியுமா? அதெல்லாம் உங்ககிட்ட சொல்ல முடியாதுப்பா”

“வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் உலகம் இதுன்னு என் அறிவுக்கு நல்லா புரியுது, ஆனா மனசுக்கு? அவங்க ரெண்டு பேரையும் கொன்னு போடணும் போல ஆத்திரம் வருது… அவங்களை கொன்னு என் வாழ்க்கையை நான் அழிச்சிக்க கூடாதுன்னு தான் பேசாம இருக்கேன்…”

“ஒரு வார்த்தை முன்னாடியே சொல்லியிருந்தா, எனக்கு இவ்வளவு அசிங்கமில்லையே..”

“இப்ப தைரியமா ஓடினவ, கல்யாணம் முடிவு பண்ணினப்போவே ஓடியிருக்க வேண்டியது தானே… இவ படிச்சு முடிக்கிற வரைக்கும்… காத்திருந்து போயிருக்கா, எவ்வளவு சுயநலம்..?”

“அதுவுமில்லாம அந்தப் பயலோட அப்பன் உங்க மேல கைவெச்சியிருக்கான். அவனைச் சும்மா விடமாட்டேன்” என்று சொல்லி நிற்காமல் போய்விட….

தான் இத்தனை நேரம் பேசியது எல்லாம் வீண் என்று புரிந்தது.

நடராஜன் மிகவும் கண்டிப்பானவர்… வீட்டில் இருந்த ஐந்து பேரில் நால்வர் நடராஜனின் சொல் கேட்டாலும், சிபி கேட்பான் கேட்காமலும் போவான்.

தேவியிடம் சொல்லி அவனிடம் பக்குவமாக சொல்லச் சொல்ல…

சிபி வீடு தங்குவதே இல்லை… சாப்பிடும் நேரம் மட்டுமே வீட்டுக்கு வந்தான். அவன் சாப்பிடும் நேரம் அவனின் அம்மா தேவி அவனிடம் பேச…

தட்டை தள்ளி விட்டு எழுந்து சென்று விட்டான்… “டேய் தம்பி, நான் ஒன்னும் சொல்லலை, சாப்பிட்டிட்டு போடா!” என்று தேவி அவன் பின்னால் ஏறக்குறைய ஓடினார்.

சிபி அவரை விடவும் வேகமாக பைக்கை எடுத்துக் கொண்டு சென்றே விட்டான்.

அருண்மொழி, மாமல்லவர்மன் என்று யார் பேச்சும் காதில்

வாங்கவில்லை. வனிதா அவனிடம் பேசவே பயந்தாள். தாத்தா, பாட்டி அத்தை என்று யாரிடமும் முகம் கொடுத்து பேசவில்லை. இவர்கள் எல்லோரும் தானே உன் மனைவி, உன் மனைவி என்று சொல்லிச் சொல்லி மனசைக் கெடுத்தது என்பது போல தான் அவன் எண்ணம் இருந்தது.

இப்போது போனவளைப் பற்றி யாரும் கவலைப் படவில்லை... சிபியைப் பற்றி தான் எல்லோருடையை கவலையும் என்ன செய்வானோ ஏதோ செய்வானோ என்று.

நடராஜனுக்கு மனதே சரியில்லாமல், அவ்வப்போது அவன் வீட்டில் இல்லாத போதும், அவன் வயல்காடே கதி என்று இருந்த போதும், தேடிச் சென்று, “தம்பி, ஆத்திரத்தில் எதுவும் செய்யாதே!” என்று பலமுறை சொன்னார்.

அவர்கள் பயந்ததற்கு தகுந்தார் போல... ஒரு வாரம் பார்த்துக் கொண்டே இருந்தவன்... சரியாக அந்த கண்ணனின் தங்கைக்கு அடுத்த நாள் காலை திருமணம் என்றால்... முதல் நாள் மாலை அவள் ஸ்கூல் பதிவேட்டில் இருந்த அவளின் வயதுக்கான அத்தாட்சியை ஸ்கூல் பியுனை கரக்ட் செய்து வாங்கி...

அதை எடுத்துக் கொண்டு போய் தாசில்தாரிடம் நேரடியாக கொடுத்தான். குழந்தை திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் வருவதால் அவர் உடனடியாக வீ ஏ ஓ மற்றும் போலீசாரை அழைத்துக் கொண்டு அதிகாலையில் அந்த இடத்தை அடைந்து விசாரித்தார்.

பெண்ணிற்கு வயது அதிகம் என்று அவர்கள் சப்பைக் கட்டு கட்ட... இவர்கள் கையில் இருந்த அந்த பெண்ணின் வயதிற்கான சான்றைக் கொடுத்து எல்லோரையும் கைது செய்வதாக எச்சரித்தார்...

வேறு வழியின்றி ஒத்துக் கொண்டனர்.

பின்பு அனைவரிடமும் எழுதி வாங்கினர்... இந்த திருமணம் நடக்காது... பெண்ணிற்கு உரிய வயது வரும்வரை திருமணம் செய்ய மாட்டோம் என்று.

சிபி அந்த இடத்திற்கு போகவேயில்லை. ஆனால் திருமணத்தை நிறுத்தி

விட்டான்.

திருமணம் நின்ற செய்தி கேட்டதும் தான் சிபிக்கு மனதிற்கு சற்று நிம்மதியாகிற்று.

சிபி செய்ததை மாமல்ல வர்மன் வீட்டில் சொல்லிவிட்டான். நடராஜன் அவனைக் கூப்பிட்டு கோபப்பட்டார், “கல்யாணம் நின்னப்போ நம்ம எவ்வளவு வருத்தப்பட்டோம்… நீ ஒருத்தருக்கு அந்த வருத்தத்தை கொடுத்திட்டியே! நீ செஞ்சது சரியில்லை… தாயும் பிள்ளைனாலும் வாயும் வயிறும் வேற, அப்படி இருக்குறப்போ நீ அந்த பையனும் நம்ம பொண்ணும் செஞ்சதுக்காக, வேற ஒரு பொண்ணு வாழ்க்கையை கெடுத்து இருக்க” என்று ஏகத்திற்கும் கோபப்பட்டார்.

“ஒரு கல்யாணத்தை நிறுத்தின பாவத்தை நமக்கு தேடிக் கொடுத்திட்ட, இந்த பாவத்தை நாம எங்க போய் கழிப்போம்” என்று மிகவும் குற்ற உணர்வுக்கு ஆளானார்.

திருமணம் நின்று அவர்கள் பிரச்சனையில் மாட்டி கனவிலும் அவர் வாழ்க்கையில் நினைத்திராத ஜெயில் வாழ்க்கை… யாரிடமும் அவர் சொல்லவில்லை… ஆனால் மனதளவில் நிறைய வருத்தத்தில் இருந்தார். இத்தனை வருடங்கள் பணம் காசு அதிகமில்லையென்றாலும் மானம் மரியாதையோடு வாழ்ந்துவிட்டு இப்போது என்ன மாதிரியான அவமானம்.

இப்போது இவன் திருமணத்தை நிறுத்திவிட்டான்… பழிக்கு பழி என்று போனால் ஊருக்குள் பாதி ஜனம் கூட இருக்கமாட்டார்களே…

சிபி அதையெல்லாம் கண்டு கொள்ளவே இல்லை. நடராஜன் மிகுந்த கண்டிப்பு மிகுந்தவர் பிள்ளைகளிடம்… இல்லையென்றால் மூன்று ஆண்மக்கள், இரண்டு பெண் மக்கள் என்று வீட்டில் ஐந்து பிள்ளைகளை எப்படி சமாளித்து இருப்பார்.

இந்த மாமன் மகன், அத்தை மகள் என்ற பேச்சுக்கள் எப்போதும் இருந்தாலும், அதையும் மீறிய சிறிய செய்கை பார்வைகளில் வார்த்தைகளில் இருக்காது பிள்ளைகளிடம்… அதுவே இல்லையென்ற போது தொடுகை எல்லாம் எம்மாத்திரம். அதனால் தான் ராதாவால் எந்த குற்ற உணர்ச்சியும் இன்றி இந்த முடிவை எடுக்க முடித்தது.

நடராஜனின் வருத்தம் ராதா திருமணம் செய்ததில் கூட அவ்வளவாக இல்லை... தங்களிடம் சொல்லவில்லை... இப்படி கடைசி நிமிடத்தில் வீட்டில் எல்லோரும் கூடியிருக்க அவமானத்தை தேடித் தந்துவிட்டாள் என்பதில் தான்.

இப்போது சிபியிடம் கடுமையாகத் தான் பேசியிருந்தார்... “அவ போயிட்டா திரும்ப நீ எதையும் இழுத்து வைக்காத... நான் சொல்லிட்டே இருக்கேன்” ஆனால் அதையும் மீறி சிபி நடத்திக் காட்டி விட்டான்.

சிபிக்கு ஏதோ ஒரு வகையில் கண்ணனையும் ரதாவையும் பழிவாங்கிய திருப்தி தான்.

வாசுவிடம், “எங்க வீட்ல இருந்து பொண்ணை இழுத்துகிட்டு ஓடினானே, அவன் முகத்தை எங்க கொண்டு போய் வெச்சிகிட்டான்” என்று சற்று குரூர திருப்தியோடு கேட்டான்.

“அவன் கல்யாணத்துக்கு வந்த மாதிரியே தெரியலைடா”

“என்ன வரலையா?” என்றான் அதிர்ச்சியாக.

“ம், வரலை, அவனுக்கு குடும்பத்தோட தொடர்பு இருக்குற மாதிரி தெரியலை”

“நீ தானேடா அன்னைக்கு அந்த பய தங்கச்சி கிட்ட கேட்டேன், அவன் வெள்ளன போயிடுச்சுன்னு சொன்னான்னு சொன்னேன்!”

“அந்த பொண்ணு அப்படி தாண்டா சொல்லுச்சு, ஆனா இவன் வரலையே, நான் கவனிச்ச வரைக்கும் அவன் பேச்சு அதிகமா அடிபடலை... எங்கயோ தப்பு பண்றோம்னு தோணுதுடா..” என்றான் நண்பனாக வாசு.

சிபியை மட்டும் தனியாக, “நீ தப்பு செய்கிறாய்” என்று பேசவில்லை, தன்னையும் அவனுக்குத் துணையாக இணைத்து தப்பு செய்யறோம் என்று பேசினான்.

“தப்பா இருந்தா இருந்துட்டு போகுது, எப்படி இருந்தா என்ன அவங்கப்பன் நம்ம மேல கையை வெச்சான் இல்லை

அனுபவிக்கட்டும்…” என்றான் கோபமாக சிபி.

ஆனால் அவர்களுக்கு என்ன தெரியும், அந்த கண்ணனின் அப்பன் ஊருக்கு மட்டும் தெல்லவாரி இல்லை குடும்பத்துக்கும் சேர்த்து தெல்லவாரி என்று.

பாவம் ஒரு இடம் பழி ஒரு இடம் என்பது போல தான் அவர்கள் செய்கை ஆகியிருந்தது. அது அவர்களுக்கு தெரியவில்லை.

ஏற்கனவே மனைவியும் மக்களும் கண்ணனின் தந்தையால் நிறைய தொல்லைகளுக்கு ஆட்பட்டு தான் இருந்தனர். அந்த அரசியல்வாதி எப்படி இருந்தாலும் அவன் தம்பி நல்லவனாக தான் தெரிந்தான். வீடு தோப்பு என்று அவனுக்கு தனியாக சொத்து பத்துக்களும் இருந்தன.

கணவரின் வற்புறுத்தல் இருந்தாலும், அந்த மாப்பிள்ளையைப் பற்றி தனியாக நன்றாக கண்ணனின் சித்தி விசாரித்த பின் தான் பத்மினியை அந்த மாபிள்ளைக்கு கொடுக்க சம்மதம் தெரிவித்து இருந்தார்.

ஆம், கண்ணனைப் பொருத்தவரை அந்த பெண்மணி எப்போதும் சித்தி தான். ஆனால் பத்மினிக்கு அவர் அம்மா தான். கண்ணன் எப்போதும் அவருடன் ஒட்டியதில்லை, சித்தி என்ற அலட்சியம் காட்டுவான்… அவனுக்கு அவனின் அம்மா இடத்தில் யாரையும் வைக்கப் பிடிக்காமல் எப்போதும் இல்லாததையும் பொல்லாததையும் அவனின் தந்தையிடம் சொல்லி அந்த பெண்மணிக்கு அடி வேறு வாங்கித் தருவான்.

எல்லாவற்றையும் பொறுத்து தான் போவார்… ஆனால் பத்மினி அவருடன் நன்றாக ஒட்டிககொண்டாள். அவருடன் ஒட்டிக் கொண்டதாலேயே கண்ணன் தங்கையிடம் இருந்து தூர விலகிக் கொண்டான்.

என்ஜீனியரிங் படிக்க ஆரம்பித்த பிறகு குடும்பத்தை விட்டு சுத்தமாக ஒதுங்கிக் கொண்டான். பீஸ் கட்ட மட்டுமே தந்தையிடம் பேசுவான். அவன் படித்து முடித்த பிறகு அதுவுமில்லை. கண்ணன் வேலையைத் தேடிக் கொண்டு அவன் தேவைகளை அவனே பார்த்துக் கொண்டான்.

இப்போது திருமணதிற்கு பெண்ணையும் தேடிக் கொண்டவன், இவர்கள் உறவே வேண்டாம் என்று அவர்கள் அனைவரிடமும்

தந்தையிடமும் தெளிவாக சொல்லி சென்னைக்கு முழுமையாக போய்விட்டான்...

இது எதுவும் தெரியாத சிபி தந்தையையும் மகனையும் குறிவைக்க பதிலாக... வீணாக அவனுக்குத் தெரியாமலேயே பெரிய தவறாக பத்மினியின் திருமணத்தை நிறுத்தினான்.

அந்த சூழலில் இருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்குமா என்று ஏங்கிக்கிடக்கும் கண்ணனின் சித்தி அவரின் இரண்டு மக்கள் பத்மினி எல்லோரையும் மீண்டும் அந்த சூழலில் மாட்டி விட்டான்.

திருமணம் நின்ற ஆத்திரத்தில் கண்ணனின் தந்தை குடித்து விட்டு வந்து வீட்டில் உள்ள அத்தனை பேரையும் போட்டு அடி அடி என்று அடிக்க...

வலிதாங்காமல் அந்த பிள்ளைகள் மூவரும் துடித்தனர். இது அனுதினமும் நடக்கும் கொடுமை... இந்த திருமணத்தால் பல நன்மைகள் விளைய வாய்ப்புக்கள் இருந்தது. பார்த்திருந்த மாப்பிள்ளை வசதியானவன் மட்டுமல்ல ஓரளவு கண்ணனின் தந்தையை ஆட்டுவிக்க தெரிந்திருந்தான்.

இந்த திருமணம் நிச்சயம் ஆனா பிறகு அவன் பணம் கொடுத்திருந்தானோ இல்லை மிரட்டி வைதிருந்தானோ ஏதோ ஒன்று, இந்த அடி உதையில் இருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்து இருந்தது.

ஆனால் இனி அதற்கு வாய்ப்பு இல்லை. திருமணம் நின்றது மட்டுமல்ல... அந்த மாப்பிள்ளைக்கு உடனேயே அந்த மண்டபதிலேயே அவசரமாக ஒரு மணமகளை பார்த்து திருமணம் நடந்து முடிந்திருந்தது.

இந்த சம்மந்ததற்காக கண்ணனின் தந்தையை கூட வைத்திருந்த அரசியல் வாதி... “கல்யாணமே இல்லைன்னு ஆகிப்போச்சு, இனி நீ எதுக்கு எங்க கூட இருக்க... இனிமே இந்த பக்கம் தலையைக் காட்டின கொன்னே போடுவேன்...”

“எவ்வளவு பஞ்சாயத்து பண்ணியிருப்பேன். இதுவரைக்கும் கோர்ட் படி ஏறினது இல்லை... உன்னால கோர்ர்டு கேசுன்னு ஆகி மேலிடத்துக்கு வேற நான் பதில் சொல்லிட்டு இருக்கேன். இனி நீ கண்ணுல பட்ட..”

என்று கண்ணனின் தந்தையை ஏகத்துக்கு மிரட்டி அனுப்பியிருக்க...

அந்த கோபத்தை எல்லாம் வீட்டினர் மேல் காட்டி, எல்லோரையும் அடித்து துவைத்துக் கொண்டிருந்தான் அந்த மனிதன்.

அடி பொறுக்க முடியாமல் குழந்தைகள், “அம்மா, வலி தாங்க முடியலைம்மா, செத்துடலாம்மா” என்று கதறினர். அந்த மனிதனுக்கும் போலீசிற்கும் பயந்து உறவுகள் வீட்டிற்கு கூட வராமல் மண்டபத்தில் இருந்து அப்படியே போயிருந்தனர்.

பத்மினி அப்பாவிடம் இருந்து தப்பித்து வெளியே ஓடினாள், யாரையாவது உதவிக்கு அழைத்து வரலாம் என்று.

ஆனால் அடிப்பட்டு இருந்த அவளால் வேகமாக ஓடக் கூட முடியவில்லை.

ஒரு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் வாசுவின் வீடு இருக்க, அங்கே தான் சென்றாள். இவள் சென்ற நேரத்திற்கு சற்று முன் தான் சிபி அங்கே வந்திருந்தான். வாசுவும் அவனும் அமர்ந்து அப்போதுதான் அந்த திருமணம் நின்ற விவரங்களை பேசிக்கொண்டு இருந்தனர்.

மாலை ஆறு மணி இருக்கும், வேகமாக வாசுவின் முன் ஓடி வந்து நின்றாள்.

மூச்சு வாங்கியதில் பேசக் கூட முடியவில்லை,

அவள் வந்து நின்ற தோற்றம் ஏதோ அனர்த்தம் என்று காட்ட, “என்ன? என்ன பொண்ணு?” என்றான் வாசு.

“அண்ணா, அண்ணா... அங்க அப்பா எங்க எல்லோரையும் போட்டு ரொம்ப அடிக்கறாங்க, வாங்கண்ணா” என்று அந்த பிஞ்சு கூப்பிட,

“எதுக்கு அடிக்கிறான்?” என்றான் வாசு.

“கல்யாணம் நின்னு போச்சு, அதனால அம்மாவை எங்களை அடிக்கறாங்க வாங்கண்ணா” என்றாள் அழுகையோடு...

வாசு இவர்கள் வீட்டிற்கு போவதா என்று நின்றான். சிபிக்கு அவள்

தான் கண்ணனின் தங்கை என்று கூட தெரியவில்லை… கல்யாணம் நின்று போனது என்று சொல்லவும் அந்த பெண்ணோ இவள் என்று நினைக்க ஆரம்பித்தான்.

அடிப்பட்டு முகமே ஆங்காங்கே வீங்கி இருந்தது… சிபி பத்மினியை தான் பார்த்துக் கொண்டிருந்தான். “யார் இந்த பெண், யார் இவளை இப்படி அடித்தது? என்ன?” என்று…

பத்மினி பதட்டமாக, “அண்ணா… வாங்கண்ணா…” என்று அழுகையோடு கூப்பிட…

“வாடா, போய் பார்க்கலாம்” என்று சிபி சொல்ல…

“இவ தான் அந்த கண்ணனோட தங்கச்சி, இவ கல்யாணத்தைத் தான் நாம காலையில நிறுத்தினோம்” என்று சொல்ல…

“சிபி இவளா?” என்பது போல அதிர்ந்து பார்க்கும் போதே, பத்மினியின் தம்பி காற்றை விட வேகமாக ஓடி வந்து…

“அக்கா… அம்மா சீமண்ணை ஊத்தி அப்பாவை பத்த வெச்சு, அதுவும் பத்திகிச்சு” என்று சொல்ல…

“ஐயோ” என்ற கதறலோடு அந்த சிறுபெண் மீண்டும் அலறி அடித்து திரும்பி வீட்டை நோக்கி ஓடியது. சிபி அசையாமல் நின்று விட்டான். கால்கள் வேரோடி கீழே விழும் நிலைமையில் இருந்தான்.

வாசு வேகமாக வீட்டின் உள் இருந்த அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்ல, அவர்கள் வீட்டின் முன் நின்றிருந்த டீ வீ எஸ் பிஃப்டியை எடுத்துக் கொண்டு, பக்கம் இருந்த இன்னும் இரண்டு மூன்று பேருக்கு தகவல் சொல்லி விரைந்தனர்…

சிபி வண்டியில் வந்திருக்க, “வாடா போகலாம்!” என்று வாசு சொல்ல…

“நான் வரலை!” என்றான்.

“வாடா…”

“இல்லை, எனக்கு பயமாயிருக்கு, அவங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா?”

“இனி ஒன்னும் பண்ண முடியாது, வா!” என்று வாசு வண்டியை எடுக்க... அவர்கள் பத்மினியின் வீட்டை அடைந்த போது, பத்மினி இன்னும் வந்திருக்கவில்லை...

அவளும் அவள் தம்பியும் ஓடி வந்துக் கொண்டிருந்தனர்...

திகு, திகு என தீ எரிந்து கொண்டிருந்தது...

பத்மினியின் தங்கை கீழே மயக்கமாக கிடந்தாள்... தீ எரிந்து கொண்டிருந்தது வீட்டினுள் இல்லை, வீட்டை விட்டு தள்ளி வெளியே வரப்பு ஆரம்பிக்கும் முன்பாக... காய்ந்த ஓலை மட்டை வேறு இருந்திருக்கும் போல, அது சேர்ந்து எறியவும் யாராலும் அருகே நெருங்க முடியவில்லை...

அதற்குள் புகை மண்டலம் பார்த்து, அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஆட்கள் கூட அஆரம்பித்தனர்...

பக்கத்தில் இருந்த பம்பு செட்டில் தண்ணிர் போட்டு பைப் மூலமாக விட்டனர்.

மற்ற இடங்களுக்கு தீ பரவாமல் பார்ப்பதே பெரும் வேலையாக இருந்தது எல்லோருக்கும்.

ஆனால் சிபிக்கு நன்கு புரிந்தது. இனி ஒன்றும் செய்ய முடியாது. அந்த மனித உயிர்களின் இயக்கங்கள் நின்றிருக்கும். வெறும் கரிக்கட்டை தான் மிஞ்சும் என்று...

பத்மினியும் அவள் தம்பியும் ஓடி வந்தவர்கள் தீயின் அருகில் போக முற்பட... ஆளுக்கொருவராக அவர்களை பிடித்து நிறுத்தினர்.

அவர்கள் பெற்றோர்கள் எரிவதை அழுகையோடும், கதறலோடும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

தீர்க்க முடியாத பாவத்தை அவனையறியாமல் செய்த சிபி நிற்க முடியாமல் அங்கிருந்த தென்னை மரத்தின் மீது சாய்ந்து, அந்த தீயைப் போல அவன் உள்ளமும் எரிய பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

## அத்தியாயம் நான்கு :

விஷயம் கேள்விப்பட்டு நடராஜன் பதறி ஓடி வந்தார். ஆனால் எல்லாம் முடிந்து இருந்தது.

இரண்டு கரிக்கட்டைகள் மட்டுமே மிஞ்சி இருந்தது... போலீஸ் ஸ்டேஷனில் இருந்து கான்ஸ்டபிள்களும் வந்திருந்தனர். ஜீ ஹெச்சிற்கு அதை எப்படி கொண்டு போவது என்று கூட தெரியவில்லை. அவ்வளவு சிதிலம் அடைந்து இருந்தது உடல்கள்.

பிள்ளைகள் மூவரும் அழுது ஓய்ந்து இருந்தனர். நடராஜன் சிபியிடம் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. அத்தனை முறை சொல்லியும் இப்படி தேவையில்லாமல் மீண்டும் ஒரு பிரச்சனையை இழுத்து விட்டுக் கொண்டானே என்று ஆத்திரமாக வந்தது.

ராதா போய் அவ்வளவு மனவேதனைகள் என்றால், இப்போது இவன் இருந்து இவ்வளவு வேதனை கொடுக்கிறான் என்று தான் அவருக்கு இருந்தது. எத்தனை முறை சொன்னேன்...

அங்கே எடுத்துச் செய்ய ஆளே இல்லை. போலிஸ் வந்து உடல்களை ஜீ ஹெச் கொண்டு போய்விட, பத்மினிக்கும் அவள் தம்பி தங்கைக்கும் என்ன செய்வது என்று கூட தெரியவில்லை.

உடல்களை எடுத்துச் சென்ற பின் நடராஜன் வீட்டிற்கு சென்று விட்டார். வேறு என்ன செய்ய முடியும் அவரால். இன்னதென்று சொல்ல முடியாத ஒரு அழுத்தமான மனபாரத்தில் சிபியும் வீட்டிற்குள் சென்று முடங்கிக் கொண்டான். அவன் எப்பொழுதும் ஆறுதல் தேடும் வயல்வரப்பிற்குக் கூடச் செல்லவில்லை.

உடல்களை கொண்டு சென்றது அவினாஷி ஜி ஹெச்சிற்கு, அப்போது மணி இரவு பத்து... எந்த பஸ் பிடித்து எப்படி அங்கே போவது என்று கூட தெரியவில்லை பத்மினிக்கு. அப்படியே அமர்ந்து விட்டாள் தம்பி தங்கைகளோடு...

உறவுகளும் யாரும் எதுவும் செய்யத் தயாரில்லை... தங்களுக்கு ஏன் வம்பு என்பது போல கூட அதிகம் கிடையாது... பணம் எப்படி செலவு செய்ய முடியும், எல்லார் ஜீவனும் வாயுக்கும் வயிற்றுக்கும் சரியாக

இருப்பது.

அப்படியும் மீறி போனால் போகிறதென்று பணம் செலவு செய்தாலும், நாளை இந்த பிள்ளைகளின் பொறுப்பும் சேர்ந்து கொண்டால், அதுவும் பையன்கள் என்றால் கூட ஏதோ ஆதரிக்கலாம், அவன் வயிற்றிற்கு அவன் ஏதோ சம்பாதித்துக் கொள்வான் என்பது போல...

ஆனால் இங்கே இரண்டு பெண் பிள்ளைகள்... அதுவுமில்லாமல் அவன் மகன் நல்ல வேலையில் இருக்கிறான். இப்போது தான் தைரியமாக வந்து பெண்ணை மணமுடித்து போனான். வேண்டுமென்றால் அவன் பார்த்துக் கொள்ளட்டும் என்று நினைத்து, “உங்க அண்ணனுக்கு போன் பண்ணுமா” என்றனர்.

பத்மினி தான் என்ன செய்வாள். வீட்டில் இருந்த தந்தையின் போன் எடுத்து பல முறை முயன்று விட்டாள். ஆனால் கண்ணன் எடுத்தால் தானே...

அந்த பெண்ணிற்கு அழுகை பொங்கியது... திருமணம் நின்றுபோனத்தில் வீட்டிலும் ஒன்றும் சமைக்கவேயில்லை... காலையில் இருந்து எல்லோரும் பட்டினி...

அங்கே என்ன ஹோட்டலா இருக்கிறது. பிஸ்கட் பன் மாதிரி ஏதாவது வாங்கி சாப்பிடலாம் என்றால் பக்கத்தில் ஒரு மளிகைக் கடைக் கூட கிடையாது, ஊருக்குள் போகவேண்டும்...

பசியின் கோரப்பிடிக்குள் அவர்கள் மூவரும் இருந்தனர்... அண்ணன் போன் எடுக்கவில்லை... ஆசுபத்திரிக்கு எப்படிப் போவது, அங்கே போய் என்ன செய்வது என்றும் தெரியவில்லை...

இப்போது போய் பசிக்கிறது என்று யாரிடம் சொல்ல முடியும், அவள் எப்படியோ தாங்கிக் கொள்வாள், ஆனால் ராகினியும் ஜெய்சங்கரும் எப்படித் தாங்குவர்.

ஆமாம் அவளின் சித்திக்கு சினிமா என்றால் பைத்தியம். அதன் பொருட்டே அவளின் பெயர் பத்மினி, தங்கையின் பெயர் ராகினி, தம்பியின் பெயர் ஜெயசங்கர்.

சித்தியின் நினைவு வந்ததும் அவர் இறந்த துக்கம் வேறு தொண்டையை அடைத்தது... மீண்டும் அழுகை ஆறாகப் பெருக... செய்வதறியாமல் மீண்டும் அழுதாள்.

இரண்டு கிழவிகள் மட்டும் துணைக்கு இருக்க உறவுகள், “எப்படியாவது உங்க அண்ணனுக்கு போன் பண்ணு, நாங்க காலையில வர்றோம், அவன் வந்து தான் ஜி ஹெச்ல இருந்து அந்த பாடி வாங்க முடியும், கையெழுத்து போடணும், அதுக்கு செலவு பண்ணனும்” என்று சொல்லிச் சென்று விட்டனர்.

அவளும் விடாமல் அண்ணனுக்கு முயன்றாள். சிறிது நேரத்தில் போன் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.

“ஆயா, அண்ணன் எடுக்க மாட்டேங்கறாங்க” என்று கூட இருந்த கிழவியிடம் சொல்ல.

“உங்கண்ணன் கட்டிக்கிட்டானே அந்த பொண்ணு ஃபோனு தெரியுமா”

“தெரியாது ஆயா...”

“அந்த பொண்ணு இந்த ஊரு தானே, அவங்க வீட்ல நம்பரு கேப்போம்”

“குடுப்பாங்களா ஆயா”

அந்த குழந்தைகள் படும் பாடு பொறுக்காமல், “அவங்க மட்டும் குடுக்காம இருக்கட்டும், அவங்க மொத்த குடும்பத்தையும் தெருவுல இழுத்து விட்டுடறேன், நீ வா!” என்று ஆவேசமாக கிளம்பினார்.

“ஐயோ! ஆயா, நமக்கு யாரோடயும் சண்டை வேண்டாம்” என்றாள் பத்மினி.

“சண்டை போடாம... உங்கப்பனையும், உங்கம்மாவையும் நீ காடு கொண்டு போய் சேர்க்க வேண்டாமா கண்ணு...”

“வா, போகலாம்!” என்று அவர் கிளம்பியதும், கூடவே, “இங்க தனியா இருக்க மாட்டோம்” என்று கூட இருந்த இன்னொரு கிழவி மற்றும் ராகினி ஜெய்சங்கர் எல்லோரும் கிளம்பினர்.

இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம் அந்த இருட்டில் நடந்து சென்று சிபியின் வீட்டை அடைந்த போது இரவு மணி பன்னிரண்டரை..

அவர்கள் வீட்டுக் கதவை தட்ட... அந்த இரவின் நிஷப்தத்தில் நன்கு கேட்டது.

மாமல்ல வர்மன் தான் முதலில் கண்விழித்தான்... யார் இப்படி கதைவை உடைப்பது என்று அவசரமாக கதவை நோக்கி செல்ல... அவன் விழித்த பரபரப்பில் சிபியும் விழித்தான். அவர்கள் இருவரும் முன் கூடத்தில் உறங்கிக் கொண்டு இருந்தனர்.

மாமல்ல வர்மன் கதவை திறக்க... அங்கே அவர்களை பார்த்து அப்படியே நின்றான்.

விஷயம் கேள்விப்படாமலா இருப்பான். சிபியை திரும்பி பார்க்க, அவன் வாசலுக்கு வந்தான். அவனும் இவர்களை எதிர்பார்க்கவில்லை. சில நொடிகள் அவன் முகம் வெளுத்தது... “உன்னால் தான்” என்று தன்னிடம் சண்டையிட வந்திருக்கிறார்களா என்று பயந்து விட்டான்.

அதற்குள் அந்த ஆயா பேச்சை ஆரம்பித்தது... “உங்க வீட்ல இருந்து இவங்கண்ணனோட போச்சே அந்த பொண்ணு ஃபோன் நம்பர் வேணும்” என்றார்.

அதன் பின் தான் முகமே தெளிந்தான் சிபி...

“எதுக்கு?” என்று வர்மன் கேட்கவும்...

“டேய், அப்பாவை கூப்பிட்டு விடு” என்றான் சிபி.

வர்மன் போய் அப்பாவை எழுப்ப, சத்தத்தில் வீடே எழுந்தது.

எல்லோரும் வாயிலுக்கு வந்தனர். தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, மூன்று மக்கள், வனிதா என்று எல்லோரும். குழந்தை மணிமேகலை மட்டுமே உறக்கத்தில் இருந்தாள்.

“என்னங்கம்மா?” என்று நடராஜன் கேட்க...

“உங்க வீட்ல இருந்து இவங்கண்ணனை கல்யாணம் பண்ணிக்கிட்டுப்

போச்சே பொண்ணு, அது போன் நம்பர் வேனுங்கய்யா”

“ஏனுங்கம்மா?”

“அதுங்க இவன் கூடப் பொறந்தவன்…” என்று பத்மினியைக் காட்டியவர், “ஃபோன் பண்ணினா எடுக்க மாட்டேங்கறான்… அவங்கப்பா ஃபோனுன்னு எடுக்க மாட்டானோ என்னவோ…?”

“அந்த பொண்ணு நம்பர் குடுங்க, இவங்கண்ணன் வந்தா தான் இவங்கப்பனையும் அம்மாவையும் காடு கொண்டு போய் சேர்க்க முடியும்…”

உறவுக்காரர்கள் உதவுவார்கள் என்று நினைத்து தான் நடராஜன் வந்திருந்தார். இந்த அர்த்த ராத்திரியில் அந்த பிள்ளைகள் மூன்று பேரும் வயதான பெண்மணியோடு வந்து நிற்கும் போதே… யாருமற்று நிர்கதியாய் நிற்கிறார்கள் என்று புரிந்தது.

“ஐயோ, இந்தப் பாவத்தை நான் எங்கு கொண்டு போய் தொலைப்பேன்” என்று ஆய்ந்து ஓய்ந்து போனார்.

“டேய், போன் நம்பர் குடுங்கடா” என்று சொல்ல…

அருள்மொழி தொலைபேசி எண் கொடுத்தான்.

“கூப்பிடுக் கண்ணு” என்று அந்த கிழவி பத்மினியிடம் சொல்ல, பசி மயக்கத்தில் அவளால் அந்த நம்பர் கூட அடிக்க முடியவில்லை… கண்ணில் பூச்சி பறந்தது, ஒன்றும் சரியாகத் தெரியவில்லை.

“நீ பண்ணு!” என்று ஜெய்ஷங்கரிடம் நம்பர் கொடுத்தாள். அவன் வாங்கி ஸ்பீக்கரில் அழைக்க, அது இரண்டு ரிங் போனதும் எதிர்புறத்தில் கட் செய்யப்பட்டது..

அதுவே சொன்னது… அவர்கள் வேண்டுமென்றே கட் செய்கிறார்கள் என்று…

“அக்கா, அப்பா கூப்பிடறாங்கன்னு நினைச்சு அண்ணா கட் செய்யறாங்க” என்று ஜெய்சங்கர் சொல்லவும்… என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினர்.

“நீங்க உங்க போன்ல இருந்து பண்ணி குடுங்க ஐயா” என்று அந்த கிழவி கேட்கவும், செய்யவா, வேண்டாமா என்று நடராஜன் தடுமாறினார்.

“நாங்க அவ கிட்ட பேசறது இல்லைங்கம்மா”

“நீங்க பேசாதீங்க ஐயா! நாங்க பேசறமுங்க!” என்றார் அந்த பெண்மணி...

“அண்ணா! நம்ம எதுக்கு பேசணும்!” என்று ராஜலக்ஷ்மி இடைப்புக...

இவ்வளவு நேரம் பணிவாய் பொறுமையாய் பேசிக்கொண்டிருந்த அந்த கிழவி... பொறுமையை பறக்க விட்டு...

“ஏன் பேசணுமா? உங்க வீட்டுப் பொண்ணு எங்க வீட்டுக்கு வந்த நேரம் ஒரு கல்யாணம் நின்னுபோச்சு... அதுமட்டுமா ரெண்டு காவு வாங்கிடுச்சு, இந்த பிள்ளைகளை அனாதையாகிடுச்சு” என்றார் ஆவேசமாக...

நடராஜன் எதுவும் பதில் பேசாமல் சிபியை ஒரு பார்வை பார்த்தார்... எல்லாம் உன்னால் தான் என்பது போல...

ராஜலக்ஷ்மியை பார்த்து, “எதுவும் பேசாதே” என்று சொன்னவர்... அவர்களும் பாதிக்கப்பட்டு இருப்பது இப்போது அடுத்தவரின் பார்வைக்கு வராது என்று புரிந்து...

“அவளுக்கு ஃபோன் பண்ணுடா” என்றார் அருள் மொழியைப் பார்த்து...

பலமுறை ராதா அருள் மொழிக்கு திருமணத்தின் பின் முயன்று இருந்தாள். அவன் போனை எடுக்கவேயில்லை. இப்போது அவன் செய்தால் எடுப்பாளா என்ற யோசனையோடே இப்போது கூப்பிட்டான்.

அடித்த இரண்டாவது ரிங்கிலேயே எடுத்தவள், “சொல்லுங்க மாமா!” என்றாள்.

அருள்மொழி அமைதியாக இருக்கவும்... “அங்க யாருக்கும் ஒன்னும் இல்லைல்ல” என்று பதட்டமாக கேட்டாள்.

“ஊருக்குள்ள உங்க அம்மா மட்டும் உயிர் கிடையாது, இன்னும் இருக்காங்க” என்று கடுமையாக பேசியவன், “எங்க உன்னை ஒருத்தன் இழுத்துட்டு போனானே, அவன் கிட்ட ஃபோன் குடு...”

“அவர்கிட்ட என்ன பேசணும்?” என்று கவலையாக ராதா கேட்க,

“ஏய், குடு முதல்ல, அவங்கப்பாவும் அம்மாவும் செத்துட்டாங்க! அதை சொல்லணும்...”

“என்ன?” என்று அதிர்ந்தாள்.

“அவர் தங்கச்சிக்கு இன்னைக்கு கல்யாணம்”

“அங்க எந்தக் கல்யாணமும் நடக்கலை, கருமாதி தான் நடந்திருக்கு... அவன் கிட்ட போனை குடு” என்று சொல்லி... அதை பத்மினியிடம் கொடுத்தான்.

கண்ணன் அந்த புறம் பதட்டமாக தொலைபேசி வாங்க,

“அண்ணா!” என்றாள் பத்மினி.

“என்ன பத்மினி?”

“அம்மாவும், அப்பாவும் செத்துப்போயிட்டாங்க...” இவள் சொல்லும் போதே சிறு பெண் ராகினி ஒரு கேவலோடு அழுக...

அந்த சிறு பெண் துக்கத்தில் அழுகிறாள் என்று நினைத்தவர் நடராஜனும் சிபியும் மட்டுமே... மற்றவர்களுகேல்லாம் தினம் பார்கின்ற கேட்கின்ற ஒரு இறப்பு செய்தி அவ்வளவே...

அவர்கள் கவலையெல்லாம் இரவு தான், ஆனாலும் யாராவது பார்த்துவிட்டால் என்ன ஆவது என்பது போல தான்.

பத்மினி ஒரு கையால் ராகினியை பிடித்து... தன் மேல் ராகினியின் முகத்தை வைத்து அழுத்திக் கொண்டாள், அழுகை சத்தம் வெளியே கேட்காமல்.

“அண்ணா காலையில ஆசுபத்திரிக்கு போகணும், நீ எப்போ வர்ற

உடனே வா” என்றாள் பத்மினி...

“இப்போவே மணி ஒன்னு! நான் ஏதாவது ட்ரெயின் கிடைக்குதான்னு பார்த்து, முடிஞ்ச வரைக்கும் சீக்கிரம் வர்றேன்” என்று கண்ணன் சொல்ல...

“அண்ணா எதுன்னாலும் போன் எடுண்ணா, எடுத்து பேசு” என்றாள்.

“ம், நான் சீக்கிரம் வரப் பார்க்கிறேன். ஆனா எவ்வளவு நேரம் ஆகும்னு சொல்ல முடியாது” என்றான்.

அந்த குரலில் வரவேண்டும் என்பது கடமையை முன்னிட்டு மட்டுமே இருந்தது. அப்பா அம்மா இறந்துவிட்டார்களே என்ற பரிதவிப்பு இல்லை.

பத்மினி அழுகையோடு தான் பேசினாள்... ஒரு வார்த்தைக் கூட அழாதே, என்று கண்ணன் சொல்லவில்லை என்பதை அங்கிருந்த பலர் கவனித்தனர்.

ஸ்பீக்கரில் தான் பேசினர்.

பத்மினி போன் வைக்கப்பட்டதும்... அதை கொடுத்து விட்டு போகலாம் ஆயா... என்று அவர்கள் கிளம்பினர்.

அவர்கள் திரும்ப நடந்த விதம்... கண்டிப்பாகப் பார்ப்பவர் யார் மனதையும் கலங்கச் செய்யும்...

நடராஜனுக்கு மனது மிகவும் பாரமாகிப் போனது...

அவரின் கோபமெல்லாம் சிபியின் மீது திரும்பியது... “ஏண்டா ஒரு வாரமா கிளிப்பிள்ளைக்கு சொல்ற மாதிரி சொல்றேன், எந்த பகையுணர்ச்சியும் வேணாம் விட்டுடுன்னு...”

“ராதா செத்துப்போயிட்டான்னு நினைச்சு மனசை தேத்த வேண்டியது தானேடா... அவ போனதுக்கு இந்த பிள்ளைங்களை பழி வாங்கிட்டியே... அந்த பய போன்ல பேசும்போதே தெரியுது... அவன் வர்றதே பெரிய விஷயம். அவன் வந்து காரியத்தை செய்யறது அதை விட பெருசு...”

“இதுல இந்த பசங்களை அவன் ஆதரிப்பானா என்ன… இப்படி செஞ்சு தொலைச்சிட்டியேடா” என்று மிகவும் கோபமாக பேச…

இப்படி நடந்துவிட்டதே என்று சிபிக்கு சொல்லொணா வருத்தம் தான்… ஆனால் இதில் அவன் தப்பு என்ன இருக்கிறது, இப்படி அப்பா திட்டும் அளவுக்கு என்று கோபமும் துளிர்க்க…

அவனும் பதிலுக்கு வார்தையடினான்… “நான் என்ன செஞ்சேன்… நான் ஒன்னும் கல்யாணத்தை சதி செஞ்சு நிறுத்தலை. அது சட்டத்துக்கு புறம்பானது… அவங்க பார்வைக்கு கொண்டு போனேன்… அதுக்கு உரியவங்க நடவடிக்கை எடுத்தாங்க… அவ்வளவு தான்”.

“அவன் அப்பன் ஒரு மொள்ளமாரி, பசங்களை வளர்க்கத் துப்பில்லாம அந்த பொண்ணை கல்யாணம் செஞ்சு குடுத்து குளிர்காய நினைச்சிருக்கான். அதுக்கு அவன் பொண்டாட்டியைப் பசங்களை அடிச்சு சித்ரவதை செஞ்சிருக்கான்… அந்தம்மா அவன் கொடுமை பொறுக்காம அவனைப் பத்த வெச்சு அதுவும் பத்திகிச்சு…”

“அவன் எவ்வளவு கொடுமை செஞ்சிருந்தா இந்த மாதிரி செஞ்சிருக்கும்… அதைய உட்டுபோட்டு என்னை குத்தம் சொல்லுவீங்களா…”

“எவ இருந்தா எனக்கென்ன செத்தா எனக்கென்ன… எவ போனாலும் போய் தொலையறான்னு என்னால விட முடியும்… என்னோட வலி வருத்தம் எல்லாம் எல்லார் முன்னாடியும் என்னை அசிங்கப்படுத்திட்டு போயிட்டா. போனவ முன்னாடியே போக வேண்டியது தானே” என்று ஆக்ரோஷமாக பதிலுக்கு பேச…

அவன் கோபத்தை பார்த்து அத்தனை பேரும் மிரண்டனர்.

“எங்கக்கிட்டயே இந்த பொருமு பொருமுற… இந்த கோவத்தை பார்த்து தான் உன்னைப் பிடிக்காம அந்த பொண்ணு போயிடுச்சு” என்று நடராஜனும் பேச…

“என்னை எவளுக்கும் பிடிக்கணும்னு நான் இங்க ஒன்னும் ஏங்கிக்கிட்டு நிக்கலை… இல்லை, மனசுல ஆசையை வளர்துக்கலை… நீங்கல்லாம் பேசி பேசி அந்த எண்ணத்தை மனசுல விதைச்சீங்க அவ்வளவு தான்…

அந்த கருமம் பிடிச்சவளுக்கு, என்னைப் பிடிச்சா என்ன பிடிக்காட்டி என்ன?” என்றான் ஆத்திரமாக.

“பிடிச்சா என்ன? பிடிக்காட்டி என்னன்னு இவ்வளவு லொள்ளு பேசறியே அப்படியே விட்டிருக்க வேண்டியதுதானே.. இந்த பசங்களை எதுக்குடா நடுத்தெருவுல நிறுத்தின” என்றார் ஆவேசம் அடங்காமல் நடராஜன்.

இருவரும் அப்படி முறைத்துக் கொண்டு நின்றனர்...

“சிபி வாடா... அப்பா தான பேசாத” என்று வர்மனும், அருள் மொழியும் சிபியைப் பிடித்து இழுக்க... ஈஸ்வரரும் சுலோச்சனாவும் தங்களின் மகன் நடராஜனை, “நடந்ததுக்கு அவன் என்ன பண்ணுவான்” என்று சமாதானம் செய்ய...

தேவியும், வனிதாவும், அழுதுகொண்டிருந்த ராஜலக்ஷ்மியை சமாதானம் செய்ய...

எதுவாகினும் அழுதுகொண்டிருந்த தங்கையை அணைத்துப் பிடித்தவாறு இருட்டில் நடந்து கொண்டிருந்த பத்மினி, அக்காவையும் தங்கையும் பார்த்தவாறு நடந்து கொண்டிருந்த ஜெய்சங்கர்... இவர்களை சரிப்படுத்துமா என்ன?

## அத்தியாயம் ஐந்து :

தந்தையிடம் பெரிய வாக்குவாதம் தான் சிபிக்கு, ஆனாலும் மனது அமைதியாகவில்லை, என்னவோ தான் தப்பு செய்யவில்லை என்று காரணங்கள் கண்டுபிடித்தாலும் மனது பாரமானது.

என்னவோ நினைக்க, என்னவோ நடந்து விட்டது! யாரைக் குற்றம் சொல்ல... தான் இதுவரை யாருக்கும் தீங்கு நினைத்ததோ செய்ததோ இல்லையே...

கோபக்காரன் தான், விசுக்கென்று கோபம் வந்ததும் வார்த்தைகளை விடுவான், சண்டைக்கு போவான், ஆனால் தீங்கு யாருக்கும் இழைத்தது இல்லையே...

முதல் முறையாக யாரையோ பழிவாங்க ஒரு திருமணத்தை நிறுத்தப் போய் இப்படியாகிவிட்டதே... திருமணம் நின்றிருந்ததில் உறக்கம் தொலைத்திருந்தான்.

இரண்டு உயிர்கள் போனதில் இப்போது நிம்மதியும் தொலைத்தான்... "யாரோ எதுவோ செய்யப்போக நான் குற்றவாளியா, அய்யகோ" என்று இருந்தது.

அப்பா சொல்வது போல, என்னால் தான் இந்தப் பிள்ளைகள் அனாதையானார்களா... வீட்டின் வாசல்படியில் அப்படியே அமர்ந்து விட்டான்.

"உள்ள வா சிபி!" என்று வர்மன் அழைத்தும்...

"இல்லை! வரலை! என்னை விடு..." என்றான், பேசும்போது அவன் குரல் கரகரத்தது...

சிபி என்று வர்மன் அருகில் அமர... "ப்ச், என்னைத் தனியா விடு! போ!" என்று அந்த இரவிலும் கத்தினான்.

வர்மன் பயந்து போய் எழுந்து கொண்டான்...

அதற்குள் சத்தம் கேட்டு வீட்டினர் வந்துவிட்டனர். "என்னடா கத்தறான்?" என்று நடராஜன் கோபமாக கேட்க...

"ம், இன்னும் யாரைக் கொல்லலாம்னு பிளான் பண்ணிட்டு இருக்கேன்... இல்லை, முடியலைன்னா நான் தொலைஞ்சு போயிடறேன்" என்று கத்தி விட்டு, சட்டைக் கூட அணியவில்லை... அந்த இரவில் வண்டியை எடுத்துக் கொண்டு போய், எப்பொழுதும் போல வயல் வரப்பில் தஞ்சம் அடைந்தான்.

அந்த மூன்று பிள்ளைகள் நடந்து சென்றது கண்ணிலேயே நின்றது. இருட்டில் வெறித்தபடி இலக்கில்லாமல் பார்வை நின்றது.

அங்கே வீட்டில் நடராஜனை ஈஸ்வரர் மிகவும் கடிந்து கொண்டார்... "பாரு நடராஜா, இந்த உலகத்துல நடக்குற எதுக்கும் யாரையும் பொறுப்பாக்க முடியாது... எல்லாம் விதிப்பயன்... இதுல நீ ஏன் சிபியை

கோவிச்சுக்குற..”

“தப்பு! ரொம்ப தப்பு! நீ பேசாம இருந்திருந்தா கூட அவன் சும்மா இருந்திருப்பான்... இதுல நீ எதுவும் செய்யாதன்னு அவன் கிட்ட நிறைய முறை சொன்னதே, அவனுக்கு எதையாவது செய்யத் தூண்டியிருக்கும், தப்பு உன் மேல!” என்று நடராஜனைக் குற்றம் சாட்டினார்.

“அப்பா! என்னை சொல்றீங்களா!” என்று நடராஜன் வருத்தப்பட,

“ஆமாம்! உன்னைத் தான் சொல்றேன்... ராதா போயிட்டா... உடனே இவனுக்கு நீ ஒரு பொண்ணை பார்த்துக் கல்யாணம் செஞ்சிருக்கணும்...” “அது செய்யாம விட்டுட்ட... முதல்ல அவனை இதுல இருந்து வெளில கொண்டு வா!”

“இப்போ எப்படிப்பா உடனே கல்யாணம் பண்ண முடியும்... இருக்குற எல்லா நகையும் பேங்க்ல... நிறைய செலவு வேற... கல்யாண செலவுக்கு என்ன பண்ணுவோம்”

“என்ன பெரிய பணம்! எல்லோரும் கைல பணத்தை வெச்சிகிட்டா கல்யாணம் பண்ணுவாங்க! ஏதாவது கடனை உடனை வாங்குவோம்!”

“பொண்ணு! பொண்ணுக்கு எங்கப்பா போவோம்!”

“தேடுவோம்! இனிமேவா அவனுக்குப் பொறக்கப் போறா... பொறந்திருப்பா...”

“அவன் சம்மதிக்கணுமே...!”

“சம்மதிக்க வைப்போம்டா!” என்றார் ஈஸ்வரர் உறுதியான குரலில்... “சிபி சொன்ன மாதிரி நாம தான் சொல்லிச் சொல்லிச் அந்த எண்ணத்தை அவன் மனசுல விதைசோம்... அவங்களா விருப்பப்படலை! நம்ம தப்பு அது! நம்ம தப்புனால பிள்ளைங்க வாழ்க்கை பாதிக்கறதா...”

“பிற்காலத்துல நடக்குமா நடக்காதா.. பெரியவங்க ஆனதுக்கு அப்புறம் அவங்களுக்கு பிடிக்குமா பிடிக்காதான்னு தெரியாம, நம்ம பெரியவங்க செய்யற தப்பு வேலைடா இது... சரி பண்ணுவோம்! எல்லோரும் போய்

தூங்குங்க!” என்றார் வீட்டின் பெரியவராக.

உறங்கச் சென்று விட்டார்கள் தான்! ஆனால் யாருக்கும் உறக்கம் தானில்லை.

அங்கே சிபியும் உறங்கவில்லை… “என்ன செய்துவிட்டேன் நான்… ஆனால் இப்படி ஆகும் என்று நினைக்கவில்லையே” என்று மிகுந்த மன உளைச்சலில், கழிவிரக்கதில் இருந்தான்.

அதிகாலையிலேயே வர்மன் அவனைத் தேடி வந்த போது, உறக்கமில்லா விழிகள் சிவந்து இருந்தது… வீட்டில் அனைவரும் வர்மனைத் துரத்தி இருந்தனர். “சிபி என்ன செய்யறான்னு பாரு” என்பது போல…

அதனால் தேடி வந்தான்…

சிபி, அங்கிருந்த தென்னை மரத்தில் சாய்ந்து அமர்ந்து இருப்பதை பார்த்தவன்… “முதல்ல சட்டையைப் போடு… அம்மா டீ குடிக்க வர சொன்னாங்க…”

சட்டையை மட்டும் வாங்கி போட்டுக் கொண்டான்… ஆனால் இடத்தை விட்டு அசையவில்லை..

“வாடா!” என்று வர்மன் கை நீட்டினான்.

அப்போதும் சிபி அப்படியே அமர்ந்திருக்க… “அப்பா ஏதோ கோபத்துல சொல்றாரு, நீ வா! இப்படியே இருந்தா ஆகுமா… எழுந்துரு, என்ன செய்யலாம்னு பார்க்கலாம்…”

“ப்ச், கஷ்டமா இருக்குடா! நான் இப்படியாகும்னு நினைக்கலை!” என்றான்..

“நடக்கறது எப்படியும் நடக்கும். தாத்தா சொன்ன மாதிரி அது நடக்கணும்னு இருந்திருக்கு, உன் மூலமா நடந்திருக்கு… அவ்வளவு தான்!”

“அதுக்காக சங்கடப்படுகிட்டு அப்படியே உட்கார்ந்து இருப்பியா… நம்மளால ஆனதை செய்யலாம்”

“அந்த பசங்க வேற அந்த ராத்திரி நேரத்துக்கு வந்தாங்க... அந்தப்பய எப்போ வர்றது, அந்த பசங்க அதுவரைக்கும் என்ன பண்ணுவாங்க... வா போய் பார்க்கலாம்” என்று வர்மன் கூப்பிட உடனே எழுந்தான் சிபி...

அவனும் போய் பார்க்க வேண்டும், ஆனால் போவதா வேண்டாமா என்ற தயக்கத்தில் இருந்தான்.

இப்போது அண்ணனும் தம்பியும் கிளம்பினர்...

பத்மினியின் வீட்டிற்கு சென்ற போது.. அங்கே மூவரும் பசி மயக்கத்தில் ஆளுக்கு ஒரு மூலையில் சுருண்டு இருக்க... நேற்று பேசிய பாட்டி, பக்கத்தில் இருந்த இன்னொரு வயதான பெண்மணியிடம்...

“காசு எவ்வளவு வெச்சிருக்க! என் கிட்ட இருவது ரூபா இருக்கு... காசிருந்தா குடு, டீயாவது வாங்கிட்டு வரலாம், அஞ்சு பேர் இருக்கோம்” என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

சரியாக அந்த நேரத்தில் சிபியும் வர்மனும் போக... அந்த கிழவிகள் நோட்டை தடவிக் கொண்டிருப்பதை பார்த்து சிபி வர்மனிடம், “ஒரு நூறு ரூபா குடுடா” என்றான்.

“இப்போது எப்படிப் போவது” என்று கிழவிகள் தடுமாறினார். ஏனென்றால் டீக்கடைக்கு மெயின் ரோடு போக வேண்டும், குறுக்கு பாதையில் நடந்தாலும் கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரம்..

ஜெய்சங்கரை சைக்கிளில் போகச் சொல்லலாம் என்றால், அவன் சோர்ந்து படுத்துக் கிடந்தான்.

“நான் போறேன்!” என்று வீட்டினுள் இருந்த ஒரு தூக்கு வாளியை எடுத்துக் கொண்டு அதில் ஒரு பாட்டி கிளம்ப,

வர்மன், “அந்தப் பையனை எழுப்பி விடுங்க! நான் கூட்டிட்டுப் போறேன்” என்று சொல்லவும்...

அவர்கள் அவசரமாக ஜெய் சங்கரை எழுப்பி விட்டனர். அவனைக் கூட்டிக்கொண்டு வர்மன் போக... அங்கே எப்படி இருப்பது என்று

நினைத்து... அந்தப் புறமாக இந்த வயல் வரப்பில் இறங்கி நடக்க ஆரம்பித்தான் சிபி.

அவன் நடக்க நடக்க அது நல்ல விளைச்சல் பூமி என்று கண்டுகொண்டான். ஒரு புறம் கரும்பும், இன்னொரு புறம் மஞ்சளும் இருந்தது.

அதைப் பார்த்தவுடன் மனது சற்று அமைதியானது. வாழ்க்கையில் முதன் முறையாக சற்று நிதானமாக யோசித்தான். இனி என்ன செய்வது என்று..

யோசித்தபடியே அவன் மீண்டும் பத்மினியின் வீட்டை அடைய... அதற்குள் வர்மன் டீ மற்றும் எளிமையாக பன் போன்ற உணவுகளை வாங்கி வந்திருக்க...

அவர்கள் உண்டனர்... அவர்களின் பசியாற்றியது இன்னும் சற்று நிம்மதியைக் கொடுத்தது.

மெதுவாக அந்த வீட்டை, அவர்களைப் பார்வையால் அளந்தான். எல்லோரும் சிறு பிள்ளைகள் தான்... அதில் பெரியவளான பத்மினியை ஆராய... “ஐயோ! இந்த பெண்ணிற்குத் திருமணமா” என்று தான் இருந்தது.

முகமும் முதிரவில்லை, உடலும் முதிரவில்லை... சிறு பிஞ்சு தான் அவள். தன்னுடைய பிரச்னையை ஒதுக்கி வைத்து விட்டு பார்த்தான். இந்த பெண்ணை விட இரண்டு மடங்கு அதிக வயதானவனுடன் திருமணம்.

யோசிக்கவே முடியவில்லை. இவர்களுக்கு எல்லாம் மனசாட்சியே இருக்காதா என்று தான் தோன்றியது.

மனதிற்குள் மெல்லிய உறுதி தான் செய்தது சரிதான் என்பது போல... நிச்சயம் இவளுக்கு திருமணம் ஆகியிருந்தால், உடனே உண்டாகிவிட்டால் பெற்றுப் பிழைப்பது கூட இந்த சிறுமிக்கு கடினம் தான் என்று தோன்றியது.

இவன் அவர்களைப் பார்வையிடுவதைப் பார்த்ததும் பத்மினி வந்து, “தேங்க்ஸ் அண்ணா! டீ வாங்கிக் குடுத்ததுக்கு... நாங்கல்லாம் நேத்து

காலையில சாப்பிட்டது தான்!” என்று அவள் சொல்லும் போது மனது உருகியது.

ஆனாலும் பத்மினிக்கு பதில் சொன்னான்... “தயவுசெஞ்சு என்னை அண்ணான்னு எல்லாம் கூப்பிடாத, உங்கண்ணன் மாதிரி ஒரு ஈனப் பிறவியை கூப்பிட்டிட்டு, அந்த உறவு முறைய சொல்லி என்னை கூப்பிடாத” என்றான்.

அவன் சொன்ன விதத்தில், அவன் உறங்கா சிவந்து இருந்த கண்களில் தெரிந்த ரௌதிரத்தை பார்த்து பத்மினி பயந்து சற்று பின்னடைந்தாள்.

சிபி என்று வர்மன் அதட்ட கட்டுக்குள் வந்தான். பத்மினியிடம் சமாதானமாக பயந்துக்காதம்மா என் அண்ணன் பேசறதே அப்படித்தான் என்றான் வர்மன்.

அதற்குள் அவர்களின் அருகில் வந்த ஜெய்சங்கர்... “காலையில ஆசுபத்திரிக்கு வரச்சொல்லி போலிஸ்காரங்க சொல்லிட்டு போனாங்க... எங்க போறது? எப்படிப் போறது? அங்க போய் என்ன பண்ணனும்!” என்று ஜெய்சங்கர் கேட்கும் போதே...

சிறுமி ராகினி அம்மாவை நினைத்து, தேம்பி தேம்பி அழத்துவங்கினாள். அவள் அழுவதைப் பார்த்ததும் பத்மினியும் ஜெய்சங்கரும் கூட அழ,

கூட இருந்த வயதான பாட்டி அதட்டியது, “அழறதுனால உங்கப்பா அம்மா வந்துடுவாங்களா என்ன? பசங்களா, தைரியமா இருக்க வேண்டாமா” என்று சொல்லி...

‘டேய், தம்பி! இனி நீ தான் உங்கக்காவையும் தங்கச்சியையும் பார்த்துக்கணும். பையன் நீ அழலாமா” என்று பொறுப்பைத் தூக்கி அந்த சிறு பையன் மேல் வைத்தது.

“உங்கண்ணன் எப்போ வர்றான்னு போன் பண்ணினானா” என்று பத்மினியை பார்க்க... அவள் இல்லை என்பது போல தலையசைத்தாள்.

“அவன் எப்போ வந்து, என்ன செய்யறது... இங்க யாரும் எடுத்துக் கட்டி செய்ய மாட்டாங்க. உன்ற அத்தைக்குப் போன் பண்ணுனியா, அவளுக்கு தகவல் சொன்னீங்களா...”

“எனக்கு யாரு வந்தாங்க, போனாங்கன்னு கூடத் தெரியாது ஆயா!” என்றாள் பத்மினி.

“என்ற பையனுக்குப் போன் போடு!” என்று சொல்லி மகனிடம் கேட்டார். “ஏண்டா இந்த ஊட்டு பொறந்தவ கிட்ட சொன்னிங்கலாடா...”

“அதுல தன் ஒரு தப்பு நடந்து போச்சு... அக்காக்கு போன் போகலை... நான் மறுபடியும் போடறதுக்குள்ள... கூட இருந்தவன் அக்கா ஊட்டுகாரருக்கு போன் போட்டுட்டான்... அவரு லாரிக்கு போயிருக்காரு போல...”

“எவனும் தகவல் சொல்லக் கூடாது. நான் வந்து சொல்லிகறேன்னு சொல்லிட்டாரு. அதான் சொல்லலை!”

“என்னடா இப்படிப் பண்ணிடீங்க...” என்று சலித்து பாட்டி போனை வைத்தார்.

“அத்தைக்கு தெரியுமா?” என்று பத்மினி கேட்க...

“தெரியாதாம்! உன்ற மாமன் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டான் போல... ஊரே கேளு நாடே கேளுன்னு போனவாரம் தான் வந்து மண்ணை வாரி இரைச்சிட்டு போனா அவ... இன்னைக்கு உன்ற அப்பனும் இல்லை ஆத்தாளும் இல்லை...”

“உங்கப்பனும் உங்கண்ணனும் செஞ்ச வேலைக்கு யாரு வருவா? எப்படியோ உங்கம்மா போய் சேர்ந்தா... உன் சித்தி இத்தனை நாள் உங்கப்பன் கிட்ட தாங்குனது பெரிய விஷயம்...”

“உங்கண்ணன் பெரிய படிப்பு படிக்கிறான். உங்களைப் பார்த்துக்குவான்னு நினைச்சா... அவனா கல்யாணம் பண்ணிக்கிட்டு, ஒட்டும் வேணாம் உறவும் வேணாம்னு போய்ட்டான்... உங்களை நினைச்சா தான் பசங்களா மனசு பதைக்குது! இனி என்ன செய்வீங்க...” என்று அந்தக் பாட்டியே கலங்க...

“தைரியம் சொல்றேன்னு நீங்க என்ன செஞ்சிட்டு இருக்கீங்க” என்று அதட்டிய சிபி... “அவங்க அத்தை பார்த்துக்குவாங்கன்னா அவங்களுக்கு

தகவல் சொல்லுங்க" என்று ஊக்கினான்...

எதை தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் இருந்தான் சிபி. எப்படியாவது அந்த பிள்ளைகளுக்கு ஒரு ஆதரவை அமைத்துக் கொடுத்து விடவேண்டும் என்ற நோக்கத்தில் அத்தைக்கு அழைக்கச் சொல்ல...

சிபிக்குத் தெரியவில்லை இன்னும் ஒரு பெரிய பிரச்சனையில் சிக்கப் போகிறோம் என்று.

"இவங்க அத்தை மச்சாண்டார் பொண்ணை இவனுக்கு கட்டி வைக்கிறேன்னு இவங்கப்பன் சொல்லி, கண்ணன் படிப்பு செலவுக்கு இவங்க அத்தை கிட்டயும். அந்த பொண்ணோட அப்பன்கிட்டையும் நிறைய பணம் வாங்கிட்டான்".

"இவன் பையன் சொல்லாம கொள்ளாம வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிகிட்டான்" என்று கதை சொல்ல...

"ஐயோ!" என்று இருந்தது சிபிக்கும் வர்மனுக்கும்... "என்னடா இது!" என்று இருந்தது.. சிபிக்கு கல்யாணம் என்ற வார்த்தையே கசந்தது...

"சே, ச்சே! என்னடா இது!" என்பது போல முகம் தானாக ஒரு கசப்புணர்வை காட்டியது...

"அக்கா, நீ போன் பண்ணி பாரேன்! அத்தை நீ பேசினா பேசுவாங்க" என்று ஜெய்சங்கர் பத்மினியைப் பார்த்து சொல்ல...

அந்த பெண் தகவல் சொல்ல... "ஐயோ, ஏன் சொல்லலை, இதோ வர்றோம் கண்ணு..." என்று பத்மினியின் அத்தை தனம் உடனே கிளம்பி வருவதாக சொல்ல... அந்த பிள்ளைகளின் முகம் துக்கத்தில் இருந்தாலும் சற்று தெளிந்தது.

அந்த நடுத்தர வயது பெண்மணி மட்டும் அரை மணிநேரத்தில் யாரோ ஒரு பையனுடன் வண்டியில் வந்தார்... அவரை விட்டதும் அந்தப் பையன் போய் விட...

அந்த பெண் சூழ்நிலையைக் கையில் எடுத்து, உறவுக்கரார்களை

அழைத்து, அப்படியே போய்டுவீங்களா என்று சத்தமிட்டு, வேண்டிய பணத்தை கொடுத்து, “நீங்க ஜீ ஹெச் எல்லாம் வரவேண்டாம்” என்று பத்மினியிடமும் ராகினியிடமும் சொல்லி, ஜெய்சங்கர் மற்றும் சில உறவுக்கரார்களை அழைத்துக் கொண்டு ஜீ ஹெச் கிளம்பினார்.

அப்போது தான் சிபி சற்று தெளிந்து, என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள அங்கிருந்த ஒருவரின் தொலைபேசி எண்ணெய் வாங்கி... உடல் வருவதற்குள் சற்று குளித்து வரலாம் என்று வீட்டிற்கு வந்து பிறகு போனில் என்ன நடக்கிறது என்று கேட்டுக் கொண்டே இருக்க...

மாலை வரை உடல் வரவில்லை... அந்த கண்ணனாகப் பட்டவன் கூட மதியத்திற்கு மேல் வந்து சேர்ந்து விட்டான் அவன் மனைவி ராதாவோடு...

உடல் மாலை ஆன போது, போராட்டங்களுக்குப் பிறகு வீடு வந்து சேர்ந்தது.

உடல் வந்து விட்டது என்று தெரிந்த பின், அவர்களின் மனதை சமாதானப்படுத்திக் கொள்ள அந்த உடல்களோடு காடு வரை செல்ல சிபி, நடராஜன், வர்மன், அருள்மொழி என்று சிபி வீட்டு ஆண்கள் கூட அங்கே வந்தனர்.

அதன் பின் நடந்தது... உடல் வீடு வந்து சேர்ந்தாலும் காடு சேரவில்லை...

“என்னைத் தாண்டி எவன் இந்த பொணத்தைக் காடு கொண்டு போய் சேர்க்கறாங்கன்னு பார்க்கிறேன். எனக்கு பைசல் பண்ணாம இந்த பொணம்ங்க இந்த இடத்தை விட்டு நகராது... என்னை என்ன ஈனா வானான்னு நினைச்சிடீங்களா... இந்த ஃபிராடுப் பயலை வழியனுப்ப இத்தனை பேரா.. நல்லவன் செத்தா ஒரு நாலு பேர் கூட இருக்குறது இல்லை. கலிகாலம் தான்” என்று தனத்தின் கணவன் ராஜவேல் வந்து நின்றான். அதுமட்டுமில்லாமல் அந்த இடத்தை விட்டு யாரையும் நகர விடவில்லை.

யாராலும் அவனை அடக்கவோ, சமாளிக்கவோ முடியவில்லை.

“சே! சே! என்ன கருமம் பிடிச்சவனுங்கடா இவனுங்க... இங்க போய்

ராதா கல்யாணம் பண்ணி இருக்காளே!". என்று இத்தனை நாள் அந்த பெண்ணை வளர்த்தவராக நடராஜன் கவலைப் பட்டுப் போனார்.

சிபி, "ஐயோ என்ன சுழலடா இது..." என்று நினைத்தாலும்... ராதாவிற்காக அவனும், நடராஜனும், மற்ற சகோதரர்களும் தான் போய் நின்றனர்.

ஆம்! ராதாவிற்காக.. எப்படியோ போகட்டும் என்று உறவினளாக அற்று விட்டுவிட்டாலும், தன் தங்கையின் பெண்ணை அப்படி அவமானப்பட விட முடியாமல்... நடராஜன் போய் நிற்க... வேறு வழியில்லாமல் தந்தை கூட மகன்கள் நிற்க, இன்னும் சிக்கல்களை தேடிக் கொண்டனர்.

## அத்தியாயம் ஆறு :

"ஏண்டா, நான் ஊருல இல்லாத நேரமா பார்த்து கல்யாணத்தைச் செஞ்சிகிட்டு போயிட்டியா? என்ன ஜென்மம்டா நீ? உங்கப்பனை விட இன்னும் பெரிய ஃபிராடுப் பயலா இருப்ப போல" என்று கண்ணனைப் பார்த்து சொல்ல... அவன் முகம் அவமானத்தில் சிறுத்தது.

யாரிடம் போய் என்ன விளக்கம் சொல்ல முடியும். எல்லோரும் சூழ்நிலைக் கைதிகளே.

"உங்கப்பனா உன்னை படிக்க வெச்சான். எல்லாம் எங்கப் பணம்டா... எப்படிடா எப்படி? உங்களுக்கு எல்லாம் மனசாட்சியே கிடையாதா.. அவ்வளவு பணத்தை வாங்கி சுரணையா உடம்பை வளர்த்துக்கிட்டு, எப்படிடா எங்க பொண்ணை ஏமாத்த உனக்கு மனசு வந்தது"

"நான் ஒன்னும் உங்ககிட்ட பணம் வாங்கலை!"

"நீ வாங்கலைன்னாலும் உன் பேரைச் சொல்லித்தானேடா உங்கப்பா பணம் வாங்கினான். நான் இல்லாத நேரம் கல்யாணம் முடிச்சிகிட்ட... என் பொஞ்சாதி வந்து கேட்டதுக்கு என்னவோ பணத்தை உங்க மூஞ்சில தூக்கி எறிவோம்னு உங்கப்பன் திமிர் பேசினானாமே... இன்னைக்கு அவனே எரிஞ்சு போயிட்டாண்டா..."

பத்மினியைக் காட்டி, "இந்த பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்

குடுத்து அதுல வர்ற பணத்துல தானே உங்கப்பன் எங்களுக்கு பணம் குடுக்கறேன் சொன்னான்! இப்போ கல்யாணமும் நின்னு போச்சு! அவனும் செத்துட்டான், எங்களுக்கு யாரு பணம் குடுப்பா! எங்க பொண்ணு கதி...”

“இதுக்கு ஒரு வழி தெரியாம பொணத்தை எடுக்க விடமாட்டேன்... நடுவுல யாரு வந்தாலும் பணத்தை வெச்சிட்டு, என்ற பொண்ணுக்கு ஒரு வழி சொல்லிட்டு, இதைத் தூக்கிட்டு போய் காரியம் செய்ங்க” என்று சட்டமாக அமர்ந்து கொண்டான்.

அவர்களின் உறவுக்காரர்கள் எல்லோருக்கும் அந்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாக கண்ணன் வீட்டினர் சொல்லியிருந்தது எல்லோருக்கும் தெரியும். அதனால் யாரும் கண்ணனின் உதவிக்கு வரவில்லை. அமைதியாக நடப்பதை பார்த்து இருந்தனர்.

மீறி ஓரிருவர், “எதுன்னாலும் பேசி தீர்த்துக்கலாம். இப்படி எரிஞ்சு போன உடம்பை எவ்வளவு நேரம் வெச்சிருக்க முடியும்” என்று சொன்னதற்கு...

“அந்த அக்கறை இந்த பயலுக்கில்ல இருக்கணும்...”

யாரும் ராஜவேலை அணுக பயந்தனர். “போய் உன்ற ஊட்டுகாரன் கிட்ட சொல்லு தனம்... அந்த பய கல்யாணம் முடிச்சிட்டான். இனி என்ன செய்ய முடியும்... எப்படியாவது பணத்தை வாங்கற வழியைப் பார்ப்போம்” என்று சொன்னர்.

தனம் தயங்கித் தயங்கி, “அப்புறம் பேசிக்கலாம், இப்போ ஆகற காரியத்தைப் பார்ப்போம்” என்று ராஜவேலிடம் சொன்னது தான் போதும்... அவன் விட்ட அறையில் அந்த பெண்மணி தூர போய் விழுந்தாள்.

“என்ன ராஜவேலு? பொம்பளைப் பிள்ளையை இப்படிக் கை நீட்டுற” என்று அங்கிருந்தவர்கள் கடிய...

“உங்க வீட்டுப் பொண்ணுனா உங்களுக்கு அவ்வளவு வலிக்குதா? அப்போ என்ற அண்ணன் பொண்ணை என்ன செய்ய? எவன் கட்டுவான்...? என்ற சொந்தக்காரங்க எப்படி என்னை

சேர்த்துக்குவாங்க...?”

“யாரும் எதிர்பாராத விதமாக பொண்ணைத் தானே அடிக்க கூடாது இவனை அடிக்கலாம் தானே” என்று கண்ணனை ஒரு உதை விட தூரப் போய் விழுந்தான் கண்ணன்.

அவசரமாக ராதா ஓடிச் சென்று தூக்கினாள்... “இவனையும் அவங்கப்பன் கூடப் பொணமா படுக்க வெச்சிடறேன்” என்று மீண்டும் அடிக்க வர...

“இவங்கப்பா செஞ்சதுக்கு இவர் என்ன பண்ணுவார்” என்று ராதா கேட்க...

“என்னது இவங்கப்பா செஞ்சதா... இவனுக்கு எல்லாம் தெரியும்... தெரியாதுன்னு சொல்லச் சொல்லு” என்று எகிறிய ராஜவேல்... கண்ணனை முறைக்க..

“என் பேர் சொல்லி வாங்கினப்போ தெரியாது! அதுக்கு அப்புறம் தான் தெரியும்!”

“எப்பவோ தெரியும் தானே! தெரிஞ்சு என்ன பண்ணின நீ!”

“நான் கொஞ்ச கொஞ்சமா திருப்பிக் குடுத்துடறேன்...”

“திருப்பிக் குடுக்கறவன், குடுத்துட்டு நீ கல்யாணம் பண்ணியிருக்கணும்! நீயேண்டா அவசரப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிட்ட...”

“அது, அது” என்று சொல்ல முடியாமல் தடுமாறினான்... யாரை காட்டிக் கொடுக்க முடியும் அவனால்... முடியாது!

“ஏய் தனம்! இங்க வாடி!” என்று தன் மனைவியைப் பார்த்து கத்தினான் ராஜவேல்.

தனம் பதறி அருகில் வர,

“இந்தப் பொண்ணை அந்த புறம் கூட்டிட்டு போ, நம்ம வீட்டுக்கு அப்படியே கூட்டிக்கிட்டு போயிடலாம்... இந்தப் பய பணத்தை திரும்பக் குடுத்த பிறகு, நம்ம பொண்ணுக்கு ஒரு வாழ்க்கை அமைஞ்ச பிறகு, இவ

புருஷன் கூட்டிட்டு போகட்டும்" என்று சொன்னதும் கூடியிருந்த ஜனம் அப்படியே ஸ்தம்பித்தது.

"ஏய்ய்!!!!!" என்று கண்ணன் பாய்ந்து வந்தவன்... "நீ எதுன்னாலும் என்னைத் தான் பண்ணனும்" என்று சொல்ல, அவனை ஒரு கையால் தூர தள்ளிய ராஜவேல்...

"டேய்! ரொம்பத் துள்ளாத! அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் பொஞ்சாதிக்கும் மட்டும் மரியாதைக் குடுக்குறவன், நான் கிடையாது... எல்லாப் பொண்ணுங்களையும் மதிக்க தெரிஞ்சவண்டா... என் பொண்ணு மாதிரி பார்த்துக்குவேன்... நீ முதல்ல இதெல்லாம் சரி பண்ணிக்குடு" என்று அசையாமல் நிற்க...

கண்ணன் செய்வதறியாமல் ஸ்தம்பித்தான்...

ராதா இந்த வார்த்தைகளைக் கேட்டுத் தேம்பித் தேம்பி அழ... இத்தனை நாள் வளர்த்த நடராஜனால், அதைப் பார்த்து அமைதியாக இருக்க முடியவில்லை.

அருள் மொழிக்கும், சிபிக்கும், வர்மனுக்கும் கூட ரத்தம் கொதித்தது... "இப்படி ஒரு வாழ்க்கை இவளுக்கு தேவையா? என்ன காதலோ?" என்று தான் தோன்றியது... ரோஷம் கெட்ட காதல்...

"என்ன தம்பி? என்னப் பேசறீங்க? உங்க பிரச்சனைக்குப் பொண்ணை இழுக்காதீங்க! எதுனாலும் குடுத்தவன் கிட்ட கேளுங்க..." என்று நடராஜன் முன் போய் நின்றார்.

அவரின் மரியாதையான தோற்றம் ராஜவேலை சற்று நிதானபடுத்திய போதும், காட்டமாகவே, "நீங்க யாரு" என்றான்.

"ராதாவோட தாய்மாமன்" என்று நடராஜன் சொல்ல...

"அப்போ நீங்க பணம் குடுக்கறீங்களா" என்றான் உடனே...

"நான் எதுக்குப் பணம் குடுக்கணும்!"

"அப்போ பேசாதீங்க, பணம் குடுத்துட்டு, அப்புறம் என்ற பொண்ணுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை அமையட்டும், உங்கப் பொண்ணைக் கூட்டிட்டு

போங்க” என்று தெனாவெட்டாக நின்றான்.

“போலிஸ்க்கு போவோம்” என்று நடராஜன் சொல்ல,

“போங்க! நான் வெளில இருந்ததை விட உள்ள இருந்த நாள் அதிகம்.. உன்னால ஆனதை பார்த்துக்கோ, இந்த பிரச்னை தீராம எதுவும் தீராது...”

“உனக்கு மனசாட்சியே கிடையாதா! ஏற்கனவே இந்த உடம்பு சிதிலமடைஞ்சு இருக்கு, திரும்ப ஏன் இப்படிப் பண்ற...”

“உங்களுக்கு ஒரு தடவை சொன்னா புரியாதா... இப்போ விட்டா இந்த பய அடுத்த நிமிஷம் காணாம போயிடுவான்... என்ற ஊட்டுப் பொண்ணை கல்யாணம் கட்டணும்னு இவனுக்கு நல்லா தெரியும்! தெரிஞ்சும் இப்படிப் பண்ணியிருக்கான்...” என்று நடராஜன் எதிரில் வந்து கையை நீட்டிப் பேச...

அதை காணப் பொறுக்காத அவரின் மகன்கள் மூவரும், “கையை இறக்கி பேசுடா” என்று விரைந்து அருகில் ராஜவேலை அடிப்பது போல வர...

அதற்கும் ராஜவேல் அசராமல், “என்னங்கடா நீங்க யாரு?” என்று நின்றான்.

“அவர் பசங்க...”

“அப்படியா அப்போ உங்கள்ள ஒருத்தன் என்ற பொண்ணை கட்டிகோங்க” என்று அசால்டாக பேச..

“சீ! சீ! என்னடா நீ? உன் வீட்டுப் பொண்ணை இப்படி ஏலம் போடற!” என்று நடராஜன் பேசினார்.

“ஏய் தனம்! இது சரி வராது! இந்தப் பொண்ணை நம்ம வீட்டுக்கு வர சொல்லு! அப்புறம் வேணா பொணத்தை எடுக்க விடறேன்!”

இவனிடம் மிரட்டல் சரிவராது என்று புரிந்து நடராஜன்... “இவனை விடு!” என்று கண்ணனை காட்டியவர்... “இந்த பசங்க என்ன பாவம் பண்ணினாங்க? இவங்களுக்காகவாவது அவங்க அப்பா அம்மா

உடலை காட்டுக்குக் கொண்டுப் போக விடு... இவங்க கதி என்ன ஆகும்னு தெரியாத நிலையில இந்த பிள்ளைகளுக்கு நீயேன் இவ்வளவு கஷ்டத்தை கொடுக்குற... இவங்களைப் பார்த்தும் உனக்கு பாவமா இல்லையா.."

"பாவமாத்தான் இருக்கு! ஆனா என்ன பண்ண? அவளும் என்னோட பொண்ணு கிடையாது, என் அண்ணன் பொண்ணு! அவளோட நிலைமையும் இவங்களுக்கு குறைஞ்சது இல்லை... அவளுக்கு அம்மா கிடையாது... அவளைப் பார்த்து பார்த்து நொந்து போய் கிடக்கறான் எங்க அண்ணன்... எங்களுக்கு குழந்தை இல்லை... எங்க வீட்டுக்கே அவ ஒருத்தி தான் வாரிசு..."

"வேற கல்யாணம் என்ற பொண்ணுக்கு நல்ல படியா நடக்கும்னு நம்பிக்கை இருந்தா நான் ஏன் இவ்வளவு ரகளை பண்ண போறேன்.. எங்க பொண்ணுக் கிட்ட சில குறைகள் இருக்கு... எல்லாம் பேசித் தான் இந்தப் பயலுக்கு உதவி பண்ணினோம்... மனசாட்சியில்லாம இப்படி செஞ்சிட்டான்".

கண்ணன் ஏதோ பேச வர... அவனைப் பேச விடவேயில்லை ராஜவேல், "வாயை மூடுடா" என்றான்.

"சரிப்பா! உங்கப் பொண்ணுக்காவது இத்தனைப் பேர் இருக்கீங்க! இந்த பசங்களுக்கு யார் இருக்கா?"

"இப்போ சொல்றேன், என்றப் பொண்ணுக்கு ஒரு வாழ்க்கை அமையட்டும், இந்தப் பசங்களை நானும் என்ற பொஞ்சாதியும் நாங்க சாகற வரைக்கும் நல்லாப் பார்த்துக்கறோம்".

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பரபரப்பான நடராஜன், சற்றும் யோசிக்காமல் வாக்கு கொடுத்தார்.

"உங்கப் பொண்ணுக் கல்யாணத்துக்கு நான் பொறுப்பு, நான் என் வீட்டு மருமகளாக்கிக்கறேன், நீங்க இந்த மூணு பசங்களையும் பார்த்துகுவீங்களா?" என்றார்.

சிபி அப்படியே நின்றது நின்றபடி நின்றுவிட்டான்... "இவர் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறார்" என்பது போல...

அருள்மொழியும் மாமல்லவர்மனும் கூட மலைத்து நின்றனர், “அப்பா என்ன பேசுகிறார்” என்பது போல...

அருகில் அவசரமாக சென்ற சிபி, “அப்பா என்ன பேசறீங்க?” என்று மெதுவாக அவருக்கு மட்டும் கேட்குமாறு கேட்க...

“வாயை மூடு! ஒரு வார்த்தைக் கூட நீ பேசக் கூடாது. உன்னோட யோசிக்காத தன்மையால மூணு பிள்ளைங்க அனாதையா நிக்குது...”

“அப்பா! அந்தப் பிள்ளைங்களை நான் பார்த்துக்கறேன். அதுக்காக கல்யாணம் எல்லாம் பண்ண முடியாது!”

“எவ்வளவு நாள் பார்த்துக்குவ, ஒரு பிள்ளைனாலும் பரவாயில்லை, மூணு பேர், அதுல ரெண்டும் பொண்ணுங்க, அதுக் கண்டிப்பா சரி வராது... நாளைக்கு உனக்கு வர போற மனைவி இதுக்கு எப்படி ஒத்துக்குவா.. அது சரிவராது”.

“என்னாலக் கண்டிப்பாக் கல்யாணம் பண்ண முடியாது!”

“நான் இங்க சொல்லிட்டேன், இனி மாத்திப் பேச முடியாது... உன்னால தான் இந்த நிலைமை, அதை சரி செய்ய ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கு, அதை விட முடியாது”

“அப்பா” என்று சிபி பேச வர...

“நீ வாயை மூடு, ஒரு வார்த்தைக் கூட பேசக் கூடாது, எதுன்னாலும் நாம் அப்புறம் பேசலாம்” என்றார்.

சிபியையும் விட ராஜவேல் இன்னும் அதிர்ந்து பார்த்திருந்தான், “இவர் நிஜம் தான் பேசுகிறாரா” என்பதுப் போல...

இவ்வளவு நேரமாக ஆங்காரமாக கத்திக் கொண்டு இருந்தவன்... “ஐயா, நிசமாத்தான் சொல்றீங்களா” என்று பணிவாக நடராஜனிடம் பேச...

“இவ்வளவு நேரமாக இவனா அந்த கலாட்டா பண்ணிக் கொண்டு இருந்தான்” என்பது போல மொத்த உறவு ஜனமும் பார்த்தது.

“நான் வாக்குத் தவற மாட்டேன், வாக்குத் தவறினேன், உனக்கு

என்னை என்ன செய்யணுமோ செஞ்சிக்கோ...” என்று தீவிர முகபாவனையோடு நடராஜன் பேசினார்.

“இந்த வார்த்தையை நீங்க ஒரு தடவை என்ற பொண்ணை பார்த்துட்டு சொல்லுங்க... மறுபடியும் ஒரு ஏமாற்றத்தை என்ற அண்ணன் தாங்க மாட்டார்...”

ராஜவேல் பேசப் பேச, சிபி முகத்தை சுளித்தான்...

அவன் தான் மாப்பிள்ளையோ என்பது போல அவன் மீதும் ஒரு பார்வை வைத்திருந்த ராஜவேல்... “என்னை வெச்சு என் அண்ணன் குடும்பத்தை எடை போட வேண்டாம்... நம்ம முதல்ல இருந்தே ரகளை ரச்சு கலாட்டான்னு நாள் ஓட்டிடோம். ஆனா அண்ணன் அப்படியில்லை... என்ற பொண்ணு தங்கம்” என்றான்.

“நான் சொன்னது சொன்னதுதான்... இப்போ ஆக வேண்டியதை பார்ப்போம்” என்று நடராஜன் சொன்னது தான் போதும்... அந்த பிள்ளைகளின் வாழ்க்கை என்ன ஆகுமோ என்று மருகிக்கொண்டிருந்த உறவு ஜனம், பிரச்சனை ஒரு வழியாக இப்படி பயணிக்கவும், மளமள வென்று வேலையை ஆரம்பித்தினர்.

கண்ணனை இப்போது யாரும் கண்டு கொள்ளவே இல்லை... எல்லா சடங்கையும் ஜெய் ஷங்கரை கொண்டு உறவுகள் செய்தனர். கண்ணன் பணம் கொடுக்க முயல, அதை வாங்காமல் தனம் எல்லாச் செலவையும் பார்த்துக் கொண்டார்...

கண்ணன் ஒரு புறமாக ராதா ஒரு புறமாக அமர்ந்து நடப்பதை பார்த்து இருந்தனர். ராதா கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க, அதைத் துடைக்க கூட செய்யாமல் அப்படியே அமர்ந்து இருந்தாள்.

அதைப் பார்க்க பார்க்க அருள்மொழிக்கும் வர்மனுக்கும் மனதை பிசைந்தது... என்ன இருந்தாலும் அவர்களோடு வளர்ந்தவள்... ஆனால் சிபிக்கு பயந்து யாரும் அருகில் போகவில்லை.

எல்லாம் காட்டில் முடித்து வீடு வந்த போது... பத்து மணிக்கும் மேலாகியிருந்தது... எல்லாம் நாங்க பார்த்துதுக்குறோமுங்க என்று ராஜவேலும் தனமும் வாக்கு கொடுக்க...

“நானும் வாக்குத் தவற மாட்டேன்” என்று உறுதி கொடுத்தே வீடு வந்து சேர்ந்தார் நடராஜன்.

அவரின் பின்னேயே கண்ணனும் ராதாவும் வந்தவர்கள், வீட்டிற்குள் வரவில்லை... “ஒரு பத்து நிமிஷம் நான் சொல்றதைக் கேளுங்க மாமா” என்று ராதா கண்ணீரோடு நின்றாள்.

முகம் திருப்பி நடராஜன் செல்ல, “நான் உங்க கிட்ட என்னை ஏதுக்கங்கன்னு சொல்லலை, நான் செஞ்சது சரின்னும் சொல்லலை, ப்ளீஸ் கேளுங்க” என்று கெஞ்ச...

அவர் அவர்களை வீட்டிற்குள் கூப்பிடாமல் வாயிலில் இறங்கிப் போய் நிற்க... கண்ணனும் ராதாவும் அவர்களின் தரப்பைச் சொல்லிவிட்டு அந்த இடத்தில் நிற்கவில்லை சென்று விட்டனர்.

வீட்டின் உள் இருந்து எல்லோரும் பார்த்து தான் இருந்தனர். ராஜலஷ்மியும் மகளைப் பார்த்தபடி கண்ணீருடன் தான் நின்றார்.

என்னவோ எல்லாத் தவறும் தன்னது போலவே உணர்ந்தார் நடராஜன், தாங்களாகவே சில விஷயங்களை நினைத்து, ராதாவிடம் கேட்காமல் செய்தது தவறு தானே...

தாங்களும் கஷ்டப்பட்டு, அவமானப்பட்டு, இந்தப் பெண்ணையும் கஷ்டப்படுத்தி... உள்ளே வந்தவர் ராஜலக்ஷ்மியிடம்... “உன்கிட்ட முன்னாடியே சொன்னாலா சிபியைக் கல்யாணம் பண்ண இஷ்டமில்லை, இந்தப் பையனை பிடிச்சிருக்குன்னு...”

“ம்” என்பது போல ராஜலக்ஷ்மி தலையாட்ட....

“ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லியிருக்கலாம் இல்லை...”

“எப்படிச் சொல்வேன் சிபிக்கு அவளை கல்யாணம் பண்ணிக்க இஷ்டம்னு தெரிஞ்சு, என்னை இத்தனை நாள் ஆதரிச்ச உங்களை விட்டுட்டு நான் எப்படி சொல்வேன்...” என்று கண்ணீரோடு கேட்டார்.

“ஏன் பசங்க தான் அம்மா அப்பாவை பார்க்கக் கடமைப் பட்டவங்களா பொண்ணுங்க இல்லையா... இவன் தான் உன் புருஷன்,

இப்படித்தான்னு நான் சொல்லிச் சொல்லி வளர்த்தும் இந்தக் குடும்பத்தை பத்தி நினைக்காம அவ இஷ்டப்படி செஞ்சா… நீங்க இல்லைனா நாங்க நடுத்தெருவுல நின்னிருப்போம்… ஒரு வருஷம் பார்க்கலாம் ரெண்டு வருஷம் பார்க்கலாம் இருபத்தி ரெண்டு வருஷம் முகம் சுனக்கமில்லமா எங்களைப் பார்த்து இருக்கீங்க… ஒரு நன்றி வேண்டாம்”

“எல்லாரும் எல்லாம் பேசினாலும் ஒரு பாதிப்புமில்லை… இப்போதைக்கு எல்லாத்தையும் சுமக்க போறவன் சிபி தானே!” என்று சொல்லிப் படுக்க போய் விட்டார்.

அடுத்த நாள் காலையில் அவருக்கு தொலைபேசியில் அழைத்த ராஜவேல், “ஐயா, தொந்தரவுப் பண்றனோன்னு இல்லை உங்களைச் சந்தேகப்படறனோன்னு நினைக்காதீங்க.. ஒரு தடவை பொண்ணை பார்த்துட்டு சொல்லுங்க…” என்று திரும்பத் திரும்ப பேச…

மனைவி தேவியை அழைத்துக் கொண்டு சென்றார்… பார்த்தவர்கள் பார்த்தபடி நின்றுவிட்டனர்… ராஜவேல் அந்த பெண்ணின் திருமணம் குறித்து அவ்வளவுக் கவலைப் பட்டு பிரச்சனை செய்தது ஏன் என்று புரிந்தது.

நேற்று கண்ணன் சொன்னான் தான்… ஆனால் ரொம்பப் பெரிதாக அவர் நினைக்கவில்லை… இப்போது சிபியை எப்படி சமாளிப்பது என்று அவருக்கு தெரியவில்லை என்பதை விட… எப்படி அவன் எடுத்துக் கொள்வான்.

“எப்படி இந்தப் பெண்ணுடன் தான் உனக்குத் திருமணம்” என்றுச் சொல்ல முடியும்…

அவரின் மனைவியைத் திரும்பிப் பார்க்க… “இப்படி செய்து விட்டீர்களே!” என்று அவரின் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது.

அதையும் விட வருத்தத்தோடு அந்த பெண்ணின் கண்கள் அவர்களைப் பார்த்து இருந்தது… எல்லோரும் எப்போதும் முதல் முறையாக அவளைப் பார்க்கும் போது பார்க்கும் பார்வை தான்… ஆனாலும் அந்தப் பார்வைகள் அவளுக்கு பழகவே இல்லை. ஒவ்வொரு முறையும் யாராவது இந்தப் பார்வை பார்க்கும் போது தாளவே முடிவதில்லை.

சிபியோ வீட்டில் மிகுந்த வருத்தத்தில் இருந்தான்... தான் திருமணம் செய்ய இருந்த பெண்ணை அந்தக் கண்ணன் திருமணம் செய்தது போய் இப்போது அவன் வேண்டாம் என்று சொன்ன பெண்ணைத் தான் திருமணம் செய்வதா... அவமானமாக உணர்ந்தான்.

எங்கே வாழ்க்கை தொடங்கும் அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லம் மாறிவரும் பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்

## அத்தியாயம் ஏழு :

“ஜெயஸ்ரீ வந்து வணக்கம் சொல்லு” என்று தந்தை வஜ்ரவேல் சொல்ல... மெதுவாக அவளின் ஸ்டிக்கை பிடித்தபடி நடந்து வந்து, “வணக்கம்” என்கிற மாதிரி கை குவித்தாள், வாயைத் திறந்து உச்சரிக்கவில்லை.

ஒரு கனமான அமைதி அங்கே... பாவாடை தாவணியில் இருந்தாள் ஜெயஸ்ரீ... வெளியே பாதம் மட்டுமே தெரிய... அதில் ஒரு காலில் தெரிந்த ஷூ. அவள் கால்கள் பாதிக்கப்பட்டு அதைத் தாங்கி நடக்க அந்த ஷூ போட்டிருக்கிறாள்.. ஆனால் அதைக் கொண்டும் சரியாக நடக்க முடியாமல் கூட ஒரு ஸ்டிக் அவளின் கைகளில். நடராஜனும் தேவியும் அப்படியே அமர்ந்துவிட்டனர்.

“எங்க பொண்ணு கிட்ட சில குறை” என்று ராஜவேல் சொன்னான் தான். ஆனால் இப்படி நடராஜனுக்கு அந்த சமையத்தில் தோன்றவேயில்லை.

வீட்டில் அவளும் அப்பாவும் மட்டுமே அந்த நேரத்தில்... கூட ராஜவேல் தனம் மற்றும் எப்போதும் வீட்டில் உதவிக்கு இருக்கும் ஆயா என்று யாரும் இல்லை.

பெரிய வீடு... சற்று வசதியானவர்கள் என்று காட்டியது... ராஜவேலு போல தோற்றமெல்லாம் இல்லை... மரியாதையான தோற்றம் வஜ்ரவேலிற்கு இருந்தது.

ஜெயஸ்ரீயை தான் தேவியும் நடராஜனும் அளவெடுதனர்... இந்த

குறைகள் இல்லாவிட்டால் அழகான பெண் தான். அழகு குழந்தைத்தனமான முகம்.. சற்று உயரமாக.. அளவான உடல் கட்டில் இருந்தாள்...

ஆனால் பார்பவர்களுக்கு அந்த அழகை விடவும் அவளின் குறை தான் பளிச்சென்று தெரியும்... ஏனென்றால் நம் பார்வைகள் அப்படி... வேறு என்ன சொல்ல...

வாய் திறந்து பேசாமல் சற்று பதட்டத்தை முகத்தில் தாங்கி நின்ற ஜெயஸ்ரீயை தேவியும் நடராஜனும் பார்க்க... “நல்லா பேசுமுங்க, ஆனா புது ஆளுங்களைப் பார்த்தா பதட்டம், வார்த்தை வராது” என்று வஜ்ரவேல் உள்ளதை உள்ளபடி பேச...

“என்னது திக்குவாயுமா?” என்று தேவி வாய்விட்டே கேட்டுவிட்டார்.

அவர் அப்படி வாய்விட்டு கேட்டுவிடவும்... அவளின் முகம் பதட்டத்தை தாங்கி அவள் இயல்பாக இல்லை என்று எதிரில் இருப்பவர்களுக்கு தெரிந்தாலும், அந்த நிலையிலும் ஆமாம் என்பது போல அவரை பார்த்து தலையாட்டினாள் ஜெயஸ்ரீ.

தேவியும் நடராஜனும் என்ன சொல்வது என்று தெரியாமல் பார்த்தது பார்த்தபடி அமர்ந்து இருக்க... ஜெயஸ்ரீ ஒன்றும் பேசாமல் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

“கண்ணு இருடாம்மா!” என்று அப்பா சொன்னதை காதில் வாங்கவேயில்லை, அவள் பாட்டிற்கு உள்ளே சென்று விட... வஜ்ரவேலிற்கு தான் சங்கடமாகிவிட்டது.

“அதுங்க கொஞ்சம் செல்லம் அதிகம், அதுதான்! பிடிவாதமும் அதிகம் என்றார். அவர் முகத்தில் இவர்கள் பெண்ணை சரி என்று சொல்வார்களா வேண்டாம் என்று சொல்வார்களா என்ற பதட்டம்.

குறையுள்ள பெண் என்பதன் கூட, மரியாதை தெரியாத பெண் என்பதும் இப்போது நடராஜன் மற்றும் தேவியின் மனதில் பதிந்தது.

என்ன சொல்வது என்று தெரியாமல் அப்படியே அமர்ந்திருந்தனர். நடராஜனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நன்றாக இருக்கும்

பெண் என்றால் சிபியைக் கட்டி தான் ஆகவேண்டும் என்று அவரால் கட்டாயப்படுத்த முடியும்.

இப்படி இருக்கும் பெண்ணை எப்படி சொல்வது... ராஜவேலாவது எவனாவது... இவர்கள் அந்த மூன்று பிள்ளைகளை பார்த்தால் பார்க்கட்டும், இல்லை தாங்கள் பார்த்துக் கொள்ளலாம், மிஞ்சிப் போனால் இன்னும் ஒரு நான்கு வருடம் பத்மியைப் பார்த்துக் கொள்ளவேண்டும்... ஒரு பத்து வருடங்கள் அந்த ஜெய்ஷங்கரையும் ராகினியையும் பார்த்துக் கொள்ள வேண்டும், அவ்வளவு தானே...

பார்த்துக் கொள்ளலாம்! அதற்காக வாழ்நாள் முழுவதும் இந்தப் பெண்ணை எப்படி சிபி பார்த்துக் கொள்வான்.

நாளை குழந்தைகள் என்று வரும் போது அவர்களுக்கும் இப்படி ஏதாவது குறை வந்துவிட்டால்.. நினைக்கவே முடியவில்லை.

“வீட்ல போய் பையன் கிட்ட கலந்துட்டு சொல்றமுங்க” என்றார் நடராஜன். அவர்கள் சொன்ன விதம் சரியென்று சொல்ல மாட்டர் என்று வஜ்ராவேலிற்கு தோன்ற...

“சரி” என்பது போல தலையாட்டினார், வேறு என்ன செய்ய முடியும். தேவியும் நடராஜனும் போவதற்காக எழ... “இருங்க! காபி குடிச்சிட்டு போகலாம்” என்றவர்...

“ராஜவேலு!” என்று ஒரு குரல் கொடுக்க... ராஜவேலுவும் தனமும் விரைந்து வந்தனர். அதுவரை எங்கிருந்தார்கள் என்று தெரியவில்லை.

நேற்று இருந்த ஒரு தோற்றமில்லை, இன்று இன்னும் நீட்டாக இருந்தனர். நேற்று ஒரு மாதிரி தோற்றத்தில் இருந்தவன்... இன்று சற்று மதிக்கும்படியான தோற்றத்தில் இருந்தான் ராஜவேல்.

“குடிக்கக் கொண்டு வாங்கடா” என்று வஜ்ரவேல் சொல்ல,

“இருக்கட்டுமுங்க, என்னன்னு முடிவெடுத்த பிறகு சாப்பிட கொள்ளலாம்” என்று நடராஜன் சொல்ல...

“ஐயோ! நீங்கப் பொண்ணே கட்டலைன்னா கூட போகுதுங்க... யாரு

யாருக்கு என்ன ப்ராப்தமோ அதுதான்... நம்ம முடிவு இல்லை இது... அவன் போடற முடிச்சுங்க.. அதுக்குன்னு காபி தண்ணி கூடவா குடிக்காம அனுப்புவேன்..”

என்று ராஜவேலை ஒரு பார்வை பார்க்க, அவன் தனத்தைப் பார்க்க... உள்ளே விரைந்தாள் தனம்.

தட்ட முடியாமல் குடித்து, எப்படியோ வீடு வந்து சேர்ந்தனர்... நடராஜனும் தேவியும்.

வீடு வந்தவர்கள் ஆளுக்கு ஒரு பக்கம் முடங்கி விட்டனர். ஈஸ்வரரும் சுலோச்சனாவும் என்ன ஏதென்று கேட்க... என்ன வென்று சொல்வர்.

விவரம் சொல்ல, “உன்னை யார் வாக்கு கொடுக்க சொன்னது” என்று நடராஜனை அவரின் அம்மாவும் அப்பாவும் திட்ட.... விஷயம் இன்னுமே சிக்கலாகிவிட்டதை அனைவரும் உணர்ந்தனர்.

இன்று பெண்ணைப் போய் பார்க்க போகிறார்கள் என்று தெரிந்த சிபி, கோபித்துக் கொண்டு காலையில் வீட்டை விட்டுப் போனவன் தான் இன்னும் வீடு வந்து சேரவில்லை.

எப்படி அவனிடம் விஷயத்தை சொல்வது என்றும் தெரியவில்லை. அங்கேயும் இங்கேயும் சுற்றிவிட்டு சிபி இரவு தான் வீடு வந்து சேர்ந்தான்.

காலையில் இருந்து கொலைப் பட்டினி... பசி வயிற்றைக் கிள்ளிய போதும் வந்து அப்படியே வெறும் தரையில் படுத்துக் கொண்டான்.

“சிபி, எழுந்து சாப்பிடு!” என்று அவனின் அம்மா சொல்ல... பதில் பேசாமல் அப்படியே படுத்திருந்தான்.

“எழுந்துரு” என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தவும்...

“மா, நான் என்ன சின்ன பையனா? சும்மா என்னை தொல்லை செஞ்சிக்கிட்டு! போங்க! சும்மா சாப்பிடுன்னு! எனக்கு பசிச்சா சாப்பிட தெரியாதா... போங்க!” என்று அவன் கத்திய கத்தலில் வீடே அங்கே கூடி விட்டது.

“என்ன பழக்கம் இது சிபி! அம்மா கிட்ட சத்தம் போடற” என்று நடராஜன் திட்டவும்,

“எங்கம்மா கிட்ட நான் சத்தம் போடறேன், உங்களுக்கு என்ன?” என்றான் சிபி திரும்ப,

“எப்போர்ந்துடா இப்படி மரியாதையில்லாம பேசக் கத்துகிட்ட...”

“நான் கத்துக்கலை! நீங்க கத்துக் குடுக்கறீங்க! ஊர் உலகத்துல நடக்கறதை எல்லாம் என் தலைமேல போட்டு... ஒரு பொண்ணை இழுத்துட்டு போனதும் இல்லாம அவன் வேணாம்னு சொன்ன பொண்ணை என் தலையில கட்டுறீங்க...”

“இதுல நான் எங்கம்மாவைச் சத்தம் போடறது உங்களுக்கு பெருசாத் தோணுதோ” என்று பதிலுக்கு தந்தை முன் மல்லுக் கட்டி நின்றவனை அடக்க யாராலும் முடியவில்லை.

“சும்மா கோவப்படாத சிபி! உங்க அப்பா இந்தக் கல்யாணம் வேண்டாம்ங்ற முடிவுல தான் இருக்கார்” என்று ராஜலக்ஷ்மி, அவன் சமாதானமாகிவிடுவான் என்று நினைத்து சொல்ல, அது சிபியின் கோபத்தை இன்னும் கிளறியது...

“ஏன் அத்தை இந்த மாதிரி?” என்றான் ஒரு கூர்மையான பார்வையோடு..

“அது பொண்ணு கொஞ்சம் ஊனம்” என்று சொல்ல... இன்னமுமே சிபியின் முகம் கடுமையானது.

“இது இன்னும் தப்பாச்சே அத்தை... நான் கோவத்துல கம்ப்ளைன்ட் குடுத்தேன் அவ்வளவு தான்... சட்டப்படி நடவடிக்கை எடுத்தாங்க அவ்வளவுதான்...”

“அது என்னவோ யாரும் நினைச்சு பார்க்காத அளவுக்கு ரெண்டு உயிர் போயிடுச்சு! அது அவங்க தப்பு! அதுக்கு என்னை எங்கப்பா குத்தஞ்சொன்னார்! அதோட நிறுத்தினாரா... அந்த பிள்ளைங்க அனாதையானதுக்கு நான் காரணம்னு சொன்னார்”.

“அப்படியே இருக்கட்டும்! நான் அவங்களைப் பார்த்துக்கறேன்னு சொன்னா, அதெல்லாம் வாழ்நாள் முழுசும் பார்த்துக்க முடியாதுன்னு சொல்லிட்டு, அந்த பிள்ளைங்களை யாரோ பார்த்துக்கறேன்னு சொன்ன உடனே அவங்க பொண்ணை எனக்கு கட்டி வெக்கறேன்னு சொன்னார்…”

“கொஞ்சமாவது யோசனை வேணாம்… எனக்கு இல்லைன்னு சொல்லிட்டு இப்போ இவர் என்ன செஞ்சிருக்கார்”

தன் மகனை இப்படி சிபி கேள்வி கேட்பது பொறுக்காமல், “சிபி” என்று ஈஸ்வரர் ஒரு அதட்டல் போட, அதற்கு அடங்குபவனா சிபி, திரும்பி அவரையும் பார்த்து முறைத்தான்.

“இப்போ அந்த பொண்ணுக்கு குறையிருக்குன்னு வேண்டாம்னு சொல்றார்… எல்லாம் நம்ம இஷ்டத்துக்கு மாத்திகிட்டே இருப்போமா, சுயநலத்தோட மொத்த உருவம் ஆகிட்டோம் நம்ம..”

வர்மன், அருள்மொழி, வனிதா என்று அனைவரும் சிபி ஆக்ரோஷமாக பேசுவதை வாய் பிளந்து பார்த்தனர். இவனோடு எப்படி என் தங்கை குடும்பம் நடத்தியிருப்பாள்… இந்த வேகம், இந்த ஆக்ரோஷம் நிச்சயம் ராதா தாங்கியிருக்கவே மாட்டாள் என்று தான் தோன்றியது.

“இவன்கிட்ட இருந்து என் தங்கச்சி தப்பிச்சா” என்பது போல கணவன் அருள்மொழியைப் பார்க்க தவறவில்லை வனிதா. திரும்பி அருள்மொழி ஒரு முறைப்பை கொடுக்க… இன்னும் அலட்சியமாக அவனை பார்த்து திரும்பினாள் வனிதா.

சிபி இன்னும் ஆவேசமாக பேசிக் கொண்டு இருந்தான். “அதுவும் அந்த ஆளுங்க சொல்றாங்க எங்க பொண்ணுகிட்ட குறை இருக்குன்னு. அதைக் காதுல வாங்கி மனசுல கொள்ளாம, அந்த சமயம் பிரச்சனை தீர்ந்தா போதும்னு அத்தனை பேர் முன்னாடி வாக்கு குடுத்துட்டு இப்போ வேண்டாம்னு சொன்னா, அதை விட கேவலம் என்ன இருக்கு” என்று சிபி பேச..

“அப்போ அந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்றியா சிபி” என்று அவனின் தாத்தா ஈஸ்வரர் கேட்க…

“நான் யாரையும் கல்யாணம் பண்ணிக்கிற மனநிலையில இல்லை தாத்தா… ஆனா இந்த காரணம் சொல்லி ஒரு பொண்ணை மறுக்குறது ரொம்ப தப்பு… நான் வேண்டாம்னு சொல்ல, சொல்ல இவரை யாரு வாக்கு குடுக்க சொன்னா” என்று மீண்டும் கோபமாக தந்தையை பேச…

“சிபி நமக்குள்ள குற்றம் சொல்றதை முதல்ல நிறுத்துவோம், சொன்னா கேளு!” என்று தாத்தா அதட்டவும் சற்று அடங்கினான்.

“பொண்ணுக்கு நடக்கறதுல சிரமம் போல, என்ன பிரச்சனைன்னு எல்லாம் உங்கப்பாவும் அம்மாவும் கேட்கலை… அது கால்ல ஷூ மாதிரி போட்டு தடி வெச்சி நடக்கும் போல… அப்புறம் பேசலையாம்”

“என்ன பேசவும் வராதா” என்று சிபி கேட்க…

“திக்குவாய் போல” என்று தேவி சொல்ல…

பிள்ளைகள் ஆதரவின்றி போனப் பாவத்தோடு, இப்போது ஒரு பெண்ணை திருமணம் செய்கிறோம் என்று எல்லோர் முன்னும் வாக்கு கொடுத்து, இப்போது அதையும் வேண்டாம் என்பது போல சொல்வது நடராஜனுக்கு மிகுந்த ஒரு மனவுளைச்சளைக் கொடுத்தது…

அதையும் விட ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறோம் என்று சொல்லி மறுப்பது அதுவும் அவளின் குறையைச் சுட்டிக் காட்டி…

“எப்போதிலிருந்து இப்படியானேன் நான்!” ஒரு கழிவிரக்கம் அவரைச் சூழ, நின்று கொண்டிருந்தவர் அப்படியே தடுமாறி பிடிப்பின்றி சாயப் போகவும், வீடே பதறியது. அவசரமாக மாமல்ல வர்மன் தந்தையை பிடித்து நாற்காலியில் அமர வைத்தான்…

என்ன ஏதென்று தெரியாத போதும், அதுவரை அத்தனை சத்தங்களையும் கேட்டு, அது பாட்டிற்கு ஏதோ சாமான்களைக் கையில் வைத்து விளையாடிக் கொண்டு இருந்த மணிமேகலை, பெரும் குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

“ஒன்னுமில்லைடா!” என்று வனிதா தூக்கி சமாதானம் செய்ய… இங்கே நடராஜனுக்கு அவசரமாக சிபி தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க… வீடே இன்னும் ஸ்தம்பித்தது.

அருள்மொழி மகளைக் கையில் வாங்கி வெளியே தூக்கிப் போகவும்... சத்தம் குறைந்தது.

"என்ன பண்ணுதுப்பா" என்று ஈஸ்வரர் பதட்டமாக மகனைக் கேட்க...

"ஒன்னுமில்லைப்பா! ஆனா என்னவோ சுழல்ல மாட்டின மாதிரி இருக்கு! என்ன பண்றதுன்னே தெரியலை...!"

"தெரியாம சொல்லிட்டேன்! மனைவியா வர்றவ இவனைக் கவனிக்கலைன்னா கூட பரவாயில்லை... ஆனா இவன் கூட நின்னு அவளை எப்பவும் கவனிக்க முடியுமா... இதெல்லாம் கூட பரவாயில்லை, பொறக்கப் போற சந்ததிக்கு வந்திடிச்சுன்னா தேவையில்லாம சிக்கல் தேடிக்கிடேன்" என்று சொன்ன போது,

என்னவாகினும் அவர் சொன்னது சொன்னதுதானே! அதை நிறைவேற்ற வேண்டிய கடமை தனக்கிருப்பதாய் தான் சிபிக்கு தோன்றியது.

ஒரு திருமணம் நின்ற சூழலில், திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் சிறிதும் இல்லாத போதும், ஒரு வேளை திருமணத்திற்கு பின் மனைவிக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்படிருந்தால் விட்டா இருப்பேன் என்று நினைத்தவன்..

"இவ்வளவு குழப்பம் வேண்டாம், சொல்லிட்டோம், கல்யாணம் தானே பண்ணிக்கறேன்... என் தலை எழுத்து அதுதான்னா அனுபவிக்கறேன்! நீங்க ஆகவேண்டியதை பாருங்க!" என்றான் தெளிவாக.

தேவி, "இல்லை, வேண்டாம்! குறையோட சேர்த்து எவ்வளவு ரப்பு அந்த பொண்ணுக்கு, நாங்க பேசப் பேச அதுபாட்டுக்கு போகுது, மரியாதை தெரியாத பொண்ணு, வேண்டாம்!" என்றும் சொல்ல...

"வீட்டுலயே வெச்சு, பார்த்துப் பார்த்து ஒரு பொண்ணுக்கு மரியாதை கத்துக் குடுத்தீங்க, அது போகலை" என்று சிபி ராதாவை இழுக்க...

தங்கையைப் பற்றி பேசவும் வனிதா... "அதான் அந்த பொண்ணு வேண்டாம்னு சொல்றாங்க தானே, நீ எதுக்கு தேவையில்லாததை பேசுற" என்று சொல்ல...

“அந்தப் பொண்ணைத் தான் கல்யாணம் பண்ணுவேன்” என்றான் சிபி யார், எவர், என்ன குறை, என்று ஜெயஸ்ரீயைப் பற்றி எதுவும் தெரியாமல்.

“வேண்டாம்டா! பணம், காசு எவ்வளவுன்னாலும் அந்த பசங்களுக்கு கொடுத்துடலாம். ஆனா வாழ்க்கை முழுசும் அந்தப் பொண்ணை நீ வெச்சி பார்த்துக்க முடியாது! அவங்கப்பா திக்குவாயான்னு கேட்டதுக்கு ஆமாம்னு சொன்னாரு, ஆனா அந்தப் பொண்ணு பேசவேயில்லை! ஊமையோ என்னமோ!” என்று தேவி மறுபடியும் சொல்ல...

“அம்மா! எப்படி வேணா இருந்துட்டு போறா... நான் ஒரு வேலை தப்பு செஞ்சிருந்து, கடவுள் அதுக்கு தண்டனையா தான் இந்த வாழ்க்கையை கொடுக்கிறார்னா அதை நான் ஏத்துக்கறேன்...”

“நீங்க கல்யாணத்துக்குச் சரின்னு சொல்லுங்க!”

“இல்லை, முடியாது!” என்று பிடிவாதமாக தேவி மறுக்க... கூட வீட்டில் எல்லோரும் வேண்டாம் என்று சொல்ல...

“ம்கூம், நான் அந்தப் பொண்ணைப் பண்ணிக்கறேன்” என்று சிபி பிடிவாதமாகச் சொல்லி, முடிவெடுத்து உணவருந்த அமர்ந்தான்...

சிபிக்கு தெரியவேயில்லை, “நான் செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தமா அந்த பொண்ணை கல்யாணம் செஞ்சிக்கறேன்” என்ற வார்த்தைகள் ஜெயஸ்ரீயை எத்தனை வருத்தப்படுத்தும் என்று.

அவளின் உடளவு ஊனத்தை விட, அவளின் மனதை இன்னும் ஊனமடைய செய்யும், கொஞ்சம் கொஞ்சம் வரும் அவளின் வார்த்தைகள் வராமலே போகக் கூடும், ஏனென்றால் அவளுக்கு யாரோடும் பேச விருப்பம் இல்லாமல் அற்றுப் போகக் கூடும் என்று.

## அத்தியாயம் எட்டு :

ஒரே மகள் வசதி வாய்ப்பும் உள்ளதால் வஜ்ரவேல் தன் மகளுக்குச் சீரும் சிறப்புமாகத் திருமணம் செய்ய விரும்பினார்...

நிறைய செலவுகள் ஏற்கனவே திருமணம் கேஸ் ஜாமீன் என்று.

நடராஜன் வீட்டினரால் மீண்டும் ஒரு செலவு உடனே செய்ய முடியாத சூழ்நிலை. ஆனால் எப்படி அதை பெண் வீட்டினரிடம் சொல்வது…

அது மட்டுமன்றி சிபியும் விமரிசையாக மீண்டும் ஒரு திருமண ஏற்பாடு வேண்டாம் என்று ஸ்திரமாக சொல்ல…

அதை காரணமாக நடராஜன் வஜ்ரவேலுவிடம் சொன்னார்.

ஆனால் வஜ்ரவேல் ஒத்துக் கொள்ளவில்லை… "உங்களுக்குத் தெரியாதது இல்லீங்க! ஏற்கனவே என் தம்பி பண்ண கலாட்டா தானுங்க இவ்வளவும்… அவன் சம்சாரத்தோட அண்ணன் பையன், நல்லவன் நம்ம பொண்ணைக் கட்டிக் குடுக்கலாம், வீட்டோட வெச்சிக்கலாம், அப்படி இப்படின்னு சொல்லி அவனுக்கு உதவி செய்ய வெச்சு… அது இல்லைன்னு ஆகிப்போச்சு".

"இதுல என் வருத்தம் என்னன்னா, அந்தப் பயலுக்கு கட்டிக் குடுக்கறோம்னு இவனே சொந்த பந்தம் எல்லார்க் கிட்டயும் சொல்லிட்டான்… அதுவே எனக்கு பெரிய தலைகுனிவுங்க…"

"நான் பொண்ணைப் பத்தின ஒரு வருத்தத்துல இருந்த போது ஆரம்பிச்ச பேச்சுங்க… எப்படி எப்படியோ ஆகிப் போச்சு.. அதனால கூட யாரும் பொண்ணுக் கேட்டு வராம இருந்திருக்கலாம்…"

"இது ராஜவேல் செஞ்ச தப்புங்கறதுனால தான் அன்னைக்கு அந்த வீட்டுல அவ்வளவு கலாட்டா செஞ்சிருக்கான்… நீங்க கல்யாணம் பண்றேன்னு சொல்லவும் அடங்கிட்டான்"

"அதுக்காக நான் என்ட்ர பொண்ணைக் குடுத்துடுவனுங்களா"

"இப்பவும் என் தம்பி சொன்னான்னோ, என் பொண்ணுக்குக் குறை இருக்குன்னோ உங்க கூட சம்பந்தம் பேசலை…"

"அவன் எனக்குத் தகவல் சொன்ன நிமிஷம் உங்க குடும்பத்தைப் பத்தி மாப்பிள்ளைப் பையனைப் பத்தி எல்லாம் நல்லா விசாரிச்சிட்டேன்…"

"யாரும் குறை சொல்லலை… என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகனும்ன்றது எனக்கு ரொம்ப கவலை தான்! ஆனா அதுக்காக

யாருக்கு வேணா கட்டிக் குடுக்க முடியும்ங்களா... ரொம்ப செல்லம்ங்க எனக்கு என் பொண்ணு... என் சம்சாரம் என் பொண்ணு குழந்தையா இருக்கும் போதே இறந்திருச்சுங்க...”

“நான் இன்னொருக் கல்யாணம் பண்ணிக்கவேயில்லை... நாளைக்கு வர்றவ என் பொண்ணை எப்படிப் பார்த்துக்குவாளோன்னு...?” இதை அவர் சொல்லும்போது தான் நடராஜன் வஜ்ரவேலைக் கவனித்தார்... எப்படியும் நாற்பதுகளில் தான் இருப்பார்.

“உங்க வீட்டுலயும் கல்யாணம் நின்னதுனால பிரச்சனையாகி கேஸ் ஆகிடுச்சுன்னு தெரிஞ்சது.. மத்தபடிப் பையனை விசாரிச்ச வரைக்கும் எனக்கு ரொம்பத் திருப்தி. அதுவும் பையனுக்கு விவசாயத்துல ரொம்ப ஆர்வம். உங்களோட சின்ன வயசுல இருந்து வயல் வரப்புல இறங்கி வேலை செய்யறாராமே! பூமித்தாய நேசிக்கிறவர் என் பொண்ணை விடமாட்டாருன்னு என் மனசுல எண்ணம்”

“அதான் பொண்ணைக் குடுக்கறேன். அதான் உண்மை.. அதனால இத்தனை சிக்கலுக்கு நடுவுல கல்யாணம் நடக்கிறதால... அதை நான் சிறப்பா செய்யணும்ங்க” என்றார்.

“என் பொண்ணை விட எனக்கு எதுவுமே முக்கியமில்லீங்க. ரொம்பச் செல்லம் குடுத்துட்டேன், அதனால பிடிவாதம் கூட.... வீட்டோட மாப்பிள்ளைன்னு கூட யோசிச்சேன்... ஆனா அவ கூட்டுக்குள்ள இருந்து வெளி வரணும்... நாலு பேரோட பழகணும்.. அதான் அந்த யோசனையைக் கூட விட்டேன். என் பொண்ணு நல்லா இருக்கணும்ங்க...”

“அந்த கண்ணன், அந்தப் பய கூட நான் பேசியிருக்கேன். நல்லவனா தெரிஞ்சான். அதான் சரின்னு மாப்பிள்ளையா நினைச்சேன்... எங்க தப்பா போச்சுன்னு தெரியலை...”

“இப்போவும் என் தம்பி சொன்னவுடனே உங்க பையனை நான் நேர்ல பார்த்தேன். ஆனா நான் பார்த்தது அவருக்கு தெரியாது. என்னவோ மனசுக்கு சரியா வரும்னு தோணிச்சு. அதான் நீங்க வந்தப்போ என் பொண்ணை பிடிச்சிருக்குன்னு சொல்லணும்னு நினைச்சேன்”.

ஒரு பெண்ணைப் பெற்றவராக... அவரின் ஆதங்கம் புரிந்தது..

எப்படியோ கடனை உடனை வாங்கி அவர் நினைத்த மாதிரி திருமணத்தை நடத்திவிடலாம் என்று நடராஜன் மனதிற்குள் முடிவெடுத்த போது…

“கல்யாணம் வேணா கோவில்ல வெச்சிக்கலாம்.. ஆனா வரவேற்ப்பு சிறப்பா செஞ்சிடனும்ங்க” என்று வஜ்ரவேல் இறங்கி வர..

“சரி” என்று ஒத்துக் கொண்டு வருவதைத் தவிர நடராஜனுக்கு வேறு வழியில்லை… ஆனால் ஒரு விஷயம் உணர்ந்தார். பெண்ணுக்கு குறை என்பதைத் தவிர அந்த சம்மந்தத்தில் வேறு குறை இல்லை.

ஒரே பெண், ஏராளம் என்று சொல்லும் அளவில் இல்லாவிட்டாலும் வசதியான குடும்பம்… அதனால் சொத்துக்கள் எல்லாம் பிறகு அவரின் பெண்ணிற்கும் சிபிக்கும் தான்… அதனால் மனதை தேற்றி மீண்டும் கடன் வாங்கி திருமண செலவு செய்ய முடிவு செய்தார்.

வீட்டில் சொன்னால் வீட்டினர் எல்லோரும் குதித்தனர்… இப்போது தான் நின்று போன திருமணத்திற்கு அவ்வளவு செலவு அதுமட்டுமல்லாமல் கேஸ் ஆகி அதற்கும் எக்கச்சக்க செலவு இப்போது மீண்டும் ஒரு செலவா எங்கே போவது பணத்திற்கு என்பது போல… அதன் கூட அந்தப் பெண்ணை திருமணம் செய்வதே அதிகம் என்பது போல சில வார்த்தைகள் வர…

“அவங்கப்பா அந்தப் பொண்ணுக்கு நிறைய செய்வார் போல, அவர் சிபியை பிடிச்சு தான் பொண்ணு குடுக்கறார். சும்மா அவர் தம்பி சொன்னதுக்காக இல்லை. ஒரே பொண்ணு, சீரும் சிறப்புமா செய்ய விருப்பப்படறார். அதனால நம்ம அனுசரிச்சு தான் போகணும், இப்போவே பொண்ணு பார்க்க எப்போ வரீங்கன்னு கேட்டார்”.

“நான் தான் என்ன சொல்றதுன்னு தெரியாம வீட்ல கலந்து சொல்றேன்னு வந்துட்டேன். என்ன சொல்லட்டும்” என்று பொதுவாக கேட்க…

“இருக்குற பிரச்னையில ஓஞ்சு கிடக்கிறோம்! இதுல அதெல்லாம் ஆகாது! டைரக்டா கல்யாணம்னு சொல்லிடுப்பா!” என்றார் சுலோச்சனா.

சிபி என்ன சொல்கிறான் என்பது போல நடராஜன் பார்க்க... "நீங்க என்ன சொன்னாலும் சரி, என் தனிப்பட்ட விருப்பு ஒன்னுமில்லை" என்று விட்டான்.

தாங்கள் மட்டும் போய் பார்க்க முடியாது, உறவு ஜனத்தை அழைக்க வேண்டும்... பிரச்சனை என்று அத்தனை பேரும் கேசில் மாட்டியிருக்க திருமணத்தை அவர்களுக்கு சொல்லாமல், அவர்களை அழைக்காமல் செய்ய முடியாது.

யோசித்த நடராஜனும், ஈஸ்வரரும் ஒரேமுறையாக திருமண வைபவம் வரவேற்பு என்று முடிவெடுத்து வஜ்ரவேலை எப்படியோ சமாளித்து விட்டனர்.

இதோ அதோ என்று இருந்த திருமண நாள் வந்தே விட்டது. பத்மினி ஜெய்சங்கர் மற்றும் ராகினியின் சௌக்கியத்தை சிபி அவ்வப்போது எப்படி இருக்கிறது என்று பார்த்தான். அவர்களின் அம்மா இறந்த குறை தவிர அந்த சமையத்தில் அந்த பிள்ளைகளுக்கு எந்த குறையுமில்லை. தனமும் ராஜவேலும் அவர்களை நன்றாகப் பார்த்துக் கொண்டனர்.

இதில் சிபிக்குத் தெரியாதது பார்த்துக் கொள்வது மட்டும் தான் அவர்கள்... அவர்களின் வருமானம் சில சமயம் நன்றாக இருக்கும் சில சமயம் இருக்காது.. ராஜவேல் அண்ணனிடம் சொல்லியிருக்க... அவர்களை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் செலவுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று வஜ்ரவேல் சொல்லியிருந்தார்.

இதில் கண்ணன் வேறு பத்மினியை தங்களுடன் வந்துவிடுமாறு அழைத்திருந்தான். ஆனால் பத்மினி ராகினியையும் ஜெய்ஷங்கரையும் விட்டு வர ஒத்துக்கொள்ளவில்லை. "நாங்க சேர்ந்து தான் இருப்போம் அண்ணா. கொஞ்ச நாள் ஜெய்சங்கர் பெரியவன் ஆனா பிறகு எங்களை நாங்களே பார்த்துக்குவோம் யார் உதவியும் தேவையில்லை" என்று தெளிவாக முடிவாக கூறி வர முடியாது என்றும் மறுத்து இருந்தாள்.

இதெல்லாம் சிபிக்குத் தெரியாத போதும் திருமணம் செய்துக் கொள்வதில் தவறில்லை... இந்தப் பிள்ளைகளின் சௌக்கியத்திற்காகக் செய்துக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்திருந்தான். கூடவே இன்னொரு எண்ணம் மனதினில் என்னவோ குறையுள்ளப் பெண்ணிற்கு வாழ்க்கை கொடுப்பது போல.

நடந்துவிட்ட நிகழ்வுகளை சரிபடுத்த அதில் சம்மந்தமில்லாத எத்தனையோ பேர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்க… இவனுக்கு மனதில் இந்த எண்ணம்.

திருமணம் வரை சிபி மணமகளைப் பார்க்கவில்லை. காலையில் அவினாஷி, அவினாசிலிங்கம் கோவிலில் திருமணம். ஜெயஸ்ரீயின் வீடும் பக்கத்தில் இருக்கும் ஒரு கிராமம், அதே போல சிபியின் வீடும் மற்றொரு ஊராட்சி…

அங்கு நடந்த சில நிகழ்வுகள்… ஜெயஸ்ரீ கோபம் கொண்டு நான் திருமணம் செய்ய மாட்டேன் என்பது போல அடம் பிடித்து இருந்த இடத்தில் வராமல் அப்படியே இருந்தாள்.

மீண்டும் திருமணம் எல்லோர் முன்பும் நிற்பதா என்ற பதட்டம் தோற்ற சிபியைப் போய் அவனாக ஜெயஸ்ரீயிடம் பேச வைத்தது… “நான் உனக்கு வாழ்க்கைக் குடுக்கலை… நீ எனக்கு குடு வா” என்று சொல்ல வைத்தது… அந்த அழகு முகத்தையும் அப்போதுதான் சிபி பார்த்தான். அதையும் அவன் எதிர்பார்க்கவில்லை.

இதைக் கேட்டு, “நீ என்ன கதை சொல்கிறாய்!” என்பது போல நம்பாமல் பார்த்த ஜெயஸ்ரீயை, “எழுந்திரு, எழுந்திரு, சீக்கிரம்!” என்று அதட்டல் போட வைத்தது. வஜ்ரவேல், “என்ன இது இப்படி என் மகளை இப்படி அதட்டுகிறார்” என்று பரிதவித்து பார்த்த போதும்…

ஜெயஸ்ரீ முகத்தை சுருக்கி விருப்பமின்மையை காட்டிய போதும், சிபியின் சொல்லுக்கு அடிபணிந்து மெதுவாக எழுவதைப் பார்த்து அதில் தலையிடாமல் ஓரம் நின்றார்.

எல்லாம் நன்றாக நடக்க வேண்டுமே… மகளுக்கு பிடிக்க வேண்டுமே என்ற எண்ணம் மட்டுமே அப்போது வஜ்ரவேலின் மனதில். சிபியை அவனுக்கு தெரியாமல் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அதை ஜெயஸ்ரீயிடம் காட்டியிருந்தார். அவளிடம் கிட்டதட்ட அரை நாள் பேசிப் பேசி அவளைக் கரைத்து சம்மதம் கூட வாங்கியிருந்தார்.

இப்போது குழந்தை மணிமேகலையால் தான் பிரச்சனை. முன்பே கோவிலுக்கு பெண் வீட்டினர் வந்து விட்டனர். அதன் பிறகு தான் மாப்பிள்ளை வீட்டினர் வந்தனர்.

அதனால் மணப் பெண்ணான ஜெயஸ்ரீ முன்பே கோவிலுக்குள் ஒரு சேரில் அமர வைக்கப்பட்டு இருந்தாள். மாப்பிள்ளை வீட்டினர் வந்தவுடனே பாட்டி சுலோச்சனாவும், அம்மா தேவியும், மருமகள் வனிதாவும் குழந்தை மனிமேகலையோடு மணப்பெண்ணான ஜெயஸ்ரீயின் அருகில் மற்ற சில உறவுகளோடு வந்தனர்.

ஜெயஸ்ரீயின் அருகில் வந்த குழந்தை, “நீங்க தான் புது சித்தியா?” என்று மழலையில் சொல்லியது… “ஆம்” என்பது போல தலையசைத்த ஜெயஸ்ரீயிடம், “உங்களுக்கு நடக்க, பேச வராதாமே” என்று அழகாக தெளிவாக சொல்லவும் அங்கே அப்படி ஒரு அமைதி…

இவ்வளவு நேரமாக இருந்த ஒரு சூழல் அப்படியே மாறியது. ஜெயஸ்ரீயின் முகமும் மாறியது. மிகவும் சந்தோஷமாக உற்சாகமாக மணப்பெண்ணின் கலையோடு இருந்தால் என்று சொல்ல முடியாவிட்டாலும்.. ஒரு மென் புன்னகையோடு தான் இருந்தாள்.

பேசிப் பேசிப் வஜ்ரவேல் அவளை ஒரு மாதிரி திருமணத்திற்கு தயார் செய்திருந்தார். இப்போது முகம் மாறிவிட்டது.

திரும்ப குழந்தை ஆசையாக ஏதோ பேச வர முகத்தை திருப்பினாள் ஜெயஸ்ரீ.

“குழந்தை தானே தெரியாம பேசிசிடுச்சு” என்று யாரும் சமாதான வார்த்தைக் கூட சொல்லவில்லை. எல்லோரும் அப்படி அப்படியே நின்றனர். இப்படி ஒரு பெண் சிபியின் மனைவியா என்ற மாதிரி எண்ணத்தில் இருந்ததால் ஒப்புக்கு கூட சொல்லவில்லை.

ஒரு கோபம் மனதில் எழ, ஜெயஸ்ரீ அவர்கள் யாரையும் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தாள்.

“சித்தி, ஏன் என்கிட்டே பேசமாடேங்கறாங்க?” என்று வனிதாவை மணிமேகலை திரும்ப திரும்ப கேள்வி கேட்க…

“கொஞ்ச நேரம் வாயை மூடு மேகி” என்று வனிதா அதட்டல் போடவும்…

முகத்தைச் சுருக்கிய மணிமேகலை… அம்மாவை விட்டு, பாட்டியிடம்,

“இதுதானே புது சித்தி, சித்தப்பா வாழ்க்கைக் குடுக்கறது” என்றும் கூட சொல்ல...

ஜெயஸ்ரீக்கு ஸ்பஷ்டமாய் புரிந்தது... “இது இவ்வளவு நேரம் இவர்கள் பேசியது, அதைக் கேட்டுக் கொண்டிருந்த குழந்தை திரும்ப சொல்கிறது” என்று. இந்த வார்த்தைகள் குழந்தையின் வாயில் இருந்து தானாக வர வாய்ப்பேயில்லை.

“எவனும் எனக்கு வாழ்க்கைக் குடுக்கத் தேவையில்லை” என்ற எண்ணம் அப்போது தோன்ற... அதன் பின் அமர்ந்த இடத்தை விட்டு அசையவில்லை.

எல்லோரும் மாற்றி மாற்றி வந்து, “வாம்மா முதல்ல பிள்ளையாரை கும்பிட்டிட்டு மத்த சடங்கெல்லாம் ஆரம்பிக்கலாம்” என்று கூப்பிட இருந்த இடத்தை விட்டு அசையவில்லை... யார் பேச்சையும் காதில் வாங்கவில்லை.

வஜ்ரவேலிடம் சொல்ல, அவர் வேகமாக வந்து, “என்ன கண்ணு நேரமாகுது வாடாம்மா” என்றார். அவரைப் பார்த்தவள், “வரமாட்டேன்” என்பது போல தலையாட்டினாள்.

“என்ன?” என்று பதறிவிட்டார். அவள் பேச முயற்சி செய்யாமல் தலையாட்டும் போதே ஜெயஸ்ரீ சற்று பதட்டமாக இருக்கிறாள் என்று புரிந்தது.

“என்ன? என்ன ஆச்சு?” என்று பக்கத்தில் இருந்த உறவுப் பெண்மணியிடம் கேட்டார்.

குழந்தை ஏதோ பேசிடுச்சு.. ஜெயஸ்ரீக்கு கோபம் வந்திடுச்சு என்று மணிமேகலை பேசினதை சொல்ல...

இந்த வாழ்க்கை குடுக்கிறேன் என்பது மாதிரியான வார்த்தைகளை எப்போதும் ஜெயஸ்ரீ விரும்பவே மாட்டாள். “விடு கண்ணு” என்று தந்தை சமாதானம் சொனார்.

ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்த பிடிவாதம் எப்போதும் ஜெயஸ்ரீயினிடத்தில் உண்டு... இப்போது இன்னும் அதிகம்... நித்தம்

அவருக்கு அவளோடு போராட்டம் தான்.

அத்தனை உறவுகளை சுற்றி வைத்துக் கொண்டு வஜ்ரவேலிற்கு எப்படி ஜெயஸ்ரீயை சமாதானம் செய்வது என்று கூட தெரியவில்லை.

அதற்குள் பெண் வரமாட்டேன் என்கிறாள் என்பது போல ஆங்காங்கே செய்தி பரப்ப... அந்த இடம் பதட்டம் ஆனது.

என்ன எல்லோர் முன்னிலையிலும் மீண்டும் திருமணம் நிற்பதா என்று சிபி டென்ஷனாகிவிட்டான்.

“என்னை வெச்சு எல்லோரும் விளையாடுறாங்களா?” என்று கோபமாக மணப்பெண் இருந்த இடத்திற்கு விரைந்தான்.

“கோபமா எதுவும் பேசிடாத சிபி” என்று வர்மனும் சிபியோடு சென்றான்.

அங்கு சென்றவனின் கண்களுக்கு மணப்பெண் முதலில் படவில்லை, அழுதுகொண்டிருந்த மணிமேகலை தான் பட, “என்ன டா மேகி பாப்பா எதுக்கு அழறா” என்று கேட்டதும், அவன் மேல் ஓடி வந்து ஏறிய மேகலை,

“அம்மா திட்டினாங்க, நான்...” என்று ஆரம்பித்து நடந்ததை ஒரு வாறு ஆங்காங்கே பிட்டு பிட்டு சொல்ல... ஒரு வாறு விஷயம் சிபிக்கு புலப்பட்டது.

ஆனால் குழந்தை சொன்னதற்காக, இப்படி யாராவது செய்வார்களா என்ற கோபமும் தொற்றியது... “எங்க இருக்கா உன் சித்தி?” என்று மேகலையைக் கேட்க... பெண்கள் நின்று கொண்டிருக்க, அவர்களுக்கு நடுவில் சேர் போட்டு அமர்ந்திருந்த ஜெயஸ்ரீ தென்பட்டாள்.. முகம் சரியாக தெரியவில்லை... வேறு புறம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“வா!” என்று அவன் அருகில் செல்ல முயலும் போதே, அங்கே வந்த நடராஜன் ஜெயஸ்ரீயிடம் பேச... அவள் முகத்தைக் கூட அவரின் புறம் திருப்பவில்லை.

“என்ன இது மரியாதையில்லாதத்தனம்” என்று தான் சிபிக்கு

தோன்றியது. அவன் அருகே சென்று.. "இங்க பாரு!" என்று ஒரு அதட்டல் போட அப்போதும் திரும்பி பார்க்கவில்லை.

"என்ன பிடிவாதம் இந்தப் பெண்ணிற்கு, என்ன குழந்தை தப்பாக சொல்லிவிட்டாள், உள்ளதைத் தானே சொன்னாள். உண்மையை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டாமா" என்று கோபமாக வந்தது சிபிக்கு. அவனுக்கு முதலில் பக்குவம் இருக்கிறதா இல்லையா என்று அவன் ஆராயவேயில்லை.

அவள் பார்த்துக் கொண்டிருந்த புறம் சென்று நின்றான். அப்போது தான் அந்த முகத்தையே பார்த்தான். குழந்தைத்தனமான அழகு முகம். அந்தக் கண்களில் ஒரு பிடிவாதம், எனக்கு வேண்டாம் என்பது போல, நான் பார்க்க மாட்டேன் என்பது போல...

சிபி அவனாக, "நான் உனக்கு வாழ்க்கை குடுக்கலை, நீ எனக்கு குடு, வா!" என்றான். நிச்சயமாக இப்படிப் பேச வேண்டும் என்று அவன் நினைக்கவேயில்லை.. தானாக அந்த வார்த்தைகள் வந்தது.

அதைக் கேட்டதும் ஜெயஸ்ரீ தலை தூக்கி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை சொன்னது ஜெயஸ்ரீக்கு தன் முகம் பரிச்சயம் என்று. தன்னைப் போல அவள் முதல் முறை தன்னைப் பார்க்கவில்லை என்று. அனேகமாக தன்னுடைய புகைப் படத்தை பார்த்திருக்க வேண்டும் என்று அனுமானித்தான்.

திரும்பவும், "எங்க பாப்பா தெரியாம சொல்லிட்டா, நான் உனக்கு வாழ்க்கை குடுக்கலை நீ எனக்கு குடு வா" என்றான்.

"என்ன கதை சொல்கிறாய்?" என்பது போல ஜெயஸ்ரீ பார்க்க...

"எழுந்துரு, எழுந்துரு, சீக்கிரம்" என்று அதட்டல் போட்டான் சிபி. அவனுக்கு அப்படி தான் பேச வரும். இந்த மிரட்டல் பேச்சுக்கள் தான் ராதாவை அவனிடம் இருந்து தள்ளி நிறுத்தியது.

"இப்படி அதட்டாதீங்க!" என்று சொல்ல வந்த வஜ்ரவேல், ஜெயஸ்ரீயின் முகம் விருப்பமின்மையைக் காட்டிய போதும், மெதுவாக அவள் எழ முயல... வஜ்ரவேல் அமைதியாகிவிட்டார்.

எழுந்தவள், பக்கத்தில் இருந்த தடியை எடுக்க முற்பட... “என்னைப் பிடிச்சிக்கோ” என்பது போல உறவுப் பெண்மணி ஒருவர் கை கொடுக்க, “வேண்டாம்!” என்பது போல தலையசைத்தவள், பிடிவாதமாக கைத்தடிக்கு கை நீட்ட, வேறு வழியில்லாமல் அதைக் கொடுத்தனர்.

மெதுவாக அதைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். கொஞ்சம் சாய்ந்து இருந்தது நடை... சிபி அதை பார்த்துக் கொண்டு நிற்க...

“கோயில்ன்றதுனால பூட்ஸ் போடலைங்க, அது போட்டா நடை நேரா வருமுங்க” என்று, சிபி ஜெயஸ்ரீயின் நடையைப் பார்ப்பதைப் பார்த்து, வஜ்ரவேல் சிபியிடம் மெதுவாக தான் சொன்னார்.

ஆனால் ஜெயஸ்ரீயின் கண்கள் வஜ்ரவேலை முறைக்க, அவர் வாயை மூடிக் கொண்டார். முறைப்பு என்பதை விட இன்னும் ஏதாவது சொன்னால் அழுதுவிடுவாள் என்பது போலவும் கண்கள் இருக்க வஜ்ரவேல் வாயை மூடிக் கொண்டார்.

ஆனால் அவர் முகத்தில் வருத்தம் தெரிய, ஜெயஸ்ரீ அதைப் பார்த்தவள் அதன் பிறகு பிடிவாதம் காட்டவில்லை, யார் என்ன சொன்னாலும் அதை செய்தாள். குனிந்த தலை நிமிரவுமில்லை.

சிபி மௌனமாக நடப்பதை க்ரகித்தான்.

திருமணம் இனிதே இறைவன் சன்னதியில் நடை பெற்றது. தலை குனிந்தே தாலியையும் வாங்கிக் கொண்டாள். நிமிர்ந்து யார் முகத்தையும் பார்க்கவில்லை. வஜ்ரவேலிற்கு பார்வை முழுவதும் மகளின் மேல் தான். எல்லோரும் ஜெயஸ்ரீயை தான் கவனித்தனர். அதனால் அவள் யாரையும் பார்க்க முயலவில்லை. யாருடைய பார்வையையும் சந்திக்கவுமில்லை.

சிபி எப்போதும் மிக வேகமான நடையைக் கொண்டவன்... இப்போது ஜெயஸ்ரீ வருகிறாளா என்று பார்த்து பார்த்து மெதுவாக நடந்தான்.

தாலி கட்டி முடித்ததும் தான் சிறிது திருமணத்திற்கு வந்தவர்களிடம் கூட உற்சாகம் வந்தது. எல்லோரும் சற்று கலகலப்பாகப் பேச ஆரம்பித்தனர்.

ஆனாலும் ஒரு தயக்கம், மாப்பிள்ளை வீட்டினருக்கு பெண்ணிடம் பேச..

எல்லா செலவுகளையும் வஜ்ரவேல் தான் செய்தார். “மொத்தமாக நான் செலவு செய்துக்கொள்கிறேன், பிறகு பிரித்துக் கொள்ளலாம்” என்று நடராஜனிடம் ஏற்கனவே சொல்லியிருந்தார்.

அதனால் செலவுகள் குறித்த பயம் அப்போதைக்கு மாப்பிள்ளை வீட்டினருக்கு இல்லை என்பது தான் உண்மை.

அதன் பிறகு ஒரு சிறப்பான காலை விருந்து... பின்பு மாலையில் வரவேற்பும் மிகவும் சிறப்பாக... அவர் செய்த செலவுகளைப் பார்த்த நடராஜனுக்கு கவலையாக இருந்தது, ஐயோ எவ்வளவு பணம் தங்கள் பங்காக சொல்லப் போகிறாரோ என்பது போல.

காலையில் கோவிலில் முகத்தை தூக்கி வைத்தது தான் ஜெயஸ்ரீ... பின்பு முகத்தில் எதையும் காட்டவில்லை, கோபத்தையும் காட்டவில்லை.. சந்தோஷத்தையும் காட்டவில்லை.

யார் எது சொன்னாலும் சரி என்பது போல சிறு தலையசைப்பு... நெருங்கிய சொந்தங்களிடம் புன்னகைக்க வில்லை தான். ஆனால் திருமண வரவேற்பிற்கு வந்தவர்களிடம் இன்முகத்தையே காட்டினாள்.

காலையில் கோவில் என்பதால் ஷூ அணியவில்லை மாலையில் வரவேற்பிற்கு அணிந்திருந்தாள். அதனால் அவளின் தந்தை சொன்னது போல இப்போது ஸ்டிக் வைத்து நடக்கும் போது நடை நேராக தான் இருந்தது.

சிபியின் புறம் திரும்பவேயில்லை.

ஆனால் காலையில் இருந்து ஜெயஸ்ரீயைத் தான் சிபி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். வரவேற்பிற்கு பின்புறம் எழுதியிருந்த பேரின் பின் இருந்த D C T என்பதைப் பார்த்து தான், டிப்ளமோ இன் கம்ப்யுட்டர் டெக்னாலஜி என்பதைக் கொண்டு அவள் படித்திருக்கிறாள் என்பது புரிந்தது.

உண்மையாக காலையில் ஜெயஸ்ரீயைப் பார்க்கும் வரை ஏதோ தன்னால் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்ய அவளுக்கு வாழ்க்கைக் கொடுக்கிறோம் என்று தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

குறைகள் உள்ள பெண் என்பதால் சிபி மனதிற்குள் சித்தரித்து வைத்திருந்த பெண்ணே வேறு... உண்மையாக ஜெயஸ்ரீ இருந்தது போல ஒரு தோற்றத்துடன் எதிர்பார்க்கவில்லை.

தனத்தைக் கொண்டு, ராஜவேலைக் கொண்டு சற்று நாகரிகம் தெரியாத ஆட்களை எதிர்பார்த்திருக்க... அந்த மாதிரி இவர்கள் இல்லை.. மிகவும் கௌரவமாகத் தான் தெரிந்தனர். தனமும் ராஜவேலும் கூட எந்த சத்தமும் இன்றி திருமணத்தில் ஓடி ஓடி வேலை செய்துக் கொண்டிருந்தனர்.

இப்படி பல சிந்தனைகள் மனதில் ஓடி சிபியை யோசனைக்குத் தள்ளிக் கொண்டு இருந்தாலும்... ஜெயஸ்ரீயின் ஆராய்ச்சியே அதிகம் அதில். நடப்பதில் உள்ள குறை தெரிந்தது.

மெட்டிப் போடும்போது காலில் என்ன குறை என்பது போல பார்க்கலாம் என்று சிபி நினைத்திருந்தான். ஆனால் அந்த மாதிரி ஒரு சடங்கே இல்லை. இதோடு பேச வரும் என்று தானே சொன்னார்கள். இன்னும் ஒரு வார்த்தைக் கூட ஏன் பேசவில்லை என்பது மாதிரி தான் ஜெயஸ்ரீயை பார்த்துக் கொண்டிருந்தான் சிபி.

உண்மையாக காலையில் ஜெயஸ்ரீயைப் பார்த்ததில் இருந்து சிபி அவளைப் பற்றியே தான் யோசித்துக் கொண்டிருந்தான். கூட வளர்ந்த ராதாவைப் பற்றி, காலையில் இருந்து ஜெயஸ்ரீயைப் பற்றி நினைத்ததைப் போல என்றுமே நினைத்தது இல்லை என்பது தான் உண்மை.

திருமணம் செய்ய ராதாவை மனதில் வரித்திருந்தான் என்பது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனால் அது மட்டுமே உண்மை... மற்றபடி இப்படி அவளை என்றுமே கவனித்தது கூட கிடையாது. இரண்டு வார்த்தை நல்ல விதமாக பேசியது கூட கிடையாது. எப்போதும் அதட்டல் உருட்டல் மிரட்டல் வார்த்தைகள் தான்.

ஆனால் அது சிபியின் தவறு என்று சொல்ல முடியாது. அவன் குணமே அப்படித் தான். அவன் எல்லோரிடமும் அப்படித்தான். அதை புரிந்து கொள்ளும் சக்தி ராதாவிடமில்லை. அதனால் தான் ராதாவின் மனது சிபியின் புறம் ஈர்க்கப்படவேயில்லை.

## அத்தியாயம் ஒன்பது :

பல முறை சிபி ஜெயஸ்ரீயின் பார்வையை சந்திக்க முற்பட்டான்... ஆனால் முடியவேயில்லை. கவனமாக ஜெயஸ்ரீ தன் பார்வையை தவிர்க்கிறாள் என்று மிகவும் தாமதமாகத்தான் சிபிக்கு புரிந்தது.

அதன் பிறகு அவனும் முயலவில்லை... "என்னைப் பார்க்காமல் எங்கே போவாள்" என்று தான் மனதில் அந்த நேரம் தோன்றியது.. அதே சமயம், "என்ன இது? நம்மை விட திமிராய் இருப்பாள் போல இருக்கிறதே" என்றும் தோன்றியது.

ஜெயஸ்ரீ இப்போது சொல் பேச்சுக் கேட்டு, திருமணம் மற்றும் வரவேற்பு எல்லாவற்றிலும் காலையில் நடந்ததை விட்டு பிறகு பதவிசாக நடந்தாலும்... மனதிற்குள் சிபியைக் குறித்த அளவில்லாத பதட்டம் தான்.

புதியவன், இனி அவனோடு தான் தன் வாழ்க்கை, எப்படி இருப்பானோ? எப்படி நடப்பானோ? எனக்கு அவரைப் பிடிக்குமா? அவருக்கு என்னைப் பிடிக்குமா? தன்னால் அனுசரித்துப் போக முடியுமா? மனம் முழுவதும் குழப்பம்...

காலையிலேயே என்னைக் குறித்து குழந்தைகள் பேசும் அளவிற்கு வைத்திருந்தனரே அவர் வீட்டினர். என்னைக் குறித்து அந்த எண்ணம் தானா அவர்களுக்கு... இவருக்கும் அப்படி தானோ... இத்தனைக் குழப்பங்கள் பொருட்டு அவனின் பார்வையைச் சந்திக்க பயந்து கவனமாக தவிர்த்தாள்.

நொடிக்கு ஒரு தரம் வஜ்ரவேல் தான் வந்து பேசினார்... "இவங்க பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருக்கேனா இல்லை இவரையா?" என்றுத் தோன்றியது சிபிக்கு.

மாலை வரவேற்பு, இரவு விருந்து எல்லாம் சிறப்பாக முடிய, பெண்ணையும் மாப்பிள்ளையையும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துப் போக வஜ்ரவேல் கேட்டார்.

நடராஜன் வீட்டினருக்கு அது பழக்கமில்லை தான்... ஆனால் திருமண செலவு முழுவதும் வஜ்ரவேல் செய்திருக்கும் போது மறுக்க முடியாது.

நடராஜன் ஈஸ்வரரை பார்க்க… “போகட்டும்” என்பது போல அவர் தலையசைக்கவும் அனுப்ப சம்மதித்தார்.

“ஒரு ரெண்டு நாள் இருக்கட்டுமுங்க, சொந்த பந்தத்தையெல்லாம் கூட்டி, ஒரு கார விருந்து போட்டு, சீரோட அனுப்பிடரனுங்க… உங்களுக்கு எந்த நாளு சொவ்கரியப்படும்னு சொன்னா, அன்னைக்கு வெச்சிக்குவோமுங்க” என்றார்.

நடராஜனுக்கு சம்பிரதாயங்கள் தலை சுற்றியது… பெரிய மகனுக்கு வீட்டில் வளர்ந்த பெண் என்பதால் சொந்தத்துக்குள் என்பதால் ஒன்றும் தெரியவில்லை… இன்னும் இது வேறா என்று மனதில் தோன்றியபோதும்… “வீட்ல கலந்துட்டு நாளைக்கு சொல்றனுங்க” என்றார்.

“என்ன அவர்கள் வீட்டிற்குப் போவதா? முடியாது!” என்பது போல சிபி தந்தையைப் பார்க்க…

“போயிடு சிபி, ஏற்கனவே இவர் பண்ணியிருக்குற செலவுல நான் தலை சுத்தி கிடக்கிறேன்… உங்கண்ணன் கல்யாணம் இப்படி நடக்கலை… நாளைக்கு உன் தம்பி கல்யாணத்தையும் நான் இப்படி செலவு செய்யப் போறது இல்லை…”

“தாம்பூலத்துக்கு அவர் என்கிட்டே சொல்லவேயில்லை, வந்தவங்களுக்கு ஸ்கூல் பேக், உள்ள லஞ்ச் பேக், அது கூட ஒரு டப்பர் வேர் டிஃபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில் போட்டுக் கொடுத்திருக்கிறார்… அது ஒன்னு எவ்வளவு வரும் தெரியுமா? ஒன்னும் சொல்ல முடியாம கண்ணு முழி பிதுங்கிக் கிடக்கிறேன்”.

“உனக்கு இதுவே ரெண்டாவது கல்யாண செலவு… இது உன் தப்பில்லைன்னு இருந்தாலும் உன் பங்குக்கு நிறைய செலவு செஞ்ச மாதிரி தான் வரும்… நானே அந்தக் கவலைல இருக்கேன் நீ இன்னும் ஏதாவது சொல்லாத, அவங்க வீட்டுக்குப் போ” என்றார்.

அவர் இந்த விதமாக சொல்ல… வாசு வேறு விதமாக சொன்னான்… “பாரு, நீ ராதாவைக் கல்யாணம் பண்ணியிருந்தா எல்லாத்தையும் நீயே பார்த்திருக்கணும்… ஆனா இப்போ பாரு உன் மாமனார் உனக்கு எவ்வளவு செலவு செய்யறார்… மூணு பவுனுக்கு கழுத்துக்கு சங்கிலி, ஒரு

பவுன்ல மோதிரம், ரெண்டு பவுன்ல பிரேஸ்லெட்… கலக்கற சிபி நீ…”

“பொண்ணு கூட அந்த சில குறைகளைத் தவிர்த்துப் பார்த்தா ராதாவை விட நல்லா இருக்கா… அதனால ராதாவைப் பத்தின நினைப்பை தூக்கி தூர போட்டு, இந்தப் பொண்ணை நல்லா பார்த்துக்கோ… உன்ற மாமனார் உன்னை நல்லா பார்த்துக்குவார்” என்று சொல்ல…

“நிமிஷத்துக்கு நிமிஷம் மனசு மாற நான் என்ன பச்சோந்தியா?” என்று சிபி பதில் பேச…

“லூசு மாதிரி உளறக் கூடாது… மனசுல நினைக்கறது எல்லாம் செல்லாது மாப்பிள்ளை… அப்புறம் எப்படி நீ இவ்வளவு நாள் மனசுல மனைவியா நினைச்ச பொண்ணு அடுத்தவன் பொண்டாட்டி ஆனா…”

“மனசெல்லாம் எங்கயும் செல்லாது… நீ கட்டியிருக்குற தாலி தான் செல்லும்… ஒழுங்கா குடும்பம் நடத்துற வழியைப் பாரு… இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமா எதுவும் நினைக்காத…”

“மனசு நம்ம சொல்றபடியெல்லாம் உடனே எப்படிக் கேட்கும்… எப்படி இத்தனை நாள் நினைச்சது மாறும்…”

“டேய்… என்னடா உன்னோட ரோதனை… அவ செத்துப் போயிட்டான்னு நினைசிக்கோ… போ! போ! கிளம்பு! கிளம்பு!” என்றான்.

“என்னங்கடா இது? நான் ரோதனையா இல்லை இவனுங்க ரோதனையா?” என்று அத்தனைப் பேரையும் முறைத்துப் பார்த்துக் கிளம்பினான் சிபி.

அவனுக்கு என்ன தெரியும்? இவனையும் விட நிறைய அறிவுரைகள் ஜெயஸ்ரீக்கு சொல்லபடுகிறது என்று.

“கண்ணு, மாப்பிள்ளை நம்ம வீட்டுக்கு வர்றார், நல்லா பார்த்துக்கோ! இனிமே அவர் தான் உன் வாழ்க்கை! அப்பா உனக்கு நல்லா இல்லாத யாரையும் மாப்பிள்ளையா கொண்டு வரமாட்டேன்…”

“அஞ்சு வருஷம் அவரோட காலேஜ்ல படிச்சவன்! என்னோட ரொம்ப

ஸ்நேகிதரோட பையன்... பையன் குறை சொல்ல முடியாதவன்னு தான் சொன்னான்”.

“அஞ்சு வருஷம் கூடப் படிச்சவங்குக்கு தெரியாம இருக்காது... உனக்கும் அவரைப் பிடிக்கும்... காலையில இருந்து நீ இன்னும் ஒரு வார்த்தைக் கூடப் பேசலை... பதட்டமா இருக்காத... பேசு கண்ணு... பேசப் பேசத் தான் வரும்... அவரோட பேசுக் கண்ணு, தயங்காத!” என்று வண்டி வண்டியாக வஜ்ரவேல் அட்வைஸ் செய்யவும்...

வாயில் விரல் வைத்து, “பேசாதீர்கள்” என்பது போல சைகை காட்டியவள்... திரும்ப காதை இரு கைகளால் மூடி, “தாங்க முடியவில்லை” என்பது போல சைகைக் காட்டினாள்.

இதைத் தூரமாக இருந்து சிபி பார்த்துக் கொண்டு தான் இருந்தான். இவளுக்குப் பேச வராதா என்று மிகவும் கவலையாகப் போயிற்று... “நான் இப்படி சைகையில் கூட காலத்தை ஓட்டுவேன்! என் குழந்தைகள்! அவர்களை எப்படி வளர்ப்பேன்?” என்ற எண்ணம் ஓடியது.

மனமும் எப்படி இந்தப் பெண்ணை வைத்து குடும்பம் நடத்துவது என்று பாரமாக அழுந்தியது. அவளையே தான் பார்த்திருந்தான், ஆசையாக அல்ல... காலின் குறையும், பேச்சின் தடையும்... குறை என்பது மற்றவர்கள் முன் கீழ் என்பது போலவோ அல்ல... அல்லது அழகு குறைவு அப்படியோ சிபிக்கு தோன்றவில்லை...

அவனுக்கு தோன்றியது எல்லாம் நடைமுறை வாழ்க்கை சிக்கல்கள்... எப்படி அவள் வேலை செய்வாள், எப்படி குடும்பத்தை கவனிப்பால் என்பது போல...

அப்போது வரை வாசுவிடம் மனசு என்ன நிறம் மாறும் பச்சோந்தியா என்று கேட்டவன் மனம் செல்லும் பாதை இப்போது...

மாறுவது தான் மனம்... அது மட்டும் இல்லாவிட்டால் பல மனிதர்களின் வாழ்க்கை அதன் சுழற்சியைக் கொள்ளாது...

நினைப்பது எல்லாம் மனிதர்களுக்கு நடந்து விடுகிறதா என்ன... நூற்றில் இருவருக்கு நடந்தால் அதிகம்... இருந்தாலும் நடப்பதை ஏற்றுக்

கொண்டு மனிதர்கள் ஓடிக்கொண்டே தான் இருக்கிறார்கள், எதைத் தேடி என்பதை அவர்களே அறியார்...

சிலராவது நின்று நடந்த பழையதை திரும்பி பார்ப்பர்... பலர் அதைக் கூட செய்வது இல்லை... ஓடிக் கொண்டே தான் இருக்கின்றனர்.

அப்பாவின் இடைவிடாத அறிவுரைகளால் நொந்து போன ஜெயஸ்ரீ... “என்னடா இது? இந்த அப்பா!” என்று மனதிற்குள் சலித்தவள்... அவளையும் மீறி சிபியை பார்க்க...

அவன் எப்படி இந்த பெண்ணோடு என் வாழ்க்கைப் போகப் போகிறது என்பது போல பார்த்துக் கொண்டிருந்தான். பேச்சுக்கள் குறைவு என்பதால், முகத்தைக், கண்களை கொண்டு மனிதர்களை படிக்க ஜெயஸ்ரீ எப்போதும் முயற்சிப்பாள்.

அது போல சிபியைப் படிக்க முற்பட்டாள். பார்த்த ஜெயஸ்ரீக்கு சட்டென்று ஒரு கோபம் மூள... “என்னை எதுக்கு இவ்வளவு பாவமா பார்த்துட்டு இருக்காங்க... இவங்களை யார் இவ்வளவு கஷ்டப்பட்டு என்னைத் திருமணம் செய்து கொள்ள சொன்னது” என்பது போல முறைத்தாள்.

அப்போது தான் சிபி ஜெயஸ்ரீ தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவன்... அவளின் பார்வையின் முறைப்பை கவனித்தான். “நானே இவ கூட எப்படி குப்பை கொட்டுறதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்... இவ எதுக்குடா நம்மைப் பார்த்து இந்த முறை முறைக்கிறா... ரொம்ப திமிரோ?” என்று தோன்றியது.

என்னவோ புது மணமகனுக்கான உற்சாகம் இருந்ததோ இல்லையோ... திருமண நிகழ்வில் முழு மனதோடு தான் பங்கெடுத்தான்... இப்போது மனதின் சஞ்சலங்கள் சிபியை ஆட்கொள்ள... ஜெயஸ்ரீயின் முறைப்பை தவிர்த்து வேறெங்கோ பார்த்தான்.

பார்த்துக் கொண்டிருந்தவன், பார்வையைத் திருப்பியது ஜெயஸ்ரீயை மிகவும் காயப்படுத்தியது... நான் பார்க்கவே சகிக்க மாட்டாம இருக்கிறேனா என்பது போலத் தோன்ற, கூடவே...

என்ன தான் அடுத்தவரின் பரிதாபப் பார்வை அவளை

வருத்தப்படுதினாலும், “என் குறை உங்களுக்கு குறையாய் இருந்தால் இருந்துவிட்டு போகிறது, ஆனால் எனக்கு குறை அல்ல” என்ற நிமிர்வோடு திமிராய் இவள் தான் பார்வையை திருப்புவாள், அவர்களைக் கண்டு கொள்ள மாட்டாள்...

“அது மற்றவருக்கு, ஆனால் இவன் என் கணவன் இவன் இப்படிப் பார்ப்பதா, பார்வையை திருப்புவதா?” முனுக்கென்று கண்களில் கண்ணீர் மூண்டது...

மிகுந்த பிரயர்த்தனப்பட்டு அந்த கண்ணீர் வெளியே வராமல், முகத்தை சரி செய்வது போல கர்சீப் வைத்து துடைத்துக் கொண்டாள்.

ராஜவேல் காரை எடுத்து ரெடியாக நிறுத்தினான். “கண்ணு நீ மாப்பிள்ளையோட வீட்டுக்குப் போ கண்ணு, சித்தி, சித்தப்பா கூட வர்றாங்க! வீட்டுக்கு உன் சின்ன தாத்தா, பாட்டி போயிட்டாங்க! அவங்க பார்த்துக்குவாங்க...”

“நான் இங்க எல்லோரையும் அனுப்பிட்டு வர்றேன்!” என்றார்.

பேச வேண்டும் என்று நினைத்தாலும், ஜெயஸ்ரீயின் தொண்டையை விட்டு ஒரு வார்த்தை வரவில்லை. “நீங்களும் வாங்க!” என்பது போல தந்தையின் கை பிடித்து அழைத்தாள். யார் கவனத்தையும் கவராமல் நாசுக்காக அந்தக் கையை விலக்கிய வஜ்ரவேல்... “போ கண்ணு! அப்பா சொன்னாக் கேட்கணும்!” என்றார் தன்மையாக.

மனமேயில்லாமல் ஜெயஸ்ரீ கிளம்ப, “போங்க மாப்பிள்ளை!” என்றார் சிபியின் அருகில் விரைந்து...

அந்த மனிதரைப் பார்த்தால் பாவமாக இருந்தது சிபிக்கு, ஒற்றை ஆளாய் அத்தனை பேரையும் கவனித்து, பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தார் காலையில் இருந்து. வேலை செய்ய ஆட்கள் இருந்தாலும் அவர் சொல்படி தான் எல்லாம் நடந்தது.

திருமணம் வரவேற்பு எல்லாம் முடிந்த நிலையில்... காலையில் பெண்ணின் குறை பெரிதாய் தெரிந்த இடத்தில்... “குறை இருந்தா இருந்துட்டு போகுது! பாரு, அவங்கப்பா தண்ணி மாதிரி பணத்தை செலவு செய்யறான்... இதைவிட என்ன வேணும்... போன கல்யாணம்

நின்னாலும் இந்தக் கல்யாணம் சிபிப் பயலுக்கு சிறப்பா நடந்திருச்சு” என்ற பேச்சுக்கள் சிபியின் உறவுக்குள் இருக்க...

“பரவாயில்லை பையன் நல்லவனா தெரியறான்! பார்க்கவும் நல்லா இருக்கான், படிச்சும் இருக்கான், குடும்பமும் மரியாதையா தெரியுது... முன்ன கல்யாணம் பேச நினைச்சிருந்த பையன் குடும்பம் மாதிரி இல்லை!” என்பது போல ஜெயஸ்ரீயின் உறவுகளுக்குள் பேச்சு இருந்தது.

மொத்தத்தில் அந்த திருமணத்தை எல்லோரும் வரவேற்றனர்.

சிபியையும் ஜெயஸ்ரீயையும்... வஜ்ரவேலின் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

சிபிக்கு சங்கடமாக இருந்தது, அவன் நினைவு தெரிந்த நாளாக யார் வீட்டிற்கும் சென்று தங்கியதே இல்லை.

இரண்டு நாள் தங்குவதற்கு தான் இவ்வளவு யோசிக்கிறோமே, இந்தப் பெண் வந்து எப்படி நம் வீட்டில் காலம் முழுவதும் இருப்பாள் என்பது போல அவன் யோசிக்கவேயில்லை. எந்த ஆண்மகனுக்கும் அப்படி தோன்றுவது இல்லை என்பது தானே உண்மை.

பெண்ணாகப் பட்டவள் திருமணம் முடிந்துவிட்டால் அவள் உடல், பொருள், ஆவி என்று அத்தனையையும் கணவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் அப்போது தான் அவள் நல்ல பெண் என்ற வட்டத்திற்குள் வருவாள்... அது சரியா தவறா என்பது ஒரு புறம் இருக்க...

இந்த மாதிரி எந்தத் தளைகளும் ஆண்களுக்கு இல்லை என்பது தான் உண்மை...

இருட்டில் அது எந்த இடம் என்று கூட சிபிக்கு தெரியவில்லை. கார் நிற்கவும் இறங்கினான்... கூட ஜெயஸ்ரீயும் மெதுவாக இறங்கினாள்... தான் ஏதாவது உதவ வேண்டுமோ என்பது போல சிபி பார்க்க, மீண்டும் அவன் பார்வையை சந்திப்பதைத் தவிர்த்து... அவளாக சிரமப்பட்டு இறங்கி கைத்தடியை கூட நிறுத்திக் கொண்டாள்.

அதற்குள் வயதான பெண்மணி ஒருவர் வந்து ஆரத்தி எடுத்தார். பின்பு

வீட்டினுள் சென்றனர்.

ஓட்டு வீடு, ஆனால் பெரிய வீடு... வீடு மட்டும் தான் ஓட்டு வீடு மற்றபடி உள்ளே கீழ் தரை கூட முழுவதும் கிரானைட்ஸ் போடப்பட்டு, அங்கே இருந்த பொருட்கள், அவர்கள் சற்று வசதியானவர்கள் என்று பறைசாற்றும் படி தான் இருந்தது.

வீடு, தரை, சாமான் எல்லாம் இப்படி வசதியா இருக்கு! ஆனா ஏன் ஓட்டு வீடு என்ற கேள்வி சிபியினுள் எழுந்தது.

அவன் பாட்டிற்கு வீட்டின் வசதியை பார்வையால் அளந்து கொண்டிருக்க.. ஜெயஶ்ரீ எங்கே என்பது போல பார்த்தால் அவளைக் காணவில்லை. அவளை மட்டுமல்ல யாரையும் காணவில்லை.

“இப்போதானேடா ஆரத்தி எடுக்கும் போது நாலஞ்சு பேர் இருந்தாங்க! எங்க போனாங்க?” என்று சிபி வியப்பாய் நினைத்தான்.

ஜெயஶ்ரீ அவளின் ரூமிற்குள் போயிருக்க... உறவுகள் எல்லாம் மற்ற அறைகளில் இருந்தனர். மரியாதை நிமித்தம் அவன் முன் வரவில்லை, அவன் முன் அமரவுமில்லை...

இப்படியே பத்து நிமிடங்கள் போக... தனம் தான் ஜெயஶ்ரீயிடம் விரைந்து, “மாப்பிள்ளைத் தனியா உட்கார்ந்து இருக்கார் கண்ணு! நீ போம்மா! அங்க போய் இரு!” என்றார்.

அப்படி ஒன்றும் மரியாதை தெரியாதவளல்ல ஜெயஶ்ரீ... அங்கே முன் கூடத்தில் அதிகம் யாரும் அமரமாட்டர், வஜ்ரவேல் அழைத்தாலன்றி என்று அவளுக்கும் தெரியும். மெதுவாக எழுந்து கூடத்திற்கு வந்தாள்.

சிபி தனியாக அமர்ந்திருப்பதை பார்த்தவள், முயன்று தனத்திடம், “சித்.. சித்.. சித்தப்பாவை... வந்து உட்கார சொல்.. சொல்லுங்க...” என்றாள் திக்கித் திணறி...

காலையில் இருந்து ஜெயஶ்ரீ பேசும் முதல் வாக்கியம்... அமைதியாக இருந்த அந்த இடத்தில் நன்கு கேட்டது... திக்கி திணறி பேசப்பட்ட அந்த வாக்கியம் சிபியின் காதுகளில் விழ... பேசியது யார் என்பது போல சிபி வேகமாக பார்வையை சுழற்றினான்.

ஜெயஸ்ரீ தனத்திடம் பேசுவது தெரிய... மனதில் இவ்வளவு நேரம் இருந்த பாரம் விலகியது, இவளுக்குப் பேச வரும் என்று.

அது சிபியின் முகத்தில் இருந்த இறுக்கத்தை தளர்த்தியது. ஆர்வமாக அவர்கள் பேசுவதை பார்த்தான். "உன்ற சித்தப்பா வந்துட்டாலும்... அவர் வரமாட்டார் கண்ணு... மாப்பிள்ளை தம்பி கிட்ட வேற முன்னம் நீ யாருன்னு மரியாதையில்லாம பேசியிருக்கிறாராம்.. அதுக்குப் பயந்துகிட்டு வரமாட்டேங்கறார்... நீ போய் இரு கண்ணு!" என்று சொல்லி தனம் சென்று விட்டார்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ற ஜெயஸ்ரீ, பின்பு மெதுவாக நடந்து வந்தாள், டீ வீ போடும் நோக்கத்தோடு... அவள் நடந்து வருவதை விழியகற்றாமல் சிபி பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்படி நடக்கிறாள் என்பது போல தான்... சிபி தன்னையே பார்ப்பதை உணர்ந்தவளுக்கு நடை தடுமாறியது.. கைகளும் வேர்க்க பிடித்திருந்த கைதடி வழுக்கியது...

நெற்றியில் அரும்பிய வியர்வையை ஜெயஸ்ரீ துடைக்க... அதுவரை அவளின் நடையை ஆராய்ந்து கொண்டிருந்த சிபி... அப்போது தான் அவளின் பதட்டத்தை கவனித்தான்.

தான் பார்ப்பது தான் அவளுக்கு பதட்டம் என்று சிபிக்கு இன்னும் பிடிபடவில்லை.

கைத்தடியை நழுவ விட்டவள், பக்கத்தில் இருந்த சுவரைப் பிடித்துக் கொண்டாள். சிபி வேகமாக அருகில் சென்றவன், "என்ன ஆச்சு?". என்றான் அவளையும் விட பதட்டமாக.

அவன் பேசியது இன்னும் பதட்டத்தைக் கொடுக்க... சுவரை அழுந்த பிடித்து நின்றாள்.

"இரு, உன் சித்தியைக் கூப்பிடறேன்!" என்று திரும்ப...

"இவர் என்ன என்னை நோயாளி என்கிறாரா? ஐயோ எல்லோரையும் கூப்பிட்டு அவர்கள் என்ன என்று கேட்டு? என்னைக் காட்சி பொருள் ஆக்குகிறாரா" என்று சட்டென்று எரிச்சல் மூள, பதட்டத்தில் பேச

வராததால்… இன்னொரு கையால் அவன் கையைப் பற்றி போகாதே என்பது போல அவள் புறம் இழுத்தாள்.

இழுத்தாள் என்பது திசையை மட்டும் குறிக்கும், சிபி நகரக் கூட இல்லை.. ஜெயஸ்ரீயின் பலம் அவ்வளவுதான்.

அவளின் கையின் ஈரத்தை உணர்ந்து இன்னும் என்னவோ ஏதோ வென்று பயந்து விட்டான் சிபி… “என்ன பண்ணுது” என்று திரும்பவும் கேட்க…

“ஒன்னுமில்லை” என்பது போல தலையாடியவள், அவன் கைகளை பிடித்திருப்பதை உணர்ந்து இன்னும் பதட்டமாக, அவசரமாக கைகளை விட்டு, “எங்கேயும் போகவேண்டாம், யாரும் வேண்டாம்!” என்று சைகை காட்டினாள்.

சிபிக்குப் புரியவில்லை… அவன் இன்னும் கவலையாக பார்க்கவும்… முயன்று அமைதிப் படுத்தி… “ஓ… ஒன்… ஒன்னும்மில்லை… யா… யா… யாரும் வேண்டாம்” என்றாள் திக்கித் திக்கி…

ஜெயஸ்ரீ பேசி சிபி நேரடியாக கேட்கிறான், மிகவும் இனிமையான குரல், அதில் ஈர்க்கப்பட்டவன், இவ்வளவு இனிமையான குரல், ஆனால் ஏன் இந்த குறை என்பது போல சிபி அவளையேப் பார்த்திருக்க…

“போய் உட்காருங்கள்!” என்பது போல சைகை காட்டியவள்… டீ வீ யைப் போட்டு விட்டு மெதுவாக சிபியிடம் வந்து ரிமோட்டைக் கொடுத்தாள்.

சிபி சேனல் மாற்றவும் அதில்… ஒலித்துக் கொண்டிருந்தது…

என் வாழ்வில் நீ வந்தது விதியானால் நீ எந்தன் உயிரன்றோ**…**

பூங்காற்று புதிதானது புதுவாழ்வு சதிராடுது**…**

இரண்டு உயிரை இணைத்து விளையாடும் உயிரை இணைத்து விளையாடும்**…**

அந்தப் பாடல் அவர்களின் செவிகளை எட்டினாலும், வரிகளின் அர்த்தங்கள் இன்னும் எட்டவில்லை.

அத்தியாயம் பத்து :

டீ வீ பார்க்கும் மனநிலை இருவரிடத்திலும் இல்லை... சடங்கு சம்ப்ரதாயம் என்ற எந்த ஏற்பாடும் வீட்டில் செய்யவில்லை. ஏனென்றால் வஜ்ரவேலுக்கு மணமக்களை வீட்டிற்குக் கூட்டி வரும் எண்ணமில்லை.

ஆனால் திருமணம் முன்பே கோவிலில் சில நிகழ்வுகளால் வருத்தம், அதன் பிறகு ஜெயஸ்ரீ சொல் பேச்சுக் கேட்டாலும் முகம் சரியில்லாத மாதிரி தான் அவருக்கு தோன்றியது.

சிபியின் வீட்டுப் பெண்கள் யாரும் ஜெயஸ்ரீயிடம் இன்னும் நெருங்கிப் பேசவில்லை என்பதையும் கவனித்தார். அதனால் முதல் சிபியுடனாவது ஜெயஸ்ரீ பழகட்டும் என்று தான் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

தங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்ற மரியாதை நிமிதமாவது ஜெயஸ்ரீ சிபியிடம் பேசுவாள் என்று தான் இந்த ஏற்பாடு அவர் செய்ததே.

பிறகு சிபியின் வீட்டிற்கு போகும்போது சிபியுடன் சற்று பேசிப் பழகி விட்டால், சகஜமாக உணருவாள் என்று நினைத்தார்.

தம்பிக்கு தொலைபேசியில் அழைத்து, “ஜெயஸ்ரீயின் அறையை அழகு படுத்த வேண்டுமோ? என்ன சம்ப்ரதாயமோ செய்யச் சொல்லு தனத்தை!” என்றார்.

ராஜவேல் தனதிடம் சொல்ல... சிபியும் ஜெயஸ்ரீயும் ஹாலில் அமர்ந்து இருந்ததால் மளமள வென்று அவர் அறையை அலங்க ஆரம்பித்து விட்டார்.

ஆனால் மணமக்கள் இருவரும் வரவேற்பின் போது அணிந்திருந்த உடையிலேயே இருந்தனர். சிபி டீவீ பார்ப்பதில் மனதைத் திருப்ப முயற்சித்துக் கொண்டிருந்தான். திருமணம் நடந்து விட்டது என்றும் மனதில் பதிய வைத்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் அவனின் கவனம் டீவீயில் இல்லை. சுத்தமாக என்ன பாட்டு அப்போது ஓடிக் கொண்டிருக்கிறது என்று கவனத்தில் பதியவேயில்லை.

அது ஒரு படப் பாடல்கள்.

பூங்காற்று புதிதானது என்று மூன்றாம் பிறை பாட்டு முடிந்து,

அதன் பிறகு கண்ணே கலைமானே ஓடி...

பின்பு பொன்மேனி உருகுதே என்னாசை பெருகுதே ஏதேதோ நினைவு தோணுதே என்று ஓட...

அவன் சோபாவில் அமர்ந்திருக்க, ஜெயஸ்ரீ ஒரு சேரில் அமர்ந்திருந்தவள், “ஐயோ! என்ன பாட்டு இது!” என்பது போல பார்க்க... சிபியின் கவனம் சுத்தமாய் பாட்டில் இல்லை...

“ஐயோ! எந்தக் கிழவி எந்த ரூமில் இருந்து பாட்டைக் கேட்கிறதோ? என்ன நினைப்பார்கள்?” என்று பதட்டமானால் ஜெயஸ்ரீ.

“இவர் ஏன் பாட்டை மாற்றாமல் இருக்கிறார்” என்று சிபியைப் பார்க்க அவன் டீ வீ யை வெறித்து பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அவன் கவனம் சற்றும் டீ வியில் இல்லை... பார்வை மட்டும் தான் அங்கே!

ஆனால் ஜெயஸ்ரீக்கு என்ன தெரியும்... இதென்ன சற்றும் நாகரீகமில்லாமல் இப்படி ஒரு பாட்டை நடுக் கூடத்தில் அமர்ந்து வெறித்து கொண்டிருக்கிறார் என்று அசூசையாக உணர்ந்தவள் முகத்தை சுளித்தாள்.

சிபிக்குச் சுற்றுப் புறம் தெரியவேயில்லை.

யாரும் இன்னும் பார்க்கும் முன்னர் மாற்ற வேண்டும் என்று நினைத்த ஜெயஸ்ரீ, ரிமோட் எங்கே என்பது போல பார்க்கக அது அவன் கையில்..

பதட்டமானதால் வார்த்தை வரவில்லை... அவளாக சற்று தடுமாறி எழுந்து வந்து கூப்பிட முடியாமல் சிபியின் கையில் இருந்து ரிமோட்டை பறிக்கவும் தான் சிபிக்கு சுயநினைவே வந்தது.

அப்போதும் அவன் பாட்டைக் கவனிக்கவில்லை, ஜெயஸ்ரீ அவன் கையில் இருந்து ரிமோட்டை பறித்த செய்கை தான் தெரிந்தது.

“என்ன இது?” என்பது போல சிபி பார்க்க... ஜெயஸ்ரீ ரிமோட்டில் சேனலை மாற்றினாள்.

சிபிக்கு அவள் ரிமோட்டை பறித்து விட்டு கனகாரியமாக சேனலை மாற்றிக் கொண்டிருக்கவும், சட்டென்று ஒரு கோபம் மூண்டது, என்ன மரியாதையில்லாத தனம் என்பது போல... அவனுக்கு ஒரு மாதிரியான பாட்டு ஓடிக்கொண்டிருக்கும், அதற்காக அவள் செய்திருப்பாள் என்பது போல கொஞ்சமும் தோன்றவில்லை.

“என்ன செய்கை இது?”. என்பதாக அவளை முறைத்துப் பார்க்க... என்ன இந்த மாதிரி ஒரு பாட்டை மாற்றியதற்கு இவர் என்னை முறைத்துப் பார்க்கிறார் என்று ஜெயஸ்ரீக்கு கோபம் மூள, அவள் திரும்ப சிபியை முறைத்துப் பார்த்தாள். அது ஒரு சகஜ மனப்பான்மையின் விளைவை கொண்டு வரும் செய்கை தான் அந்தப் பார்வை. உரிமையான முறைப்புப் பார்வை.

சிரிக்கும் படியான ஒரு சின்ன விஷயம். ஆனால் வார்த்தைகளாக எண்ணங்கள் சொல்லப் படாததால்... சிபியைப் பற்றி ஜெயஸ்ரீ நல்ல விதமாக நினைக்காமல் இருக்க... அதே தான் சிபிக்கும், ஜெயஸ்ரீயைப் பற்றி...

“என்ன திமிர் இவளுக்கு? இவ வீடுன்னு காட்டுறாப் போல, எப்போப் பார்த்தாலும் முறைக்கிறா, ஒரு ரெண்டு வார்த்தைப் பேசிப் பழகலை அதுக்குள்ள இந்த முறைப்பு...”

“புருஷன்ற மரியாதையே இல்லை, இதுக்கு இன்னைக்கு தான் கல்யாணம் ஆகியிருக்கு... இவளைக் கொஞ்சம் அடக்கியே வைக்கணும், இல்லை பொண்டாட்டியை அடக்க தெரியாதவன்னு அப்புறம் பேச்சாகிடும்” என்பது போல தோன்ற...

சிபியின் பார்வை இன்னும் கடினமுற்றது.

அவனின் பார்வையின் அர்த்தத்தை ஜெயஸ்ரீ படிக்க முற்பட்டாலும் அவளுக்கு புரியவில்லை. சிபியின் கடினமான பார்வை ஜெயஸ்ரீயை உள்ளுக்குள் ஒடுங்க செய்தது..

அவளுக்கு திரும்ப எப்படி நடந்து கொள்வது என்று கூட

தெரியவில்லை. பதட்டமாக திரும்ப சிபியிடம் ரிமோட்டை கொடுப்பது போல கையை நீட்ட...

சிபி வாங்கவேயில்லை... "என்ன நீயா குடுக்கற? நீயா பிடுங்கற? திரும்ப நீயா குடுக்கற...? பேச முடியாததால சிம்பாலிக்கா நீ சொல்றபடி நான் ஆடணும் நடத்திக் காட்டுறியா" என்று கடினமான வார்த்தைகளைப் பேச...

"நான் என்ன செய்தேன்? இவர் என்ன பேசுகிறார்?" என்பது போல ஜெயஸ்ரீக்கு கண்கள் கலங்கியது...

"ஒஹ்! அடுத்தது அழுகையா? இந்த அழுது என்கிட்டே காரியத்தை சாதிச்சிக்க முயற்சி பண்ணாத... எனக்கு அது பிடிக்கவே பிடிக்காது... மணிமேகலை அழுது ஏதாவது கேட்டாலே நான் வாங்கிக் கொடுக்க மாட்டேன்... இப்படிச் செய்யாத!" என்று இப்போது சிபி முறைக்க...

கலங்கிய கண்கள் மளமள வென்று கண்ணீரை சொரிந்தது... "காலையிலிருந்து தான் இவரை நேரில் பார்க்கிறேன். நான் என்ன இவரிடம் அழுது காரியம் சாதித்தேன்..." திரும்ப நடக்க ஆரம்பித்தாள்... மனம் தாளவேயில்லை...

"என்ன திமிர்? நான் இங்க பேசிட்டே இருக்கேன்! பதில் பேசாம போறா!" என்று இன்னும் சிபியின் கோபம் அதிகமாகியது.

வேகமாக எழுந்து அவள் முன் நின்றான். "உனக்கு மரியாதையே தெரியாதா? பேசிட்டே இருக்கேன் நீ பாட்டுக்கு போற... என்ன வளர்த்து வெச்சிருக்கார் உங்க அப்பா?"

அப்பாவை பற்றி பேசியதும் மனதில் சட்டென்று ஒரு கோபம் மூள, "இன்றைக்குத் தான் என்னை பார்த்திருக்கிறார், அதுவும் திருமணம் ஆன நாள் என்னை இந்த மிரட்டு மிரட்டும் இவரை இவரின் பெற்றோர் நன்றாக வளர்த்திருக்கிறார்கள்! என்னை என் அப்பா நன்றாக வளர்க்கவில்லையா?" என்ற கேள்வி மனதில் வந்த போதும், அதை வார்த்தையாக அவளால் சொல்ல முடியாது இல்லை.

சிபி அவளைப் பார்த்து பேச, ஜெயஸ்ரீ அவனைப் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தாள்.

“முதல்ல என்ன பழக்கம் இது? நான் உன்னைப் பார்த்தா வேணும்னே என்னை பார்க்காம வேற எங்கயோ பார்க்கற, காலையில இருந்து இப்படி தான் செய்யற?” என்று கோபமாக பேச...

“எனக்கு எந்த பழக்க வழக்கமும் தெரியாது!” என்று கத்த வேண்டும் போல ஆவேசம் எழ.. கண்கள் கண்ணீர் சுமந்திருந்தாலும் அந்த ஆவேசம் கண்களில் பிரதிபலிக்க சிபியை பார்த்தாள்.

அந்த கண்களின் ஆவேசத்தைப் பார்த்தவன்... “என்ன இப்படி பார்க்குற... என்ன சொல்ல வர்ற” என்று அதட்டலாக எப்போதும் போல அவனின் இயல்பைக் கொண்டு பேசினான்.

சிபிக்கு பெண்களின் சாதாரண உணர்வுகளே தெரியாது... இதில் ஜெயஸ்ரீயின் மெல்லிய நுண்ணிய உணர்வு எங்கே புரியும்.

ஜெயஸ்ரீக்கும் இன்னும் தெரியவில்லை, சிபி அவளிடம் மட்டும் அப்படி நடந்து கொள்ளவில்லை, அவனின் இயல்பே அதுதான் என்று...

முதலில் யார் யாரை புரிந்து கொள்வர் என்பது காலம் தான் முடிவு செய்ய வேண்டும்.

திருமண நாள் அன்று தான், இப்படி ஒரு பெண்ணை மிரட்டக் கூடாது என்ற அறிவு, அந்த அறிவுகெட்ட சிபிக்கு இல்லவேயில்லை.

“என்ன இப்படிப் பார்த்தா நான் பயந்துடுவனா?” என்று பேசினான்...

“ஐயோ இவர் என்ன இப்படிச் சண்டைக்கு நிற்கிறார், நீங்க பயந்தா பயப்படுங்க, பயப்படாட்டி போங்க” என்று அலட்சிய எண்ணம் தோன்றிய போதும், ஜெயஸ்ரீ கொஞ்சம் தெளிந்தவளாக, அதைக் கண்களில் காட்டாமல் கவனமாக தவிர்த்து, கண்களில் எதையும் காட்டாமல் வெற்றுப் பார்வை பார்த்தாள்.

அதற்கு மேல் சிபிக்கும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. அப்படியும், “இப்படி எல்லாம் செய்யக் கூடாது” என்று கை நீட்டிப் பேசினான். ஜெயஸ்ரீக்கு மீண்டும் கவலையானது... “இவர் இவ்வளவு சத்தமாக பேசுகிறாரே யாரவது கேட்டால் என்ன நினைப்பர்”

அடுத்தவர் முன் காட்சிப் பொருளாவது என்றுமே ஜெயஸ்ரீக்கு பிடிக்காது... இவர் பேச்சை எப்படி நிறுத்துவது என்று ஜெயஸ்ரீக்கு புரியவேயில்லை.

“என்ன இது?” என்பது போன்ற ஒரு பார்வையைச் சிபி பார்க்க... ஜெயஸ்ரீயும் அதையே பார்வையில் காட்டினாள்.

“ப்ச்” என்று உச்சுக் கொட்டியவன், சென்று மறுபடியும் சோபாவில் அமர்ந்து கொள்ள, ஜெயஸ்ரீ அவளின் ரூமிற்கு சென்றாள். அங்கே தனம் அலங்காரத்தை முடித்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஐயோ! இது வேறா?” என்றிருந்தது... அந்த மாதிரிப் பாட்டையே வெறித்துப் பார்த்தானே என்று பயம் கொடுத்தது. ஜெயஸ்ரீக்கு என்ன தெரியும், சிபி இன்னும் அவளைத் தன் மனைவியாகக் காதல் கொண்டு பார்க்கவே நாட்களாகும் என்று.

உண்மையில் சிபி பெண்களைப் பார்க்கும் பார்வையில் மிகவும் கண்ணியமானவன்... இந்தப் பெண் அழகாக இருக்கிறாள், இவள் அழகில்லை என்பது போலக் கூட யாரையும் பார்க்க மாட்டான்.. இந்தப் பெண் குண்டு, ஒல்லி, உயரம், உயரம் குறைவு, நிறம், நிறமில்லை, இப்படி எந்த யோசனையும் அவனுள் ஓடாது...

ஆனால் அது மற்றவர்களுக்கு என்றால் பரவாயில்லை. மனைவியை இந்தக் கண் கொண்டு பார்க்க கூடாதே... கணவனின் பார்வையில் தென்படும் ரசிப்புதன்மைகள் தானே மனைவியை இன்னும் அழகாக காட்டும், அவளை இன்னும் அழகுபடுத்திக் கொள்ள தூண்டும்.

அந்த பார்வை கொடுக்கும் பரவசம் தானே உண்மையான பெண்களின் ஆபரணம். தங்கமும் வைரமும் கொடுக்காத ஜ்வளிப்பை அது பெண்களின் முகத்திற்கு கொடுக்கும்.

சொல்லப் போனால் திருமண வரவேற்பின் பொருட்டு அழகு நிலைய பெண்கள் வந்து அலங்கரித்ததில் ஜெயஸ்ரீ மிகவும் அழகாக இருந்தாள். மிகவும் எளிமையான அலங்காரம் தான், அதிலேயே கண்ணைக் கவர்ந்தாள்.

ஆனால் சிபியின் கண்களை எட்டவேயில்லை இன்னும் அது என்பது தான் உண்மை. சிபி ஜெயஸ்ரீயின் உடலின் குறைகள் மற்றும் மரியாதைத் தன்மை குறித்து தான் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

“ஐய்யகோ!” என்று சொல்ல வேண்டிய நிலை தான் இது... பின்பு பொதுவாக எந்த ஆண்மகனும் பெண்களை பார்த்த உடனே முதலில் பார்ப்பது அவர்களின் சௌந்தர்யம் தான். சில ஆண்கள் மட்டுமே விதி விலக்கு, அதில் சிபி ஒருவனானதுதான் இங்கே கஷ்டமாகிப் போனது.

சிபி ஹாலில் அமர்ந்திருக்க... ஜெயஸ்ரீ வேறு ஒரு கூடத்தில் அமர்ந்திருக்க... வஜ்ரவேல் வந்தவர், “என்னடா இது?” என்பது போல தான் பார்த்தார்.

மாப்பிள்ளையிடம்.. “உங்களைத் தனியா விட்டு எங்க போனா?” என்று கேட்டுக் கொண்டே ஜெயஸ்ரீயிடம் விரைந்தவர்... “மாப்பிள்ளையைத் தனியா விட்டுட்டு நீ என்ன பண்ற கண்ணு” என்று கடிந்தவர்... “அவரோட சகஜமா பேசிப் பழகு” என்றும் கூடவே சொல்ல...

காலையில் இருந்து தந்தை அலைந்து திரிந்ததில் ஓய்ந்து தெரிவதைப் பார்த்தவள்... “சரி!” என்பதுப் போல உடனே தலையாட்டி மெதுவாக எழுந்து, சிபி இருக்கும் இடத்திற்கு போய் வேறு ஒரு சேரில் அமர்ந்து கொண்டாள்.

யார் போய் இப்போது சிபியை ஜெயஸ்ரீயின் அறைக்கு போகச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினர். தனம் மெதுவாக வந்து ஜெயஸ்ரீயிடம் “கண்ணு, மாப்பிள்ளைத் தம்பியை உன் ரூம்க்கு கூட்டிட்டு போ கண்ணு!” என்று சொல்ல...

அவரைப் பார்த்து, “நானா? முடியாது!” என்பது போலத் தலையாட்டினாள்.

“பாரு கண்ணு! எப்படி விரைப்பா உட்கார்ந்து இருக்கிறார். எல்லோரும் நீ சொல்லு, நீ சொல்லுன்னு பயந்து அடிச்சிக்கறாங்க தவிர யாரும் சொல்ல மாட்டேங்கறாங்க! அப்பா எப்படிப் போய் சொல்வார் நீயே சொல்லு! இனிமே நீதான் சொல்லணும்!” என்று சொல்ல...

“என்னவென்று சொல்ல?” என்றுத் திணறிப் போனாள் ஜெயஸ்ரீ. அவன்

திட்டினாலும் மிரட்டினாலும் அவனோடு தானே வாழ்க்கை... யாராவதுப் போய் சொல்லி, சிபி அவர்களிடம் முறைத்து முகம் காட்டினால் இன்னும் அசிங்கமாகிப் போகும் என்று நினைத்தவள்...

மெதுவாக அவனிடம் சென்று நின்றாள்... “வாங்க ரெஸ்ட் எடுப்பீங்கலாம்” என்று வார்த்தையைப் போட விழைந்தாலும் வார்த்தை வரவில்லை...

“வாங்க!” என்பதுப் போல தலையசைத்துக் கூப்பிட... சிபி எதுவும் பேசவில்லை உடனே எழுந்து கொண்டான்.

சிபி தனக்காக மெதுவாக நடக்கிறான் என்று புரிந்து, ஜெயஸ்ரீ சற்று வேகமாக நடந்து ரூமை காட்ட விழைய, நடை தடுமாறியது, சற்று கோணல் மாணலாக நடந்தாள்.

“எதுக்கு இவ்வளவு வேகமா நடக்கற?” என்று சிபி அதட்டினான். அதைக் கேட்டப் பிறகு நின்றுவிட்டாள். என்னவோ பதட்டம், என்ன செய்தாலும் திட்டுகிறானே என்பது போல... அவன் கூட நடக்கிறான் என்ற பதட்டம் தான் அவளின் வேகமான நடைக்குக் காரணம். அது சிபிக்கு புரியவில்லை.

“என்னடா இவ நின்னுட்டா” என்று சலிப்பாக வந்தது சிபிக்கு. “நீ கொஞ்ச நேரம் பேசாம இருடா” என்று அவனுக்கு அவனே திட்டிக் கொண்டான் சிபி முதல் முறையாக,

பிறகு திரும்ப மெதுவாக நடந்தாள்... அவள் ரூமின் அருகில் வந்ததும் உள்ளே போகுமாறு சைகை செய்ய... “என்ன?” என்று புரியாமல் பார்த்தான்.

“தூங்க!” என்பதுப் போல கண்கள் மூடி கையில் தலை சாய்த்துக் காட்ட... ரசிகனாயிருக்கும் எவனும் அந்த செய்கையில் மயங்கித் தான் போவான். கவிதையாய் அந்தக் காட்சியிருந்தது.

ஆனால் சிபியோ அவள் தூங்கச் சொல்கிறாள் என்று புரிந்தாலும்... “எல்லார் கிட்டயும் பேசற? ஏன் என்கிட்டே பேசமாடேங்கற?” என்றான் தீவிரமான குரலில்.

எங்கே பேசுவது சிபியிடம் அவனைப் பார்த்தால் ஏற்படும் பதட்டத்தில் ஜெயஸ்ரீக்கு வார்த்தை வரவில்லை என்பது தான் உண்மை. அதை சொல்லவும் முடியாது. சொல்ல நினைத்தாலும் வார்த்தையும் வராது.

சிபி அவளின் பதிலுக்காக காத்திருந்தான். ஜெயஸ்ரீக்கு நிஜமாக அவனுடைய கேள்வி கணைகளில் இருந்து எப்படி தப்பிப்பது என்று தெரியவில்லை.

பாவமாகத் தான் அவனை பார்த்தாள்... என்ன நினைத்தானோ பதில் பேசாமல் உள் சென்றான்.

சென்றவன் அந்த அறையின் அலங்காரத்தைப் பார்த்ததும் அவனுக்கும் ஜெயஸ்ரீயைப் போல இது வேறா என்று தான் தோன்றியது. அவனும் வரவேற்பிற்காக அணிந்திருந்த பட்டு வேஷ்டி சட்டையில் தான் இருந்தான்.

கசகசவென்று தான் இருந்தது... அமைதியாகச் சென்று அமர்ந்து கொண்டான். மெத்தை அவனை உள் வாங்கியது. என்னடா இது பஞ்சு மாதிரி இருக்கு என்று தான் தோன்றியது. அவனுக்கு ஒரு ஜமக்காலத்தை விரித்து கட்டாந்தரையில் உறங்கி தான் வழக்கம். மிகவும் எளிமையானவன்... உழைப்பாளி என்றாலும், அந்த நொடி அந்த நிமிடம் வரை பணத்திற்கு முக்கியம் கொடுக்காதவன்.

விளைச்சல் மட்டுமே அவன் குறிக்கோள், அது எப்படி விளைகிறது என்று பார்க்க அவனிடம் இருக்கும் ஆர்வம், அதைக் காசாக்குவதில் இருக்காது. இவன் வயல் வரப்பை பார்க்க, தந்தை தான் அதன் விற்பனை எல்லாம் பார்ப்பார்.

லாபமா நஷ்டமா என்று பார்ப்பான். ஆனால் எவ்வளவு லாபம் என்று கணக்கில் கொண்டு வரமாட்டான். ஆயிரம் ரெண்டாயிரம் என்றாலும் அப்பாவிடம் தான் இதுவரை பணம் வாங்குவான்.

வாழ்க்கையின் வசதி வாய்ப்புகளுக்கு பழகியிராதவன் என்பதை விட முக்கியத்துவம் கொடுக்காதவன். அந்த மெத்தையில் அமர்ந்திருப்பது ஏதோ அசௌகரியமாக இருக்க... எழுந்து அங்கிருந்த ஒரு சேரில் அமர்ந்து கொண்டு ஜெயஸ்ரீ வருவதற்காக பார்த்திருந்தான்.

## அத்தியாயம் பதினொன்று :

உடல் மனம் எல்லாம் சோர்ந்து இருந்த போதும், “தூங்காவிட்டாலும் பரவாயில்லை, படுத்தாவது இருடா!” என்று உடல் கெஞ்சிய போதும் பிடிவாதமாக ஜெயஸ்ரீயைப் பற்றி தெரிந்து கொள்ள அமர்ந்திருந்தான்.

திருமணம் நன்றாக அன்று நடந்த போதும், அதற்கு முன்பு மணப்பெண்ணின் குறையை முன்னிட்டு அவளைப் பற்றி அதிகம் வீட்டில் யாரும் பேசிக்கொண்டதில்லை. அதனால் அவளின் விவரங்கள் தெரியவில்லை.

இன்னும் தெரியாமல் இருந்தால் நன்றாக இருக்காது. ஜெயஸ்ரீயைப் பற்றி தெரிந்து கொண்டு தான் தூங்கவேண்டும் என்ற அறிவோடு... ஜெயஸ்ரீக்காக காத்திருந்தான்.

ஜெயஸ்ரீயும் ஒரு பத்து நிமிடத்தில் வந்துவிட்டாள். ஒரு கையில் பாலோடு மறு கையில் ஸ்டிக்கோடு... பார்த்தவன் எழுந்து சென்று அவள் கையில் இருந்த சொம்பை வாங்கினான்.

கொடுத்தவள், பின்பு என்ன செய்வது? ஏது செய்வது? என்று தடுமாறி நின்றாள்.

“உட்காரு!” என்று ஜெயஸ்ரீக்கு கட்டிலைக் காட்டி அவன் சேரில் அமர்ந்தான்.

அவன் சொம்பை வாங்கி, அவளை அமரச் சொன்ன விதம், அவன் முகத்தில் இருந்த பாவனை, ஏதோ இன்டர்வ்யூவிற்கு வந்தவர்களிடம் பைலை வாங்கி உட்கார சொல்லி கேள்வி கேட்க ஆயத்தமாவது போல தான் தோன்றியது.

“இவர் காலில் விழுந்து வணங்க சொன்னார்களே! எப்படி சொல்ல?” என்று தயங்கித் தயங்கி ஜெயஸ்ரீ, சிபியின் முகம் பார்த்தாள்...

அவள் ஏதோ சொல்ல வருகிறாள் என்பது போல ஒரு மெல்லிய புரிதல் சிபியினுள் தோன்ற... “ஏதாவது சொல்லணுமா?” என்றான்.

அவளின் கையில் இருந்த ஸ்டிக்கை ஓரமாக வைத்தவள், அவன்

கால்களை தொட்டு கும்பிட விரும்புவது போல சைகை செய்ய...

“நீ நாட்டியம் கத்துகிட்டு இருக்கியா? குருவணக்கம் சொல்ற!” என்றான்.

தன்னை கிண்டல் செய்கிறானா என்பது போல சட்டென்று மனம் கலங்க ஜெயஸ்ரீ அவனைப் பார்க்க... அந்த கண்களில் தெரிந்த கலக்கத்தில் அப்போதுதான் தான் சொன்னது அவளின் காலின் குறையை சுட்டிக் காட்டிக் கிண்டலாக தெரியும் புரிந்தவன்...

“நான், நீ என்கிட்டே பேச்சுல சொல்லாம சைகைல காட்டினியா! பொதுவா நடனக் கலைஞர் தான் அந்த மாதிரி குருவணக்கம் சொல்வாங்க! இல்லையா? அதை சொன்னேன்! என்று நீண்ட விளக்கம் கொடுத்தவன்...

“உன்னோட காலோட குறைய சொல்லலை! திக்கினாலும் பேச வருது இல்லையா? அதுக்கு முயற்சி செய்யாம சைகை காட்டின தானே, அதுக்கு சொன்னேன்” என்றான்.

மொத்தத்தில் சிபி என்ன சொல்ல வருகிறான் என்று ஜெயஸ்ரீக்கு புரிந்த மாதிரியும் இருந்தது புரியாத மாதிரியும் இருந்தது என்பது தான் உண்மை. அவள் என்ன செய்வது என்று தெரியாமல் நின்ற இடத்திலேயே நின்றாள்.

“நிறைய சினிமா பார்ப்பியோ? அதோட எஃபக்டா இது! இந்த கால்ல விழறது!” என்றான் கூடவே.

“இல்லையில்லை!” என்பது போல தலையாட்டியவள், “வெளில சொல்லிவிட்டாங்க!” என்பது போல மீண்டும் சைகை செய்ய...

“அப்போ அவங்க சினிமா பார்த்துக் கெட்டுப் போயிட்டாங்க... இப்போல்லாம் பொண்ணுங்க யாரும் கால்ல விழறது இல்லை, பசங்களை தான் விழ வைக்கிறாங்க!” என்றான்.

அவனின் திருமணம் நின்றது தெரியும்... அதைக் குறித்த மிகப் பெரிய சஞ்சலமும் ஜெயஸ்ரீக்கு உண்டு. அதைக் குறித்து தான் இந்த வார்த்தைகளோ என்று ஆராயத் துவங்கினாள்.

“உட்காரச் சொன்னேன்!” என்று சிபி சொல்லவும்…

அவன் நிற்பதால் எப்படி அவள் அமர என்று யோசித்தாள்…

“காலையில இருந்து அலைஞ்து! கால் வலிக்குது!” என்றான்.

“நீங்க உட்காருங்க!” என்பது போல ஜெயஸ்ரீ காட்ட..

“ப்ச்! உனக்கு கால்ல பிரச்சனை! உன்னை நிக்க வெச்சிக்கிட்டு நான் உட்கார்ந்து பேசறதா” என்று சிபி கேட்க…

இவன் நல்லவனா? கெட்டவனா? என்று தான் ஜெயஸ்ரீக்கு தோன்றியது. கூடவே மனதில் உள்ளதை அப்படியே பேசுகிறான் என்றும் தோன்றியது.

“ஒன்று இது லூசுதனத்தின் அடையாளமாக இருக்க வேண்டும், இல்லை நான் என்ன வேணா பேசுவேன் என்னை எவனும் எதுவும் செய்ய முடியாது. எவன் என்ன நினைச்சா எனக்கென்ன!” என்பது போன்ற தெனாவெட்டாக இருக்க வேண்டும்.

கூடவே அவனைப் பார்த்தவள், “கண்டிப்பாக லூசு கிடையாது! தெனாவெட்டு தான்!” என்று புரிந்தது.

என்னவோ ஒரு பயம் மனதில் இதுவரை இருந்தது இப்போது குறைந்தது. அவனைப் பார்க்கவும், “உட்காரு” என்றான்.

“ஐயோ! இவர் பெரிய ஸ்ட்ரிக்ட் ஆபிசர் போலவே!” என்று தான் தோன்றியது.

உண்மையில் ஜெயஸ்ரீ இப்படி மனதினில் சற்று உற்சாகமாக வார்த்தையாடிச் சில வருடங்களே இருக்கும். அவள் அமர்ந்து கொள்ள…

“உன் பேர் என்ன?”. என்றான்.

மனதின் உற்சாகம் குறைந்தது, “என் பேர் கூட தெரியாமையா என்னை கல்யாணம் பன்ன்னிகிட்டார்” என்பது போல.

பேர் தெரிந்தாலும் எல்லாம் அவள் வாய்மொழியாக தெரிந்து கொள்ள

சிபி கேள்விக் கணைகளோடுத் தயாராக இருக்க...

“எனக்குப் பேசவரலைன்னு திரும்ப கிண்டல் பண்றாரா!” என்பது போல பார்த்தாள்.

“ம்ம்! சொல்லு” என்றான்.

அவள், “முடியாது!” என்ற பாவனையோடு முகம் பார்க்க... “உன் சித்தி கிட்ட பேசின பார்த்தேன். என்கிட்டயும் பேசு” என்று சொன்னான். ஜெயஸ்ரீ முடியாது என்று காட்டிய பாவனையை விட அதிகம் காட்டினான்.

“திக்கினாலும் பரவாயில்லை பேசு...” என்றான் வற்புறுத்தலாக.

அவனின் வற்புறுத்தலில் சற்று பதட்டமானால் ஜெயஸ்ரீ... அவள் பதட்டமாக இருந்தால் வார்த்தை வராது...

முகமும் பதட்டத்தை காட்டியது... “இவர் என் குறையை பெரிதாக நினைக்கிறாரா!” என்று தான் பதட்டமானாள் ஜெயஸ்ரீ...

ஜெயஸ்ரீயிடம் என்ன, என்ன குறைகளோ? என்ற கவலை சிபிக்கு உண்டு... எப்படி தன்னுடைய தினப்படி வாழ்க்கை சிரமமில்லாமல் போகும் என்ற யோசனை உண்டு... எப்படி அதைச் சமாளிப்பது என்று தான் குறைகளைப் பற்றி உடனே தெரிந்து கொள்ள விரும்பினான். அவளைப் பேச வற்புறுத்தினான்.

மற்றபடி அதை குறையாக நினைத்து அல்ல... ஜெயஸ்ரீக்கு அது தெரியாதே.

அவள் முயற்சிக்கவே இல்லை... “வராது!” என்பது மாதிரி அப்படியே அமர்ந்து இருந்தாள்.

“ப்ச்! உனக்கு ரொம்ப பிடிவாதம்” என்று நேரடியாக குறைபட்டான் சிபி. என்னவோ அவனிடம் பிடிவாதமே இல்லாததது போல... சொல்லப் போனால் பிடிவாதத்தின் மொத்த உருவம் சிபி...

ஜெயஸ்ரீ பதில் பேசமால் அமர்ந்திருக்க... “சரி விடு! உன் காலைக் காட்டு! கால்ல என்ன பிரச்சனை?” என்றான்.

கொஞ்ச நஞ்சம் நன்றாக இருந்த ஜெயஸ்ரீயின் மனநிலை முற்றிலும் மாறியது. என்ன இது என்பது போல ஆகிவிட்டது அவளுக்கு. தன்னுடைய குறைகள் மட்டும் தான் இவர் பார்வைக்கு தெரிகிறதா... வேறு ஒன்றுமே இல்லையா என்னிடம் என்று நினைத்து சோர்ந்து போனாள்.

“காட்டு!” என்றான் மீண்டும் ஒரு வற்புறுத்தும் த்வனியில்... ஜெயஸ்ரீ அவனைப் பார்க்கவும், “உன்னால இந்த ஷூ போடாம நடக்க முடியாதா?” என்றான்.

அவளுடைய ஷூ வின் இரும்புக் கம்பிகள் முட்டிக்கு கீழ் வரை தான் இருக்கும்... ஆனால் அது கட்டும் ஸ்ட்ராப்கள் தொடை வரை இருக்கும்.

அவளுக்கு காலை காட்டுவதில் ஒன்றுமில்லை! ஆனால் சிபி அவளையே பார்த்திருக்க, எப்படித் தொடை வரை தூக்கி அதை விடுவிப்பது... கூச்சமாக இருந்தது.

“அதைக் கூட காட்ட மாட்டியா?” என்று ஒரு மாதிரி தொனியில் சிபி கேட்கவும்... அப்படியே கால்களைத் தூக்கி படுக்கை மேல் வைத்து கொஞ்சமாக கெண்டைக் கால் வரை சேலையை தூக்கி காட்ட...

அங்கே ஏதாவது தெரிந்தால் தானே... அவள் சாக்ஸ் போட்டு அதன் மேல் ஷூ போட்டிருக்க... சிபி அவளை முறைத்து ஒரு பார்வை பார்த்தான்...

“இதுல என்ன தெரியுது?” என்று கடுப்பாக கேட்கவும்...

“திரும்புங்க!” என்று ஜெயஸ்ரீ சைகையில் சொல்ல... சிபிக்குப் புரியவில்லை...

“ப்ச்! நீ என்ன சொல்ல வர்ற?” என்றான் சலிப்பாக...

எந்த விஷயத்தையும் உடனே செய்ய வேண்டும் சிபிக்கு, ஆறப் போடுவதோ... பொறுமையோ சற்றும் கிடையாது.

“என்னுடன் இந்த ஒரு மணிநேரமாக தான் தனித்து இருக்கிறார், அதற்குள் என் மொழி புரியாமல் சலிப்பு என்றால்... வாழ்க்கை

முழுவதும்” என்ற பெரிய கேள்விக்குறி ஜெயஸ்ரீக்குள் தோன்ற... மனம் இன்னும் சோர்ந்து போனது...

“என்ன செய்வது? எப்படிச் சிபியிடம் நடந்து கொள்வது!” ஜெயஸ்ரீ தடுமாறிப் போனாள்.

அவனின் சலிப்பான வார்த்தைகளை கேட்டு அவளின் முகத்தில் தோன்றிய பாவனையில், சிபியாக, “நமக்குக் கல்யாணம் ஆகிடுச்சு! இன்னும் உன்னைப் பத்தி எனக்கு தெரியாம இருந்தா எப்படி... ஏற்கனவே என் கல்யாணம் கடைசி நிமிஷத்துல நின்னு போனதால கல்யாணம் முடியறவரை எதுவும் தெரிஞ்சிக்க மனசு வரலை... இப்போ தான் கல்யாணம் முடிஞ்சிடுச்சு இல்லையா...”

“இனிமே உன்னைப் பத்தி எனக்கு தெரியணும் தானே... உன் பேர் மட்டும் தான் தெரியும்! உண்மையா வேற எதுவும் தெரியாது! நீ டிப்ளமோ கம்ப்யுட்டர் டெக்னோலாஜி செஞ்சிருக்கிறதே, இன்னைக்கு மணமக்கள் பேருக்கு பின்னாடி போட்டதுக்கு அப்புறம் தான் தெரியும்!” என்றான்.

சிபி மிகவும் சீரியசாக பேசிக் கொண்டிருந்தான்.

ஜெயஸ்ரீ மெதுவாக சேலையை தூக்கி அந்த பெல்ட்களை கழற்றினாள். அதைத்தான் சிபியும் பார்த்தான்... ஆனால் அதன் வனப்பை அல்ல... அவள் பெல்ட்டை கழட்டிய இடங்கள் அந்த பெல்ட் போடப்படுவதால் சிவந்து இருந்தன.

மற்றபடி அந்த இடங்கள் நன்றாக இருந்தது. முட்டி வரையும் நன்றாக இருந்தது. ஜெயஸ்ரீ அந்த பெல்ட் கழற்றி விட்டதும் சிபியாகவே அந்த ஷூவை அவளின் கால்களில் இருந்து நீக்கினான்.

பின்னர் கால்களை மடக்கி ஜெயஸ்ரீ சாக்ஸ் கழற்ற ஆரம்பித்ததும் பார்த்தவனுக்கு... அதிர்ச்சிதான்.

ஆங்காங்கே தோல்கள், வெளுத்தும், கறுத்தும், இழுத்தும், முதன் முறை பார்ப்பவர்களுக்கு உடல் சிலிர்க்க வைக்கும்...

கால்கள் தீயினால் பாதிக்கப்பட்டு இருந்தது உடனே புரிந்தது. மிகவும்

அதிகப்படியான பாதிப்பு. தசைகள் அந்த இடத்தில் அதிகம் இல்லை. ஆங்காங்கே அறுவை சிகிச்சை மூலமாக தோல்களை ஒட்ட வைத்து இருந்தனர். இருந்தாலும் கால்கள் பார்பதற்கு அகோரமாக தான் இருந்தது.

சிபி அவளின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அழகு முகம்... நிச்சயம் அழகி தான். ஆனால் கால்கள் தீயினால் தோல் தசை எல்லாம் பாதிக்கப்பட்டு அதன் வழுவிழந்து இருந்தது. அதன் பொருட்டே இந்த பூட்ஸ் காலில் என்று புரிந்தது.

இது பிறவிக் குறைபாடு அல்ல...

“எப்படி ஆச்சு...?” என்று மறுபடியும் கேள்விகளைத் தொடுத்தான். ஆனால் முன்பிருந்த வற்புறுத்தல் இப்போது சிபியின் குரலில் இல்லை.

அந்த குரலில் ஒரு தயக்கம் அமர்ந்து இருந்தது. அந்த தயக்கத்திற்கு காரணம் இந்த தீயின் பாதிப்பை பார்த்ததும் அவனுக்கு தீ வைத்து இறந்து போன பத்மினியின் பெற்றோர்கள் ஞாபகத்திற்கு வர... அவன் தவறு அதில் இல்லை என்று திடமாக நம்பினாலும்... மனதில் ஏதோ பிசைய, “எப்படி ஆச்சு?” என்ற கேள்வியோடு நின்றான்.

அவனின் முகம் கவலையைக் காட்டியது. அதன் காரணம் என்ன என்று ஜெயஸ்ரீக்கு புரியாவிட்டாலும், அந்த பாவனை அவன் கவலைப் படுகிறான் தனக்காக என்பது போல ஜெயஸ்ரீக்கு ஒரு தோற்றத்தைக் கொடுத்தது.

சற்று சமன்பட்டாள், அவள் பேச முயற்சி எடுக்கும் முன்... “இந்த அளவுக்கு பாதிப்பு வர்றவரைக்கும் எப்படி அஜாக்கிரதையா இருந்த?” என்றான் உடனேயே.

“எனக்கே இங்க பேச்சு வரலை! இதுல என்னை பேசவே விடலைன்னா நான் என்ன செய்வேன்?” என்பது மாதிரி தளர்ந்து போனாள் ஜெயஸ்ரீ.

அது முகத்திலும் தெரிய, “களைப்பா இருக்குதா? சரி படுத்துக்கோ!” என்றான் சிபி. கனிவாக சொல்லப்படவேண்டிய வார்த்தைகள் தான், ஆனால் அதுவும் அதட்டலாக தான் வந்தது.

ஜெயஸ்ரீ அவனைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள், அவனை படிக்கவும் முற்பட்டாள். சிபி பேசும் முறையே இப்படித் தான் போல என்று தோன்ற ஆரம்பித்தது.

அது சற்று ஆசுவாசதைக் கொடுக்க... “பால்!” என்றாள்... அவனை அதை சாப்பிடுங்கள் என்பதற்காக...

அதை விட்டு விட்டு, அவன், “ஜாக்கிரதையா இருக்க வேண்டாமா... பாரு உன்னோட அஜாக்ரதையால நடக்க முடியாம எவ்வளவு சிரமம் ஆகிடுச்சு!” என்றான்.

“நடந்தது என்ன? நான் அஜாக்கிராதையாக இருந்தேனா?” என்ற யோசனை ஓடும்போதே ஜெயஸ்ரீயின் முகத்தில் புன்னகை... சிபியைப் பார்த்து புன்னகைத்தாள்.

“என்ன சிரிக்கற? இப்போ சிரிக்கற மாதிரி நான் என்ன சொன்னேன்!” என்றான் சிபி. நன்றாக விரிந்த புன்னகை இப்போது ஜெயஸ்ரீயின் முகத்தில்.

அவளின் சிரிப்பை பார்த்தவன், “நல்லாத் தான் இருக்குறா, இவ சிரிச்சா!” என்று நினைத்தவன், அதை வாய்விட்டும் சொன்னான்... சிபிக்கு தான் நினைத்ததை உடனே சொல்லி விடவேண்டுமே...

“நீ சிரிச்சா நல்லா இருக்குற? அப்புறம் ஏன் முகத்தை தூக்கி வச்சிருக்குற..” என்றான்.

“இப்படி அதட்டி, உருட்டி, மிரட்டிக் கிட்டே இருந்தா சிரிப்பு எப்படி வரும்!” என்று நினைத்தவள் சொல்லவில்லை.

“குடிங்க!” என்பது போல சைகை காட்டினாள்.

“நான் ஒன்னு சொல்லட்டுமா?” என்றான் சீரியசாக சிபி திரும்பவும்!

“ஐயோ! அப்போ இவ்வளவு நேரமா பேசினது என்ன?” என்று தோன்றியது ஜெயஸ்ரீக்கு... ஆனால் கவலையாக அல்ல, சற்று உற்சாகமாக... இப்படி கவுண்டர் கொடுத்து சில வருடங்கள் ஆகியிருந்தது... இப்போது தானாக வந்தது.

“என்ன?” என்பது போல சிபியை பார்க்க...

“இப்படி சைகை பண்ணாத! முடிஞ்ச வரைக்கும் பேச முயற்சி பண்ணு! திக்கினாலும் பரவாயில்லை!” என்றான் மீண்டும் அதட்டலாக. காலையில் இருந்து சிபியை பார்த்துக் கொண்டிருந்ததில்... இப்போது சற்று நேரமாக அவன் நேரடியாக பேசிக் கேட்டுக் கொண்டிருப்பதில்... சிபியின் பேச்சு முறை இது... இது தனக்கானது மட்டுமல்ல என்று பிடிப்பட்டிருக்க...

கட்டிலின் பக்கத்தில் இருந்த மேஜையில் இருந்த குறிப் பேட்டை எடுத்து, “சைகை வேண்டாம்! எழுதிக் காட்டட்டுமா?” என்று எழுதி அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கிப் படித்தவனுக்கு ஆச்சர்யமான ஆச்சர்யம்... ஜெயஸ்ரீயைப் பார்த்தான்.

சற்று முன் அழுத அழுகையென்ன... இப்போது எழுதிக் கொடுப்பது என்ன.. சிபியும் ஜெயஸ்ரீயைப் படிக்க முற்பட்டான்.

அதுதான் ஜெயஸ்ரீ! எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக முகத்தை தூக்கி வைக்கிறாளோ.. அவ்வளவு சீக்கிரம் சரியாகவும் ஆகிவிடுவாள்.

ஜெயஸ்ரீக்கு அதிக பயம், தயக்கம், எல்லாம் இல்லை என்பதாகத் தான் சிபிக்கு தோன்றியது.

அதைத் திரும்ப அவளிடம் நீட்டியவன்... “எனக்கு சைகையும் புரியாது! படிக்கவும் வராது... நீ படிச்சு சொல்லு!” என்றான் வேண்டுமென்றே. இது மட்டும் என்ன வேறு தொனியிலா வரும் இதுவும் அதட்டல் தொனி தான், ஆனால் கண்களில் கிண்டல் இருந்ததோ...

ஜெயஸ்ரீ அவன் கண்களைப் பார்த்தாள். என்னவோ மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரம் குறைந்தது.

“ம்! படி! படி!” என்று அதட்டல் போட்டான் சிபி...

“ம்கூம்! முயடியாது!” என்பது போல ஜெயஸ்ரீ தலையசைக்க...

“அப்போ உன்னை தூங்க விடமாட்டேன்! படிச்சு காட்டினா தான் தூங்க

விடுவேன்!” என்று அவளுக்கு எதிரில் மெத்தையில் சிபி சம்மணமிட்டு அமர்ந்து கொண்டான்.

சில வருடங்களாக மறைந்திருந்த ஜெயஸ்ரீயின் இயல்பு குணம் தலைதூக்க…

“நீ… நீங்க… நல்… நல்லவரா? கெட்டவரா?” என்றாள் திக்கித் திணறி புன்னகையோடு…

“அது தெரியாம தான் ஒருத்தி ஓடிப்போயிட்டா என் கூட கல்யாணம் வேண்டாம்னு!” என்றான் சிபி திரும்பவும் சீரியசாக…

ஜெயஸ்ரீயின் முகத்தின் புன்னகை நொடியில் மறைந்தது. அதை சிபி கவனிக்காமல் பேசிக்கொண்டே இருந்தான்.

“சின்ன வயசுல இருந்து எங்க வீட்டுல தான் வளர்ந்தா… அவளால கண்டுபிடிக்க முடியலை போல நான் நல்லவனா கெட்டவனான்னு அதான் போயிட்டா… அதனால தான் இவ்வளவு பிரச்சனையும், நான் கெட்டவன் ஆகிட்டேன் போல!” என்றான் வருத்தமாக.

அவன் பிரச்சனை என்று சொன்னது பத்மினியின் வீட்டில் நிகழ்ந்த நிகழ்வுகளை… அந்த மூன்று பிள்ளைகளும் பெற்றோரை இழந்து நிற்பதை. அதற்கு அவன் காரணம் என்பது போல மற்றவர்கள் பேசுவதை.

ஜெயஸ்ரீக்கு தன்னை திருமணம் செய்ததை தான் பிரச்சனை கூறுகிறானோ என்று தான் தோன்றியது. அதையும் விட கண்ணன் ராதாவின் திருமணம். நினைக்கும் போதே பயம் வந்தது! மீண்டும் கலக்கமாக சிபியைப் பார்த்தாள்.

சொல்லிவிட வேண்டும்!

எதை?

“சொல்ல வேண்டும் போல நினைத்த சொற்கள் வார்த்தையாக வரவேயில்லை ஜெயஸ்ரீயிற்கு. ஆனால் சொல்லிவிட மனம் துடித்தது தான் உண்மை”.

“மத்தவங்க பார்வையில கொஞ்ச நாளா கெட்டவன் ஆகிட்டேன்! முடிஞ்சா நீ கண்டுபிடியேன்! நான் நல்லவனா? கெட்டவனா? ன்னு” என்றான்.

சொல்லும்போது அவன் குரலில் அவ்வளவு வருத்தம்...

கேட்ட ஜெயஸ்ரீக்கு மீண்டும் குரல் அடைத்துக் கொண்டது.

ஆயிரம் வாசல் இதயம் அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம்
யாரோ வருவார் யாரோ இருப்பார் வருவதும் போவதும் தெரியாது
ஒருவர் மட்டும் குடியிருந்தல் துன்பம் ஏதுமில்லை
ஒன்றிருக்க ஒன்று வந்தால் என்றும் அமைதியில்லை .

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை.

## அத்தியாயம் பன்னிரண்டு :

“கண்டுபிடியேன் நல்லவனா கெட்டவனானு” என்று சொல்லி ஜெயஸ்ரீயை பார்த்தான்.

ஜெயஸ்ரீயின் முகத்தில் அவ்வளவு கலக்கம்... பேச முயன்றும் வார்த்தைகள் வரவில்லை. கூடவே பயம் கூட...

“ரொம்ப களைப்பா தெரியற, தூங்கு!” என்று சிபி அமர்ந்திருந்தவன் கட்டிலை விட்டு இறங்கினான்.

பின்பு பாலை எடுத்து ஜெயஸ்ரீயிடம் நீட்டியவன்... “நீ குடிச்சிட்டு குடு!” என்றான்.

ஜெயஸ்ரீ கொஞ்சம் குடித்து கொடுக்க... அதை ஒரே வாயில் சரித்தவனை விழிவிரித்து பார்த்தாள். அதையெல்லாம் கண்டு கொள்ளாதவன், “தூங்கு!” என்று சொல்லி ஒரு தலையணையை எடுத்து கீழே போட்டு அதில் படுக்க ஆயத்தமாக...

“ஏன்?” என்று சைகையில் கையைக் காட்டினாள்.

“எனக்கு இந்த மெத்தை பழகலை... எங்க வீட்லயும் எல்லோரும் இதை

உபயோகிச்சாலும் எனக்கு இது சௌகரியப்படாது, கொஞ்ச நாள் போகட்டும் பழக முயற்சி பண்றேன்... எனக்கு இப்போ நல்லா தூங்கணும்...” என்று சொல்லி கீழே படுத்துக் கொண்டான்.

“அவன் கீழே படுக்கும் போது தான் எப்படி மெத்தையில் படுப்பது! இவ்வளவு விளக்கம் சொல்கிறான், அதையும் மீறி மெத்தையில் படுங்கள் என்று சொல்வது என்னுடன் வந்து படுங்கள்” என்பது போல அர்த்தமாகி விட்டால் என்ன செய்வது என்று திணறிய ஜெயஸ்ரீ... உட்கார்ந்தபடியே இருக்க...

“நான் எதுவும் தப்பா நினைக்க மாட்டேன் தூங்கு!” என்று சொல்லி சிபி கண்களை மூடிக் கொண்டான்.

பட்டு வேஷ்டி சட்டையில் அப்படியே, மாற்றவில்லை, ஒன்றுமில்லை. தானும் பட்டுப் புடவையில் இருப்பதை உணர்ந்தவள்.. அங்கிருந்தே போகக்கூடிய சிறிய அறைக்கு நைட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே போகக் கதவை திறக்க, அந்த சத்தத்தில் கண்களை திறந்தவன், உடனே எழுந்து அமர்ந்து என்ன என்பது போல பார்க்க...

அவன் எழுந்த வேகத்திற்கு ஏதோ தவறு செய்தவள் போல ஜெயஸ்ரீ நிற்க... அவள் உடை மாற்ற உள்ளே செல்கின்றாள் என்பதை கையில் இருந்த அவளின் உடையைப் பார்த்து புரிந்தவன்...

“எனக்கும் ஏதாவது லுங்கி இருக்கா இங்க! இது பட்டு! கசகசன்னு இருக்கு!” என்று சொல்ல...

அது அவளின் அறை அங்கே அவளின் உடுப்புகள் மட்டுமே... “சரி! அப்பாவினது எடுத்து வரலாம்” என்பது போல நினைத்தவள் ரூமின் கதவை நோக்கி மெதுவாக சுவரைப் பிடித்து நடக்க...

சில அடிகள் அவள் எடுத்து வைக்கவும் தான், ரூமின் கதவை திறக்கப் போகிறாள் என்று உணர்ந்தவன்... “கதவெல்லாம் திறக்காத! வேண்டாம்! என்று சொல்லி... சட்டையை மட்டும் கழற்றி பனியன் வேஷ்டியோடு மீண்டும் படுத்துக் கொண்டான் வெறும் தரையில்.

என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்த ஜெயஸ்ரீ அப்படியே பார்த்து நிற்கவும்... “நீ ஏன் நிக்கற? போ!” என்று சிபி சொல்ல...

அவள் சென்று உடைமாற்றி வந்து பார்க்கும் போது... சிபி உறக்கத்தின் பிடியில் இருந்தான். வேறு இடம் ஆனாலும் சிபி உறங்கி விட்டான்! ஆனால் ஜெயஸ்ரீக்கு தான் உறக்கமில்லை, மெத்தையில் படுத்தவள், சிபியின் புறமாக பார்த்து படுத்து அவன் உறங்குவதையே பார்த்து இருந்தாள்.

“இவர் நல்லவரா? கெட்டவரா?” என்று தான் ஆராய்ந்து கொண்டிருந்தாள். இந்த அவளின் ஆராய்ச்சி இன்னும் பலநாட்கள், ஏன் மாதங்கள், வருடங்கள் கூட தொடரும்.. என்று தெரியாமல்.

இந்த ஒரு நாளைக்குள்ளேயே வித விதமாக பேசுகிறார். சில சமயம் நல்லவிதமாக தோன்றுகிறது, சில சமயம் கடுமையாக இருக்கிறது. என் குறைகள் இவருடைய கண்ணுக்கு பெரிதாக தெரிகிறதா... என் நிறைகள் என்று எதுவுமே இவருக்கு தெரியவில்லை. என்னைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. என் தீக்காயங்கள் அஜாக்கிரதையினால் என்கிறார்.

அப்போது என்னைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. யாரும் இவரிடம் சொல்லவில்லையா? இல்லை இவருக்குத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லையா... நினைத்த போதே கண்ணின் ஓரம் நீர் துளிர்த்து.

இவருடைய வீட்டில் இருந்து யாரும் இன்னும் சரியாக பேசவேயில்லையே... நான் அங்கே சென்று எப்படி இருப்பது.

யோசனைகள் பலவிதமாக தாக்க எப்போது உறங்கினாள் என்று அவளுக்கே தெரியவில்லை.

காலையில், “ஜெயஸ்ரீ” என்ற சிபியின் குரல் கூட அவளின் உறக்கத்தை கலைக்கவில்லை. அவன் மெதுவாக தோளை அசைக்க அதன் பிறகு தான் உறக்கம் கலைந்தது.

“மணி ஏழரை! எழுந்த்திருக்கலையா?” எனவும் அடித்து பிடித்து எழுந்தவள்...

“நீ... நீங்க... எப்... எப்போ...” என்று ஆரம்பித்து, “எழுந்தீங்க” என்று கேட்க முற்பட...

அவள் கேட்க வருவது புரிந்து.. “நாலரை மணிக்கு எப்பவும் என் தூக்கம்

கலைஞ்சிடும்... தினமும் அந்த நேரத்துக்கு வயலுக்கு இல்லை தோட்டத்துக்கு போயிடுவேன்...”

“இப்பவும் உங்க வீட்டைச் சுத்தி நடந்து பார்த்துட்டு வந்தேன். வந்து பார்த்தா நீ தூங்கிட்டு இருந்த, சரி வெளில போய் உட்கார்ந்தா... எல்லாம் வந்து எட்டி எட்டி பார்த்துட்டு போறாங்க! நான் உட்கார்ந்து இருக்குறதை! அதான் எழுப்பினேன்”.

அவசரமாக எழுந்தவள், உடனே தரையில் கால் வைத்து நிற்க முற்பட்டு தடுமாறினாள்.

சிபி பிடித்து நிறுத்தவும்... பின்னர் கட்டிலை பிடித்து நின்றவள், சுவரைப் பிடித்து வேகமாக குளிக்க சென்று, குளித்து வந்து போது சிபி அங்கே இல்லை. விரைவாக உடை மாற்றி... காலில் ஷீ அணிய முற்படும் போது தான் சிபி வந்தான்.

காலில் ஷூ போடுவதற்காக விலக்கியிருந்த சேலையை அவசரமாக அவள் சரி செய்யவும், அதைக் கண்டும் காணாதவன் போல... “எனக்கும் குளிக்கணும்... உங்கப்பா இந்த துணி குடுத்தார்” என்று ஒரு கவருடன் சிபி பேசி குளியலறை நோக்கி சென்றான்.

அதன் பிறகே மீண்டும் ஷூவை மாட்டி ஸ்டிக்கின் உதவியுடன் வேகமாக வெளியே சென்றாள்.

சமையலறை சென்றவள்... அங்கே ஆயாவும், சித்தியும் வேலை செய்து கொண்டிருப்பதை பார்த்து... “எல்... எல்லார்... எல்லார்க்கும் குடிக்க காபி டீ குடுத்திடீங்களா சித்தி” என்று திக்கி திக்கி கேட்கவும்...

“எல்லோரும் குடிச்சிட்டாங்க... ஆனா மாப்பிள்ளை இன்னும் குடிக்கலை கேட்டதுக்கு நீ எழுந்திரிக்கட்டும்னு சொன்னாங்க” என்றார்.

மனதிற்குள் ஒரு மெல்லிய சாரல் தான் ஜெயஸ்ரீயிற்கு... சிபி வார்த்தை பிரயோகங்களை கடுமையாக செய்தாலும்... ஜெயஸ்ரீயிடம் சகஜமாக இருக்கிறான், நேற்று இரவில் இருந்து தான் தனித்து பேசியதே ஆனால் அதிகம் பேசுகிறான் என்று தான் ஜெயஸ்ரீயிற்கு தோன்றியது.

“போ, கண்ணு! என்ன குடிப்பார்னு கேளு...?”

“சரி!” என்பது போல தலையாட்டி வெளியே வந்து, சிபி குளித்து முடித்த பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்து, “தந்தை எங்கே?” என்று தேடினாள்.

அவர் வீட்டின் வெளியே உறவுகளுக்கு காலை உணவு தயாராகிக் கொண்டிருக்க அங்கே மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

மகளைப் பார்த்தவுடன் அவளின் முகம் எப்படி இருக்கிறது என்பது போல தான் ஆராய்ந்தார். எந்த சஞ்சலமும் இல்லாமல், தெளிவாக இருக்கவும் தான் அவருக்கு நிம்மதி ஆகிற்று.

“என்ன கண்ணு? மாப்பிள்ளை என்ன பண்றார்?”

“குளிக்கிறார்!” என்பது போல ஜெயஸ்ரீ சைகை காட்டவும்,

“போ கண்ணு! போ! போ! கூட இரு! புது இடம் இல்லையா அவருக்கு! என்ன அவருக்கு தேவையோ, கவனி!” என்று சொல்ல...

“அப்பா! என்ன இது!” என்பதை வார்த்தையில் சொல்லாமல் முகத்தைச் சுருக்கி செல்லமாக ஒரு பாவனையைக் கொடுக்க...

“போ! போ! போய்ப் பாரு!” என்றார் அவரும் கனிவாக.

“எப்படி எப்படியோ சம்மந்தமாகி திருமணம் நடந்து விட்டது... மகளுக்கும் மருமகனுக்கும் பிடித்து விட வேண்டும், இருவருக்குள்ளும் நல்ல புரிதல் இருக்க வேண்டும்... ஜெயஸ்ரீயின் குறை சிபிக்குப் பெரிதாக தோன்றக் கூடாது, இருவரும் நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும்!” என்பது தான் அவரின் அப்போதைய ஆசை எல்லாம்.

ஜெயஸ்ரீ உள்ளே போகத் திரும்பவும், “அக்கா!” என்ற குரல் கேட்க... திரும்பிப் பார்த்தால் பத்மினியும் ராகினியும் ஜெய்சங்கருடன் நின்று இருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் முகம் மலர்ந்தவள், “நேத்து ஏன் வரலை” என்று சைகையில் கேட்டாள்...

எப்படி சொல்வர் தனம் தான் வேண்டாம் என்று சொன்னார் என்று... உண்மையில் தனம் தான் வேண்டாம் என்று சொல்லியிருந்தார்.

இந்த பிள்ளைகளைப் பார்த்தால் யாராவது அவர்களின் அப்பா அம்மா இறந்ததை பற்றி பேசுவர்... அப்படியே அது ரயில் பெட்டி போல நீண்டு... ஜெயஶ்ரீ சிபியின் திருமணம் நிச்சயம் ஆனா விதத்திற்கு வந்து நின்றுவிட்டால்... அதன் பொருட்டே வேண்டாம் என்று விட்டார்.

இப்போது காலையிலேயே அவர்களை வர சொல்லிவிட்டு அவர்களுக்கு முன் வந்து விட்டார். தனம் ராஜவேலின் வீட்டில் தானே அந்தப் பிள்ளைகள் இருந்தனர் தந்தையும் தாயும் இறந்த பின். அதன் பிறகு தான் ஜெயஶ்ரீக்கு அவர்களுடன் சற்று நல்ல பழக்கம்.

அவர்கள் மூவரும் சொல்வதறியாமல் நிற்கவும், மூவரின் பள்ளிச் சீருடைகளை பார்த்து பள்ளிக்கு தயாராகி இருக்கின்றனர் என்று புரிந்து,

“உள்ள வாங்க!” என்பது போல ஜெயஶ்ரீ சைகை செய்ய... பத்மினியும் ராகினியும் உள்ளே செல்ல... ஜெய்சங்கர் அந்த சமையல் செய்யும் இடத்தில் ஏதாவது உதவி தேவையா என்பது போல நின்று கொண்டான்.

பத்மினியையும் ராகினியையும் உள்ளே தனம் இருக்கும் இடத்தில் அழைத்து சென்று விட்டாள்.

“ரெடியாகியே வந்துடீங்களா!” என்று கேட்ட தனம், நேரத்தைப் பார்க்க இன்னும் பள்ளி செல்ல நிறைய நேரம் இருப்பதால்...

“இன்னும் நேரம் இருக்கு! இப்போவே சாப்பிட்டா பசிக்கும்... கொஞ்ச நேரம் கழிச்சு சாப்பிட்டுக்கலாம்” என்று சொல்லவும்... அவர்கள் அங்கே பக்கத்தில் இருந்த கூடத்தில் அமர்ந்து கொண்டனர்.

பிறகு சிபி என்ன செய்கிறான் என்று பார்க்க ஜெயஶ்ரீ ரூமின் உள் செல்ல முயலும் போதே... சிபி குளித்து தயாராகி வெளியே வந்தான்.

வந்தவனின் தோற்றம் ஜெயஶ்ரீயை கவர்ந்தது என்றே சொல்ல வேண்டும்... தந்தை காட்டிய புகைப் படமும் வேஷ்டி சட்டையில், பின்பு நேரிலும் வேஷ்டி சட்டையில் தான் நேற்றிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு ஜீன்ஸ் பேண்டிலும், காட்டன் ஷர்டிலும் தயாராகி

நின்றிருந்தவனின் தோற்றம்... ஜெயஸ்ரீயை விடாமல் அவனையேப் பார்க்க வைத்தது.

ஆனால் சிபி அந்த முழுக்கை சட்டையின் கைகளை மடக்கி விட்டுக் கொண்டிருந்தான். அதனால் ஜெயஸ்ரீயின் பார்வையை கவனிக்கவில்லை.

தன் கணவனை ரசித்தாள் என்று தான் சொல்ல வேண்டும். உயரமாக, இடைவிடாத உழைப்பு கொடுத்த திண்மையான உடல் கட்டுடன், வசீகரிக்கும் முகத்துடன் இருந்தவன், அன்று ஜெயஸ்ரீயை அதிகம் கவர்ந்தான்.

இன்னமும் சிபிக்கு ஒரு இளைஞனின் தோற்றம் தான், ஆண்மகனின் தோற்றத்திற்கு மாறவில்லை.

காலையில் குளித்து முடித்து தயாராகும் போது அவளின் கழுத்தில் இருந்த மஞ்சள் தாலி கொடுத்த மாற்றம் உரிமை... சிபியும் அவளிடம் சற்று கடுமையாக பேசினாலும் ஏதோ ஒரு வகையில் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்தது சற்று நெருக்கமாக ஜெயஸ்ரீயை உணர வைத்தது. அந்த நெருக்கம் கொடுத்த தைரியம் சிபியை ரசித்துப் பார்த்தாள்.

ஆனால் சிபி சட்டையின் கையை மடித்து விட்டு தலையை நிமிர்தவும்... பார்வையை விளக்கிக் கொண்டாள். அவன் பார்க்காத போது பார்க்க தான் தைரியம்... இன்னும் அவனின் பார்வையை சந்திக்க ஒரு மெல்லிய அச்சம் இருந்தது.

அதுவும் இன்னும் கண்ணனை பற்றியும் சொல்லாததால் அதுவும் ஒரு தயக்கத்தைக் கொடுத்தது.

சிபி அவளை பார்க்கவும், “என்ன குடிக்கறீங்க?” என்று கேட்க நினைத்து சைகை செய்ய கையை உயர்த்தவும், சிபியின் பார்வையில் கோபம் ஆரம்பிப்பதை உணர்ந்தவள்,

மெதுவாக அவனின் பக்கத்தில் வந்து நின்றாள். பின்னர் திக்கி திக்கி “என்ன குடிக்கறீங்க... என்ன கொண்டு வரட்டும்” என்று கேட்டாள்.

சற்று நேரம் ஆனது… ஆனாலும் அவள் பேசி முடிக்கும் வரை பொறுமையாக நின்றான் சிபி…

அவள் என்ன பேசுகிறாள் என்பதை அவள் முதல் வார்த்தை ஆரம்பிக்கும் போதே அனுமானித்து விட்டான் சிபி. ஆனாலும் முடிந்தவரை அவள் பேசட்டும் என்று தான் அமைதியாக நின்றான்.

நேற்று அவன் பேசிய போது ஏதோ இண்டர்வி செய்வது போல தோன்றியது. இன்று ஏதோ யோசித்து யோசித்து பதில் சொல்லும் மாணவரிடம் வகுப்பு ஆசிரியர் பொறுமையாக நின்று பதிலை வாங்குவது போல தோன்றுகிறது.

நொந்தே விட்டாள்… இன்னும் கணவன் உரிமையோடு சிபி பார்க்கவில்லை என்பது போல தான் ஒரு தோற்றம் ஜெயஸ்ரீக்கு.

சிபி அவளின் நடவடிக்கைகளை தான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். தன்னுடன் சைகையில் பேச முயன்றவள், அதற்கு முயலும் போது தன் கண்களில் கோபத்தை பார்த்து அதைக் கைவிட்டது. அதே சமயம் அங்கிருந்து பேச முயலவில்லை. பக்கத்தில் வந்து அவனுக்கு மட்டும் கேட்குமாறு தான் திக்கி திக்கி பேசினாள்.

தன்னுடைய குறை மற்றவர்களால் கவனிக்கப் படுவதை ஜெயஸ்ரீ விரும்புவதில்லை என்று புரிந்தது.

அவள் தன் பதிலுக்காக காத்து நிற்பது புரிய… “காபி டீ அதிகம் குடிக்க மாட்டேன்… அதுவும் காலையில குடிக்கவே மாட்டேன்”.

“அப்போ என்ன குடிப்பீங்க” என்று திக்கி திணறி மறுபடியும் கேட்க…

சொல்லவா? வேண்டாமா? என்று சில நொடிகள் யோசித்தவன், அவள் தெரிந்து தானே ஆகவேண்டும் என்று முடிவெடுத்து, “மீதமான சாதத்துல தண்ணி ஊத்தி வெச்சிருப்பாங்க இல்லையா அந்த தண்ணி மட்டும் எடுத்து உப்பு போட்டுக் குடிப்பேன் இல்லை கம்பு இல்லைனா ராகி கஞ்சி குடிப்பேன்…” என்றான்.

“நம்மோட உடல் தொந்தரவுகளுக்கு அதிகம் நம்ம உணவுப் பழக்க வழக்கம் தான் காரணம். அதனால அதுல ரொம்ப கவனமா இருப்பேன்”

என்று நீண்ட விளக்கம் கொடுத்தான்.

“இப்போ அதெல்லாம் இங்க இல்லை” என்று திக்கி திணறி இல்லையே என்ற தவிப்போடு ஜெயஸ்ரீ சொல்லவும்...

“பரவாயில்லை வெறும் பால் மட்டும் எதுவும் அதுல கலக்காம் கொடு” என்று சொன்னான்.

அவன் சொல்லவும் அதை செயலாற்ற ஜெயஸ்ரீ உள்ளே போகவும் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். அவன் அமர்ந்த இடத்தில் இருந்து உள்கூடம் நன்றாக தெரிய, அங்கே பார்வையை செலுத்தியவனின் பார்வையில் பத்மினியும் ராகினியும் பட்டனர்.

ஒன்றுக்கு இரண்டு முறை அவர்கள் தானா என்று சரி பார்த்தான். அவர்கள் தான்! அதுவரை இருந்த சமன்பட்டு இருந்த மனநிலை மாறியது. சிபி இவர்களைப் பார்த்ததும் பத்மினியும் ராகினியும் அவனைப் பார்த்து புன்னகைக்க, சட்டென்று சிபிக்கு சிரிக்க வரவில்லை.

சில நொடிகளில் தேறிக் கொண்டு அவர்களைப் பார்த்து புன்னகைத்தான். ஆனாலும் மனது முழுவதும் ஒரு எரிச்சல் மூண்டது. இந்த ராதா மட்டும் கடைசி நிமிடத்தில் அப்படி செய்யாமல் இருந்திருந்தால், தான் இப்படி யாரையும் குற்ற உணர்வோடு பார்க்கும் அவசியம் வந்து இராதே என்பது போல...

ஜெயஸ்ரீ பாலை மெதுவாக கொண்டு வந்து நீட்டிய போது... அதை வாங்கவும் மனமில்லை... இருந்தாலும் வாங்கினான்... அதைக் குடிக்கவும் மனமில்லை இருந்தாலும் குடித்தான்.

சிபியின் செய்கைகள் அவனுக்கே பிடிபடவில்லை... இப்படி தான் ஜெயஸ்ரீயோடு தன் வாழ்க்கையும் என்பது போல ஒரு எண்ணம் அவனுள். குழம்பிப் போனான்.

இருபத்து நான்கு வயது இளைஞன், நல்லவன், உழைப்பாளி, மற்றவர்களை மதிக்கத் தெரிந்தவன் தான், யாரையும் அலட்சியப் படுத்த மாட்டான். இப்படிப் பலப் பல அவனைப் பற்றி சொல்லலாம் என்றாலும், சில சமையங்களில் கோபம் முற்ற வார்த்தையை

கடுமையாக தான் பேசுவான்.

இப்போதும் ஒரு கோபமான மனநிலை. தனக்கு மட்டும் ஏன் இப்படி என்பது போல... கடைசி நிமிடத்தில் அவளும் போய்... அதனால் மற்றவர்களுக்கும் தன்னால் ஒரு அநியாயம் நடந்து... இப்போது ஜெயஸ்ரீயுடன் திருமணம்.

அவளுடைய குறைகள் ஒன்றும் பெரிய குறைகள் இல்லைதான்... ஆனால் வாழ்க்கை முழுவதும் இப்படி அவள் பேச வருவதை அனுமானித்து, மிகவும் வேக நடை கொண்ட நான் வாழ்க்கை முழுவதும் இவளுக்காக மெதுவாக நடந்து... ஐயோ எப்படிப் போகுமோ என் வாழ்க்கை...?

இன்னும் மனதளவில் ஒரு பக்குவம், நடப்பதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரவில்லை சிபிக்கு. நல்லவன் தான், அதில் எந்த மாற்றமுமில்லை. ஆனால் பக்குவப் படாதவன்.

மனதில் பலதையும் போட்டுக் குழப்பிக் கொண்டு, அந்தக் குழப்பதோடே ஜெயஸ்ரீயைப் பார்க்க... “ஏதோ சரியில்லை” என்பது போல அவனின் முகம் பார்த்துக் கண்டு கொண்டவள், “என்ன?” என்று புருவம் உயர்த்தி முக பாவனையில் கேட்க...

யாரிடம் தன் கவலைகளை எப்படி சொல்வது என்று தெரியாமல், சிபியின் பார்வை வட்டத்திற்குள் இருந்த அந்த பிள்ளைகள் அமர்ந்திருந்த விதம் நெஞ்சைப் பிசைய, அந்தக் கோபத்தை அப்படியே ஜெயஸ்ரீயிடம் திருப்பினான்.

“இப்படி என்ன என்னன்னு என்னைக் கேள்வி கேட்காத! எனக்குப் பிடிக்காது! ஏதாவது சொல்லணும்னா நானே சொல்வேன்!” என்று வார்த்தைகளைக் கடுமையாக, ஒரு கடினமான முகபாவனையுடன் பேச...

எதற்கு அவ்வளவு கடுமை என்று புரியாமல் ஸ்தம்பித்து நின்றாள் ஜெயஸ்ரீ...

## அத்தியாயம் பதிமூன்று :

ஜெயஸ்ரீயின் முகம் நொடியில் சுருங்கி விட அப்படியே நின்றுவிட்டாள். பிறகு மனதிற்குள் அவளுக்கு அவளே சமாதானம் செய்து கொண்டாள், இது அவனின் இயல்பு என்பதாக.

உண்மையில் சிபியின் இயல்பு அது இல்லை.

எப்போதும் சற்று அதட்டலாக கறாராக பேசுவான் தான். ஆனால் இப்போது ராதாவுடனான திருமணம் நின்றதில் இருந்து தான் மிகவும் அதிகமாகி விட்டது.

ஜெயஸ்ரீ அவன் இப்படி சுள்ளென்று பேசியதை யாராவது பார்த்தார்களா என்று பார்க்க... ஆங்காங்கே ஆட்கள் சென்று கொண்டு தான் இருந்தனர். ஆனால் எல்லோரும் தூரமாக சென்று கொண்டு இருந்ததால் காதில் விழுந்திருக்காது என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு அந்த இடத்தை விட்டும் சென்று விட்டாள்.

ஜெயஸ்ரீ அவனின் வார்த்தைகளில் அப்படியே நின்று பின்பு யாராவது பார்த்தார்களா என்று சுற்றிலும் பார்த்தது, பின்பு பதில் சொல்லாமல் திரும்பி சென்றதும் ஒரு மாதிரியாகிவிட்டது சிபிக்கு. தேவையில்லாமல் அவளைக் காய்ச்சி எடுக்கிறோம் என்று புரிந்தவன் அதன் பிறகு அவனும் எதுவும் பேசவில்லை. யாராவது பேசினால் பதில் கொடுத்தான்...

அந்த பிள்ளைகள் வேறு வந்து கனகாரியமாக, “கிளம்பறோம் அண்ணா!” என்று அவனிடம் சொல்லிச் செல்லவும் இன்னமும் மனம் கனத்தது.

பின்னர் வஜ்ரவேலின் வீட்டை சுற்றி இருந்த வயல் வரப்பைப் பார்வை யிட்டான்... மனதின் அலைப்புறுதல் மட்டும் நிற்கவேயில்லை. மேலும் மேலும் ஏதோ தவறு செய்வதாகவே சிபிக்கு தோன்றியது. எப்படி சரிப்படுத்த என்று தெரியவில்லை.

ஜெயஸ்ரீ சிபி வீட்டின் உள் இருக்கும் நேரம் அவனின் மீது தான் பார்வையை வைத்திருந்தாள். அவள் சிபியை பார்க்காதே என்று அவளின் மனதிற்கு அவளே சொல்லிக் கொண்டாலும் பார்வை அவனிடம் தான் நிலைத்தது.

அவனுக்கு நேரத்துக்கு என்ன தேவையோ அதைப் பார்த்துச் செய்தாள். ஆனால் அதைவிடுத்து அருகில் சில நிமிடங்கள் கூட இருக்கவில்லை. சிபியும் பேசவில்லை. ஜெயஸ்ரீ அரிதாகவே பேசுவாள் திக்கி திணறி.. இப்போது சிபியிடம் மட்டுமல்ல யாரிடமும் பேசவில்லை.

முகத்தை அமைதியாக வைத்திருந்தாள்.. அதனால் அவளின் மனதின் வருத்தம் யாருக்கும் புரியவில்லை. சிபி இப்படி தான் பேசுவான்... தான் பழகிக் கொள்ள வேண்டும் என்று உருப்போட ஆரம்பித்து இருந்தாள்.

என்னதான் உருப் போட்டுக் கொண்டிருந்தாலும் பார்வை சிபியை தேடியது. அவன் பார்வையில் பட்டால், அவன் பார்க்காத நேரம் எல்லாம் அவன் மீது தான் ஜெயஸ்ரீயின் பார்வை இருந்தது.

அடுத்த நாள் கிடா விருந்து என்பதால் வஜ்ரவேல் அதற்கான ஏற்பாட்டில் இருந்தார். வீட்டிற்கு ஆட்கள் வந்த வண்ணம் போன வண்ணம் இருந்தனர். ஒற்றை ஆளாக அவர் ஒரு பக்கம் அலைந்து கொண்டிருந்தார். அதனால் அவர் ஜெயஸ்ரீயையோ இல்லை சிபியையோ அதிகம் கவனிக்க முடியவில்லை.

அதை குறித்து அவர் அதிகம் சிந்திக்கவுமில்லை, ஏனென்றால் ஜெயஸ்ரீ பொறுப்பான பெண், எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை.

அன்று நாள் முழுவதும் அப்படியேப் போய்விட்டது.

இரவு வந்த போது நேற்று இருந்த ஒரு சுமுக நிலை கூட இருவரிடத்திலும் இல்லை... பேச்சுக்கள் இல்லை... எதுவுமே இல்லை.

அதே போல நேற்று இரவு ஜெயஸ்ரீயைப் பற்றி தெரிந்து கொள்ள கேள்விகள் கேட்டான். ஆனால் இன்று வரை ஒரு விவரமும் தெரியாது என்பது தான் உண்மை.

இருந்த இடத்தில் அப்படியே இருந்தது அந்த பேச்சுக்கள்.

நேற்றைப் போல ஒரு தலையணையை எடுத்து கீழே போட்டு அவன் உறங்க ஆயத்தமாகவும்... இன்று அப்படியே விடவில்லை ஜெயஸ்ரீ.

அவன் போட்ட தலையணையை சிரமப்பட்டு குனிந்து எடுத்தாள். எதற்கென்று சிபி புரியாமல் பார்க்க...

கீழே ஒரு பாயைப் போட்டு அதன் மேல் ஒரு ஜமக்காலத்தைப் போட்டு அதன் மேல் ஒரு பெட்ஷீட் போட்டு அதன் மேல் தலையணையைப் போட்டாள்.

எந்த சிரமுமில்லாமல் இதை செய்தாள் என்று சொல்ல முடியாது. ஆனால் அவள் செய்த விதம் செய்வதில் சிரமங்கள் இருந்தாலும் வேலைகளுக்குப் பழகியிருக்கிறாள் என்று புரிந்தது. அதிக தடுமாற்றங்கள் இல்லை.

சிபி அவள் செய்வதையே தான் காலையிலிருந்து ஜெயஸ்ரீ அவன் பார்வையில் படும் நேரம் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்.

மொத்தத்தில் கணவனும் மனைவியும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தனர். ஆனால் சிபி பார்க்காத போது ஜெயஸ்ரீயும் ஜெயஸ்ரீ பார்க்காத போது சிபியும்.

இதனால் சிபி தெரிந்து கொண்டது என்னது என்றால் தடுமாறினாலும் அவளின் வேலைகளை அவளே தான் செய்து கொண்டாள் ஜெயஸ்ரீ, யாரின் உதவியும் நாடவில்லை.

ஹப்பா அவளுடைய வேலைகளை அவள் செய்து கொள்வாள் என்பது சற்று நிம்மதியாகிற்று சிபிக்கு. அப்படி ஒன்றும் ஆண்கள் பெண்களுக்கு வேலை செய்து கொடுக்க கூடாது போன்ற ஆணாதிக்க சிந்தனைகள் எல்லாம் இல்லை.

அவன் கூட இல்லாத நேரம் அவள் வேலைகளை அவள் செய்து கொள்ள வேண்டுமே என்பது போல தான் சிந்தனை. எப்படியிருந்தாலும் தந்தை வீட்டில் பார்த்து பார்த்து மகளுக்கு செய்வர் எந்த வேலையும் செய்ய விடாமல். அதே போன்ற ஒரு சூழலை அவனின் வீட்டில் அவனுக்கு கொடுக்க முடியாது என்று தெரியும்.

இதுவரை எந்த வேலையும் வீட்டில் சிபி செய்ய மாட்டான்.. வீட்டில் நிறைய பெண்கள் என்பதால் அப்படி ஒரு சூழல் வந்திருக்கவில்லை. இனிமேல் புதிதாக மனைவிக்கென்று போய் செய்ய முடியாது

இல்லையா. இப்படியாகத்தான் சிபியின் யோசனைகள்.

எது எப்படியாகினும் யோசனைகள் முழுக்க ஜெயஸ்ரீயுடனான அவனின் வாழ்க்கையைப் பற்றி தான்.

படுத்துக் கொண்டே விட்டதை வெறித்து யோசித்துக் கொண்டிருந்தான். ஜெயஸ்ரீயும் உறங்கவில்லை. நேற்று சிபி உறங்கிவிட்டதால் அவன் புறம் திரும்பி அவனைப் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தவள்... இன்று அதற்கு வழியில்லாமல் வேறு புறம் திரும்பி படுத்து இருந்தாள்.

இருவருக்கும் உறக்கம் அணுகவேயில்லை... சிபியும் நேராக படுத்திருந்தவன் திரும்பிப் படுத்தான். அவனின் பார்வையில் பட்டது, ஒரு அலமாரி அதனை ஒட்டி இருந்த ஒரு டேபிள் மேல் அடுக்கி வைக்கப் பட்டிருந்த புத்தகங்கள், கூட ஒரு லேப் டேப்.

“டிப்ளமோ கம்ப்யுட்டர் டெக்னாலஜி படித்திருக்கிறாள், அதான் லேப் வைதிருக்கிறாளோ? என்ன வயதிருக்கும் இவளுக்கு? பலமுறை யோசித்து விட்டோம் இன்னும் அவளிடம் கேட்கவில்லை. பார்த்தாலும் வயது சரியாகத் தெரியவில்லை. ஒரு புறம் பெரிய பெண்ணாக காட்சியளிப்பவள் ஒரு புறம் சிறிய பெண்ணாக தெரிகிறாள். எப்படியும் இருபத்தி இரண்டு இருபத்தி மூன்றுக்குள் இருக்கும்” என்று அனுமானித்தான்... ஆனால் தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்ற உந்துதல் எழ... எழுந்தவன் நேராக அந்த டேபிளிடம் சென்றான்.

மனைவி என்றாலும் இன்னும் அவளின் பொருட்களை அவளைக் கேட்காமல் எடுத்துப் பார்க்க மனம் வரவில்லை. அது நாகரீகமற்ற மரியாதையில்லாத செயல் போல தோன்ற, ஜெயஸ்ரீயைப் பார்த்தான். அவள் வேறு புறம் திரும்பிப் படுத்து இருந்தாள்.

“ஸ்ரீ...” என்று குரல் கொடுத்தான், அவள் விழித்துக் கொண்டிருக்கிறாளா என்று பார்க்க.. ஜெயஸ்ரீ சிபியைப் பற்றிய யோசனைகளில் கண்மூடி படுத்திருந்தாள். அவன் கூப்பிட்டதை கவனிக்கவில்லை. ஆனாலும் அழைத்து முடித்ததும் ஏதோ குரல் ஒலித்ததோ என்பது போல ஒரு உந்துதல், அப்போதும் அவன் அழைத்த விதம் தெரியவில்லை. படுத்த வாக்கிலேயே திரும்பி பார்த்தாள்.

சிபி மேஜையின் புறம் நின்று கொண்டிருந்தது கண்ணில் பட, ஏதோ

அவனுக்கு தேவை அவன் குரல் தான் கேட்டது போல அதான் நிற்கிறான் என்று அனுமானித்தவள், ஒரு வேலை தண்ணியாக இருக்குமோ தான் தண்ணீர் கொண்டு வரவில்லை என்று அவளாக நினைத்து இறங்கி சுவரைப் பிடித்து கதவின் புறம் போனாள்.

“எங்க போற?” என்று சிபி கேட்கவும்,

“தண்ணி கொண்டு வர” என்பது போல தயங்கித் தயங்கி சைகை செய்தாள். ஏனோ முயன்றும் பேச்சு வரவில்லை.

“அதான் அங்க இருக்கே!” என்று ஒரு சேரின் மேல் இருந்த பாட்டிலைக் காட்டினான்.

“அப்போ உங்களுக்கு என்ன வேணும்?” என்பது மாதிரி தயங்கித் தயங்கி சைகை செய்ய...

“அப்போ நான் கேட்டேன்னு நினைச்சு போனியா, என்னன்னு கேட்க மாட்டியா” என்று சிபி கேட்க...

மிகவும் முயன்று, “நீங்க தானே உங்களை எதுவும் கேட்கக் கூடாது சொன்னீங்க” என்றாள் திக்கி திணறி...

காலையில் தான் சொன்னதை இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறாள்... “அது அவளைக் காயப்படுத்தி இருக்கிறது” என்று புரிந்தான் சிபி.

ஆனால் சாரி கேட்கவோ இல்லை சமாதானப்படுத்தவோ முயலவில்லை... “உனக்கு மறதி வியாதி இல்லையா... இரு, ஏதாவது கடையில மாத்திரை இருந்தா வாங்கிக் கொடுக்கறேன், அது வர்றதுக்காக!” என்று சிபி சொல்லவும்...

ஜெயஸ்ரீ அவனை விழி விரித்து ஆச்சரியமாகப் பார்த்தாள், அவனுக்கு இப்படிக் கூட பேச வருமா என்பது போல.

முகத்தில் அந்த பாவனைகள் அப்படியே வந்தது.

அதுவுமில்லாமல் முதல் முறையாக அவளிடம் ஜோக் அடித்து பேசுகிறான். அவன் லகுவாக பேசினாலும் முக பாவனை என்னவோ ஸ்ட்ரிக்ட் ஆபிசர் தான்.

ஆனாலும் அதையும் அனுபவித்தாள் ஜெயஸ்ரீ... காலையில் இருந்து அவனின் வார்த்தைகளைக் கேட்டு அவன் அப்படித்தான் என்று சமாதானப்படுத்திக் கொண்டாலும், ஒரு மாதிரி மன அழுத்தத்தில் இருந்தாள்.

இப்போது அது விடுபடவும் கண்களில் கண்ணீரே வந்து விட்டது. முகமும் புன்னகையைப் பூசியது. அவள் கண்களில் கண்ணீரோடு புன்னகைக்கவும் முகம் ஓவியப்பவையாய் ஜொலித்தது.

முதல் முறையாக கண்களில் கண்ணீரோடு புன்னகைத்த அந்த முகம் சிபியை ஈர்க்க... அதை சில நொடிகள் பார்த்தவன்... “உன் வயசென்ன?” என்றான் உடனே.

“என்ன கேள்வி இது? எதற்கு இந்த கேள்வி?” என்று மீண்டும் ஒரு புரியாத பாவனையை ஜெயஸ்ரீயின் முகம் காட்டவும்...

அவளைப் புரிந்தவனாக, அவளிடம் விளையாடிப் பார்க்க, “நீ பார்க்க என்னை விட பெரியவளா தெரியரியா அதான் கேட்டேன்” என்றான் சீரியசாக.

அவன் நிஜமாக தான் சொல்கிறானோ! அதுதான் தான் அவனை ஈர்க்கவில்லையோ என்று ஜெயஸ்ரீயின் முகம் உடனே அதிர்ச்சியைக் காட்டிப் படபடக்கும் இதயத்தோடு அவனைப் பார்த்தாள்.

முகம் மிகவும் சீரியசாக தான் இருந்தது... ஆனால் சிபியின் கண்கள் சிரித்தது.

அதை நம்பியும் நம்பாலும் ஒரு பதட்டத்தோடே ஜெயஸ்ரீ பார்க்க... அவளின் முகத்தில் மீண்டும் கலவையான உணர்வுகளைப் பார்த்தவன்...

முகத்தின் கடினத் தன்மையைக் கைவிட்டு மெலிதாக புன்னகைத்தான்...

“பொய், பொய் தானே சொன்னிங்க” என்றாள் திக்கித் திணறி... அவள் கேட்ட பாவனையில் இப்போது சிபிக்கு சிரிப்பு பீறிட்டு வந்தது.

“ஹா, ஹா” என்று வாய்விட்டுச் சிரித்தான்... “நான் சொல்றதை நம்பற அளவுக்கு நீ பச்சைப் புள்ளையா இல்லை நான் நல்லவனா” என்றான்

சிரிப்பினோடே.

சில மாதங்களுக்கு பிறகு சிபி சிரிக்கும் சிரிப்பு.

அவன் பொய் சொல்கிறான் என்று திண்ணமாக தெரிய... “அய்யே! என்ன இது?” என்பதுப் போல ஒரு பாவனையை ஜெயஸ்ரீ கொடுக்க...

“ஹா ஹா” என்று இன்னும் அதிகமாக சிரித்தவன், “இதுக்குத் தான் வயசைக் கேட்டேன்! சில சமயம் பெரிய பொண்ணு மாதிரி தெரியற! சில சமயம் சின்னப் பொண்ணா தெரியற!” என்று விளக்கம் கொடுத்தான்.

ஜெயஸ்ரீ பதில் சொல்ல முயலாமல், சிபியைத் தாண்டிப் போய் மேஜையின் டிராவில் அவளின் செர்டிபிஃகேட் அடங்கிய பைலை எடுத்து சிபியிடம் நீட்டினாள்.

அதைப் பிரித்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க... இப்போது இன்னும் பயங்கர சிரிப்பு சிபிக்கு.

“நேத்து இன்டர்வ்யூவை இன்னைக்கு முடிக்கறாங்க, என்ன மனைவியா எனக்கு வேலை கொடுப்பாங்களா இல்லையா” என்பது போலத் தான் ஒரு எண்ணம் ஜெயஸ்ரீயினுள்ளும்.

ஆம்! அதில் அவளின் பத்தாவது மார்க் ஃசீட் மட்டும் டிப்ளமோ செர்டிபிகேட் எல்லாம் இருந்தது. வயதை பார்க்க...

அன்றைய தினத்தோடு கணக்கிட்டால் பதினெட்டு முடிந்து பத்தொன்பது பிறந்து மூன்று மாதங்களே ஆகியிருந்தது. பத்தாவது முடித்து, டிப்ளமோ முடித்திருந்தாள்.

இவ்வளவு குறைந்த வயதை சிபி எதிர்பார்க்கவில்லை.. இவ்வளவு குறைந்த வயதில் இப்படி அவசரமாக திருமணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன...

அதை மறையாமல் அப்படியே ஜெயஸ்ரீயிடம் கேட்டான். “பதினெட்டு இப்போத் தானே முடிஞ்சிருக்கு... உன் கல்யாணத்துக்கு அப்படி என்ன அவசரம்... கொஞ்சம் வருஷத்துக்கு முன்னாடியே அந்த பிராடுப் பய

பையன் கூட சம்மந்தம் பேசி…”

“அது நின்னு, அப்புறமும் உன்னை செத்துப் போன வீட்ல ஏலம் விட்டு என்னோட அவசரமா கல்யாணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? அப்படி ஒன்னும் நீங்க இல்லாதவங்க கூட இல்லை, நீயும் நல்லா தான் இருக்க, இந்த சில குறைகள், அதுக்கு அப்படி ஒன்னும் மாப்பிள்ளைக் கிடைக்காம போகாதே. ஏன் அவசரம்?” என்று பளிச்சென்று உள்ளதை உள்ளபடி அப்படியே கேட்க…

என்ன காரணம் ஜெயஸ்ரீ அறியாததல்ல… நன்றாக ஓடி ஆடி திருந்து கொண்டிருந்த பெண்ணிற்கு இப்படி ஆனதும் தந்தை ஏறக்குறைய உடைந்து விட்டார்.

இதே ஆண்மகனாய் இருந்தால் அவன் இனிமேல் எப்படிப் பிழைப்பான் என்பது போல ஓடும் சிந்தனைகள், பெண் என்பதால் இனி எவன் திருமணம் செய்வான் என்பது போல ஆளாளுக்குப் பேச…

அப்போது பார்த்து ராஜவேல் தன் அண்ணன் வஜ்ரவேலிடம், “என் மனைவியின் அண்ணன் மகன், நல்லவன், என்ஜிநீயருக்கு படிக்கிறான்… நாம் உதவி செய்து படிக்க வைத்தால் நம் கைக்குள் இருப்பான். அவனுக்கு மகளை திருமணம் செய்துக் கொடுத்து வீடோடு கூட வைத்துக் கொள்ளலாம்” என்பது போல மனதை கலைத்து…

அந்த நேரத்தில் இருந்த மன உளைச்சலில் வஜ்ரவேலும், “சரி” என்க அப்படி நிச்சயம் ஆனது தான் ஜெயஸ்ரீயின் திருமணம்.

இப்போதும் அந்த சாவு விழுந்த வீட்டிலும் ஜெயஸ்ரீயை ஏலம் விட்டது போல பேசியது ராஜவேல் தான். அப்படியேப் பேச்சு வளர பின்பு வஜ்ரவேலுக்கும் விசாரித்தவரை சிபி திருப்தியாக இருக்க பெண் கொடுத்தார்.

அதை எப்படி இவனிடம் சொல்வது…

ஜெயஸ்ரீ தடுமாறி நிற்கவும்… “திக்கினாலும் பரவாயில்லை! சொல்லு!” என்று பேசிப் பேசி சிபி விஷயத்தை வாங்கினான்.

ஜெயஸ்ரீ பதட்டத்தோடு சொல்லி முடித்தவள், திருமணம் நின்றதுப்

பற்றி, கண்ணனைப் பற்றி வேறு சிலதும் சொல்ல முயலும் போதே... எப்போதும் போல ஜெயஸ்ரீ என்ன சொல்ல வருகிறாள் என்று கேட்காமல்...

"ஆனாலும் உங்கப்பா இப்படி உன் கல்யாணத்துக்கு அவசரம் காட்டியிருக்க வேண்டாம், சொல்லப் போனா அவரே எனக்கு மாமனார் மாதிரி இல்லை மச்சான் மாதிரி தான் இருக்கிறார். பேசாம அவர் கல்யாணம் பண்ணிக்கிட்டு, இன்னும் உன்னைப் படிக்க வைச்சிருக்கலாம்" என்று அவளின் தந்தையைப் பற்றி பேச...

"இவர் எதற்கு இதை சொல்லுகிறார்" என்று புரியாமல் விழித்தாள் ஜெயஸ்ரீ.

"பெண்களுக்குப் படிப்பும் முக்கியம், இன்னும் உனக்குத் திருமண வயது வரவில்லை, உன் அப்பா எதற்கு இந்த சிறிய வயதில் தனியாக இருக்க வேண்டும்" என்று அவனுக்குத் தான் எல்லாம் தெரியும் என்பதைப் போல சிபி அந்த அர்த்தத்தில் பேச...

ஜெயஸ்ரீ சரியாக தப்பாக நினைத்தாள். "தன் தந்தை இப்போது திருமணம் அவளுக்குத் திருமணம் செய்ய நினைக்காமல் இருந்திருந்தால், தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இராது" என்பதால் சொல்லுகிறான் என்பது போல...

மீண்டும் ஜெயஸ்ரீயின் முகம் சுருங்கிவிட்டது.

சிபி எதற்கு அவளின் முக சுணக்கம் என்பதை அனுமானிக்கவில்லை என்பதை விட, அவன் ஜெயஸ்ரீயின் முகச் சுணக்கத்தையே கவனிக்கவில்லை.

அவன் பாட்டிற்கு அவளின் டென்த் மார்க் மற்றும் டிப்ளமோ மார்க்ஸ் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல பள்ளி, நல்ல கல்லூரி... அவன் தமிழ் மீடியம்... இவள் ஆங்கில மீடியம் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதற்கோ தலை நிமிர்ந்து பார்த்தவன், ஜெயஸ்ரீ நின்று கொண்டே இருப்பதை பார்த்து... "நீ போய்த் தூங்கு... நான் இதெல்லாம் பார்க்கிறேன்" என்று அவளின் அலமாரியைக் காட்டினான்.

கூடவே, “உன்னைப் பத்தி இன்னும் ஒன்னும் தெரியாது இல்லையா? தெரிஞ்சிக்க!” என்று எப்போதும் போல விளக்கம் கொடுக்க...

மீண்டும் இவன் நல்லவனா கெட்டவனா என்ற யோசனை தான் ஜெயஸ்ரீக்கு.

“மனைவி நான் இவர் எதிரில் இருக்கிறேன்... என்னைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் என் சான்றிதழ்களைப் பார்த்தா... என்னைப் பார்க்க இல்லையா, என்ன சொல்ல இவரைப் பற்றி...?” என்று தான் தோன்றியது.

ஆனால் அந்த நினைப்பெல்லாம் சிபிக்கு இருந்த மாதிரியே தெரியவில்லை.. அவள் மெதுவாக நடந்து சென்று படுத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

சிபி விழித்துக் கொண்டு, அதையும் இதையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். இருந்தாலும் அவன் என்ன செய்கிறான் என்பது போல ஜெயஸ்ரீ கண்திறந்து பார்க்கவேயில்லை.

பல நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் புரிதல் முதலில் மனதில் இருந்து ஆரம்பிப்பதில்லை, உடலில் இருந்து ஆரம்பிக்கறது என்பது தான் மறுக்க முடியாத உண்மை.

ஒரு மஞ்சள் கயிறு அதற்கு இருக்கும் சக்திகள் பல... திருமணத்தின் அடிப்படை பந்தம் இதுதான்.

ஒருவரை ஒருவர் மனதால் புரிந்து கொள்வது எல்லாம் இதன் பிறகே...

அப்படி புரிதல் வராவிட்டாலும், இல்லை புரிந்து ஒரு பிடித்தமின்மை வந்துவிட்டாலும், பின்பு அந்த திருமண பந்தத்தை விட்டு விலக முடியாததற்கு காரணமும் இதுவே.

சிபியின் எண்ணம், சொல், செயல், இதை அவனே அறியாத போது ஜெயஸ்ரீ எங்கனம் அறிந்து கொள்வாள்.

## அத்தியாயம் பதினான்கு :

அடுத்த நாள் வஜ்ரவேலின் வயல் வரப்பை ஒட்டி உள்ள அவர்களின் தோட்டத்திலேயே கிடா விருந்து.

உறவுகள் எல்லோரும் வந்துவிட்டப் பிறகு கடைசியாகத் தான் சிபியின் வீட்டினர் வந்தனர். அதுவும் எல்லோரும் வரவில்லை, பெரியவர்கள் ஈஸ்வரரும் சுலோச்சனாவும், கூட நடராஜன், அருள்மொழி, மாமல்ல வர்மன் மட்டுமே வந்திருந்தனர்.

வேறு பெண்கள் சிபியின் அம்மா தேவி, அத்தை ராஜலக்ஷ்மி மற்றும் அண்ணி வனிதாவோ குழந்தை மணிமேகலையோ வரவில்லை.

“ஏம்பா, அவங்க யாரும் வரலை, நீங்களும் லேட்டா வந்திருக்கீங்க?” என்ற கேள்விக்கு நடராஜன் என்ன சொல்லுவார், அவர்களுக்கு வர விருப்பமில்லை என்றா? அவர்களைக் கிளப்ப தான் இவ்வளவு நேரம் காத்திருந்தும் அவர்கள் கிளம்பவில்லை என்று வந்துவிட்டார் என்றா?

“கல்யாணத்துக்கு அலைஞ்சதுல உடம்புக்கு முடியலை, ஒருத்தரை விட்டு இன்னொருத்தர் வரலைன்னாங்க அதான் நாங்க மட்டும் வந்துட்டோம்” என்றார்.

“யாரு கல்யாணத்துக்கு அலைஞ்சு திரிஞ்சா? யாருக்கு உடம்பு முடியலை? யாரை விட்டு யாரு வரமாட்டேன்னு சொன்னாங்க?” என்ற கேள்வியைப் போட...

“சிபி விடுடா!” என்றார் நடராஜன்... அவரின் குரலில் ஒரு சலிப்பு தெரிய... அவரை மீண்டும் கேள்விகளால் கஷ்டப்படுத்த விரும்பாமல் விட்டுவிட்டான்.

வஜ்ரவேல் வீட்டினர் சிபியின் வீட்டினரை நன்கு உபசரித்தனர். அறுசுவை விருந்து, “இப்படி கவனிக்கிறார்கள், வீட்டுப் பெண்களுக்கு வந்திருப்பதற்கு என்ன?” என்று தான் நடராஜனுக்குத் தோன்றியது.

முதல் நாள் திருமணத்திற்கு முன் ஜெயஸ்ரீ முகம் திருப்பியதைக் கொண்டு அவர்கள் வரவில்லை. வீட்டின் ஆண்மக்கள் அவரின் சொல் கேட்டு உடனே கிளம்பி வந்துவிட்டனர். ஆனால் பெண்கள், “அப்பா அவ வரலையாம், உடம்பு சரியில்லையாம்” என்று அருள் மொழி வந்து நின்றான்.

“ஏண்டா? ஊரையே கூப்பிட்டு இருக்காங்க! நம்ம எல்லோரும் போகலைன்னா நல்லா இருக்காது! என்னடா பண்றீங்க?” என்று வனிதா வராததற்கு அவனை திட்டி முடிக்க, தேவி, “நான் வரலைங்க” என... இவர்கள் இருவரும் வராததால் ராஜலக்ஷ்மி வரவில்லை.

“என்னவோ போங்கடா! ஒரு கல்யாணத்தை முடிக்கறக்கதுக்குள்ள என்னை இன்னொரு ஜென்மம் வாழ வெச்சிடீங்க... என்னவோ பொண்டாட்டி புள்ளைங்க ஒருத்தரும் ஒரு பேச்சையும் கேட்கறது இல்லை” என்று வீட்டில் கத்தி விட்டு தான் வந்தார்.

அந்த சலிப்பே சிபியிடம் அவர் காட்டியது. அவர் பேசியதில் வீட்டினருக்கு வரவிருப்பமில்லை என்று புரிந்து கொண்டு தான் சிபியும் அமைதி காட்டினான்.

விருந்து முடிந்து நடராஜன் கிளம்பும் போது, “அப்போ பொண்ணையும் மாப்பிள்ளையையும் எப்போ அனுப்பறீங்க” என்பது மாதிரி கேட்டார்.

“நாளைக்குக் கொண்டு வந்து விட்டுட்டருணுங்க” என்றார் வஜ்ரவேல். பெண்ணைப் பெற்றவர் என்பது அவரின் ஒவ்வொரு அசைவிலும் தெரிந்தது. சிபியின் வீட்டினரிடம் பேசும் போது அவ்வளவு பவ்யம்.

விருந்து முடியும் வரையிலும் ஜெயஸ்ரீ, “ஏன் சிபியின் வீட்டில் பெண்கள் யாரும் வரவில்லை?” என்பது போல தன் மனதை போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தாள்.

சிபிக்கு பிடிக்கவில்லை என்பது போய், சிபியின் வீட்டினருக்கு பிடிக்கவில்லையோ என்பது மாதிரியான எண்ணம். எப்படி அவர்களின் வீட்டில் போய் இருப்பது என்ற பயம். அதெல்லாம் அவளை ஒரு மாதிரி சஞ்சலத்தில் ஆழ்த்தியது.

ஒரு வழியாக விருந்து முடியவும்... வீட்டில் அமளி துமளி சற்று அடங்கவும்... மீதமானதை எல்லாம் உறவுகளுக்கு பங்கிட்டு தனம் கொடுத்துக் விட்டுக் கொண்டிருக்க... அவருக்கு உதவியாக பத்மினி ராகினி மற்றும் ஜெய்சங்கர் பம்பரமாக சுழன்று கொண்டிருந்தனர்.

நாளை கணவன் வீடு செல்வதால் அவளுக்கு தற்பொழுது தேவையில்லாத ஜெயஸ்ரீ உபயோகித்து வந்த அணைத்து

பொருட்களையும், எடுத்து அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

இனி புடவை தான் உடுத்தப் போவதால், அவளுடைய தாவணி பாவாடைகள்... மற்றும் அவளுடைய லாங் ஸ்கர்ட், டாப்ஸ் என்று எல்லாவற்றையும் எடுத்து பத்மினிக்கு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

கால் அப்படி ஆனதில் இருந்து அவள் சுரிதார் அணிவதில்லை, ஷு போடுவதற்கு இடைஞ்சலாக இருப்பதால், தாவணி பாவாடை மற்றும் லாங் ஸ்கிர்ட் டாப்ஸ் போன்றவை தான் அணிவாள்.

அவள் எடுத்துக் கொடுத்த பொருட்களைப் பார்த்து சிபியே அசந்து விட்டான், “விட்டா, இவ வீட்டையே காலிப் பண்ணிக் குடுத்துடுவா போல” என்று நினைக்கும் படி தான் அவள் கொடுத்த பொருட்கள் இருந்தது.

எல்லா பொருட்களும் நன்றாக தான் இருந்தது, அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் கொடுக்கப்பட்டது தான் அவை என்று பார்த்துக் கொண்டிருந்த சில மணித்துளிகளிலேயே புரிந்தது.

சிபி அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க, அவன் இதை கவனிப்பதை பார்த்த வஜ்ரவேல் அவன் அருகமர்ந்து... “இப்படிதானுங்க, நமக்கு தேவையில்லைன்னு தூக்கிக் குடுக்கறது வேற... ஆனா தேவையிருந்தாலும் அடுத்தவங்களுக்கு அது தேவைன்னா உடனே தூக்கிக் குடுத்துடுமுங்க...”

“யார் என்ன உதவி கேட்டாலும் செய்வா... யாராவது ஒரு கஷ்டத்துல இருந்தா உடனே ஓடிப்போய் செய்வா... சில சமயம் நல்லா இருக்கும். ஆனா பலசமயம் தொந்தரவு ஆகிடும்” என்று அவர் மேலும் பெண்ணைப் பற்றி சொல்ல முற்படும் போதே... யாரோ அவரைக் கூப்பிட,

“இதோ வர்றனுங்க!” என்று எழுந்து சென்று விட்டார்.

“பெரிய கர்ணப் பிரபுவோ இவ, எதுக்கு இந்த பில்ட் அப் இவங்கப்பா, வசதியிருக்கு தூக்கிக் குடுக்கறா, வசதியில்லாதவங்க எத்தனையோ பேருக்கு குடுக்க மனசிருக்கும்! ஆனா பொருளோ பணமோ இருக்காது! அதுக்கு என்ன பண்ண?” என்பது மாதிரி தான் சிபியின் எண்ண ஓட்டம்

இருந்தது.

அதன் பிறகு வஜ்ரவேலுவிற்கு அவனிடம் பேச நேரம் கிடைக்கவில்லை... நாளை மகளோடு குடுத்தனுப்பப் போகும் சீர்வரிசைகள் பார்க்க ஆரம்பித்தார்.

அவர் பம்பரமாக சுற்றி வேலைப் பார்த்துக் கொண்டிருந்தார். அங்கிருந்த மூன்று நாளாக சிபி பார்த்துக் கொண்டு தானிருந்தான். எதற்கோ திரும்பிய போது பார்த்தால் ஜெயஸ்ரீயும் தந்தையை தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"நான் புதுசா பார்க்கிறேன்! இவ ஏண்டா இப்படிப் பார்க்கிறா?" என்ற ஆராய்ச்சிப் பார்வையோடு பார்க்க...

ஜெயஸ்ரீயின் மனம் முழுவதும் ஒரு இனம் புரியாத உணர்வு, அந்த வீட்டில் அவளும், தந்தையும் தான். இப்போது தான் நாளை போய் விட்டால் இனிமேல் அவர் தனியாக இருப்பார் என்பது அவளுக்கு சொல்லொணா துயரத்தை கொடுத்தது. அதையும் விட தவறு செய்து விட்ட ஒரு உணர்வு கூட... இந்த நாளை நாம் முன்னமே யோசித்து இருக்க வேண்டாமா என்று...

ஆம்! அவள் ஒரு ஆறாவது, ஏழாவது படிக்கும் சமயம் சரியாக ஞாபகமில்லை, தந்தையின் நண்பர் ஒருவர் அவருடைய தங்கையை இரண்டாம் தாரமாக திருமணம் செய்யக் கேட்டு ஜெயஸ்ரீயிடம் பேசினார்.

ஆனால் சிறு பெண்ணான அவள் ஒத்துக்கொள்ளவேயில்லை. அம்மா என்பவரை இதுவரை ஃபோட்டோவில் மட்டுமே பார்த்தவள் அவள். அப்படியிருந்தும், "என்னால எங்கம்மா இடத்துல யாரையும் பார்க்க முடியாது" என்று பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

அவரும் பலமுறை பேசிப் பார்த்தார் அசையவேயில்லை. மகள் சம்மதிக்காத போது வஜ்ரவேலுவும் சம்மத்க்கவில்லை. பின்பு அவளுக்கு இப்படியான போது ஒரு பெண் துணை அவசியம் என்று மறுபடியும் அந்த நண்பர் திருமணத்திற்கு சொல்ல அப்போதும் ஜெயஸ்ரீ ஒத்துக் கொள்ளவில்லை. எனக்கு யாருடைய துணையும் தேவையில்லை என்று விட்டாள்.

இப்போது அவரை தனியாக விட்டுப் போகவேண்டிய இருப்பதை நினைத்து துக்கம் தொண்டையை அடைத்தது. சரி என்று சொல்லியிருந்திருக்கலாமோ என்று ஒரு எண்ணம். சென்ற காலம் வருமா என்ன?

சிபிக்கு அவளின் எண்ண ஓட்டம் என்ன தெரியும். அவன் நேரமானதும் உண்டு உறங்க சென்று விட... வெகுநேராமகியும் ஜெயஸ்ரீ வரவில்லை.

“என்னடா பண்றா இவ?” என்பது போல சிபி எட்டிப் பார்க்க... வஜ்ரவேல் மகளிடம் அமர்ந்து பேசிக் கொண்டு இருப்பது தெரிந்தது.

வஜ்ரவேல் அமர்ந்து மகளுக்கு புகுந்த வீட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், தங்கள் வீடு போல அல்ல என்று வண்டி வண்டியாக அறிவுரையை வாரி வழங்கிக் கொண்டிருக்க... ஜெயஸ்ரீ அவரை தனியாக விட்டுப் போவதை நினைத்துக் கவலையில் இருந்தாள்.

பார்த்தவுடனேயே சிபிக்கு நன்கு தெரிந்தது... வஜ்ரவேல் ஏதோ சீரியசாக பேசிக் கொண்டிருக்க... ஜெயஸ்ரீ அதைக் கவனிக்கவேயில்லை என்று. அவளின் கவனம் அதில் இல்லை என்று பார்த்தவுடனே சிபிக்கு புரிந்தது.

“அந்த மனுஷன் ஏதோ கண்ணும் கருத்துமா பேசறார், இவ உட்கார்ந்துட்டேத் தூங்கறா! நல்ல அப்பா! நல்ல மக!...” என்று பார்த்தவன் உள்ளே வந்து உறங்கிவிட... ஜெயஸ்ரீ உள்ளே வந்த போது நல்ல ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

என்னவோ ஒரு இனம் புரியாத அச்சம் ஜெயஸ்ரீயின் மனதினுள் சிபியைப் பார்த்து, இவர் எப்படி என்னை பார்த்துகொள்வாரோ, நான் சென்றதும் அப்பா வேறு தனியாகி விடுவார், இவர் வீட்டினர் வேறு தள்ளி தள்ளி நிற்கிறார்கள் என்பது போல.

மறுநாள் சிபியின் வீட்டுக்கு கிளம்பும் முன் அப்பாவை விட்டு செல்ல மனதே இல்லை. “நீ அவருடைய திருமணத்திற்குத் தடையாக இருந்திருக்க கூடாது” என்று குற்றவுணர்ச்சி வேறு அதிகமாக இருக்க கண்களில் நீர் பெருகியது.

அவள் மாப்பிள்ளை வீடு செல்ல அழுகிறாள் என்பது போல தான்

எல்லோரும் நினைத்து சமாதானம் செய்தனர். அப்பாவை தனியாக விட்டு செல்ல என்று நினைக்கவில்லை. யாரிடமும் அதை சொல்லவும் மனதில்லை, வார்த்தைகளும் வரவில்லை.

“இவ எதுக்கு இப்படி அழறா? டேய் சிபி! உன்னை பார்த்து பயமா? நீ அவ்வளவு கொடுமைக்காரனா?” என்று விளையாட்டுப் போல நினைத்தான்.

அந்த வார்த்தைகள் உண்மையாகப் போவது தெரியாமல். அவனை மீறி தான் எல்லாம் நடக்கப் போவது தெரியாமல்.

ஜெயஸ்ரீக்கு மனதின் அழுத்தம் கூடிக் கொண்டே போனது... சிபியின் வீடு சென்ற பின் இன்னும் அதிகமாகியது.

வஜ்ரவேல் கூட சென்று அவர்களை விட்டு சீர்வரிசையை வைத்தார். அதிகமில்லை ஜெயஸ்ரீயின் உடைகள் அவள் உபயோகிக்கும் பொருட்கள் அவ்வளவே. கூடவே சாங்கியதிற்கு, சில பொருட்கள், பாய் தலைகாணி, விளக்கு, இருவரும் சாப்பிடுவதற்கு தட்டம்.

“என்ன இது? சீர்வரிசைன்னு இதைக் கொண்டு வந்து இறக்குறாங்க” என்பது போல தான் வீட்டுப் பெண்களின் மனதில் எண்ணம். ஆண்கள் அதை ஒன்றும் பெரியதாக நினைக்கவில்லை.

பொருட்களை வைத்து அவர் வாய் வார்த்தையாக எதுவும் சொல்லும் முன்னரே இந்த எண்ணங்கள் அவரவர் மனதில்.

அவர் விட்ட போது மணி பன்னிரண்டு, தேவி, “குடிக்க கொண்டு வா!” என்று நடராஜன் குரல் கொடுக்க... அவருக்கு காபி மட்டும் வந்தது.

உள் சென்ற நடராஜன், “என்ன காபி மட்டும் குடுக்கற, கூட ஏதாவது சாப்பிட வைக்கலையா...”

“சாப்பிடற நேரம் ஆகிடுச்சு! சாப்பிட்டிட்டு தானே போவாங்க! இப்ப என்ன குடுக்க?” என்று மனைவி சொல்லவும், ஒரு வகையில் சரி என்று பட்டாலும், தங்களை அவர் நேற்று எப்படி கவனித்தார்.

கூட ஏதாவது இனிப்பு வகை வைத்திருக்க வேண்டாமா என்று தான்

தோன்றியது. “கூட ஏதாவது பலகாரம் வெச்சிருக்கலாம்!” என்று சொல்லி விட்டே தான் வந்தார்.

நடராஜன் வெளியில் சென்றதும் வஜ்ரவேல், அவரிடம் தனியாக, “நீங்க எல்லோரும் ஒன்னா இருக்கீங்க! அதனால தான் சீர்வரிசைன்னு வேற எதுவும் தனியா வைக்கலை, அதுவும் உங்க பெரிய மருமக, உங்க வீட்ல வளர்ந்த பொண்ணு, நான் சீர் செய்யப் போய் வித்தியாசம் எதுவும் வந்துடக்கூடாது இல்லையா?” என்றார்.

அவருடைய அணுகுமுறை நடராஜனுக்கு அவ்வளவு திருப்தி கொடுத்தது என்றே சொல்ல வேண்டும். நான்கையும் யோசித்து செய்யும் வஜ்ரவேலின் பாங்கு, நடராஜனை மிகவும் ஆகர்ஷித்தது.

“அது பத்தி ஒன்னுமில்லீங்க! உங்க பொண்ணுக்கு நீங்க செய்றீங்க! நான் சொல்ல என்ன இருக்கு?” என்றார் நடராஜன்.

“பொருளா தான் வாங்கிக் குடுக்கலை, என்னோட எல்லா சொத்தும் என் பொண்ணுக்குதான்னாலும் இப்போ எதுவும் செய்யாம விட முடியாது இல்லீங்களா” என்று சொல்லி கையில் சுருட்டி வைத்திருந்த மஞ்சப் பையை நீட்டினார், “இதுல பணம் இருக்கு! என்ன பொருள் தேவையோ என்னவோ அதை வாங்கிக்கலாம்” என்றார்.

நடராஜன் அதைக் கையில் வாங்கவில்லை அதே சமயம், “வேண்டாம்!” என்றும் மறுக்கவில்லை... “சிபி, இங்க வா!” என்று அழைத்தார்.

அவர்கள் என்ன பேசினார்கள் என்று சுற்றி இருப்பவர்களுக்கு கேட்கவில்லை. ஆனால் பேசிவிட்டு வஜ்ரவேல் நடராஜனிடம் ஒரு மஞ்சப் பையை நீட்டவும், அது பணமாகத் தான் இருக்க வேண்டும் என்று எல்லோரின் அனுமானம். முன்பே இதை ஜெயஸ்ரீயிடம் சொல்லியிருந்தார் வஜ்ரவேல். அந்த கூடத்தில் தான் ஒரு மௌன பார்வையாளராக நடப்பது அனைத்தையும் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பாருங்க அத்தை! பொருளா கொண்டு வந்து கொடுத்தா நம்ம எல்லோரும் உபயோகிச்சா என்ன செய்யறதுன்னு இந்தப் பொண்ணோட அப்பா எவ்வளவு விவரமா பணமா கொடுக்கிறார். நம்ம ஏன் இவ பொருளைப் போய் தொடப் போறோம்” என்று தன்

மாமியாரின் காதைக் கடித்தாள் வனிதா.

அவரும் அப்படித்தான் இருக்குமோ என்று நம்ப ஆரம்பித்தார்.

அதற்குள் சிபி அவர்களை நெருங்கவும், “அதை வாங்கிக்கோ!” என்று நடராஜன் அவனிடம் சொல்ல... சிபியோ அதற்கு மேல் இருந்தான், “என்னப்பா இது?” என்றான்

“அவர் சீர்ன்னு தனியா எதுவும் வைக்கலை, பணமா குடுத்துட்டார்!” என்றார்.

அவன், “ஜெயஸ்ரீ” என்று மனைவியை அழைத்தான். அங்கே தான் ஒரு ஸ்டூலில் அமர்ந்து இருந்தாள்.

அவள் எழுந்து மெதுவாக நடந்து வரவும், “அதை வாங்கிக்கோ!” என்றான் அவளிடம்.

ஜெயஸ்ரீ வாங்கிக் கொண்டாள்.

பார்த்துக் கொண்டிருந்த நடராஜனின் அம்மா, தன் கணவரிடம், “வீட்ல இத்தனை பெரியவங்க இருக்கோம், ஒன்னு என்னை வாங்கச் சொல்லலாம், இல்லை உங்களை வாங்கச் சொல்லலாம், இல்லை மருமகளை வாங்கச் சொல்லலாம். அது என்ன அந்தப் பொண்ணை வாங்கச் சொல்றாங்க. இதுவா முறை, பொண்ணுக்குச் செய்யறதுன்னாலும் பெரியவங்க கிட்ட தானே குடுக்கணும், அதுதானே முறை” என்றார்.

“என்ன பேசற? அவங்க பொண்ணுக்கு அவர் செய்யறார்! அது அந்தப் பொண்ணு வாங்கறது தான் முறை” என்று ஈஸ்வரரும் பதில் சொன்னார்.

இது பக்கத்தில் நின்று கொண்டிருந்த தேவி, ராஜலக்ஷ்மி மற்றும் வனிதாவின் காதுகளில் நன்கு விழுந்தது.

“அதுதானே நான் இருக்கக் குள்ள இவர் எதுக்கு சிபியைக் கூப்பிட்டு விடறார்” என்று தன் கணவர் மேல் தான் கோபம் வந்தது தேவிக்கு.

பணம் கொடுத்த வஜ்ரவேல், “அப்போ நான் உத்தரவு

வாங்கிக்கட்டுமுங்களா" என்று கிளம்பப் போக...

"என்ன இது? சாப்பிடாம போவீங்களா, சாப்பிட்டிட்டு தான் போகணும் மச்சான்" என்றார் நடராஜன் வஜ்ரவேலிடம். அவரும் சம்மந்தி சொல்கிறாரே என்று அமர்ந்து கொண்டார்.

வஜ்ரவேல் இன்று பெண்ணையும் மாப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு வருகிறார் என்று தெரியும். ஆனாலும் தடபுடல் விருந்து எல்லாமில்லை மிகவும் சாதாரண விருந்தே...

வஜ்ரவேலோடு உணவுண்ண அமர்ந்த நடராஜனுக்கு முகமே விழுந்து விட்டது. ஒரு வழியாக உணவுண்டு வஜ்ரவேல் கிளம்பவும், அதுவரை அங்கேயே ஒரு ஸ்டூலில் அமர்ந்து நடப்பது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஜெயஸ்ரீக்கு அழுகை பொங்கியது.

தனியான ஒரு உணர்வு, தந்தையையும் தனியாக விட்டு விட்டோம் என்ற உணர்வு.

"கண்ணு கலங்கக் கூடாது கண்ணு, பார்த்து நடந்துக்கோ, எல்லார் கிட்டயும் சகஜமா இரு" என்ற அறிவுரையோடு தந்தை கிளம்பினார்.

என்னவோ ஒரு இனம் புரியாத பயம் வஜ்ரவேலுவிற்கும் அவசரப்பட்டு விட்டோமோ என்பது போல,

அந்த வீட்டில் இருக்கும் பெண்கள் யாரும் இன்னும் ஜெயஸ்ரீயிடம் வந்து பேசவில்லை, அருகில் கூட வரவில்லை, "என்னடா இது? பேசாமல் வீட்டோடு மாப்பிள்ளை பார்த்திருக்கலாம். எப்படி இவள் அங்கிருப்பாள்?" என்று அவருக்கும் மனம் கலங்கி விட்டது.

அவர் பயந்ததற்கு தகுந்த மாதிரி, அங்கு சிபியின் வீட்டிலும் சரியான சத்தங்கள் வஜ்ரவேலு அந்த புறம் வந்ததும்.

சிபியிடம் இருந்தும் அவர்கள் வீட்டினர் யாரும் அப்படி ஒரு பேச்சை எதிர்பார்க்கவில்லை. ஏன் ஜெயஸ்ரீயே எதிர்பார்க்கவில்லை, மனதில் இருந்த சஞ்சலம் பெரும் பயமாக மாற, அத்தனை பேர் அந்த வீட்டில் இருந்தாலும் தனியாக ஒரு மூலையில் அவர்கள் பேசுவதையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கால்கள் சிறிது அமரு என்று கெஞ்சிய போதும் சுவரில் சாய்ந்தது சாய்ந்த படி நின்றாள்.

## அத்தியாயம் பதினைந்து :

வஜ்ரவேல் சென்றதும், நடராஜன் மனைவியை கடிந்து கொண்டார், "ஏன் தேவி இப்படி ஒரு விருந்து?, நீ இப்படிசெய்வன்னு நான் நினைக்கலை, எப்படி கவனிச்சிக்கிட்டாங்க தெரியுமா அவர் வீட்ல, நான் போய் மூக்கு பிடிக்க சாப்பிட்டிட்டு தான வந்தேன்... அவர் என் வீட்டுக்கு வரும் போது இப்படி ஒரு சாப்பாடு தான் நான் போடுவானா?"

"அடுத்தவங்களுக்கு ஒரு நல்ல சாப்பாடு கூட போட முடியாத அளவுக்கு நம்ம வக்கில்லாம போயிட்டோமா.. என்ன பண்ணி வெச்சிருக்க நீ" என்று ஏகத்துக்கும் மனைவியை சத்தம் போட்டார்.

இப்படி சத்தம் போடுவார் என்று தேவி எதிர்பார்க்கவேயில்லை. அதையும் விட அவர் தன் மனைவியிடம் இப்படி என்றுமே சத்தம் போட்டதில்லை, ஏனென்றால் தேவி இப்படி சத்தம் போடும் சந்தர்ப்பத்தை அவருக்கு கொடுத்ததே இல்லை.

இன்று சமைப்பதில் அவர் அசால்டாக இருந்தார் என்பது தான் உண்மை, ஏனோ இன்னும் சிபி ஜெயஸ்ரீயின் திருமணத்துக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை, "இவர் பெண்ணுக்கு இருக்கும் குறைக்கு, அவளைத் திருமணம் செய்ததே அதிகம்" போன்ற ஒரு எண்ணம் தான்.

அதனைக் கொண்டே ஒரு தடபுடல் விருந்து தயாரிக்காமல் ஏனோ தானோ வென்று பெயருக்கு ஒரு சமையல்.

ஆனால் அதற்காக நடராஜன் இவ்வளவு கோபப்படுவார் என்று எதிர்பார்க்கவில்லை. அதுவும் வீட்டினர் எல்லோர் முன்னிலையிலும் இப்படி சத்தம் போடவும், இன்னும் அதிகமாக புதிதாக வந்த ஜெயஸ்ரீயின் முன் சத்தம் போடவும், அவருக்கு கண்கள் கலங்கி விட்டது.

தேவி பேச முடியாமல் நின்றார். அவர் செய்தது தவறு தான்.

சிபி அம்மா கலங்கியது பொறுக்காமல், “அப்பா, விடுங்க! சாப்பிட்டுட்டு அவரே போயிட்டார். இப்ப எதுக்கு சத்தம் போடறீங்க” என்று சமாதானமாக பேசினான்.

“சிபி, என்ன நினைச்சிருப்பார் அவர் நம்மளைப் பத்தி, இன்னும் கல்யாணத்துக்கு ஆனா செலவுல ஒரு பைசா நம்ம குடுக்கலை, ஏன் எவ்வளவு ஆச்சுன்னு கூட இன்னும் நான் கேட்கலை... நேத்து நம்மளை எப்படி கவனிச்சார், இதுல வீட்டுக்கு வந்தவருக்கு ஒரு நல்ல சாப்பாடு கூட போட மாட்டோமா... இது தான் நம்ம வீட்டு மரியாதையா”

“ஒரு சாம்பார், ஒரு புளிக்குழம்பு, ஒரு பொரியல், இதுதான் நம்மளால செய்ய முடியுமா? அதுவும் புளிக்குழம்பு என்ன போட்டு? பாவக்காய் போட்டு!”

“எந்த மடையனும் இந்த மாதிரி ஒரு சமையலை முதல் முதலா வீட்டுக்கு வர்ற சம்மந்திக்கு போட மாட்டான். எனக்கு மனசே ஆறமாட்டேங்குது!” என்று திரும்பவும் கத்த...

தேவியின் கலங்கிய கண்களில் இருந்து கண்ணீர் இறங்கியது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த ஜெயஸ்ரீக்கு பதட்டம் ஏற ஆரம்பித்தது.

“அப்பா விடுங்க!” என்று சிபியும் சொல்ல... ஈஸ்வரரும், “இன்னொரு நாள் கூப்பிட்டு நம்மளும் சிறப்பா செஞ்சிடலாம்! விடுடா!” என்று சொல்லிக் கொண்டு இருக்க...

“நீங்க வாங்க அத்தை!” என்று வனிதா அழும் தேவியை சமாதனம் செய்ய உள் அழைத்துப் போக முயன்றாள்.

அதோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை, கூடவே, “வந்த முதல் நாளே மாமியாரை அழ வெச்ச பெருமை யாருக்கு வரும், ரொம்ப திறமைசாலி!” என்று ஜெயஸ்ரீயின் காதில் படும்படி சொல்லிக் கொண்டே போக...

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஜெயஸ்ரீயின் முகம் கன்றி விட்டது. கண்களில் நீரும் நிறைந்து விட்டது. அதை வெளியே விடாமல் இருக்க பெரு முயற்சி செய்து கொண்டிருந்தாள் ஜெயஸ்ரீ.

வனிதா சொல்லியது என்ன என்று சிபிக்கு கேட்கவில்லை, ஆனால் ஏதோ சொல்வதும் உடனே ஜெயஸ்ரீயின் முகம் மாறியதும் பார்த்துக் கொண்டு தானிருந்தான். கூடவே ஜெயஸ்ரீயின் கண்களில் நீரும் நிறைந்ததைப் பார்த்தான்.

முகம் துடைப்பது போல ஜெயஸ்ரீ, அதைத் துடைத்து விட்டதையும் பார்த்தான்.

சிபிக்கு கோபம் சட்டென்று ஏறியது...

“அண்ணி நில்லுங்க” என்று வனிதா முன் சென்று நின்றான்.

அவன் சொன்ன விதமும், அவன் நின்ற விதமும் வனிதாவிற்கு ஒரு பயத்தைக் கொடுக்க, சுற்றிலும் பார்த்தாள், தன் கணவன் இருக்கிறானா என்பது போல,

அருள் மொழி அங்கு தான் இருக்கவும், சற்று தைரியமாக, “என்ன?” என்று நின்றாள்.

“என்ன சொன்னிங்க இப்போ?”

“நான் என்ன சொன்னேன்”

“என்னவோ சொன்னிங்க! தைரியம் இருந்தா சொன்னதை அப்படியே சொல்லுங்க” என்றான்.

“என்ன மிரட்டுற! பயந்துக்குவேணா”

“பயமில்லைல்லா சொல்லுங்க” என்று அப்படியே நின்றான்.

ஜெயஸ்ரீக்கு, “ஐயோ! இவர் ஏன் இதைப் பெரிது படுத்துகிறார். ஏற்கனவே என்னிடம் இன்னும் யாரும் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை! இதில் ஏன் இவர் எப்படி செய்கிறார்” என்பது போல நினைத்திருக்க,

“இங்க வா!” என்று ஜெயஸ்ரீயை அதட்டினான். ஜெயஸ்ரீ போவதா வேண்டாமா என்று குழம்பி நிற்க,,,

“வான்னு சொன்னேன்!” என்று ஏறக்குறைய கர்ஜித்தான்.

“டேய்! என்னடா?” என்று அவன் போட்ட சத்தத்தில் நடராஜனும் அருள் மொழியும் வேகமாக அருகில் வந்தனர்.

“இவங்க ஏதோ சொன்னாங்க, சொன்னாங்க தானே!” என்று ஜெயஸ்ரீயிடம் கேட்க...

“இல்லை!” என்பது போல வேகமாக ஜெயஸ்ரீ தலையாட்டிய விதமே வனிதா ஏதோ சொன்னால் என்று அங்கிருந்த அத்தனை பேருக்கும் புரிந்தது.

எல்லோர் முகத்திலும் சலிப்பு, “ஐயோ இப்போது வேறா?” என்பது போல,

புது பிரச்சனை வேண்டாம் என்பது போல தேவி, “இல்லை, அவ ஒன்னும் சொல்லலை!” என்று பிரச்னையை முடிக்க வேண்டி சொல்ல...

அம்மாவை ஒரு பார்வை பார்த்த சிபி, திரும்பி ஜெயஸ்ரீயையும் முறைக்க, “விட்டுடுங்க” என்ற கெஞ்சல் தான் அவளின் பார்வையில் இருந்தது.

“வேண்டாம்! விட்டு விடலாம்!” என்பது போல அந்த இடத்தை விட்டு நகரப் போனான்.

அருள் மொழி வனிதாவை அதட்டினான், “நீ வாயை வெச்சிக்கிட்டு சும்மாவே இருக்க மாட்டியா” என்று.

சிபி இவ்வளவு தன்னை அதட்டியும் அருள்மொழி அவனைக் கேள்வி கேட்காதது... அதுமட்டுமன்றி எப்போதும் சிபி அவளை அதட்டுவது, எல்லாம் சேர்ந்து கொதிநிலைக்கு கொண்டு போனது வனிதாவை.

தன் கணவனிடம், “என்ன? என்ன சொன்னேன்?, கல்யாணமாகி ரெண்டு நாள் ஆகுதுப் போகுது, அந்தப் பொண்ணு ஒரு பார்வை பார்த்தா உங்க தம்பி பேசாம போறார், நீங்க என்னை நிக்க வெச்சி பேசறீங்க! மாமா, அத்தையை அவ்வளவு திட்டுறார்! இந்த சாகசம் எங்களுக்கு தெரியலை!” என்று சொல்லவும்,

ஜெயஸ்ரீக்கு அவமானத்தில் முகம் சிறுத்து விட்டது. இந்த மாதிரி பேச்சுக்கள் அவளுக்கு பழக்கமே இல்லை. அந்த இடத்திலேயே நிற்க பிடிக்கவில்லை, எங்கே போவது என்றும் தெரியவில்லை.

சிபிக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை...

“எங்கேர்ந்து இந்த மாதிரி பேச்சு எல்லாம் கத்துக்கிட்டீங்க, இந்த வீட்ல இதுவரைக்கும் இந்த மாதிரி யாரும் பேசினதே இல்லை... சாகசம்! என்ன வார்த்தை இது! எங்க கத்துக்கிட்டீங்க? உங்க ஓடிப்போன தங்கச்சி கிட்ட இருந்தா..”

“சிபி” என்று கத்திவிட்டாள் வனிதா, “எதுக்கு எதைப் பேசற?”

“அப்படித்தான் பேசுவேன்! இன்னைக்கு வீட்டுக்கு வந்திருக்குற பொண்ணை பார்த்து நீங்க என்ன வார்த்தை பேசறீங்க” என்று சிபியும் பதிலுக்கு கத்தினான்.

“என்ன? உன் பொண்டாட்டி, அவளைப் பத்தி நான் எதுவும் பேசக் கூடாதா?”

“பேசலாம்! தாராளமா பேசலாம்! ஆனா உரிமைல பேசறது வேற! இப்படி பேசறது வேற!”

“என்ன அவ ரொம்ப ஒழுங்கோ! உன் கல்யாணம் நின்னதுக்குக் காரணமே அவ தான்!”

“என்ன உளர்றீங்க? பைத்தியம் பிடிச்சிடுச்சா உங்களுக்கு!” என்றான்.

ஆனால் இது என்ன புது விஷயம் வனிதா சொன்னது. என்ன என்பது போல அனைவர் பார்வையும் ஜெயஸ்ரீ மேல்... இன்னுமே ஒடுங்கிப் போனால் ஜெயஸ்ரீ.

“என்ன சொல்லுங்க?” என்று சிபி கத்த,

“அதெல்லாம் சொல்ல முடியாது!” என்று வனிதா பின்னடித்தாள். அவள் பேசியது அவளுக்கே சற்று அபத்தமாகத் தோன்றியது. அந்த திருமணத்தில் ஜெயஸ்ரீ என்ன செய்தாள் என்று வனிதாவிற்குத் தெரியும். அதைக் கொண்டு தான் அந்த வார்த்தைகள்.

“என்ன சொல்ல முடியாதா? என்ன திமிர் உங்களுக்கு? ஒரு பொண்ணைப் பார்த்து ஒழுங்கான்னு கேட்டுட்டு, காரணம் கேட்டா சொல்லமாட்டீங்களா!” என்று அவன் சொன்ன விதத்தில்,

“ஐயோ! இவனை நிறுத்தவே முடியாது!” என்று அங்கிருந்த அனைவருக்கும் தெரிந்தது.

ஜெயஸ்ரீ சுவரில் சாய்ந்து நின்று விட்டாள், “என்ன நடக்குமோ?” என்று, மனதில் அப்படி ஒரு பயம்.

சிபி மிரட்டலாக அதட்டி பேசுவதால் ஜெயஸ்ரீக்கு அதுவரையிலும் அவனின் குணம் பிடிபடாமல் இருந்தது. அவன் தனக்காக இவ்வளவு பேசுவான் என்று கனவிலும் ஜெயஸ்ரீ நினைக்கவில்லை. இதுவரை சிபி பேசியது பிரச்னையானாலும் அவன் தன்னை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்கவில்லை என்று புரிந்தே இருந்தது.

அது மனதிற்கு அப்படி ஒரு இதத்தைக் கொடுத்தாலும், கண்ணன் ராதாவின் விஷயம் தெரிந்தால் என்னிடம் எப்படி நடந்து கொள்வாரோ என்று மிகவும் பயந்து விட்டாள்.

அவள் செய்தது எல்லாம் ஒன்றுமில்லை என்று நினைத்தால் ஒன்றுமில்லை. ஆனால்? அவர்களின் திருமணத்திற்கு மணப்பெண்ணின் சார்பாகச் சாட்சிக் கையெழுத்து போட்டதே ஜெயஸ்ரீ தானே.

ஆனால் சத்தியமாக சிபியுடனான ராதாவின் திருமணம் பற்றி தெரியாது. அதை அவள் செய்ததற்கான காரணம், எவனும் தனக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற ஒரு செயல் தான்.

கண்ணன் யாரை திருமணம் செய்தாலும் தனக்கு ஒன்றுமில்லை, ஏதோ அவளின் தந்தை உதவி செய்து விட்டாரே என்று, அதுவும் அவளுக்கு குறைகள் இருப்பதால் அவளை நிராகரிக்க முடியாமல் திருமணம் செய்து கொள்ள அவன் இருப்பதை அறிந்தவள்...

“எனக்கு நீ தேவையில்லை” என்று நேரடியாக சொன்னாள் திக்கலின்றி,

“இல்லை! உங்களுக்கு மனசுக்கு கஷ்டமா இருக்கும்” என்று அவன் சொன்ன போது,

“ஒரு கஷ்டமும் இல்லை! உங்களுக்கு ஏதாவது உதவி தேவைன்னா கேளுங்க!” என்று வார்த்தை விட

அவன் பெண் சார்பாகச் சாட்சிக் கையெழுத்து போடக் கூப்பிட, அவள் அதைச் செய்தாள்.

ஆனால் சிபி இதை புரிந்து கொள்வானா?

அருள் மொழி பக்கத்தில் வந்து, “டேய், விடுடா! அவ சொன்னது தப்பு தான்! அதுக்காகத் திமிர்ன்னு எல்லாம் ஏன் பேசற?”

“திமிர் சொன்னா தப்பு! ஆனா இவங்க இவளைப் பார்த்து ஒழுங்கான்னு கேட்கலாமா?”

மனைவிக்கு பரிந்து, “அது சும்மா பேச்சு வாக்குல பேசறது தான்... அதோட அர்த்தத்தைக் கொண்டு இல்லை”

“அருள், சும்மா பேசாத பேச்சு வாக்குன்னு... இன்னும் அவ இந்த வீட்டுக்குள்ள வந்ததுல இருந்து, அம்மா, அத்தை, அண்ணின்னு யாரும் ஒரு வார்த்தை பேசலை..”

தன் மகன் இவ்வளவு கவனிப்பான் என்று தேவிக்கு அன்று தான் தெரியும். இவன் இவ்வளவு மரியாதை அந்த பெண்ணிற்கு கொடுப்பான் என்று தெரிந்திருந்தால் வந்தவுடனே அவளிடம் பேசியிருப்பார். அவன் திருமணம் நிச்சயாமனது முதல் இருந்த நடவடிக்கைகளைப் பார்த்து அவனுக்கு அந்த பெண்ணை பிடிக்கவில்லை என்று தான் நினைத்திருந்தார்.

“ப்ச்! என்னடா பிரச்சனை? கணவரிடம் இன்னும் நிறைய திட்டு விழப் போகிறது” என்பது அந்த பெண்மணிக்கு நிச்சயம் தெரிய, நடராஜனைப் பார்க்க, அவர் தேவியைத் தான் முறைத்துக் கொண்டிருந்தார். அவர் வஜ்ரவேலை கவனிப்பதில் இருந்ததால் இதைக் கவனிக்கவில்லை என்பது ஒரு புறம், இன்னொரு புறம் அவரின் மனைவி இப்படி நடப்பார் என்று அவர் நினைத்ததேயில்லை.

“என்ன செய்திருக்கிறாய் நீ” என்பது போல தேவியை முறைத்தார்,

அவசரமாக தேவி, “விடுடா! இவளை நான் பார்த்துக்கறேன்” ஜெயஸ்ரீயை, “நீ வாம்மா” என்று தேவி அருகில் அழைக்க,

“அதெல்லாம் அப்புறம், நீங்க பார்த்துக்காம யாரு பார்த்துக்குவா! உங்களை நான் விடறதா இல்லை, அவங்கப்பா இருந்தார்ன்னு தான் பேசாம இருந்தேன்!”

“முதல்ல அண்ணி ஏன் அப்படி சொன்னாங்க அதை சொல்லுங்க”

எல்லோரும் இப்போது வனிதாவை முறைத்தனர். அதுவும் அருள்மொழி பார்த்த பார்வை...

“இல்லை, இல்லை, ஒன்னுமில்லை, சாரி தெரியாம உளறிட்டேன்” என்று வனிதா உடனே இறங்கி வந்தாள்.

“ஐயோ! இது முடிந்துவிட்டால் போதும்!” என்பது போல ஜெயஸ்ரீயும் வேண்டி நிற்க...

ஆனால் சிபி விடுவதாயில்லை, “சொல்லுங்க” என்று ஸ்திரமாக நிற்க...

வனிதா வாயைத் திறக்கவில்லை. திரும்பி ஜெயஸ்ரீயை ஒரு பார்வை பார்த்தான், “நீ இதில் ஏதாவது செய்தாயா?” என்பது போல...

சொல்லிவிடுவதே உத்தமம் என்பது போல ஜெயஸ்ரீக்கு தோன்ற, முயன்று திக்கி பேசினாள்..

“நான், நான்...” என்று அவள் திக்கும் போதே, எப்போதும் அவளைப் பேசச் சொல்லும் சிபி, எல்லோர் முன்னிலும் அவள் தடுமாறி நிற்பதை காண சகியாமல், “இரு!” என்பது போல சைகை செய்தவன், பக்கத்தில் இருந்த ஒரு பேப்பர், பென் கொடுக்க,

“நான் சாட்சிக் கையெழுத்துப் போட்டேன், அவங்க கல்யாணத்துக்கு!” என்று எழுதி அவனிடம் நீட்டினாள்.

இது என்ன என்று அதைப் பார்த்ததும் சிபி குழம்பினான்... உடனே அவளிடம், “நீ சாட்சிக் கையெழுத்துப் போட்டியா!” என்றான் அவள் எழுதியது எல்லோருக்கும் தெரியட்டும் என்பது போல,

“ஆமாம்” என்பது போல கலக்கத்தோடு ஜெயஸ்ரீ தலையாட்ட,

வனிதா, “தெரிந்து விட்டதா” என்பது போல பார்க்க... “இது என்ன?” என்பது போல எல்லோரும் மீண்டும் ஜெயஸ்ரீயை குற்றம் சாட்டும் பார்வை பார்க்க...

சிபி ஜெயஸ்ரீயிடம், “அப்போ உனக்கு அந்தப் பொண்ணை தெரியுமா?”

“தெரியாது” என்பது போல தலையாட்டினாள்.

“என்னைத் தெரியுமா”

“தெரியாது” என்பது போல தலையாட்டினாள்.

“எங்க கல்யாணம் அடுத்த நாள் நடக்க இருந்தது தெரியுமா?”

“தெரியாது” என்பது போல தலையாட்டினாள்.

இத்தனையைக் கேட்டவன், “எதுக்கு கையெழுத்துப் போட்ட” என்று கேட்கவில்லை.

சிபி வனிதாவை பார்த்தவன், “இது எப்படி உங்களுக்கு தெரியும்” என்றான்.

“ஐயோ! என்ன இது?” என்பது போல வனிதா தடுமாற...

“கண்டிப்பா இவ சொல்லியிருக்க மாட்டா!” என்று ஜெயஸ்ரீயைக் காட்டியவன், “ஏன்னா நீங்க அவ கிட்ட பேச்சுக் குடுக்கவேயில்லை! அதுமட்டுமில்லாம அவ என்கிட்டயே இன்னும் சரியா பேச ஆரம்பிக்கலை! அப்புறம் உங்ககிட்ட எங்க சொல்லுவா?”

“ஸோ, நீங்க உங்க தங்கச்சிக் கிட்ட பேசறீங்க! அப்படிதானே! அதுவும் என் பொண்டாட்டிய அவ உங்க கிட்ட குறை சொல்றாளா” என்று கேட்ட விதத்தில் எங்கே விட்டால் ராதாவை நேரில் போய் பார்த்து திட்டுவான் போல தோன்றியது.

“இல்லையில்லை, அவ குறை சொல்லலை, நடந்ததை சொன்னா! அவ்வளவுதான்!”

“அப்போ நீங்க ஏன் குறை சொல்றீங்க? என்ன சொல்ல வர்றீங்க? உங்க புருஷனை விட்டு யாரோ சொன்னா யாரோடவோ போயிடுவீங்களா?” என்று வார்த்தையை சாட்டைகளாய் சுழற்றினான்.

“சிபி, என்ன பேச்சு இது” என்று ஆளுக்கு ஒரு பக்கம் சத்தம் போட்டனர்.

“சரி வேண்டாம், கல்யாணத்துக்கு முன்னாடி சொல்லியிருந்தா மட்டும் என் அண்ணனை விட்டுப் போயிருப்பாங்களா?”

“டேய்! என்னடா பேசற?” என்று அருள்மொழி கோபப்படவும்...

“கேட்கற நமக்கு இது எவ்வளவு அசிங்கமா இருக்கு! அப்புறம் இவங்க தங்கச்சி போனதுக்கு இவளை ஒழுங்கான்னு கேட்பாங்களா? இவளைக் காரணம் சொல்வாங்களா?” என்று சிபி கோபப்படவும்,

ஜெயஸ்ரீக்கு தாங்க முடியாத அழுகை, “ஏன்?” என்று தெரியவேயில்லை. இப்படி ஒரு ஆதரவை சிபியிடம் இருந்து ஜெயஸ்ரீ எதிர்பார்க்கவேயில்லை.

கூட சில வருடங்கள் வாழ்ந்தவர்கள் கூட மனைவிக்கு குடும்பத்துள் ஒரு பிரச்சனை என்று வரும் போது கூட நிற்க மாட்டர், மாமனாரோ மாமியாரோ இல்லை நாத்தனார் அல்லது அண்ணன் தம்பி மனைவிகள் வாயில் விழுந்து அவள் அரைபடும் போது பார்த்துக் கொண்டு தான் நிற்பார்.

வனிதாவிற்கு தோன்றியது எல்லாம் ஒன்றே தான், “இந்த சிடுமூஞ்சிப் பய கிட்ட இருந்து என் தங்கச்சி தப்பிச்சிட்டான்னு நினைச்சேனே... இல்லையில்லை... இவன் கூட வாழ அவளுக்கு தான் குடுத்து வைக்கலை...”

“இன்னும் என் பொண்டாட்டி என்கிட்டேயே சரியா பேசலை, உன்கிட்ட எப்படி சொல்லியிருப்பான்னு கேள்வி கேட்கிறான். பேசாதப்போவே இப்படி கவனிக்கிறான் இன்னும் பேசினா...”

“இப்ப என்ன பண்ணனும்ங்ற” என்று வனிதா இறங்கி வர...

“இந்த மாதிரி ஜாடை பேசறது, மரியாதையில்லாம பேசறது,

இதெல்லாம் இருக்கக் கூடாது… நீங்க அவகிட்ட பேசறதும் பேசாததும் உங்க விருப்பம்” என்றவன்,

அருள் மொழியிடம் திரும்பி, “இன்னும் உன் வீட்டுக்காரம்மா அவங்க தங்கச்சிக்கு அக்காவா தான் இருக்காங்க, என் அண்ணியா இல்லை போல”.

“ஆனா நான் இன்னும் அண்ணியா தான் நினைக்கிறேன், உனக்காக தான் அமைதியா போறேன்” என்று சொல்லி சிபி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

தேம்பியபடி ஜெயஸ்ரீ தடுமாறி அவன் பின் போனாள்… இப்படி ஒரு சிபியை யாருமே கற்பனை செய்தது கூட இல்லை. அப்போதும் அழாத என்று ஜெயஸ்ரீயை தேற்றவெல்லாம் இல்லை, மௌனமாக அவளின் பொருட்களை எடுத்து அவர்களுக்கு என்று இப்போது புதிதாய் ஒதுக்கப்பட்ட ரூமில் வைத்தான்.

ஜெயஸ்ரீ அவனிடம் கண்ணனின் திருமணத்தில் நடந்தது என்ன என்று சொல்ல முற்பட… அவள் திணறி பேச முற்படும் போதே,

“அவங்களைப் பத்தி எதுவும் பேசாத, எனக்குத் தலைவலிக்குது, எரிச்சலா வருது, ஆமா என்ன வயசு உனக்கு, நீ போய் ஒரு கல்யாணத்துல சாட்சிக் கையெழுத்துப் போடுவியா… உன்னை போட வெச்சிருக்காங்க… அந்தப் பய மட்டும் என் கண்ல மாட்டட்டும் அப்புறம் இருக்கு அவனுக்கு”

“இதுவரைக்கும் எப்படியோ? இனிமே என்னைக் கேட்காம எந்த வேலையும் செய்யக் கூடாது” என்று அவளை அதட்டியவன் ஒன்றும் பேசாமல் அப்படியே தரையில் படுத்து விட்டான்.

பொதுவாக கீழே அமரமாட்டாள் ஜெயஸ்ரீ, அன்று இருந்த காலின் வலியில் அப்படியே சுவரோடு சரிந்து அமர்ந்து விட்டாள்.

குடும்பத்தாரின் சொற்களில் இருந்து காப்பாற்றி விட்டான், ஆனாலும் இன்னும் அவளைத் தோள் சாய்த்துக் கொள்ளவில்லை.

இருவரும் ஆளுக்கு ஒரு புறம் பார்த்து இருந்தனர். இன்னும் வாழ்க்கை

அவர்களுக்கு நிறைய நிறைய சோதனைகள் வைத்திருந்தது.

திருமண பந்தத்தை சிபி மதித்தான்.. மனைவியையும் மதித்தான்.. அதனைக் கொண்டே அத்தனை பேரையும் பேச விடாமல் செய்தான்.

மனைவிக்கு மதிப்பு மிகவும் முக்கியம் தான். அதை விடவும் காதல் முக்கியம் அல்லவா...

சிபி நல்லவனா கெட்டவனா என்ற ஆராய்ச்சி ஒரு முடிவிற்கு வந்தது... சிபி நல்லவன் தான். மனைவியை விட்டுக் கொடுக்காத கணவன் கூட... ஆனால் காதலனா ?

## அத்தியாயம் பதினாறு :

இருவரும் அப்படியே தான் இருந்தனர், சிபி படுத்து, ஜெயஸ்ரீ அமர்ந்து, அதுவும் காலில் ஷூ இருந்ததினால் அந்தக் காலை மடக்க முடியாது, ஷூ அணிந்த கால் நீட்டி இருந்தது, இன்னொரு கால் மடக்கி இருந்தது.

நேரம் மதிய உணவு நேரத்தைக் கடந்து இருக்க, இருவரும் வெளியே வருவதாக காணோம், ஜெயஸ்ரீ அவளிடம் கொடுத்த பணப் பையைக் கூட வெளியே விட்டு வந்திருந்தாள். இன்னும் ஜெயஸ்ரீயின் பொருட்கள் பல வெளியில் இருந்தது.

சிறிது நேரம் பார்த்த நடராஜன், “போ! போய் அவங்களைக் கூப்பிட்டு சாப்பிட சொல்லு, இது அந்தப் பொண்ணுக்கு புது இடம். அவளை நீ தான் பார்த்துக்கணும் தேவி. வீணா வீட்ல பிரச்சனை வளர்க்காத, வனிதா மாதிரி இல்லை, அவ இந்த வீட்ல வளர்ந்த பொண்ணு, அவளுக்கு நீ தனியா எதுவும் சொல்லணும்னு அவசியமில்லை. ஆனா ஜெயஸ்ரீ அப்படிக் கிடையாது”.

“கொஞ்ச நாள் அந்தப் பொண்ணு இங்க நல்லா பழகற வரை நீதான் பார்த்துக்கணும். நான் யாரையும் எதுவும் கேட்கமாட்டேன். உன்னை மட்டும் தான் கேட்பேன், இல்லை முடியாதுன்னா சொல்லிடு” என்று கண்டிப்பாக சொல்லவும்,

“என்னங்க இப்படி பேசறீங்க? நான் யாரை இதுவரை சரியா பார்த்ததில்லை, ராஜலக்ஷ்மி, அவங்க பசங்க, அத்தை, மாமா, இதுவரை

ஏதாவது தப்பு சொல்லியிருக்கீங்களா”

“அப்படி இருந்தவ இப்படி எப்போ மாறின? உன் பையனோட அம்மால இருந்து அந்தப் பொண்ணோட மாமியாரா மாறிட்டியா? என்னோட மரியாதை உனக்கு தெரியலை, ஜெயஸ்ரீயோட அப்பான்னு தானே அவ்வளவு அலட்சியமா ஒரு விருந்து” என்று கேள்விகளால் சுட,

மீண்டும் தேவி கண்கள் கலங்க... “போ! போய் அவங்களைப் பாரு, இந்தப் பணத்தை பத்திரமா வைக்கச் சொல்லி குடு” என்று சொல்லி சென்று விட்டார்.

“சிபி” என்று தேவி குரல் கொடுக்க, “என்னம்மா?” என்று எப்போதும் உடனே குரல் கொடுப்பவன் அன்று குரல் கொடுக்கவேயில்லை. ரூம் கதவு அகலமாக திறந்து இருக்க என்ன செய்கிறார்கள் என்று பார்க்க,

சிபி படுத்து இருப்பது மட்டும் தான் தெரிந்தது, அந்த பார்வை வட்டத்தினுள் ஜெயஸ்ரீ வரவில்லை...

“இந்தப் பொண்ணு எங்க போச்சு! இவன் பதில் கூட சொல்ல மாட்டேங்கறான்” என்று ரூமின் உள் சென்று, “சிபி” என்று மறுபடியும் கூப்பிட... அப்போதுதான் கூப்பிடுவதையே க்ரகித்தான் சிபி.

“அம்மா!” என்று அவசரமாக எழுந்து அமர்ந்தான். இருவரும் ஜெயஸ்ரீ எங்கே என்பது போல பார்க்க, சுவரோரமாக சரிந்து அமர்ந்து இருந்தாள்... ஒரு கால் மடக்கி ஒரு கால் நீட்டி, பார்கவே பாவமாக இருந்தது அந்தத் தோற்றம், அவர்களைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“சாப்பிட வாங்கடா!” என்று தேவி சொல்லவும், “ம்” என்று எழுந்தான், எழுந்தவனிடம் பையை நீட்ட, “இங்க எங்கம்மா பீரோ இருக்கு, நீயே வெச்சிரு!” என்றான்.

“துணி மணி வைக்க பீரோ வேணும் தானேடா!” என்றார்.

“இப்போ போகும்போது தான் இவங்கப்பா உங்களுக்கு பிடிச்ச மாதிரி என்னென்ன பொருள் வேணுமோ வாங்கிக்கங்கன்னு சொல்லிட்டு போறார்”

“அப்புறம் வாங்கலாம், இந்தப் பணத்தை நீயே வைம்மா, அவகிட்ட இருக்குற நகையும் கொடுக்கறேன்” என்று சொல்லியபடியே வஜ்ரவேல் அவனுக்கு அணிவித்த செயின், பிரேஸ்லெட், மோதிரம் என்று அத்தனையும் கொடுக்க, பார்த்திருந்த ஜெயஸ்ரீயும் ஒரு செயின் வளையல் மட்டும் அணிந்து கொண்டு, அவள் அணிந்து இருந்ததையும் கழற்றி அமர்ந்த படியே நீட்டினாள்.

“எதுக்கு இப்படி எல்லாத்தையும் கழட்டி குடுக்கறீங்க! புதுப் பொண்ணு உன்னை நாலு பேர் பார்க்க வருவாங்க! போட்டுட்டு இரு!” என்று தேவி சொல்ல,

ஜெயஸ்ரீ சிபியின் முகம் தான் பார்த்தாள்,

“வேண்டாம்மா வீட்ல இருக்குற எல்லா நகையும் பேங்க்ல இருக்கு, இப்ப இவ மட்டும் நகை போட்டுட்டு சுத்துவாளா” என்று கூறி ஜெயஸ்ரீயை பார்வையால் அளந்தான்.

அவள் கழுத்தில் சங்கிலி, கையில் வளவி என்று இருக்க, “இது போதும், கொண்டு போங்க!” என்று அமர்ந்த படி நீட்டிக் கொண்டிருந்த அவள் கையில் இருந்து வாங்கி அம்மாவிடம் கொடுத்தான்.

மற்றுமொரு பையை கை நீட்டி ஜெயஸ்ரீக் காட்ட, “என்ன?” என்று கேட்டுக் கொண்டே சிபி அதைப் பார்க்க.. அதிலும் நகைப் பெட்டிகள்,

பெண்ணுக்கு நிறைய செய்திருக்கிறார் என்பது தேவிக்கு புரிந்தது. இவ்வளவு செய்த மனிதருக்கு தாங்கள் உரிய மரியாதை கொடுக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க, செய்தாலும் செய்யாவிட்டாலும் மனிதர்கள் மதிக்கப் படவேண்டியவர்கள் தான், தேவிக்கு இன்னும் குற்ற உணர்ச்சியாகப் போய்விட்டது.

இன்னும் ஜெயஸ்ரீ ஏதோ சொல்ல வருவது மாதிரி சிபிக்கு தோன்ற, “என்ன?” என்று அவளின் அருகில் சென்று கேட்டான் சிபி.

“இது, இது எல்லாத்தையும் இங்க வீட்ல அப்பா காட்டச் சொன்னார்” என்றாள் திக்கி திக்கி…

போட்டனுப்பும் நகைகளை எல்லோரிடமும் காட்டுவது வழமை தானே!

“அப்புறம் காட்டிக்கலாம், நீ கொண்டு போய் வைம்மா” என்று முடித்து விட்டான் சிபி…

தேவி சென்று விட, “சாப்பிடப் போகலாம்” என்று சிபி மடமடவென்று வெளியே போய் விட்டான்.

அவள் கீழே அமர்ந்து இருக்கிறாள், எப்படி எழுவாள் என்றெல்லாம் யோசிக்கவேயில்லை.

அந்த ஷூவோடு எழ முயன்று முடியாமல், கதவு வேறு திறந்திருக்க யாரும் வருகிறார்களா என்று பார்த்து, அவசரமாக அந்த ஷூவை கழற்றி, எப்படியோ அமர்ந்த வாக்கிலேயே கையை ஊன்றி சுவற்றைப் பிடித்து எழுந்தாள்… ஆனால் எழுவதற்குள் சிரமப்பட்டுப் போக கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது.

இதுவரை பெரிதாக தெரியாத குறைகள் இப்போது மிகவும் பெரிதாக தெரிந்தது. “ஐயோ! என் காலம் எப்படிப் போகுமோ!” என்ற பயம். இதுவரை அப்பா ஒரு சிரமமும் தெரியாமல் வளர்த்துவிட்டார், சொல்லப் போனால் கண்ணுக்குள் வைத்து தான் பார்த்துக் கொண்டார்.

இப்படிப்பட்ட சண்டைகள், சச்சரவுகள், பேச்சுக்கள் எல்லாம் புதிது அவளுக்கு.. சிபி எங்கேயும் விட்டுக் கொடுக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க, அவனைத் திருமணம் செய்ததால் தானே பேச்சுக்கள், சாகசம் என்கிறார்கள், திறமைசாலி என்கிறார்கள், ஒழுங்கா என்கிறார்கள்…

எதுவும் வேண்டாம், திருமணம் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், அப்பா வீட்டிற்கே போய் விடலாம் போலத் தோன்றியது. எதுவும் பிடிக்கவில்லை யாரையும் பிடிக்கவில்லை.

“அப்பா! ஏன் இப்படி செய்து விட்டார்?” என்று கோபமாக வந்தது.

இதுவரை அம்மா இல்லாதது நிறைய வருத்தத்தை கொடுத்தது இல்லை. அப்பா அது தெரியாமல் தான் வளர்த்தார்… இப்போது அம்மா இருந்திருந்தால் இன்னும் நன்றாகப் பார்த்துக் திருமணம் செய்து கொடுத்திருப்பார்களோ என்று தான் தோன்றியது.

இதுவரை பெரிய பெண்ணாக அவள் தன்னைக் காட்டிக்

கொண்டிருந்தாலும் சிறிய பெண் தானே... பக்குவப்பட்டவள் தான், ஆனால் எல்லா நேரமும் அது கைக் கொடுக்காதே

எல்லாவற்றையும் விட அவள் யாரிடமும் பேசுவதில்லை என்பது மிகப் பெரிய கொடுமை... பேச்சு திக்குவதால் பரிகசிப்பார்களோ என்று யாரிடமும் பேசுவதே இல்லை... தந்தையுடன் மட்டும் தான், அதுவும் மனம் விட்டு எல்லாவற்றையும் பேசுவாள் என்று சொல்லிவிட முடியாது...

ஆனாலும் இப்போதைக்கு அப்பாவை மனம் அதிகம் தேடியது.

எழுந்தவள் மீண்டும் சுவரோடு சாய்ந்து நின்று விட்டாள்.. கையைக் கழுவி உணவு உண்ண சிபி அமர்ந்த போது, “எங்கடா ஜெயஸ்ரீ?” என்று தேவி கேட்க...

அவள் கீழே ஷூ வோடு அமர்ந்து இருந்தது ஞாபகத்தில் வர, அப்படியே எழுவது சிரமம் என்று புரிந்து வேகமாக சிபி உள்ளே சென்று பார்க்க,

ஷூ கீழே இருக்க, அவள் சுவற்றில் சாய்ந்து நின்றிருப்பதை பார்த்தவனுக்கு, எழுவதற்கு மிகவும் சிரமப்பட்டு போயிருப்பாள் என்று புரிந்தது.

அவசரமாக அருகில் வந்தவன், “சாரி! சாரி! நிஜமா கவனிக்கலை, வலிச்சதா” என்று கேட்கவும்,

தேம்பி தேம்பி அழத் துவங்கினாள்...

“ரொம்ப வலிச்சதா! ப்ச்! நான் கவனிக்கலை! அழாத!” என்று முதல் முறையாகச் சற்று கனிவாக சமாதானப்படுத்தும் நோக்கில் பேசவும், இன்னும் அதிகமாக தேம்பினாள்.

எப்படி சமாதானப்படுத்துவது அவளை என்று சிபிக்கு தெரியவில்லை. தடுமாறி நின்றான்.

பிறகு அவனே வெளியில் சென்று தண்ணீர் எடுத்து விரைய, தேவி, “என்னடா?” என்று வாய்விட்டுக் கேட்டார், அங்கிருந்த மற்றவர்கள் எல்லாம் என்ன என்பது போல பார்த்தனர்.

“ப்ச்! அழறாம்மா!” என்றான். வீட்டினர் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற, “நான் பார்த்துக்கறேன்!” என்று அவர்களிடமும் சமாதானம் சொல்லி, கூட ஒரு சேரை எடுத்துப் போய், அவளை அமர வைத்து தண்ணீர் கொடுக்கவும்,

சிறிது ஆசுவாசப்படுக் கொண்டாள், சிபி, “சாப்பிடலாம் வா!” என்று கூப்பிட, திக்கி திக்கி, “என்னை, என்னை, அப்பாகிட்ட கொண்டு போய் விட்டுடுங்க, நான் போயிடறேன்!” என்று சொல்லவும்,

சிபி அப்படியே நின்று விட்டான்... திருமணத்திற்கு முதல் நாள் ஒருத்தி வீட்டை விட்டுப் போக, திருமணமாகி இப்போது தான் வீட்டுக்கு வந்த இவளின் முதல் நாள், இன்றே இவள் அப்பா வீட்டிற்கு போகிறேன் என்று சொல்கிறாள் என்ன சொல்ல?

அதிர்ந்து நின்றுவிட்டான் சிபி. என்ன பேசுவதென்றே தெரியவில்லை. என்னவோ வீட்டை விட்டு தொலைந்து போன குழந்தை வீட்டிற்குப் போக தவிப்பது போல தான் ஜெயஸ்ரீயின் செய்கை இருந்தது.

கோபம் வரவில்லை, வருத்தம் தான் வந்தது. எப்படி சரி படுத்துவது என்று தெரியவில்லை.

அவனும் சிறு குழந்தையை சமாதானப்படுத்துவது போல தான், “போகலாம் வா! முதல்ல சாப்பிடு!” என்றான்.

அவள் விடுவேணா என்பது போல, “நி.. நி.. ஜ.. ம்மா..” என்றாள்.

அதற்கு பதில் சொல்லாமல், “சாப்பிடு வா முதல்ல” என்றான்.

அப்போது கொண்டு போய் விடமாட்டான் என்று தெரிந்து விட, அப்படியே நின்றாள்.

“நீ இன்னும் சின்னப் பொண்ணு இல்லை ஸ்ரீ, இன்னைக்கு தான் இங்க வீட்டுக்கு வந்திருக்க, இன்னைக்கே எப்படிப் போக முடியும்! ஒரு ரெண்டு நாள் போகட்டும்! நான் கூட்டிட்டுப் போறேன்!” என்றான் தன்மையாக..

நம்பியும் நம்பாத முகபாவனையோடு ஜெயஸ்ரீ சுவரில் இருந்து

விலகினாள். பிடிப்பின்றி மீண்டும் சுவரை பிடித்துக் கொண்டாள்.

சிபி, “ஷூ போட்டுக்கிறியா” என்று கேட்க, “வேண்டாம்” என்பது போல தலையசைத்தாள்.

“சரி, என்னைப் பிடிச்சிக்கோ” என்று கையை நீட்ட, அவனை பிடிக்கவில்லை, அவளுடைய ஸ்டிக் அங்கே இருக்க, அதை எடுத்துக் கொடுங்கள் என்பது போல கையை நீட்டினாள்.

“அதை அப்புறம் எடுக்கலாம், என்னைப் பிடிச்சிக்கோ!” என்று சிபி கையை நீட்டிக் கொண்டே இருக்க, கையை பிடிக்கவேயில்லை.

“ஏற்கனவே, திறமைசாலி, சாகசம், அது, இது, என்பது போல பெயர் வாங்கியாகிவிட்டது. இதில் கையைப் பிடித்து வெளியில் நடந்து போவதா வேண்டவே வேண்டாம்” என்பது மாதிரி தான் ஜெயஸ்ரீயின் எண்ணம்.

சிபி வேறு வழியில்லாமல், அவளுடையை கைத்தடியை எடுத்துக் கொடுத்தான்.

அந்த சமயத்தில் அவள் என்ன நினைக்கிறாள் என்று சிபிக்குப் புரியவில்லை. தன் மேல் கோபமா? தன்னைப் பிடிக்கவில்லையா? இல்லை வீட்டினர் பேசியதற்கா என்று.

பரவாயில்லை, அவர்களின் வீட்டில் டைனிங் டேபிள் இருந்ததினால் கீழே எப்படி அமர்வது என்ற பிரச்சனையில்லை. சமீபமாக ஈஸ்வரனும் சுலோச்சனாவும் கீழே உணவருந்த சிரமபடுவதால் வாங்கியிருந்தனர்.

சிபி அமர்ந்ததும் ஜெயஸ்ரீயும் அமர... “நாங்க சாப்டிக்கிறோம் மா!” என்றுவிட்டான் சிபி.

“ஹப்பா” என்று இருந்தது ஜெயஸ்ரீக்கு, அவள் இன்னும் பொருந்தவில்லை அவர்களின் சூழலுக்கு...

அங்கே ஜெயஸ்ரீயின் வீட்டில் சிபிக்கு அவள் தான் பரிமாறுவாள், இப்போதும் அதை செயல்படுத்த பார்க்கவும், “வேண்டாம்! இன்னும் யாரு சாப்பிடாங்க, யாரு சாப்பிடலை, தெரியலை! பரிமாறினா அப்புறம்

நீ சாப்பிட லேட் ஆகும், தேவையானதை வெச்சிக்கிட்டு சீக்கிரம் சாப்பிட்டிட்டு எழுந்துக்குவோம்!” என்று சிபி கூறவும்,

கணவனும் மனைவியும் பத்தே நிமிடத்தில் உண்டு முடித்தனர்.

பிறகு ரூமின் உள் வந்தவளிடம், “உனக்குக் கீழ படுக்க சௌகரியப்படாது! அதே மாதிரி நகை வைக்க பீரோ வேணும்... அது மட்டும் உங்கப்பா குடுத்த பணத்துல வாங்கிக்கலாமா?” என்று அவளிடம் கேட்டான்.

“இல்லை! வேண்டாம்!” என்றாள் திக்கித் திணறி,

“ஏன்?” என்று கேட்டவனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை... அப்பா மேல் தான் கோபமாக வந்தது, பேசாமல் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டியது தானே, இப்போதே கண்ணசைவில் ஆட்டுவிக்கிறேன் என்கிறார்கள், உண்மையில் இன்னும் சகஜமாக பேசிக்கொள்ளவில்லை என்பது தான் உண்மை, இதில் இவர்கள் முன் போய் கட்டில் மெத்தை வாங்குவதா..

“வேண்டாம்!” என்பது போல நிற்க...

“ஏன்?” என்று சிபியும் நிற்க என்னவென்று சொல்லுவாள். சிறிது நேரம் நின்று பார்த்த சிபி வெளியே போகவும்... ஜெயஸ்ரீக்கு கஷ்டமாக இருந்தது... இதையெல்லாம் அவனிடம் என்னவென்று சொல்ல முடியும்.

சொன்னாலும் நான் தான் திரும்ப பேசிட்டேன் தானே! திரும்ப நீயேன் அதைப் பத்தி நினைக்கிற என்று கேட்டால் என்ன சொல்ல முடியும்.

என்னவோ எதுவும் பிடிக்கவில்லை ஜெயஸ்ரீக்கு, சிபிக்கு அதற்கு சற்றும் குறையாத மனநிலை... சலிப்பாக இருந்தது.

கண்டிப்பாக ஜெயஸ்ரீக்கு கீழே படுக்க முடியாது என்று தெரியும்... அவளின் அப்பா கொடுத்த பணம் என்பதால் தானே அவளிடம் கேட்க வேண்டி இருக்கிறது என்று நொந்து கொண்டான்.

கண்டிப்பாக அவன் அத்தனை பணத்தையும் அன்றே செலவு செய்தால் கூட ஜெயஸ்ரீ கேட்கமாட்டாள், ஏனென்றால் பணத்திற்கு இன்னும்

அதிக முக்கியத்துவம் கொடுக்கும் அளவிற்கு அவளின் மனநிலை மாறவில்லை, ஏனென்றால் அப்படி தேவைகள் இருந்ததில்லை.

எல்லாம், சகலமும் அப்பா தான்.. எப்போது எதற்குப் பணம் தேவையென்றாலும் உடனே கொடுத்து விடுவார்.

இனி அப்படி முடியாது, கணவனின் வருமானத்தில் வாழ வேண்டும், இப்படி நினைக்கும் மனநிலைக்கு வரவில்லை.

அவள் வேண்டாம் என்று சொல்வதற்காக அப்படியே விட முடியாது. அவனிடம் அப்போதைக்குப் பணம் கிடையாது. செய்வது விவசாயம், அவனது தான் எல்லா வேலையும், ஆனால் பண விவகாரங்களை எல்லாம் அப்பா தான் பார்த்துக் கொள்வார்.

எதற்குப் பணம் வேண்டுமென்றாலும் அப்பாவிடமோ அம்மாவிடமோ கேட்டால் உடனே கொடுத்து விடுவார்கள்.

கண்டிப்பாகக் கட்டில் வாங்கியே ஆகவேண்டும்.. அதை சொல்லியும் வாங்க முடியாது.. இவளை வேண்டாம் என்று சொன்ன பிறகு அவள் அப்பா கொடுத்த பணத்தில் இருந்தும் எடுக்க முடியாது... ஒரு மாதிரி மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானான்.

ஒன்று மட்டும் தெரிந்தது.. இதுவரை பணத்தேவைகள் அதிகம் கிடையாது.. ஆனால் இனியும் அப்படி இருக்க முடியாது. யாரிடமும் காரணம் சொல்லி சொல்லி பணம் வாங்க முடியாது.

ராதா என்றால் வேறு அந்த வீட்டில் வளர்ந்த பெண், ஏதாவது வேண்டும் என்றால் அவளே கேட்டு வாங்கிக் கொள்ளுவாள், அவளுக்குக் கேட்பதிலும் பெரிய சிரமமில்லை.

ஆனால் இவ்வளவு ஆன பிறகு, காலையில் வந்த பேச்சுக்குப் பிறகு, ஜெயஸ்ரீக்காக என்று சொல்லி வாங்கவும் மனதில்லை.

வாழ்க்கையில் இதுவரை செய்யாத ஒன்றை முதல் முறையாக செய்தான், கடன் கேட்டான்.

கேட்பதற்கு வாயே வரவில்லை, இருந்தாலும் வாசுவுவிற்கு போன்

செய்து, “டேய் மாப்ள, கொஞ்சம் பணம் வேணும்டா?”

“எவ்வளவு”

“ஒரு அஞ்சாயிரம்”

“போதுமா”

நிஜமாகவே பொருட்கள் வாங்கியிராததால் எவ்வளவு தேவை என்று தெரியவில்லை.

“போதும், ரெடியானா சொல்லு! நான் வர்றேன்!”

“இருக்கு! உடனே வாடா!” என்று வாசு சொல்லவும், உடனே கிளம்பினான்.

ஒரு பெரிய இரும்புக் கட்டில், அதுவே அவ்வளவு பணம் ஆகிவிட, அதை மட்டும் வீடு கொண்டு வந்து சேர்த்தான்.

யாராவது ஏதாவது கேட்டால் என்ன சொல்லுவது என்று அதுவேறு குழப்பம்... ஏனென்றால் அங்கே அவனுடைய தாத்தா பாட்டிக்கு மட்டும் தான் கட்டில், வேறு யாருக்கும் கிடையாது.

அவனுடைய அப்பா அம்மாவிற்குக் கூட கிடையாது. எத்தனை பேர் அந்த வீட்டில் பெரியவர்கள் மட்டும் ஒன்பது பேர், குழந்தை ஒன்று, எல்லோருடைய ஜீவனமும் சிரமமின்றி போக வேண்டும் என்பதால் மிகவும் சிக்கனமான எளிமையான வாழ்க்கை தான் அவர்களது.

யாரும் எதுவும் கேட்கவில்லை, “ஹப்பாடா...!” என்று இருந்தது. அப்பா மட்டும், “பணம் ஏதுடா உன்கிட்ட?” என்றார்.

“ஆசீர்வாதம் வாங்கினப்ப வெச்சிக் குடுத்தது இருந்ததுப்பா!” என்றான். கடன் வாங்கியாகிவிட்டது, பின்னர் பொய்யும் பேசியாகிவிட்டது. மனம் கணத்துப் போனது. ஆனால் இதெல்லாம் ஒன்றுமேயில்லை, இன்னும் நிறைய அவமானங்கள் அவனுக்காகக் காத்திருப்பது அவனுக்குத் தெரியவில்லை.

ஆம்! எல்லோரும் காலில் விழுந்து வணங்கியபோது பணம் வைத்துக்

கொடுத்தது தான். ஆனால் அது ஜெயஸ்ரீ வீட்டில் என்பதால் எல்லாவற்றையும் அவளிடம் கொடுத்து விட்டான். அதுதான் நடந்தது.

ரூமின் உள் வந்ததும் முதலில் ஜெயஸ்ரீயின் முகம் தான் பார்த்தான். சற்று தெளிவாக இருக்கவும், சகஜமாக, “வெளில போகலையா! இங்கயா இருந்த” என்றான்.

“போய் டீ சாப்பிட்டிட்டு வந்தேன் மணிமேகலை கூட பேசிட்டு இருந்தேன்” என்றாள் திக்கித் திணறி.. “மணிமேகலை நல்லா பேசுறா!” என்றாள் குழந்தையின் பேச்சை அசை போட்டபடி,

பின்னர் அந்தக் கட்டிலைப் பூட்டிக் கொண்டிருந்த போது, மணிமேகலை ஓடி வந்தாள், “சித்தப்பா!” என்று கத்திக் கொண்டே...

“ஹாய்! மேகி பாப்பா!” என்று அவளைத் தூக்கிக் கொள்ளவும், அவன் கழுதைக் கட்டிக் கொண்டாள் குழந்தை.

அவள் அந்த வருடம் தான் எல் கே ஜீ சேர்ந்து இருந்தாள். அவன் வெளியே போகும் வரை வரவில்லை. அவனைப் பார்த்து மூன்று நான்கு நாட்கள் ஆகிவிட்டதால் ஓடி வந்து விட்டாள்.

அதற்குள், “மேகி வா!” என்று வெளியே இருந்து வனிதாவின் குரல் கேட்கவும்..

“அம்மா கூப்பிடறாங்க! போ!” என்று சிபி இறக்கி விட முயல,

“ம்கூம்! மாட்டேன்!” என்பது போல அவனின் கழுதைக் கட்டிக் கொண்டு ஜெயஸ்ரீயை பார்த்தாள். இதை ஜெயஸ்ரீ அங்கிருந்த ஒரு சேரில் அமர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தாள். மணிமேகலை அவளை பார்க்கவும், அருகில், “வா!” என்பது போல கை அசைத்துக் கூப்பிட...

குழந்தை, போவதா! வேண்டாமா! என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே... இதை கவனியாத சிபி,

“போடா, அம்மா கூப்பிடறாங்க” என்று மணிமேகலையிடம் மீண்டும் சொல்லிக் கொண்டே அவன் ரூமின் வாயிலுக்கு வந்து விடவும்,

“ம்கூம்! அம்மா அடிப்பா! இங்க சித்தி கிட்ட வரக் கூடாது

சொல்லியிருக்கா!” என்று மழலையில் அது மிளிற்றியது.

வெளியில் நின்றிருந்த வனிதாவிற்கு அது நன்கு கேட்டது, கூடவே நின்றிருந்த அருள்மொழிக்கும், அமர்ந்திருந்த ஜெயஸ்ரீ எல்லோருக்கும்.

சிபி அவசரமாக திரும்பி ஜெயஸ்ரீயைப் பார்த்தான், அவளுக்கு கேட்டு விட்டதா என்பது போல... அவளின் முக வாட்டத்தில் இருந்தே கேட்டுவிட்டது என்பது துல்லியமாக தெரிந்தது.

அதையும் விட வெளியே நின்றிருந்த வனிதாவின் முகம் பயத்தைக் காட்டியது... சிபி திட்டுவானோ என்பது போல,

சிபியின் முகம் தீவிரமானது... இந்த பேச்சு அவனால் சகிக்கவே முடியவில்லை. என்ன இது திரும்ப, திரும்ப, இது சரிவராது என்று அந்த நொடி அவனுக்குள் தோன்றியது.

ஆனால் சிபி திட்டவெல்லாமில்லை... “சித்தி கிட்ட பேசலைன்னா இனிமே சித்தப்பாகிட்டயும் மேகிப் பாப்பா பேச வேண்டாம்!” என்று சொல்லி அருள் மொழியிடம் குழந்தையைக் கொடுத்தான்.

“அது, இன்னும் அவ சாப்பிடலை சிபி, அதான் வனிதா கூப்பிட்டா” என்று விளக்கம் கொடுத்தான் அருள் மொழி.

“இனிமே அவளை இந்த பக்கம் விடாத! நானும் உன் பொண்ணை தூக்க மாட்டேன்! ஜெயஸ்ரீயும் பக்கத்துல வரமாட்டா” என்று கண்டிப்பாக சொல்லி சிபி திரும்ப முற்பட...

“அது எதுக்கு சொன்னதுன்னா, இப்போ கொஞ்ச நேரம் தான் ஜெயஸ்ரீ கூட மேகி பேசிட்டு இருந்தா... வெளில வந்து அவ மாதிரியே திக்கி திக்கி பேசுறா, ஒரு குச்சி வெச்சு நடக்குறா அதான்...!” என்று உண்மையை அப்படியே அருள்மொழி போட்டு உடைத்து விட,

ஜெயஸ்ரீயினால் அதை தாளவே முடியவில்லை, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள், சிபி சற்றும் யோசிக்கவேயில்லை... அவன் அப்பாவிடம் சென்று, “அப்பா நான் தனியா போயிடட்டுமா!” என்றான்.

அந்த நொடி வரை சிபி அப்படி நினைக்கவேயில்லை... ஆனால் இனி,

இப்படி பேச்சு வந்த பிறகு, சரி வருமென்று தோன்றவில்லை.

வீடே ஸ்தம்பித்தது. முடியாது, வேண்டாம் என்றது... ஆனால் சென்றிருந்தால் எத்தனையோ அனர்த்தங்களை தவிர்த்து இருக்கலாம்.

சில சமயம் மக்கள் எல்லோரையும் சேர்த்துப் பிடிக்க பெரியவர்கள் ஆசைப்படக் கூடாது. திருமணம் முடிந்த உடனேயே தனியாக வைத்து விட்டால் பரவாயில்லை சில குடும்பங்களில்.

இதை செய்யத் தவறுவதால் பின்னர் ஒருவருக்கொருவர் முகம் பார்த்து பேசும் நிலை கூட இல்லாமல் போய் விடுகிறது என்பது நிதர்சனமான உண்மை.

சகிப்புத்தன்மை என்பது இப்போதெல்லாம் பலரிடம் இருப்பதில்லை கணவன் மனைவிக்குள்ளேயே இருப்பதில்லை... இதில் வீட்டின் மற்ற அங்கதினரிடம் எப்படி இருக்கும்... இது சிரியவர்களிடம் மட்டுமல்ல பல பெரியவர்களிடமும் இருக்கிறது... நான் தான் பெரியவன் என்னைக் கேட்டு தான் எல்லாம் செய்ய வேண்டும் என்பது போல...

எங்கே சேர்ந்து இருக்க வேண்டுமோ, அங்கே சேர்ந்து இருக்க வேண்டும். எங்கே அவரவர் வழியை காட்ட வேண்டுமோ அங்கே காட்டிவிட வேண்டும். அதுதான் உத்தமம்.

எது எங்கே செய்ய வேண்டும் என்று பலருக்கு தெரியாததால் தான் பல குடும்பங்கள் உடைந்து விடுகின்றன. அவரவர் மனைவி மக்களுக்கு தான் எல்லா முன்னுரிமையும் எனும் போது, சில இடங்களில் பெரியவர்கள் சின்னவர்கள் உடன்பிறந்தவர்கள் இப்படிப் பிரிந்து விடுகின்றனர்...

இப்படி அவரவர் குடும்பம் என்று பிரிந்து விட்டால் கூட பரவாயில்லை, சில இடங்களில் கணவன் மனைவி கூட இதனால் பிரிந்து விடுகின்றனர்...

## அத்தியாயம் பதினேழு :

அன்று இரவு உணவு உண்ண அழைத்த போது ஜெயஸ்ரீ, “கண்டிப்பாகத் தன்னால் சாப்பிட முடியாது...” என்பதைத் திக்கித் திக்கி

கூட சொல்லவில்லை, சைகையால் தான் கூறினாள்.

அப்படி ஒரு வேதனை அவளின் முகத்தில், அழுகையெல்லாம் இல்லை.

“அவங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்கறேன்... முகத்துக்கு நேரா அந்த வார்த்தைகளைச் சொல்லக் கூடாதுன்ற அறிவு கூட அவனுக்கு இல்லை” என்று சிபி சொல்லவும்...

சிபியின் முகத்தைக் கூட பார்க்கவில்லை, வேறெங்கோ பார்த்தாள்.

அவளாக சகஜமாக முற்படும் போது, இப்படி வீட்டினர் செய்வது சிபிக்கு வருத்தத்தைக் கொடுத்தது...

ஜெயஸ்ரீ சாப்பிடவில்லை... சிபிக்கு பசி தான் ஆனால் அவள் சாப்பிடாமல் இருக்கும் போது தான் மட்டும் சாப்பிடுவது தவறு போல தோன்ற அவனும் சாப்பிடவில்லை.

புதிதாக வந்த கட்டிலில் ஜெயஸ்ரீ படுத்துக் கொள்ள, சிபி அதில் படுக்காமல் கீழே படுத்துக் கொண்டான்.

“என்னால் இங்கே இருக்க முடியாது” என்பது போல ஒரு எண்ணம் தான் ஜெயஸ்ரீயின் மனதில்...

ஜெயஸ்ரீ, சிபியைக் கணவன் என்று நினைத்தாலும் அதையும் மீறிய ஒரு பிடிப்பு இன்னும் அவளுள் வரவில்லை. அதே தான் சிபிக்கும் ஜெயஸ்ரீக்காக வீட்டினரிடம் சண்டை போட்டாலும், ஏன் நான் தனியாக போகிறேன் என்று சொன்னாலும்... அதையும் மீறியப் பிடிப்பு, மனதின் தேடுதல் இன்னுமில்லை.

இரவு முடிந்து விடியல் வந்துவிட, ஜெயஸ்ரீ எழுந்து பார்த்த போது சிபி அங்கேயில்லை. அவன் காலையில் வயலுக்கு சென்று விட்டான். அவனுக்குக் காலையில் அதைப் பார்த்தால் தான் அந்த நாளே ஓடும். திருமணம் ஆன நாள் முதல் அந்த இடத்தை எட்டிப் பார்க்கவில்லை. அதிகமில்லை நான்கு நாட்கள் தான்.

அதுதான் அவன் செய்த மிகபெரிய தவறு... அன்றைய நாளுக்காக அவன் பார்க்க... அதற்காக அவன் வருந்தப் போகும் நாட்கள் பல என்று

அவனுக்குத் தெரியவில்லை..

இனி அப்போதைக்கு அந்த வயலில் அவன் காலடி வைக்கப் போவதில்லை என்று தெரியவில்லை. சிறு வயது முதல் தினமும் பரீட்சை தினங்களில் கூட ஓடி வந்து ஒரு பார்வை பார்த்து தான் போவான். அது எந்த காலம் என்றாலும் சரி, நாற்று நட்டபோதும், பயிர் வளர்ந்த போதும், அறுவடை காலம் ஆன போதும், எப்போதும் எந்த பருவமானாலும் அவன் ஓடிவந்து பார்க்குமிடம்.

அன்றும் அப்படிப் பார்வையிடப் போய் விட... மிகுந்த அனர்த்தங்கள். முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல ஜெயஸ்ரீயிற்கு சிபியின் வீட்டில் ஆகிவிட்டது.

காலை எழுந்து வெளியே வந்தவளிடம், “போய்க் குளிச்சிட்டு வாம்மா, டீ சாப்பிடுவியாம்” என்று தேவி நல்ல விதமாகத் தான் சொன்னார்.

ஜெயஸ்ரீயும் யாரிடமும் எதையும் காட்டக் கூடாது! அவர்கள் எப்படி இருந்தால் என்ன? அவர்களின் நாகரீகங்கள் அவ்வளவு தான்! நாம் நல்லவிதமாக இருந்து விட்டுப் போவோம்.. என்று நினைத்து, துணிகளை எடுத்துக் கொண்டு பின்கட்டில் இருக்கும் பாத்ரூமிற்கு குளிக்கச் சென்றாள்.

குளிக்க போவதால் காலில் இருந்த ஷூவைக் கழற்றி விட்டு ஒரு ஆதாரத்திற்கு கையில் தன்னுடைய கைத்தடியை மட்டும் கொண்டு அதை ஊணி நடந்தாள். நேற்று மதியம் அவசரமாக சாப்பிட்டது நேற்று இரவு சாப்பிடாதது களைப்பாக இருந்தது.

“இதில் இவர்கள் குளித்து விட்டு வா! டீ குடிக்கலாம் என்று சொன்னால் குளிக்க தெம்பு வேண்டாமா...” மனதின் சோர்வு உடலின் சோர்வு எப்படியோ குளித்து வந்தாள்... ஆனால் குளியலறையில் புடவை சரியாக கட்டவில்லை... பின் போடாமல் அப்படியே கட்டி வந்தாள்.

அவள் வெளியே நடந்து ரூமிற்கு வரும் நேரம், பள்ளிக்கு தயாராகிக் கொண்டிருந்த மணிமேகலை, சித்தி என்று வந்து அவளின் புடவையை பிடித்து இழுத்தது,

ஏற்கனவே அவளின் அம்மா பேசவேண்டாம் என்று சொன்னது, பின்னர்

புடவையை பின் வேறு செய்யவில்லை, அது சரிந்து விழுந்து விட்டால், "விடு" என்று சொல்லுவதற்கும் வார்த்தைகள் சட்டென்று வரவில்லை,

இவள் புடவையை விடு என்பது போல இழுக்க... பதிலுக்கு மணிமேகலையும் விளையாட்டுப் போல இழுத்தாள், குழந்தை தானே அது விளையாடியது.

பின் குத்தவில்லை, புடவை சரிந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம், கூடவே மணிமேகலை இழுப்பதால் இவள் தடுமாற ஆரம்பித்தாள்... அவளுடைய ஸ்டிக்கை அங்கே பாத்ரூம் வெளியில் வைத்திருந்ததால்..

அதை எடுக்காமல் சுவரை பிடித்து ஏதோ யோசனையில் வந்து விட்டால், இப்போது மணிமேகலை இழுக்கவும், இவள் பதிலுக்கு இழுக்கவும் பேலன்ஸ் தப்பியது.

அந்த பதட்டத்தில் வேகமாக இழுத்துவிட புடவையை, குழந்தை பிடியை விடவும் அது தவறி சற்று தூர போய் விழுந்தது. உடனே பெரும் குரலெடுத்து அழ...

எல்லோரும் ஓடி வந்தனர், நடராஜனும் சிபியும் மட்டுமில்லை வீட்டில்...

குழந்தையைத் தூக்கிக் கொண்டே வனிதா, "என்னம்மா?" என்று கேட்க...

"சித்தி, தள்ளி விட்டுட்டா!" என்றது மழலையில் சொல்லவும், எல்லோரும் என்ன இது என்பது போல ஜெயஸ்ரீயைப் பார்க்க...

அவளுக்கு காரணம் சொல்ல முடியவில்லை என்பது ஒரு புறம், பேசவும் வரவில்லை.

அங்கே இருந்த சுலோச்சனா பாட்டி, "உன்கிட்ட பேசக் கூடாதுன்னு சொன்னதுக்காக குழந்தையை தள்ளிவிடுவியா, அது தப்புமா!" என்று பெரிய மனுஷியாக பேச,

"ஐயோ! நான் குழந்தையைத் தள்ளி விட்டேனா!" ஜெயஸ்ரீ பதட்டமாகி விட்டாள்,

“இல்லை” என்பது போல தலையசைக்க,

“குழந்தை பொய் சொல்லாது! எப்படி விழுந்த?” என்று அங்கு ஒரு விசாரணை நடக்க... ஜெயஸ்ரீ குழந்தை என்ன சொன்னால் என்று கூட கவனிக்கவில்லை... அவள் பாட்டிற்கு சுவரைப் பிடித்து உள்ளே சென்றாள், இவர்கள் சொன்ன குற்றம், சாப்பிடாதது, கூடவே பதட்டம் நிற்க முடியவில்லை.. தலையே சுற்றியது.

அமர்வதற்காக உள் செல்ல, சுலோச்சனா பேசிக்கொண்டே இருக்கும் போது செல்லவும்,

தேவி கோபமாக, “என்ன பழக்கம் இது ஜெயஸ்ரீ? பெரியவங்க பேசும் போது போறது, உன்னால பேச தான் முடியாது, பேசறதைக் கேட்கறது கூடவா முடியாது” என்று ஒரு அதட்டல் போடவும், அதுவும் எல்லோரும் பார்க்க, ஜெயஸ்ரீக்கு கண்களில் நீர் தளும்பி விட்டது.

என்ன செய்வது என்றும் தெரியவில்லை. சுவரில் சாய்ந்து நின்று விட்டாள். மணிமேகலை வேறு அழுகையை நிறுத்திய பாடு இல்லை.

மாமல்ல வர்மன் தேவியிடம், “அம்மா! சிபி இல்லை, அவன் வரட்டும்! இப்படிப் பேசாதீங்க பாருங்க! அவங்களுக்கு நிக்க முடியலை போல” என்று அம்மாவை அதட்ட..

சிபி பேசியதை ஏற்கனவே கேட்டு இருந்ததால், எதற்கு வம்பு என்று எல்லோரும் அந்த இடம் விட்டு நகர்ந்தனர்.

“இல்லை, என்னால் இந்த வீட்டில் இருக்க முடியாது” என்ற எண்ணம் ஸ்திரமாய் அவளின் மனதில் இன்னும் பதிந்தது.

அழுகை! அப்படி ஒரு அழுகை! ஜெயஸ்ரீயால் அடக்கவே முடியவில்லை. யாராவது குழந்தையை வேண்டுமென்று தள்ளி விடுவார்களா? என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் இவர்கள் என்னைப் பற்றி...?

ச்சே! ச்சே! இவ்வளவு கீழாகவா என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்...?

சில நிமிடங்கள் அழுதவள் மிகவும் சோர்வாக உணர்ந்தாள்... ஏதாவது

சாப்பிடு என்று மனதும் உடலும் சொல்ல... இதற்கு மேல் முடியாது என்பதாக நினைத்தவள்...

காலில் ஷூவைப் போட்டு புடவையை சரியாகக் கட்டிய போது தான் ஸ்டிக் வெளியிலிருப்பது புரிய...

அதை எடுத்துக் கொள்வோம் என்பதாக அதை எடுக்கப் போய், எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கி செல்லவும்... போகும் வழியில் இருந்த அறையில் அவள் கண்டக் காட்சி சற்றும் யோசிக்காமல் செயல் பட வைத்தது...

கையில் இருந்த ஸ்டிக்கினால் குழந்தை மணிமேகலையை அடிக்க... குழந்தை தூரப் போய் விழுந்தாள்..

சரியாக அவள் குழந்தையை அடித்த நேரம் வர்மன் அங்கே வந்தான்... "ஐயோ அண்ணி! என்ன பண்றீங்க குழந்தையை? ஏன் அடிக்கறீங்க?" என்று அவன் கத்திய கத்தலில் வீடே அங்கே குழுமியது.

குழந்தைக்கு வேறு அடிப்பட்டு விட அது வீரிட்டு அலறியது... முன்னெற்றியில் காயமாகி, ரத்தம் வேறு வந்துவிட...

வீடே பதறியது... என்ன நடந்தது என்றுக் கூட யாரும் கேட்கவில்லை... ஆளாளுக்கு ஜெயஸ்ரீயை சத்தம் போட...

"ச்சே! ச்சே! நீங்க இப்படிப் பண்ணுவீங்கன்னு நினைக்கலை! உங்களுக்காக என் அம்மாவை கொஞ்சம் நேரம் முன்ன தான் திட்டினேன்! இப்போ நானே பார்த்தேன், குழந்தையை அடிச்சீங்க... இப்படிக் கூடவா இருப்பீங்க" என்று வார்த்தையை விட்டான்.

ஆளாளுக்குப் பேசவும் ஜெயஸ்ரீக்கு ஒன்றும் புரியவில்லை...

"என்ன இது? பெரியவங்க சண்டையில விட்டாக் குழந்தையைக் கொன்னுடுவ போல இருக்கே நீ" என்று சுலோச்சனா பாட்டி பேச,

"ஐயோ! ரத்தம் அதிகமா வருது! முதல்ல இதைப் பாருங்க!" என்று வனிதா ஒரு புறம் கத்த..

எல்லோரும் குழந்தையிடம் ஓட, தனித்து நின்றாள். "என்ன? நான்

குழந்தையைக் கொல்ல முயன்றேனா!" அந்த வார்த்தைக் கொடுத்த மன உளைச்சல், ஆளாளுக்கு நின்ற இடத்தில் இருந்து திட்டியது, யாரோ, "இவளையெல்லாம் வீட்ல வெச்சிக்க முடியாது" என்று சொல்வது, சாப்பிடாதது, எல்லாம் மயக்கத்தை கொடுக்க... ரூமில் போய் உட்கார்ந்து கொள்வோம் என்று நினைத்து ரூமின் வாயில் உள் நுழைந்ததும்,

மயக்கத்தினாலா இல்லை ஸ்டிக் கதவில் இடித்ததாலா, நிலை தடுமாறி அப்படியே நெடுஜான் கடையாக பிடிப்பின்றி பின்புறம் கீழே விழுந்தாள்,

எல்லோரும் பார்த்தனர்! ஆனால் குழந்தைக்கு அடிப்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்ததில் யாரும் வந்து தூக்கி விடக் கூட முயலவில்லை.

குழந்தையை தூக்கிக் கொண்டு வனிதாவும் அருள்மொழியும் ஒரு வண்டியில் ஹாஸ்பிடல் கிளம்ப, கூட வர்மனும் தேவியும் ஹாஸ்பிடல் கிளம்பினர்.

ஈஸ்வரரும் சுலோச்சனாவும் வெளியில் சென்று அமர்ந்து கொண்டார்கள். ராஜலக்ஷ்மி அங்கே இல்லை வெளியில் சென்றிருந்தார். அவர் இருந்திருந்தால் எப்போதும் மணிமேகலையின் பின்னே சுற்றிக் கொண்டிருப்பார். அவர் இல்லாததால் தான் இவ்வளவு பிரச்சனை.

இவளை யாரும் கவனிக்கவில்லை... சிறிது நேரத்திலேயே நடராஜனும் சிபியும் வந்தனர், வந்தவர்களை வாயிலில் நிறுத்தி வைத்து... நடந்ததை சொல்ல... "என்ன? குழந்தைக்கு ரத்த காயமா? ஜெயஸ்ரீ அடித்தாளா?"

நம்பியும் நம்பாமலும், செய்திருக்க மாட்டாள்! செய்திருந்தாலும் ஏதாவது காரணம் இருக்கும்! மணிமேகலை ஏதாவது குறும்பு செய்திருப்பாள்! ஆனாலும் அடித்தது தப்பல்லவா? ஏன் இப்படி செய்து விட்டாள் என்ற யோசனைகளோடு சிபி உள்ளே செல்ல...

அங்கே அவன் கண்டக் காட்சி, உயிரே உறைந்தது... "அப்பா!" என்று கத்திக் கொண்டே சிபி ஜெயஸ்ரீயிடம் விரைய, நடராஜனும் சிபியின் சத்தம் கேட்டு விரைந்து வர...

ஜெயஸ்ரீ விழுந்து கிடக்க... அவளின் பின்னந் தலையில் இருந்து ரத்தம் வழிந்து உறைந்து இருந்தது.

சிபி அவளின் தலையை தூக்கிப் பிடித்து, “ஜெயஸ்ரீ” என்று கத்த, எந்த அசைவுமில்லை, பேச்சில்லை, மூச்சில்லை... மூச்சிருக்கிறதா என்று நடராஜன் மூக்கின் அருகில் அவசரமாக கை வைக்க... மூச்சு இருந்தது.

“தூக்குடா! ஹாஸ்பிடல் கொண்டு போகலாம்!” என்று விரைந்து நடராஜன் செயல் பட்டார். சிபிக்கு ஒன்றுமே ஓடவில்லை...

உடனே பக்கத்தில் இருந்தவரிடம் கார் எடுக்கச் சொல்லி, கோவைக்கு முன் இருக்கும் பெரிய ஹாஸ்பிடலுக்கு விரைந்தனர்.

மிகவும் கடினமான நிமிடங்கள்... அத்தனை கடவுள்களிடமும் வேண்டுதல் வைத்துக் கொண்டே அந்த தூரத்தை கடந்தான் சிபி.

அங்கே கீழே தவறி விழுந்து விட்டாள் என்று சொல்லி உடனே அட்மிட் செய்து சிகிச்சை ஆரம்பித்தனர்.

வழியில் வரும்போதே நடராஜன் வஜ்ரவேலிடமும் தவறி விழுந்து விட்டாள் என்று சொல்லியிருக்க... இவர்கள் போய் சேர்ந்த சில நிமிடங்களில் வஜ்ரவேலுவும் வந்துவிட்டார்.

“என்ன நடந்துச்சு ரொம்ப கவனமா நடப்பாளே! எப்படி விழுந்தா! எங்க இருக்கா?” என்று கேட்டார்.

அவருக்குப் பதட்டம் இருந்தாலும், இன்னும் நிலைமையின் தீவிரம் அவருக்கு புரியவல்லை.

“தெரியலை விழுந்த பிறகு தான் பார்த்தோம், வீட்ல யாருமில்லை, என்ன நடந்துச்சுன்னு சரியா தெரியலை...” என்று நடராஜன் சொன்னார்.

அப்போது அங்கு வந்த மருத்தவர், “நிறைய ரத்தம் போயிருக்கும் போல, எப்போ ஆச்சு?” என்ற விவரம் கேட்க...

“சரியாத் தெரியலை, நாங்க இங்க வர அரைமணிநேரம் ஆச்சு, அதுக்கு முன்னாடி வீட்ல ஒரு அரைமணிநேரம் இருக்கும்” என்று குத்து

மதிப்பாக சொல்லி…

“கண்ணு முழிச்சிடுச்சுங்களா?” என்று கேட்கவும்.

“எங்க அடிபட்டிருக்கு, கால்ல தானே!” என்றார் வஜ்ரவேல், இன்னும் அவருக்குப் பின் தலையில் அடிபட்டது தெரியவில்லை.

“இல்லை பின்னந் தலையில. இன்னும் கண்ணு முழிக்கலை” என்று சொன்ன மருத்துவர்… “மூச்சு இன்னும் சரியாகலை… அதுக்குப் பார்த்துட்டு இருக்கோம், அதுக்கு அப்புறம் ஸ்கேன் பண்ணனும்” என்று சொல்லி சென்று விட…

வஜ்ரவேல் அப்படியே அமர்ந்து விட்டார்… அவரின் பின்னால் போன நடராஜன்… “உயிருக்கு ஒன்னும் பயமில்லீங்களே” என்று கேட்க…

“கொஞ்ச நேரம் போனா தான் சொல்ல முடியும்” சொல்ல…

சிபி ஹாஸ்பிடலின் முன் இருந்த பிள்ளையாரிடம் தான் ஓடினான்… “கடவுளே! காப்பாற்றி விடு!” என்று…

வஜ்ரவேல் அப்படியே அமர்ந்தவர் தான்…

நடராஜன் சிபியிடம் ஓடி வந்தவர், “டேய்! பணம் கட்ட சொல்றாங்க! நான் எங்கயாவது போய் பணத்துக்கு ஏற்பாடு பண்றேன், உன் மாமனாரோட போய் இருடா! அவரைப் பார்க்க முடியலை, அவருக்கு ஏதாவது ஆகிடப் போகுது” என்று அவர் ஒரு புறம் வெளியே விரைந்தார்.

சிபி வஜ்ரவேலிடம் சென்று நின்றான்… “ஒன்னும் ஆகாதுங்க!” என்று சொல்லவும் செய்தான்… அது அவருக்கு சொன்ன வார்த்தையில்லை, அவனுக்கு அவனே சொன்ன வார்த்தைகள்.

“ஆகாது! ஆகாது! எப்படி ஆகும் எத்தனை உயிரை என் பொண்ணு காப்பாத்தி இருக்கா? அவளுக்கு ஒன்னும் ஆகாது… உங்களுக்கே தெரியும் தானே அவ எத்தனை பேரை காப்பாத்தி இருக்கா, அதுல தானே அவ கால் எரிஞ்சு இப்படி ஆச்சு, அந்த கடவுள் அவளை எப்படி காப்பாத்தாம விடுவார்” என்று வஜ்ரவேல் பேசப் பேச, தொண்டை

அடைத்து அவரால் பேசவே முடியவில்லை.

“மூன்று நாட்கள் அவளுடன் இருந்திருக்கிறேன், உன்னோட அஜாக்கிரதையால கால்ல தீக்காயம் பண்ணி இப்படி செய்து கொண்டாயா என்று கேட்டிருக்கிறேன்... ஐயோ என்ன செய்திருக்கிறேன்” என்று நினைக்க நினைக்க... சிபிக்கு கண்களில் நீர் நிறைந்தது...

அதனைப் பார்த்த வஜ்ரவேல் அவனை தேற்றினார்... “இல்லை! இல்லை! ஒன்னும் ஆகாது என் பொண்ணு பொழைச்சிடுவா” என்று...

இன்னும் என்ன நடந்தது என்று வஜ்ரவேலிற்கு தெரியவில்லை... தெரியும் போது சிபியின் நிலைமை...

அரை மணிநேரத்தில் டாக்டர் வந்தவர்.. “ஸ்டேபிள் ஆகிட்டாங்க... கண் முழிச்சிட்டாங்க, ரத்தம் ஏத்தணும், ஸ்கேன் எடுக்கணும்” என்றார்.

“வேற ஒரு பிரச்சனையும் இல்லைங்களே...”

“ஸ்கேன் எடுத்தா தான் சொல்ல முடியும்!”

“பார்க்கலாமுங்களா” என்று சிபி கேட்க...

“ஒரு ஒருத்தரா போங்க!” என்று டாக்டர் சொல்லவும்...

“நீங்க போங்க!” என்று அப்போதும் சிபியை தான் முதலில் அனுப்பினார்...

சிபி உள்ளே சென்று பார்த்தவன், அப்படியே நின்று விட்டான். சுற்றிலும் உபகரணங்கள்... கையில் ஒன்று, விரலில் ஒன்று, போர்வை மூடியிருந்த போதும் நெஞ்சினிலும் ஏதோ வையர் மாதிரி சென்று கொண்டிருந்தது...

அருகில் செல்லவும் ஜெயஸ்ரீ அவனை தான் பார்த்தாள்... முகத்தில் வலியின் சாயல்கள்.

என்ன பேச என்று கூட சிபிக்குத் தெரியவில்லை. “வலிக்குதா” என்று கேட்கவும், தலையை அசைத்து, “ஆம்!” என்று சொல்லக் கூட

முடியவில்லை.. விழி மூடித் திறந்தாள், “ஆம்!” என்பது போல..

“சாரி! நிஜம்மா சாரி!” என்றான் அவன் சிறு பிள்ளை போல, “இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா, நான் போயிருக்க மாட்டேன், என்ன ஆச்சு?” என்று கேட்கவும்...

பேச முயற்சிக்கவேயில்லை..

“ப்ளீஸ் ஸ்ரீ, சொல்லு!” என்று கெஞ்சுதலாக சிபி கேட்டான். நடந்ததற்கு அவன் பொறுப்பில்லை என்றாலும் அது அவனின் தவறாகத் தான் அவனுக்கு பட்டது. மனம் மட்டுமல்ல கண்களும் கலங்க அவன் நின்ற தோற்றம் ஜெயஸ்ரீயைப் பேச வைத்தது.

மெதுவாக ஏதோ பேச முயற்சிக்க... அவளின் முகம் அருகில் குனிந்து என்ன வென்று கேட்டான்.

திக்கி திக்கி அவள் சொன்ன வார்த்தைகளின் சாராம்சம் இதுதான்... மணிமேகலை ப்ளக்பாயிண்டில், மெலிதாக இருந்த சாவியை உள்ளே விட்டிருக்க.. குழந்தைக்கு ஷாக் அடித்துக் கொண்டிருந்தது.. அதற்காகவே அந்த மரதடியால் அடித்து அவளை விலக்கி விட்டாள். பதட்டத்தில் அவளையறியாமல் சற்று வேகமாக அடித்து விட்டாள்... அதில் குழந்தை தூரப் போய் விழுந்து விட்டாள்.

என்ன காரியம் செய்திருக்கிறார்கள் வீட்டினர்...

அதை சொல்லச் சொல்ல நடந்தது எல்லாம் அவளின் ஞாபகத்தில் வர...

காரணம் சொல்லிவிட்டு முகத்தை திருப்பியவள் தான் ஜெயஸ்ரீ, அதன் பிறகு சிபியின் முகம் பார்க்கவேயில்லை.

எதையும் தந்தையிடமும் மறைக்க வில்லை.. சிபிக்கு அடுத்து வஜ்ரவேல் அவளை வந்து பார்த்த போது... திக்கி திணறி எல்லாவற்றையும் சொல்லி விட்டாள்.

வஜ்ரவேல் வெளியில் வந்தவர், “உன்னை நம்பித் தானே என் பொண்ணைக் கொடுத்தேன்” என்றார் சிபியை பார்த்து...

அவர் பேசிக் கொண்டு இருக்கும் போதே நடராஜன் வந்து விட.. “யாரும்

இங்க இருக்கக் கூடாது! கிளம்புங்க! என் பொண்ணை நான் பார்த்துக்கறேன்" என்றார் கோபமாக..

அவரின் கோபம் நியாயமானது தானே... அதனால் சிபியும் அவரை மேலும் அந்த சூழலில் கோபப்படுத்த விரும்பாமல்.. ஒதுங்கி நிற்க..

அது இன்னும் தவறாகிப் போனது...

இதற்குள் வீட்டினர் வர... "தயவுசெஞ்சு கிளம்பிடுங்க!" என்றான் சிபி..

சிபி அவர்களை வெறுத்து தான் அந்த வார்த்தைகளை சொன்னான்.. அவ்வளவு சொல்லியும் இப்படி செய்து விட்டார்களே என்பது போல..

பார்க்க பார்க்க வஜ்ரவேலிற்கு கட்டுக்கடங்காத கோபம் பொங்க, அவசரமாக வெளியே கிளம்பிச் சென்றார்.

"மணிமேகலையைக் காப்பாத்தினதுக்கு அவளுக்கு நல்ல பரிசு குடுத்துட்டீங்க" என்று அவர்களைத் திட்டி அனுப்பிவிட்டான்.

ஆனால் எல்லாம் கை மீறி தான் விட்டது.

வஜ்ரவேல் சிபியின் வீட்டினர் அத்தனை பேரின் மேலும் கம்ப்ளையின்ட் பதிவு செய்ய... சிபி, "அவர்கள் யாருமில்லை தான் தான் கோபத்தில் தள்ளி விட்டேன்" என்று இல்லாத ஒன்றை சொல்லி சிபி தானாக முன்வந்து வாக்கு மூலம் கொடுக்க.. கைது செய்யப்பட்டான்.

அவளின் சிகிச்சையின் பொருட்டு ஏற்றப்படும் மருந்துகளால் ஜெயஸ்ரீ ஒரு அரை மயக்கத்தில் இருந்தாள். அவள் தெளிவாக இருந்திருந்தாலும் யாரும் அவளிடம் சொல்லியிருக்கப் போவதில்லை. அதனால் நடந்தது ஏதும் ஜெயஸ்ரீயிற்கு தெரியவேயில்லை.

தீயவர்கள் என்று வரையறுக்கப்பட வேண்டியவர்களாக இல்லாவிட்டாலும், சில சமயம் செய்யும் செயல்கள் தீதாகிவிடுகின்றன..

பழி ஓரிடம்... பாவம் ஓரிடம்..

"கதறி கதறி எனது உள்ளம் உடைந்து போனதே இன்றுச் சிதறி போன சில்லில் எல்லாம் உனது பிம்பமே கண்ணீரில் தீ வளர்த்துக்

காத்திருக்கிறேன் உன் காலடித் தடத்தில் நான் பூத்திருக்கிறேன்”

## அத்தியாயம் பதினெட்டு :

இரண்டு வருடங்களுக்கு பிறகு...

“எங்கத் தப்பு நடந்துச்சுன்னு தெரியலை, இல்லை என்னோட வாழ்க்கையேத் தப்பான்னு தெரியலை... என்னோட உங்க பொண்ணு சந்தோஷமா இருக்க மாட்டான்னு உங்களுக்கு தோனிடிச்சு, அதான் இந்த கம்ப்ளையின்ட் எல்லாம்...”

“இதை வாபஸ் வாங்கினதுக்கு ரொம்ப நன்றி.. உங்களுக்கு என்ன சரின்னு படுதோ செய்ங்க... எங்க கேட்டாலும் நான் கையெழுத்துப் போடறேன்...”

“உங்கப் பொண்ணை எப்படி அனுப்பிச்சீங்களோ அப்படியே தான் உங்க கிட்ட திரும்பி வந்திருக்கா...”

“நல்ல வாழ்க்கை அவளுக்கு அமையும்... நீங்க குடுத்த நகை, பணம் எல்லாம்...” என்று வஜ்ரவேலிடம் திரும்பக் கொடுத்து சென்றவன் தான் சிபி அதன் பிறகு அவனை யாரும் பார்க்கவில்லை.

வீட்டினரிடமும் எந்தத் தொடர்பும் இல்லை.

ஆம்! வஜ்ரவேல் கம்ப்ளையின்ட் வாபஸ் வாங்கி விட்டார். ஹாஸ்பிடலில் இருந்தவரை ஜெயஸ்ரீயிற்கு நடந்தது எதுவும் தெரியாது! நான்கைந்து நாட்கள் ஹாஸ்பிடலில் இருந்த போது, “ஏன்? சிபி வரவில்லை!” என்று மனதிற்குள் ஓடிக் கொண்டே தான் இருந்தது.

தன்னால் எப்போதும் பிரச்சனைகள் என்பதால் தன்னை விட்டு விட்டானோ என்ற எண்ணம் கூட, அந்த எண்ணம் கொடுத்த பயம் அப்பாவிடம் சிபியைப் பற்றி கேட்கமுடியவில்லை. அதுமட்டுமின்றி இப்படி ஜெயஸ்ரீயிற்கு நடந்ததைக் குறித்து அவரின் முகத்தில் அவ்வளவு வேதனை. அப்படி இருக்கும் போது சிபியைப் பற்றி எப்படிக் கேட்பாள்.எல்லாம் அவன் வீட்டில் நடந்தது தானே.

வீடு வரும் தினம் வஜ்ரவேல் இல்லாத சமயம், வாசு அவளைப் பார்க்க

வந்தான்.

“ஏன் சிஸ்டர் இப்படிப் பண்ணுனீங்க, என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது.. நீங்க அடிபட்டது தப்பு தான்... ஆனா சிபி! அவன் பாவம் சிஸ்டர்... வாழ்க்கையில இந்த கல்யாணப் பேச்சு வந்ததுக்கு அப்புறம் அவன் பார்க்கக் கூடாதது எல்லாம் பார்த்துட்டான்”.

“அதுவும் யார் எப்படி நினைச்சா என்ன? எனக்கொன்னுமில்லை அப்படின்ற மனநிலை எல்லாம் அவனுக்கு கிடையாது. எப்பவும் எல்லோரும் என்ன நினைக்கிறாங்க! நல்ல மாதிரி நினைக்கணும்! இப்படிப்பட்ட எண்ணம் தான் அவனுக்கு... அந்த பொண்ணுக் கல்யாணம் பண்ணாம போனது வருத்தமில்லை, அது எல்லார் முன்னாடியும் அசிங்கமாப் போயிடிச்சின்னு தான் வருத்தம்”.

“இப்போ கல்யாணமாகி, நாலே நாள்ல கட்டினப் பொண்டாட்டியை கொலை செய்ய முயன்ற வழக்கு, அரஸ்ட் ஆனதும் ரொம்ப மனசு விட்டுட்டான், நான் பார்க்க முயற்சிப் பண்ணினேன் என்னைப் பார்க்கவேயில்லை, வீட்ல இருக்குறவங்க யார் போனாலும் இந்த நாலு நாளா பார்க்கலை. யாரையும் பார்க்கப் பிடிக்கலை போயிடுங்கன்னு சொல்லி அனுப்பறான்”

“அதுவும் பேப்பர்ல எல்லாம் வந்துடுச்சு... அது தெரியுமா? இல்லை தெரிய வரும் போது என்ன பண்ணுவான்னு ஒன்னும் தெரியலை”

“இப்போ ஜெயிலையும் பார்த்துட்டான்... ப்ளீஸ் சிஸ்டர்! குற்றம் நிரூபணமாச்சுன்னா ஏழு வருஷம் ஜெயில் கிடைக்குமாமே... அவ்வளவு பெரிய தண்டனை அவனுக்கு குடுக்காதீங்க! எப்படியாவது அவனை காப்பாத்துங்க!” என்று அவன் சொல்லச் சொல்ல அதிர்ந்து விட்டாள் ஜெயஸ்ரீ.

“என்ன? என்ன சொல்றீங்க?” என்றாள் திக்கித் திணறி.

“நீங்க தான் கம்ப்லையின்ட் குடுத்து இருக்கீங்களே!” நடந்தது என்ன வென்று வாசுவிற்கு எதுவுமே தெரியாது... நண்பனுக்காக பரிந்து வந்திருந்தான்.

“நானா! இல்லையே!” என்பது போல தலையாட்டியவள், அப்பா

கொடுத்திருப்பார் என்று உடனே அனுமானித்தாள்... அப்பா இப்படிச் செய்வார் என்று நினைக்கவேயில்லை, அதுவும் பேப்பரில் எல்லாம்...

பேப்பரில் ஜெயஸ்ரீயின் பெயர் எல்லாம் வரவில்லை... ஆனால் சிபியின் பெயர் வந்திருந்தது..

வீடு திரும்பியதும் வஜ்ரவேலிடம் பேச...

“இருக்கட்டும் பாப்பா! அவங்க செஞ்சது தப்பு... உனக்கு ஒன்னுமாகலை சரி!... உனக்கு ஏதாவது ஆகியிருந்தா, அப்போவும் நான் தான் செஞ்சேன்னு அந்த பையன் போய் உள்ள உட்கார்ந்து இருப்பான்...”

“அப்போ நீ... உன் உயிர்... எப்படி அவங்க குடும்பத்தை காப்பாத்தி இருக்கான் பாரு... அப்போ நீ! நீ யாரு அவனுக்கு?.. அவனை நம்பி தானே கல்யாணம் செஞ்சு கொடுத்தேன்..”

“வேண்டாம் கண்ணு! அனுபவிக்கட்டும்! நான் கம்ப்லையின்ட் வாபஸ் வாங்கமாட்டேன்” என்று முடிவாக சொல்ல... அவர் சொன்ன விதத்திலேயே அவர் செய்ய மாட்டார் என்று புரிந்தவள்...

பிறகு எதுவும் பேசவில்லை, ஆனால் உணவு, மாத்திரை என்று எதுவும் உண்ணவில்லை... ஒரு நாள் முழுவதும்... கனிவாக சொல்லி... திட்டி, மிரட்டி, பயமுறுத்தி, என்று ஏதேதோ செய்து பார்த்தார் வஜ்ரவேல்.. ஜெயஸ்ரீ அசையவேயில்லை.

பின்னர் வேறு வழியில்லாமல் கேசை வாபஸ் வாங்கினார்.

அதே நாளில் வந்து, முன் சொன்ன வார்த்தைகளை சொல்லிச் சென்றவன் தான் சிபி..

“பாரு! வந்தவன் நீ எப்படி இருக்கன்னு கூடப் பார்க்கலை! அவன் வேலை முடிஞ்சுதுன்னு எல்லாத்தையும் திருப்பிக் குடுத்துட்டு போயிட்டான்! அப்போ உன் வாழ்க்கை...”

“என்ன? போய் விட்டானா!... அவ்வளவு தானா!... எப்படி இருக்கிறாய் என்று ஒரு வார்த்தைக் கூட கேட்கவில்லையா?” ஜெயஸ்ரீயிற்கு மிகுந்த ஏமாற்றம்.

சிபியைத் திட்ட வேண்டும் போல ஆத்திரம்… சிபிக்கு அழைத்தால் அவனின் போன் ஸ்விட்ச் ஆஃப்… மனம் தாளாமல் பத்மினி மூலமாக வாசுவின் நம்பர் வாங்கி, அவனிடம் சிபியிடம் பேச வேண்டும் என்று சொல்ல…

ம்கூம்! வஜ்ரவேல் வீட்டிற்கு வந்து சென்றவன் தான்! அவன் எங்கே சென்றான் என்று யாருக்கும் தெரியவில்லை. அவனின் வீட்டினருக்கும் தெரியவில்லை… வாசு சென்ற நேரம் நடராஜன் அவனைத் தான் தேடி வந்து கொண்டிருந்தார், “எங்கடா போனான் சிபி” என்பது போல…

ஒரு தந்தையாக நடராஜனின் நிலை இன்னும் பரிதாபம்.

ஆயிற்று இரண்டு வருடங்கள்… அவனைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை..

தினம், தினம் அவனின் நினைவு தான் ஜெயஸ்ரீயிற்கு. தன்னை விட்டு சென்று விட்டான் என்பது என்னவோ ஒரு வகையில் தாளவே முடியவில்லை. நடந்த பிரச்சனை காரணமா இல்லை, என் குறைகள் இதை சகிக்க முடியாது என்று இதுதான் சந்தர்ப்பம் என்பது போல விட்டுச் சென்று விட்டாரா…?

பாலும் கசந்ததடி, படுக்கையும் நொந்ததடி போன்ற ஒரு நிலை தான். எல்லோரும் தன்னைப் பரிதாபமாக பார்ப்பது வேறு அப்படி ஒரு வேதனையைக் கொடுத்தது.

இப்போதெல்லாம் பேச்சுத் திக்குவதேயில்லை ஜெயஸ்ரீக்கு… அதன் ரகசியம் ஒன்றுமில்லை. அவள் யாரோடும் பேசுவதேயில்லை.. அப்பாவோடு கூட.. எல்லாம் சைகையே, வஜ்ரவேல் இன்னும் தளர்ந்து விட்டார்… மகளைப் பார்த்து.

பார்ப்பவர்கள் எல்லாம், “அவசரப்பட்டு திருமணம் செய்து விட்டாய் திருமணமா முக்கியம்! பெண்ணைப் படிக்க வைத்திருக்க வேண்டும்!” என்று ஆளாளுக்கு ஒன்று சொல்ல…

இப்படி எல்லோரும் ஆளுக்கொன்று சொல்லும்படிக் காட்சிப் பொருளாகி விட்டோமே என்று அவருக்குமே வருத்தம்.

மொத்தத்தில் வீட்டில் தந்தையும் மகளும் ஆளுக்கு ஒரு பக்கம் அந்த வீட்டில் அமர்ந்திருப்பர் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு...

ஆனால் இதில் ஒரு விஷயம், அந்த மூன்று பிள்ளைகளைப் பார்க்கும் பொறுப்பை மட்டும் வஜ்ரவேல் தட்டிக் கழிக்கவில்லை. இப்படி அடுத்தவர் பிள்ளைகளைப் பார்க்கும் போது தன்னுடைய மகள் நன்றாக இருக்க மாட்டாளா என்ற ஒரு எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது என்னவோ உண்மை.

எப்படிப் புண்ணியம் தேடுவது என்று தெரியவில்லை. ஆனால் ஏதாவது ஒன்று தன் மகளை சந்தோஷமாக வைத்துக் கொள்ளாதா என்ற ஆசை.

காலேஜ் போல எதுவும் சேரவில்லை... ஆனால் கம்ப்யூட்டர் லேங்குவேஜ் கோர்ஸ்கள் அடுத்தடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் ஜெயஸ்ரீ..

படிப்பு, அதை விட்டால் கம்பியூட்டர் முன்! இப்படியே பொழுது ஓடியது. அதுவும், அந்தக் கோர்சும் அவினாஷியில் இல்லை கோவையில். பஸ் ஏறி சென்றாள். வஜ்ரவேல் ஒத்துக் கொள்ளவேயில்லை.

பிடிவாதம் பிடித்து, “நான் சுயமாக இருக்க வேண்டும்!” என்று சொல்லி... தனியாக பஸ் ஏறித்தான் சென்றாள். இப்போது இந்த வருடம் பத்மினியும் அவளுடன் சென்றாள். அவள் கோவையில் உள்ள ஒரு மகளிர் கல்லூரியில் சேர்த்துவிட்டிருந்தார்கள்.

எப்போதும் பிடிவாதம் தான் ஜெயஸ்ரீ... ஆனால் இப்போது இன்னும் அதிகமாக பிடிவாதம் ஆகிவிட்டது.

மகளின் வாழ்க்கை என்ன ஆகுமோ என்ற கவலை தான் அதிகமாக இருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன் தான் வஜ்ரவேல் ஜெயஸ்ரீயிடம் பேசினார்... “கண்ணு! அந்தப் பையனுக்கு விவாகரத்து நோட்டிஸ் விடலாமா?” என்று கேட்டார்.

மிகச் சில நாட்களுக்குப் பிறகு.. “அவர் எங்கேன்னு தெரிஞ்சிடுச்சா?” என்றாள் திக்கித் திணறி, ஒரு எதிர்பார்ப்போடு...

என்ன பதில் சொல்வது என்றே வஜ்ரவேலுக்கு தெரியவில்லை. "இல்லை!" என்று சொல்லவும்...

"அப்போ யார்க் கிட்ட விவாகரத்து கேட்பீங்க" என்றாள் திணறியபடி...

"அப்போ அவன் எங்கேன்னு தெரிஞ்சா விவாகரத்துக்கு உனக்கு சரியா?" என்றார்.

என்னவோ சிபியை நினைக்க, ஒரு கோபமும் ஒரு ஆத்திரமும் பொங்க... "ம்! சரி!" என்றாள்.

இவ்வளவு எளிதாக தன் பெண் விவாகரத்திற்கு ஒத்துக் கொள்வாள் என்று வஜ்ரவேல் எதிர்பார்க்கவேயில்லை.

அவள் நிஜமாகத்த தான் சொல்கிறாளா என்பது போல பார்க்க... அவளின் முகத்தில் தெரிந்த தீவிரம் செய்வாள் என்று சொல்ல...

உடனே ஒரு வக்கீலைப் பார்த்து, சிபியின் வீட்டு முகவரிக்கு ஒரு விவாகரத்து நோட்டிஸ் அனுப்பினார். அவன் அங்கே இல்லை என்று தெரியும், ஆனால் ஏதோ ஒரு வகையில் வீட்டினர் தொடர்பில் இருப்பார்கள் என்று நினைத்து அதை செய்தார்.

ஆனால் எந்த வகையிலும் சிபி தொடர்பில் இல்லை என்பது தான் உண்மை.

சிபி இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது தான் செயல் முறைக் கூட... அங்கே தான் அனுப்பியாக வேண்டும். அவன் வராத பட்சத்தில் அவனைத் தேடி ஒரு பேப்பரில் விளம்பரம் கொடுத்து, அப்போதும் அவன் வரவில்லை என்றால் எக்ஸ் பார்ட்டியாக விவாகரத்து வாங்கிக் கொள்ளலாம்.

இந்த விவரமெல்லாம் ஜெயஸ்ரீயிற்குத் தெரியாது... எப்படியும் விவாகரத்து என்றால் அவன் வந்து தானே ஆகவேண்டும் என்பதாக அவளின் எண்ணம்.

அவன் வராமல் கூட வாங்கிவிடலாம் என்று தெரியவில்லை.

அன்றும் பஸ்ஸில் அவள் காலையில் கம்ப்யூட்டர் கிளாஸ் செல்ல,

அவளோடு வளவளத்தபடி பத்மினி! ஆமாம்! பத்மினிக்கு வாயை திறந்தால் இப்போதெல்லாம் மூட முடிவதேயில்லை. அப்படி ஒரு அரட்டை.

ஜெயஸ்ரீ பதில் கொடுக்காவிட்டாலும் பத்மினி பேசுவதை கேட்டால் நேரம் போவதே தெரியாது.

அப்படித்தான் அன்றும் கேட்டுக் கொண்டே வந்தாள். இருவரும் பஸ்ஸில் அமர்ந்து இருந்தனர். திடீரென்று ட்ராபிக் ஜேம் ஆகவும் பஸ் நின்றுவிட்டது.

எட்டிப் பார்த்த பத்மினி, “ஏதோ ஆக்சிடென்ட் போலக்கா.. ஐயோ எப்போ ரோடு க்ளியர் ஆகும் போல தெரியலையே, லேட் ஆகுது!” என்று சொல்ல...

ஜெயஸ்ரீயிற்குத் தோன்றியதெல்லாம், நமது மனநிலை எப்படி ஆகிவிட்டது! ஒரு ஆக்சிடென்ட் என்றால் யாருக்கு என்ன ஆனதோ என்று மனது பதறாமல், எப்போது ட்ராஃபிக் கிளியர் ஆகும் எப்போது நமது வேலையைப் பார்க்கலாம் என்றாகிவிட்டது.

இப்படி நினைக்கும் போதே மனதில் ஒரு எண்ணம், ஒரு வேலை அவருக்கு ஏதாவது ஆகியிருக்குமோ, அதனால் தான் வரவேயில்லையோ. நினைத்த நிமிடம் நெஞ்சம் பதறி விட்டது.

யாரை கேட்பது, யாரையாவது கேட்டால் பரவாயில்லை என்பது போல தோன்ற, யோசித்து யோசித்து பார்த்தவளுக்கு வாசுவிடம் கேட்டால் என்ன என்று தோன்றவும்,

பத்மினியிடம் வாசுவின் நம்பர் கிடைக்குமா என்று கேட்டாள். எப்போதோ அவளிடம் இருந்தது, இப்போது இல்லை.

“ம், அக்கா! ஜெய்சங்கர் கூட அப்போ அப்போ பேசறாங்க, அந்த அண்ணா!, ஆனா அது வீட்ல இருக்குற போன்ல இருக்கும்! எப்படி எடுக்க இப்போ?” என்று கேட்க..

இப்போது முடியாது தனத்திடம் கேட்டால், உடனே ராஜவேலிடமோ இல்லை வஜ்ராவேலிடமோ சொல்லி விடுவார். அன்றைய மாலை வரை

காத்திருப்பு ஜெயஸ்ரீயிற்கு முடியவேயில்லை.

எப்படியோ மாலை வரை பொழுதைத் தள்ளி வீடு வந்து சேர்ந்ததும் பத்மினியிடம் ஞாபகபடுத்த...

அவள் உடனே தொலைபேசி எண்ணைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஜெயஸ்ரீ அழைத்து விட்டாள், ஆனால் பேச்சே வரவில்லை... பத்மினியிடம் கொடுத்து, "சிபி எங்கே இருக்கிறார் என்று தெரியுமா நன்றாக இருக்கிறாரா என்று கேள்" என்று எழுதிக் காட்டி கேட்க சொன்னாள்.

திடீரென்று இப்படி அழைத்துக் கேட்கவும், பதிலுக்கு வாசு, "உங்களுக்குத் தெரியுமா எங்க இருக்கிறான்னு! சொல்லுங்க! நான் போய் பார்க்கிறேன்!" என்று அவனும் கேட்க... மனம் சோர்ந்து தான் விட்டது.

"அவங்க வீட்டு ஆளுங்களுக்கு தெரியுமா கேளு?" என்று எழுதிக் காட்ட..

"அவங்களே வாரத்துக்கு ஒரு தடவை எனக்கு ஏதாவது தெரியுமான்னு கேட்டுட்டு இருக்காங்க" என்று சொல்லவும்...

"ஏதாவது தெரிஞ்சா சொல்லச் சொல்லு!" என்று ஜெயஸ்ரீ பத்மினியிடம் சொல்லிப் பேச்சை முடித்து விட்டவள்... கூடவே பத்மினியிடம், "யார்கிட்டயும் சொல்லக் கூடாது!" என்று சோர்வோடு சென்று படுத்துக் கொண்டாள்.

அதன் பிறகு அவள் மனதோடு அவளே கேட்டுக் கொண்டது எல்லாம் இதுதான்... "எதற்கு அவனைத் தேடுகிறாய்! அப்படி உன்னைப் பற்றி கவலைப்படாமல் போனவனைப் பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்! அவன் வந்தால் மீண்டும் அவனோடு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வாயா!" என்பது போல...

கேள்விகள் அவளைத் தாக்க... அவளுக்கு அவளே கீழிரக்கமாக உணர ஆரம்பித்தாள்.

இவ்வளவு நாட்களாக இல்லாமல் சிபியின் நினைவு இவ்வளவு தன்னைத் தாக்க வேண்டிய அவசியம் என்ன என்று அவளுக்குப் புரியவேயில்லை.

ஒரு வேலை அவனுக்கு ஏதாவது ஆகிவிட்டதோ? அதன் தாக்கம் தான் தன்னைத் துரத்துகிறதோ என்ற சஞ்சலம் ஒரு புறம்...

என்னவோ அவனை பார்க்கப் போகிறோமோ? அவன் இங்கே வருவானோ என்பது போல ஒரு தாக்கம் மறுபுறம்.

திணறித்தான் போனாள்.. இந்த சஞ்சலம் ஒரு வாரம் தொடர்ந்தது. எங்கு சென்றாலும் பார்வையில் ஒரு அலசல் சிபி தென்படுகிறானா என்பது போல...

அந்த வார ஞாயிற்றுக் கிழமை... பவானி பக்கம் உள்ள ஒரு ஊரில் தனம் அவர்களின் சொந்தத்தில் ஒரு விருந்து என்று கிளம்பினார்.

அவரின் சொந்தம் என்பதால் பத்மினி ராகினி மற்றும் ஜெய்சங்கரையும் உடன் அழைத்துக் கிளம்பினார்.

எங்காவது செல்லும் போது மரியாதை நிமித்தம், “நீயும் வர்றியா கண்ணு?” என்று தனம் ஜெயஸ்ரீயையும் அழைக்க... இருந்த மன உளைச்சலுக்கு எங்கேயாவது சென்றாள் தேவலாம் போல தோன்ற... அவள் உடனே சரி என்று கிளம்பிவிட... இப்போது தனத்திற்கு தான் தர்ம சங்கடமாகிப் போனது.

அவர்களின் உறவோடு எல்லாம் ஜெயஸ்ரீ ஒட்ட மாட்டாள், அங்கே அவளை எப்படி அழைத்துக் கொண்டு போவது, அதுவும் தங்கள் பஸ்சில் போகிறோம், ஜெயஸ்ரீயை அவ்வளவு தூரம் அப்படி வஜ்ரவேல் அனுப்ப மாட்டார் என்று தெரியும்.

என்னவோ எங்கேயும் போகிறேன் என்று கேட்காத மகள் முதல் முறையாக அவர்களோடு போகிறேன் என்று சொல்லவும், ஒரு கார் ஏற்பாடு செய்து வஜ்ரவேல் பலமுறை ஜெயஸ்ரீயின் பத்திரம் தனத்திடம் சொல்லி அனுப்பினார்.

அங்கே விருந்து நடந்ததோ ஒரு தென்னந் தோப்பு... அங்கே ஒரு புறம்

விருந்து தயாராகிக் கொண்டிருக்க, மறுபுறம் உறவுகள் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க...

காலாற ஜெயஸ்ரீ சிறிது தூரம் நடக்கிறேன் என்று தனத்திடம் சொல்லி கூட பத்மினி, ராகினி, ஜெய் சங்கர் என்ற மூவரோடு நடந்தாள். ஒரு சின்ன ஓடை ஓடிக் கொண்டிருக்க, அதை ஒட்டி இவர்கள் நடந்து கொண்டிருந்தனர்.

சிறிய ஓடை, அந்தப் புறம் ஒரு வயல் வரப்பு, அந்த இடமே மிகவும் ரம்மியமாகத் தெரிய... பத்மினி ராகினி ஜெய் ஷங்கர் மூவரும் ஓடையைத் தாண்டி அந்த புறம் சென்றனர்

அவர்கள் தண்ணீரில் கால் நனைக்க, காலணிகளை இந்த புறம் விட்டு வெறும் காலோடு ஓடை தாண்டி வயல் வரப்பை அடைந்தனர்

ஜெயஸ்ரீயிற்கும் ஆசை வர.. அவளின் ஸ்டிக்கை வைத்து விட்டு ஷூவை கழற்றாமல் ஷூ நனைந்தாலும் பரவாயில்லை, காரில் தானே போகிறோம் என்று நினைத்தவள்... ஷூவோடு நனைந்து ராகினியை வர வைத்து அவளின் கையைப் பிடித்து ஓடையைத் தாண்டி... வயல் வரப்பில் காலை வைத்தாள்.

ஷூ கால்கள் வயல் வரப்பில் படுவதென்பது அங்கே பெரிய குற்றம். இது தெரியாதவல்ல ஜெயஸ்ரீ! இருந்த மனதின் உற்சாகத்தில் மறந்தாளா இல்லை ஓரமாகத் தானே செல்கிறேன்! நாற்று காலில் படவில்லையே என்று எண்ணினாளா!

ஏதோ ஒன்று கவனமின்றி அப்படியே ஒரு காலில் ஷூ, மற்றொரு காலில் அதற்கு இணையான கட் ஷூ என்று செல்ல... அங்கே வயல் வரப்பில் இருந்த ஒரு பெண் பார்த்து விட்டு, “ஏய் யாரு அது செருப்பு காலோட வயல்ல இறங்கறது, ஏறு மேல” என்று கத்தினாள்.

“என்ன செருப்புக் காலோடவா! யாரு அது?” என்று அதை விடவும் கோபமாக சத்தம் கொடுத்துக் கொண்டு எங்கிருந்தோ வந்தது சாட்சாத் சிபியே தான். அங்கே ஜெயஸ்ரீயை அவன் எதிர்பார்க்கவில்லை. அதையும் விட ஜெயஸ்ரீயும் அவனை எதிர்பார்க்கவில்லை.

இருவரும் நின்றது நின்றபடி இருக்க...

“ஏறு மேல” என்று குரல் கொடுத்துக் கொண்டே அந்த பெண்மணி விரைந்து வர… பதட்டத்தில் மேலே ஏறுவதற்கு பதிலாக இன்னும் நாற்று இருந்த பக்கம் ஜெயஸ்ரீ போக…

அதற்குள் அந்த பெண்மணி விட்டால் அடித்து விடுவார் போல விரைந்து அருகில் வர…

“இருங்கக்கா!” என்று அவசரமாக ஜெயஸ்ரீயின் இடையின் கீழ் இரு கைகளையும் கொடுத்து அப்படி தூக்கிக் கொண்டான் சிபி…

எல்லோரும் வாய் பிளந்து பார்த்து நின்றனர்.

## அத்தியாயம் பத்தொன்பது :

“விடு, விடு” என்று வார்த்தையால் சொல்லவில்லை ஜெயஸ்ரீ, ஆனால் அவனின் கைகளை விலக்கி இறங்க முற்பட..

“இரு, இரு, இறக்கி விடறேன். என்னையும் சேர்த்து தள்ளி விட்டுடாத” என்று சிபி அவனின் இயல்பாக அதட்டவும் தான் அமைதியானாள்.

அதற்குள் அந்தப் பெண்மணி, “பூட்ஸ் காலோட வயல்ல இறங்கினது பெரிய தப்பு. அதுக்காகப் பொட்டப் புள்ளைங்களைத் தூக்கக் கூடாது தம்பி! அது இன்னும் தப்பு இறக்கி விடு!” என்று சொல்ல…

அவரை முறைத்த சிபி, “தெரியாத பொண்ணை யாராவது தூக்குவாங்களா? அவளைத் தள்ளி விடற மாதிரி வேகமா நீங்க வந்துட்டு இப்போ என்ன ராமாயணம் பேசறீங்க! போங்க! போய் வேலையைப் பாருங்க!” என்று சொல்ல…

அவன் அதட்டியதை எல்லாம் அந்தப் பெண்மணி காதில் வாங்கவில்லை.. “தெரிஞ்ச பொண்ணுன்னாலும் இவ்வளவு நேரமாவா தூக்கி வைப்ப!” என்று கையைத் தட்டி மோவாய் கட்டையில் கை வைத்து அதிசயிக்க…

அங்கொன்றும் இங்கொன்றுமாய் பார்த்திருந்த ஆட்கள், பக்கத்தில் நெருங்கி வந்தவர்கள், கொல்லென்று சிரித்தனர்.

சிபி ஒரு நான்கைந்து அடிகள் அவளைத் தூக்கியபடி நடந்து வரப்பின் விளிம்பில் இருந்த தென்ன மரத்தின் அடியில் இறக்கி விட்டான். அதற்குள் ராகினி ஓடிச் சென்று ஜெயஸ்ரீயின் ஸ்டிக்கை எடுத்து வந்து அவளின் கையில் கொடுக்க...

அப்போதுதான் அங்கிருந்தவர்களுக்கு எல்லாம் ஜெயஸ்ரீயின் குறைபாடு புரிந்தது. அவர்களுக்கு முகம் விழுந்து விட்டது.

“அது.. பொண்ணு... தெரியாமப் பேசிட்டேன்!” என்று விளக்கம் கொடுக்க வர, ஜெயஸ்ரீ தெரியாமல் இறங்கிட்டேன் என்பது போல கையெடுத்து கும்பிட்டு திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அப்போது தான் சிபிக்கு ஸ்மரனையே வந்தது. அதுவரை விடாது ஜெயஸ்ரீயைத் தான் பார்வையால் அளந்திருந்தான்.

முதலில் சிபியைப் பார்த்ததும் ஒரு அதிர்ச்சி தான் ஜெயஸ்ரீயிற்கு, ஆனால் அவன் தூக்கிய பிறகு தன்னிடம் அதட்டல் போட்ட பிறகு.. அவன் மாறவேயில்லை என்பது போல ஒரு தோற்றம் ஜெயஸ்ரீயிற்கு.

“நானானால் இவன் என்ன ஆனானோ? ஏதானானோ?” என்று மனதிற்குள் பதறித் தவிக்க..

அதன் சாயல் சிறிதுமின்றி, “என்னை விட்டு ஓடிப்போனான் என்ற குற்றம் சிறிதுமின்றி எப்படி என்னைத் தூக்குகிறான்” என்று மனதிற்குள் தோன்றிய அடுத்த நொடி...

“அவன் என்ன உன்னை ஆசைப்பட்டா தூக்கினான்! இல்லையே.. பூமியை, பூமித்தாயை, அந்த வயல் வரப்பை நேசிப்பவனாக உன்னுடைய ஷூ கால்கள் அங்கே படக் கூடாது என்று தூக்கினான்... அதுக் கூட உன்னுடைய அறிவிற்கு விளங்கவில்லையா...” இந்த எண்ணம் தோன்றிய நிமிடம் கோபம்... ஆத்திரம் பொங்கியது.

சிபியை நோக்கி பார்வையை திருப்பியவளுக்கு அவன் தன்னையே பார்த்திருப்பது புரிய... திருமணமாகி அந்த நான்கு நாட்களும் இப்படித் தான் பார்த்திருந்தான்... இப்போது இரண்டு வருடம் கழித்தும் இப்படி தான் பார்க்கிறான்.

ஏதோ பொருளை எடை போடுவது போல, ஆராய்ந்து பார்ப்பது போல...

அந்த ஆராயும் பார்வையைப் பார்க்க பிடிக்காதவளாக அந்த இடத்தை விட்டு போக விரும்பி, தடியைக் கொண்டு வேகமாக நடக்க முற்பட... நடை தடுமாறியது.

வேகமாக பத்மினி ஓடி வந்து பிடித்தாள்.

“விடு!” எனக்கு யாரும் தேவையில்லை என்பது போல அவளின் கையை விலக்கி சற்று சமன்செய்து நடந்தாள்.

அதுவரையிலும் அவளையே பார்த்திருந்தவன்... வேகமாக அருகில் வந்து “எப்படி இருக்குற ஸ்ரீ?” என்று கேட்டான்...

“உயிரோட தான் இருக்கேன்” என்று கத்த வேண்டும் போல ஆத்திரம்.. அதை மறையாமல் கண்களில் கொண்டு வந்து அவனைப் பார்க்க..

“எப்படி இருக்க?” என்றான் மறுபடியும்... எப்படி ஒன்றுமே நடவாதவர் போல இவரால் கேட்க முடிகிறது என்று மேலும் மேலும் ஆத்திரம் பொங்க...

பதில் சொல்லாமல் வழியில் நின்ற அவனைச் சுற்றி நடக்க முற்பட்டாள்.

“உன் பிடிவாதம் மாறவேயில்லை!” என்று சிபி சொல்லவும் கட்டுக்கடங்காத ஆத்திரம்..

நின்று திரும்பி நிதானமாக அவனை பார்த்தாள்.. பார்வையே, “என்ன கேட்கணுமோ கேளு!” என்று சொல்லியது..

சிபிக்கு அந்தப் பார்வையை பார்த்ததும் ஒரு தயக்கம் வந்தது.. அருகில் இருந்த பத்மினியும், ராகினியும், ஜெய்சங்கரும் அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளட்டும் என்பது போல ஒதுங்கி நிற்க..

“நீங்க எப்படி இருக்கீங்க?” என்றாள் திக்கித் திணறி..

ஒரு சம்பிரதாயதிற்கு சொல்வது போல, “நல்லாயிருக்கேன்!” என்று சிபி சொல்ல..

“ஆனா நான் நல்லாயில்லை! என் புருஷன் என்னை விட்டு ஓடிப் போயிட்டார்” என்று திக்கி திணறி சொன்னாலும், அவனுக்கு மட்டும் கேட்குமாறு தான் சொன்னாள்.

ஆனாலும் அந்த பதில் சிபியை அவ்வளவு காயப்படுத்தியது..

“நான் ஒன்னும் ஓடி வரலை! நீங்க யாரும் வேண்டாம்னு சொல்லி தான் வந்தேன்... அதுவும் உங்கப்பா கிட்ட வந்து எங்க கேட்டாலும் கையெழுத்துப் போடறேன்னு சொல்லி தான் வந்தேன்!” என்று சொல்லவும்..

இப்போது ஜெயஸ்ரீயின் மனம் அவ்வளவு காயப்பட்டது... இதுவரை இருந்த மனநிலை போய் அழுகை முட்டியது, கண்களில் நீர் நிறைய, “அப்போ உங்களுக்கு என்னைப் பிடிக்கலை, அதான் விட்டுட்டீங்க.. என்னவோ நான் உனக்கு வாழ்க்கை குடுக்கலை! நீ எனக்கு குடுன்னு சொன்னீங்க! எல்லாம் சும்மா தானே!” திணறி திணறி சொல்லும் போதே அழுகை வந்துவிட்டது.

அதற்கு மேல் யாருக்கும் காட்சிப் பொருள் ஆக விருப்பமற்று கண்களில் நீர் வழிய நடக்க..

திருமணதிற்கு முன் தான் அவளிடம் கேட்ட வார்த்தைகள்... அவள் சொன்ன விதமே அவளின் மனதிலும் நினைவிலும் அது அழியாச் சித்திரம் என்ற உண்மை சிபியின் முகத்தில் அறைந்தது.

அப்போது எனக்கு அவளைப் பிடிக்க வேண்டும் என்பது தான் அவளின் நினைவா... அதை அவள் விரும்புகிறாளா என்று சிபி நினைக்கும் போதே... ஜெயஸ்ரீ சிறிது தூரம் நடந்து சென்று விட்டிருக்க..

“அக்கா! ஏன் அழுதுகிட்டு வர்றீங்க?” என்று ராகினி கேட்க...

பத்மினி ஒரு படி மேலே போய் அவனிடம் விரைந்து நடந்து வந்து சண்டையிட்டாள்.. “போன வாரம் கூட உங்களை எவ்வளவு தேடுனாங்க தெரியுமா... வாசு அண்ணா போன் நம்பர் வாங்கிப் பேச சொன்னாங்க... நான் தான் அவங்க சார்பா நீங்க எங்க இருக்கீங்கன்னு தெரியுமான்னு கேட்டேன்..”

“நீங்க அழ வைக்கறீங்க அவங்களை... எப்பவும் வெளில போகும் போது எல்லாம்... பஸ்ல போகும்போது எல்லாம்... நீங்க எங்கயாவது தெரியறீங்கலான்னு பார்த்துகிட்டே போவாங்க!” என்று பொறிந்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த ஜெயஸ்ரீயிற்கு இன்னும் கீழிறக்கமாகத் தான் போய் விட்டது. இப்படி இந்த பெண்ணிற்கு தெரியும்படி தான் இருந்திருக்கிறோம் தன் மனநிலைகள் இருந்திருக்கின்றன என்று...

அவளை வர சொல்லு என்று ஜெய்சங்கரைப் பார்த்து சைகை செய்ததில் அவன் பத்மினியைப் பார்த்து, “வா!” என்று கத்தினான்..

அப்போதும், “அக்காவோ அவங்கப்பாவோ எங்களை விடவேயில்லை இந்த வருஷமா... நீங்க ஏன் அவங்களை விட்டீங்க... எந்த சொந்தமும் இல்லாத அவங்க எங்களைப் பார்த்த அளவு கூட.. அவங்களுக்கு முதல் சொந்தமான நீங்க அவங்களைப் பார்க்கலைல்ல” என்று ஆவேசமாக கேட்டு நிற்க...

ஜெய்சங்கர் பத்மினியை மேலும் பேசவிடாமல் வந்து இழுத்துச் சென்றான்...

நால்வரும் திரும்பிப் பார்க்காமல் நடந்தனர்.

சொந்தங்களை விட்டு விலகி வந்தவனுக்கு, இப்போது இந்த உலகத்தை விட்டு விலகி விட்டால் பரவாயில்லை என்று தான் தோன்றியது. சிபி இன்னும் கல்லாய் சமைந்து நின்றுவிட்டான்.

ஜெயஸ்ரீயை விட்டு வந்த நாளாக அவள் தன்னை தேடக் கூடும்... என்று கனவிலும் நினைத்ததில்லை. அத்துணை வருடங்களாக கூட இருந்த பெண் வேண்டாம் என்று சென்று விட்டாள்... இதில் திருமணமாகி சில நாட்கள் இருந்தவள், அப்படி ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு தன்னைத் தேடக் கூடும் என்று அவன் எண்ணியதேயில்லை.

“கண்ணுக்கு கண்ணாக அவளின் தந்தை பார்த்துக் கொள்கிறார்... அவனோடு பெண்ணை அனுப்பும் எண்ணமோ, வாழ்க்கையைத் தொடரும் எண்ணமோ, இருந்திருந்தால் கண்டிப்பாக கேஸ் கொடுத்திருக்க மாட்டார், இப்படி போலிஸ் கேஸ் என்றான பிறகு தன்னுடன் அனுப்பமாட்டார்...”

வருடக்கணக்கில் இவள் தான் உன் மனைவி என்று அடையாளம் காட்டப் பட்ட பெண் திருமணத்திற்கு முதல் நாள் போய் விட்டாள்... மனைவியான பெண்ணும் நான்கு நாட்களில் இப்படி ஒரு குற்றச்சாட்டை சுமத்தி போய் விட்டாள்... எல்லோர் முன்னிலும் வாழ்க்கைத் துணையை தொலைத்து நிற்கும் அந்த அசிங்கம் வேண்டாம் என்று தான் வந்துவிட்டான்.

இதில் ஜெயஸ்ரீ தன்னைத் தேடுவாள் என்று எப்படி நினைப்பான்.. பெண்டாட்டி தன்னை வேண்டாம் என்று சொல்லும் அசிங்கம் யார் முன்னிலும் வேண்டாம் என்று தான் விலகி வந்தான்.

இதில் ஓடிப் போய்விட்டான் என்ற அவப் பெயரா... உண்மையில் எனக்கு உலகம் புரியவில்லையா.

உண்மையில் திருமண பந்தம் கொடுக்கும் சொந்தம் அலாதியானது என்று தான் அவனுக்குப் புரியவில்லை.

அதற்குள் தனதிடம் சென்றிருந்தவர்கள்... சிபியைப் பார்த்த விபரத்தை எடுத்துரைக்க...

அவரும் வேகமாக அவனைக் காண வந்தார். வந்தவர், “என்ன தம்பி இப்படி சொல்லாம கொள்ளாம காணாமப் போயிட்டீங்க. இப்படிப் பண்ணலாமா?” என்று கேட்க...

நிஜத்தில் சிபி குழம்பிப் போனான்... “என்ன இவர்கள் ஜெயஸ்ரீயை என்னுடன் வாழ அனுமதித்து இருப்பார்களா?” என்பது போல...

தானாக தப்பு தப்பாக நடக்கும் விஷயங்களில், தான் இன்னும் தப்பு செய்கிறோமா. இருந்தாலும் ஜெயஸ்ரீ அப்படிப் கண்ணீரோடு அப்போது போனது மனதை வருத்தியது. வீட்டில் நடந்த நிகழ்வுகளுக்குப் பிறகு அவள் வரமாட்டாள் அவளின் தந்தையும் அனுப்பமாட்டார் என்று தான் விலகினான். அவளாகத் தன்னைத் தேடி இருக்கிறாள் என்று தெரிந்த பிறகும் அவளை விடுவது சரியல்லவே.

“பக்கத்துல தான் என் வீடு வாங்களேன்!” என்று கூப்பிட்டான்.

“அதுங்க தம்பி, மாமா கிட்ட கேட்காம வரமுடியாதுங்க” என்றார்.

“கேளுங்களேன்!” என்றான் இவனும் உடனே… வஜ்ரவேலின் எண்ணம் என்ன என்று தெரிந்து கொள்ள…

தனம் வஜ்ரவேலிடம் தொலைபேசியில் அழைத்துக் கேட்க… “ஒரு வாரம் முன்னாடி தான் அந்தப் பையன் வீட்டுக்கு நாம விவாகரத்து நோட்டிஸ் அனுப்பியிருக்கோம்” என்று சொல்ல தனத்திற்கு அதிர்ச்சி.

“நீங்க அங்க இருக்க வேண்டாம்! விருந்து முடியலைன்னாலும் கிளம்பிடுங்க… அவனுக்கு விவாகரத்து நோட்டிஸ் அனுப்பியிருக்கோம்! அதுக்குண்டானது என்னவோ செய்ய சொல்லு!” என்று சொல்லி விட்டார்.

விஷயத்தை சிபியிடம் சொல்லவும் அவனுக்கும் அதிர்ச்சி தான். அவர்கள் அதைத்தான் செய்வர் என்று இத்தனை நாளும் நினைத்து இருந்தான். ஜெயஸ்ரீயைப் பார்க்காமல் இருந்திருந்தால் இந்த அதிர்ச்சி இருந்திருக்காது.

இப்போது அவளை பார்த்த பிறகு, அவள் தன்னைத் தேடியிருக்கிறாள் என்று தெரிந்த பிறகு… அதுவும் அவள் தன்னிடம் உனக்கு என்னைப் பிடிக்கவில்லை, அதுதான் சென்று விட்டாய் என்று குற்றம் சாட்டிய பிறகு, தன்னோடு அவள் வருவாளா என்று மனம் எதிர்பார்க்கத் துவங்கிய பிறகு,

இப்படி ஒரு விஷயம் கேள்விப்படுவது அதிர்ச்சி தான் அவனுக்கு.

சிபிக்கு என்ன செய்வது என்று யோசிக்க கூட அவகாசமில்லை. அவனிடம் விஷயத்தை சொன்ன நிமிடம், வஜ்ரவேலின் சொல்லுக்கு இணங்க உடனே கிளம்பிவிட்டார்கள்.

அவர்களின் கார் கிளம்புமுன் அவர்கள் இருந்த இடத்தை அடைந்த சிபி.. “நான் ஜெயஸ்ரீகிட்ட பேசணும்” என்று சொல்லவும்..

“இல்லைங்க தம்பி! அதுக்கு அனுமதிக்க வேண்டாம்னு இப்போ மாமா திரும்ப போன்ல சொன்னார்!” என்று சொல்லி அவர்கள் கிளம்பிவிட…

சிபியால் அந்த நிமிடத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை, கார் கிளம்புவதைப் பார்ப்பதைத் தவிர…

ஜெயஸ்ரீ அவனைப் பார்ப்பாளா என்று எதிர்பார்த்துப் பார்க்க... அவள் பார்க்கவேயில்லை.

சற்றும் யோசிக்கவில்லை... ஆட்களிடம் சொல்லிவிட்டு அவனும் பின்னோடு கிளம்பிவிட்டான் ஜெயஸ்ரீயின் வீட்டிற்கு.

அவர்கள் காரில் சென்றதால் வெகு முன்னரே சென்று விட்டனர். அவன் பஸ் ஏறி இடத்தைச் சென்றடைய மாலை ஆனது.

அழுது அழுது ஓய்ந்து அப்போதுதான் உறங்க ஆரம்பித்து இருந்தாள் ஜெயஸ்ரீ.

வஜ்ரவேலிற்கு பெண்ணின் நிலைமை தெரியவில்லை. இவர்களை அனுப்பி விட்டு.. அவர் ஒரு பக்கம் ஒரு கொள்முதல் விஷயமாக சேலம் கிளம்பியிருந்தார்.

இவர்கள் விஷயத்தைச் சொல்லவும் இவர்களை கிளம்பி வர சொன்னவர்.. அவரும் ஊர் திரும்ப ஆரம்பித்து இருந்தார்.

அவரும் மாலை வீடு வந்துவிட்டார். அவர் வந்து வீட்டின் உள் நுழைந்த நிமிடம் சிபியும் வந்தான்.

அவனை அவர் எதிர்பார்க்கவில்லை. தனம் தான் ஜெயஸ்ரீ உறங்குவதால் வீட்டின் உள் இருந்தார். அப்போதுதான் வந்த வஜ்ரவேல், “ஜெயஸ்ரீ என்ன பண்றா?” என்று கேட்டுக் கொண்டிருக்க...

“தூங்கறாங்க மாமா!” என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த நேரம் சிபி வர..

அதிர்ந்த வஜ்ரவேல் சுதாரித்து, “என்ன விஷயம்?” என்று கடினமாகக் கேட்க..

கண்டிப்பாக அவனை வரவேற்பார் வஜ்ரவேல் என்று எதிர்பார்க்கவில்லை சிபி. அதனால் அதை மனதில் கொள்ளாமல், “ஜெயஸ்ரீயைப் பார்க்கலாம்னு வந்தேன்!” என்று சொல்லியும் விட...

“எதுக்குப் பார்க்கணும்? இத்தனை நாள் ஆள் அட்ரசே இல்லை.. இப்போ எதுக்குப் பார்க்கணும்!”.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. “அவளுக்கு என்னைப் பார்க்க பிடிக்காதுன்னு நினைச்சு வரலை! இப்போ தான் பிடிக்கும்னு தெரிஞ்சது அதான் வந்தேன்!” என்றா சொல்ல முடியும். மௌனமாக நின்றான்.

“அது தெரியாம நடந்துடுச்சு! இனிமே அப்படி நடக்காது!” என்று சொல்லவும் செய்தான்.

“இனிமே நடக்குது, நடக்கலை, அது பேச்சில்லை... இப்ப எதுக்கு வந்த என் பொண்ணோட வாழலாம்னு நினைச்சா.. கண்டிப்பா முடியாது... உங்களுக்கு அவ அருமை தெரியலை. வீட்டுக்கு அனுப்பி வச்சவளை நாலு நாள்ல ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வெச்சிட்டீங்க மொத்த குடும்பமும்..”

“அட விரோதியா கூட இருந்துட்டு போறாக! ஆனா அடிபட்டவங்களைப் பார்க்கணும்ன்ற ஒரு மனிதாபிமானம் கூட உங்க யார்கிட்டயும் இல்லை”.

“இல்லை இனிமே அப்படி நடக்காது! நான் அவங்க கூட இல்லை..!”

“அது அன்னைக்கே வந்து சொல்லியிருக்கணும்... உங்க ஆளுங்களுக்காக நான் தான் தள்ளினேன்னு சொல்லி ஜெயில்ல போய் உட்கார்ந்த..”

“என் பொண்ணு சொன்னான்னு நானும் கேசை வாபஸ் வாங்கினேன்.. ஆனா நீ அன்னைக்கே வந்து எல்லாத்தையும் குடுத்துட்டு எப்படி இருக்கா அவன்னு கூட பார்க்காம அவளை விட்டுட்டுப் போயிட்ட.. ரெண்டு வருஷம் எங்க இருந்தன்னு கூட தெரியலை...”

“உன்னை நம்பி எல்லாம் பொண்ணை அனுப்ப முடியாது... மறுபடியும் நீ விட்டுட்டு போயிடுவியோன்னு பயந்துட்டு இருக்க முடியாது.. எங்க கேட்டாலும் கையெழுத்துப் போடறேன்னு சொன்ன இல்லை.. டைவர்ஸ் குடுத்துடு! என் பொண்ணு நிம்மதியா இருக்கட்டும்!”.

“அதெல்லாம் குடுக்க முடியாது... குடுக்க மாட்டேன்!”

“என் பொண்ணை நான் அனுப்ப மாட்டேன்!”

“அது அப்புறம் பார்த்துக்கலாம்! ஆனா நான் டைவர்ஸ் குடுக்க மாட்டேன்... நான் விட்டுட்டு போனது தப்பு தான்! ஆனா அந்த தப்பை திரும்ப செய்ய மாட்டேன்..”

“நான் அனுப்ப மாட்டேன்!”

“அது அவ சொல்லட்டும் நான் போறேன்!”

“அவ்வளவு தானே! அவளே சொல்லுவா!”

தனத்தை பார்த்தவர்... “ஜெயஸ்ரீயை எழுப்பு!”

அரக்கப் பரக்க தனம் அவளை எழுப்பி, “அப்பா கூப்பிடறார் அந்த தம்பி வந்திருக்காங்க” என்று சொல்ல...

விரைந்து சுவரைப் பிடித்து என்னவோ ஏதோவென்று வர...

“கண்ணு இவர் உன்கிட்டப் பேசணுமாம்! பேசு!” என்று கையைக் கட்டி வஜ்ரவேல் நிற்க...

“என்ன?” என்பது கண்களில் கலக்கத்தோடுப் பார்க்கவும்...

“உன்னைக் கூட்டிட்டுப் போக கேட்டான்! நான் அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டேன்.. ஆனா நீ சொன்னா தான் போவேன்னு நிற்கிறான்! நீயே சொல்லிடு கண்ணு...” அப்பாவின் முகத்தைப் பார்த்தவள்...

சிபி எதுவும் கேட்கும் முன்னரே, “நான் வரலை!” என்றாள் ஜெயஸ்ரீ...

“ஏன் வரலை?” என்று பேச்சை வளர்த்தினான் சிபி...

அவனுக்கு என்னவோ ஒரு உந்துதல்.. “உன்னை நான் விடமாட்டேன்!” என்று ஜெயஸ்ரீக்கு உணர்த்திவிடும் உந்துதல்... இத்தனை நாளாக இல்லாத ஒரு உந்துதல், ஜெயஸ்ரீ தன்னைத் தேடி இருக்கிறாள், இன்னமும் தேடுகின்றாள் என்ற தைரியம் கொடுத்த உந்துதல்.

வஜ்ரவேல் அவனை மேலே பேச விடாமல், “தயவு செஞ்சு எங்களை விட்டுடு... போயிடு.. என் பொண்ணுக்கு விவாகரத்துக் குடுத்துடு!” என்று கை கூப்பிக் கேட்கவும்..

சண்டை போடும் மனிதரிடம், சண்டை போடலாம் இப்படி பேசும் மனிதரிடம் என்னப் பேச..

“நான் செஞ்சது தப்பு தான்! என்னை மன்னிச்சிடுங்க, ஒரு வாய்ப்புக் குடுங்க! நான் நல்லா பார்த்துக்குவேன்!” என்று சிபியும் கை கூப்பிக் கேட்டான்.

அவரும் ஜெயஸ்ரீயை அவனுடன் அனுப்பத் தயாரில்லை... இவனும் அவளை விட்டுப் போகத் தயாரில்லை...

“இல்லை! எனக்கு நம்பிக்கையில்லை! ரெண்டு வருஷம் நீ இல்லை... இப்போக் கூட நீயா வரலை... என் பொண்ணு பார்க்கவும் வந்திருக்க... கிளம்பிடு!” என்று சொல்லி பேச்சு முடிந்தது என்பது போல வஜ்ரவேல் உள் செல்ல...

ஜெயஸ்ரீயும் அவரின் பின் சென்றாள்.

சிபியால் பார்க்கத் தான் முடிந்தது, வேறு செய்ய முடியவில்லை... ஜெயஸ்ரீ அவளிடம் பேசும் வாய்ப்பை அவனுக்கு கொடுக்கவேயில்லை. தளர்வாக படி இறங்கி செல்ல...

அவன் சென்று விட்டது தெரிந்ததும், அப்பாவைப் பார்த்து... “அவரை மரியாதையில்லாம வா, போ, ன்னு பேசாதீங்கப்பா..” என்று திக்கித் திக்கி சொன்னாள்.

“விட்டுட்டுப் போயிட்டான்! அவனுக்கு என்ன மரியாதை..?”

“அப்பா! இப்படிப் பேசாதீங்க...” என்றாள் திணறலாக.

“அப்போ நீ அவனோட போகப் போறியா...”

“இல்லை!” என்பது போல தலையசைத்து, “மரியாதையில்லாம அவரைப் பேசாதீங்க!” என்று சொல்லிச் செல்லும் மகளைப் புரியாமல் பார்த்தார்.

## அத்தியாயம் இருபது :

இரண்டு நாட்கள் ஆகிவிட்டது, சிபி ஜெயஸ்ரீயின் வீட்டிற்கு வந்து சென்று. என்னே ஒரு விந்தை! இரண்டு வருடங்கள் கடந்தது தெரியவில்லை! ஆனால் இரண்டு நாட்கள் ஜெயஸ்ரீயிற்கு நகரவேயில்லை.

“நான் வரவில்லை என்று சொன்னால், அவ்வளவு தானா! போய்விட்டாரா!” நினைவு முழுவதும் அவனே...

அன்று கிளாஸ் போகக் கூட ஆர்வமில்லை... அப்படியே அமர்ந்திருந்தாள் தயாராகாமல்.

காலையில் அவள் கிளம்பிவிட்டாளா என்று பார்க்க வந்த பத்மினி, “அக்கா! இன்னும் கிளம்பலையா?” என்று கேட்க..

“வரலை!” என்று சைகைக் காட்டினாள்...

“என்ன, வரலையா?” என்றாள் பத்மினி அதைப் பார்த்தவுடன் அவ்வளவு அதிர்ச்சியாக.

எதற்கு இவ்வளவு அதிர்ச்சி என்று ஜெயஸ்ரீயிற்கு புரியாமல், “என்ன?” என்று கையை ஆட்டிக் கேட்க...

“ஒன்னுமில்லை!” என்று அவசரமாக மறுத்தவள்.. “இன்னைக்கு வாங்க அக்கா” என்றாள்.

“இல்லை வரலை!” என்று சொல்ல..”ம்கூம் வரணும்...!” என்றாள் பிடிவாதமாக,

“எதுக்கு?” என்று மீண்டும் சைகையில் கேட்டாள் ஜெயஸ்ரீ.

“நான் என் பர்த்டேக்கு ட்ரீட் தர்றேன்! ஹி! ஹி!” என்று சிரித்தாள். ஆறுமாதம் முன்னே வந்த பர்த்டே க்கு இப்போ ட்ரீட்டா என்று ஜெயஸ்ரீ பார்க்க

“அடுத்த பர்த்டேக்கு இப்போவே தர்றேன்!” என்று சொல்லியவள், ஜெயஸ்ரீ நம்பாமல் பார்க்கவும், “அக்கா வாங்க! என்னை உளற வைக்காதீங்க!” என்றாள்.

எப்போதும் ஜெயஸ்ரீயின் முகம் அதிகமாக வாடியிருக்கும் போது பத்மினியோ ராகினியோ இதை செய்வது தான்...

அது போல தன்னுடைய மூட் சரியில்லாததால் தன்னை உற்சாகப்படுத்தச் சொல்லுகிறாள் என்று நினைத்த ஜெயஸ்ரீ, அவளுக்காக, “சரி வர்றேன்” என்பது போல தலையசைத்துக் கிளம்பினாள்.

பஸ் ஏறியதும் எப்போதும் போல ஜன்னலோரம் அமர்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் ஜெயஸ்ரீ, அருகில் பத்மினி அமர்ந்தாளா இல்லையா என்று கூட கவனிக்கவில்லை. அருகில் அமரும் வித்தியாசம் தெரிந்து, “யார்?” என்று அவசரமாகப் பார்க்க...

சிபி...

சட்டென்று முகம் புன்னகையைப் பூசியது அவனைப் பார்த்த நொடியில். ஆனால் சில நொடிகளே, அப்படியே முகத்தை மாற்றி புன்னகையைத் துடைத்தாள்.

பிறகு பத்மினி எங்கே என்பது போலப் பார்க்க.. அங்கே தான் அருகில் இருந்தவள், “அது! அது! அண்ணா உங்களைப் பார்க்கணும் சொன்னாங்க!” என்று தடுமாறினாள்.

அவளை ஒரு பார்வை பார்க்கவும்.. “எந்திரிங்க! அக்காக்கு கோபம்! நானே உட்கார்ந்துக்கறேன்!” என்று அந்தப் பார்வையில் பயந்து பத்மினி சொல்ல..

“நானாவது எழுவதாவது?” என்று பத்மினியை சிபி பார்த்து முறைக்க..

அந்தப் பார்வையில் இன்னும் பயந்த பத்மினி, இப்போது ஜெயஸ்ரீயைப் பார்க்க...

“ஒன்னும் பண்ண மாட்டாங்க!” என்று சற்றுத் திக்கி சொல்லிவிட்டு, “நீ போய் உட்காரு!” என்று சைகை காட்டி வெளியில் பார்வையைத் திருப்பினாள்... சிபி அசந்து தான் விட்டான். ஜெயஸ்ரீயிடம் எந்த பதட்டமுமில்லை... எழ முற்படவில்லை... எழுந்து போ என்றும் சொல்லவில்லை.

பஸ்சும் கிளம்பி அடுத்த நிறுத்தம் வர, இன்னும் ஆட்கள் ஏறினர்.. ஆனால் ஜெயஸ்ரீ அவன் பக்கம் திரும்பும் வழியாகக் காணோம்.

அவனாகப் பேசினாள் ஒழிய திரும்ப மாட்டாள் என்று புரிந்தவன்.. “எப்படி இருக்க ஸ்ரீ?” என்றான்.

“பார்க்கும் போதெல்லாம் இதே கேட்பாரா? இவருக்கு வேறு பேசவே தெரியாதா?” என்று மனதின் ஓரத்தில் ஒரு சலிப்பு எழ, அதே சமயம் “என்ன பதில் கேட்க ஆசைபடுகிறார், நான் நல்லா இருக்கேன்னு சொல்லணும் என்றா..”

இப்படி எல்லாம் மனதிற்குள் எண்ணம் ஓடினாலும் திரும்பிப் பார்க்கவில்லை.

“அந்த பச்சைக் கலர் புடவை நல்லாயிருக்கு!” என்றான்.

என்ன பேசுகிறார் இவர் என்று ஜெயஸ்ரீத் திரும்பிப் பார்க்க.. அங்கே நிறையப் பெண்கள், இரண்டு மூன்று பேர் பச்சைக் கலர் புடவையில்... யாரை சொல்லுகிறார் என்று பார்வையால் தேட..

“உன்னைக் காலையில நீ கிளம்பும் போது கண்ணாடில பார்க்கலையா?” என்றான்.

அவசரமாக தன்னைக் குனிந்து பார்க்க... அவளின் புடவை தான் பச்சை... “ஐயோ! என்ன அசட்டுத்தனம் தன்னுடையது” என்பது போல நாக்கை கடிக்க..

அவளைப் பார்த்துச் சிரித்தான் சிபி.

அப்போதுதான் வித்தியாசம் புரிய... “பேசியது இவரா?” என்பது போல பார்த்தவள், அதுவும் சிரிக்கிறானா... ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

“நான் தான்!” என்றான் கூடவே... ஜெயஸ்ரீப் புரியாமல் பார்க்க... “பேசறது! சிரிக்கறது! நான் தானான்னு பார்த்த தானே! அதான்!”

“அப்போ உங்களுக்கு நான் நினைக்கறது எல்லாம் தெரியுதா?” என்றாள் எப்போதும் போல திக்கித் திணறி.

ஆனால் எந்த அர்த்தத்தில் அதைக் கேட்கிறாள் என்று சிபிக்கு விளங்கவில்லை.

“தெரியலை! எல்லாம் தெரியுதான்னு தெரியலை! தெரிஞ்சிருந்தா நமக்குள்ள இந்த பிரிவு வந்திருக்காதோ என்னவோ? ஆனா நேர்ல நம்ம பேசும்போது நிறைய நீ என்ன நினைக்கிறேன்னு எனக்கு தெரியுது! அதனால தானே யாரும் எனக்கு வாழ்க்கைக் குடுக்க வேண்டாம்ன்ற மனநிலையோட உட்கார்ந்து இருந்தப்போ, நான் உனக்கு குடுக்கலை! நீ எனக்கு குடுன்னு கேட்டேன்!” என்று பட பட வென்று பேசி முடித்தான்.

பிறகு மிகவும் தயங்கி, “இப்பவும் அதைத்தான் கேட்கிறேன்! நான் உனக்கு குடுக்கலை! நீ எனக்கு குடு!” என்றான்.

“ஐயோ! இவர் நிறைய பேசுகிறார்!” என்பது போல ஜெயஸ்ரீக்கு அவனின் பேச்சுக்கள் ஒரு தோற்றத்தைக் கொடுக்க..

“குடுக்கலைன்னா!” என்றாள் திணறியபடி..

“என்னோட சைடுல இருந்து எல்லா முயற்சியும் பண்ணிட்டேன்! உங்கப்பா கிட்ட பேசிட்டேன்! உன்கிட்ட பேசிட்டேன்!... இதுக்கு மேல எல்லாம் யார் கிட்டயும் பேசிகிட்டோ, தளைஞ்சு போகவோ முடியாது!” என்று நிறுத்தினான்.

“அப்போ அப்பா அனுப்பலைன்னா! நான் வரலைன்னா என்னை விட்டுடுவீங்களா...”

“சாம, தான, பேத, தண்டம்னு இருக்கு...”

“முதல் ரெண்டும் ட்ரை பண்ணிட்டேன்! அடுத்தது பேதம் ட்ரை பண்ண போறேன்! அதுவும் முடியலைன்னா தண்டம் தான்!” என்றான்.

ஜெயஸ்ரீக்கு சாம, அதாவது சமாதானம் மட்டும் தான் தெரிந்தது... வேறு தெரியவில்லை...

“அப்படின்னா?” என்று கேட்க...

“நீ தான் எப்போ பார்த்தாலும் இப்போ கம்ப்யுட்டர் முன்னாடியே இருக்கியாமே! உன் கூகிள் கடவுள் கிட்ட கேள்..”

“இது யாரு சொன்னா?”

“யாரோ சொன்னாங்க? அதுவா முக்கியம்!... நீ எப்போ வர்ற என்னோட?” என்றான்.

ஜெயஸ்ரீயின் பேச்சுக்கள் திக்கியபடி வந்தாலும், அவளைப் பேச வைத்துக் கொண்டிருந்தான் சிபி.

அப்படியே அமைதியாகிவிட்டாள் ஜெயஸ்ரீ அந்தக் கேள்விக்கு பிறகு..

“சொல்லு ஸ்ரீ!” என்று சிபி வற்புறுத்தவும், “தெரியாது!” என்றாள்..

“ஏன்? ஏன் தெரியாது...?”

“நீங்க வேணும்னா விட்டுட்டுப் போவீங்க! வேணும்னா வந்து கூப்பிடுவீங்களா? நான் அப்படியே வந்துடணுமா! முடியாது!... நீங்க செஞ்சது தப்பு!”

“ஆமாம்! தப்பு தான்! நான் எப்ப சரின்னு சொன்னேன்... ஆனா அந்தத் தப்பையே எத்தனை நாள் பிடிச்சிட்டு தொங்க முடியும்...” இப்போது அவனின் குரலில் கெஞ்சுதல் எல்லாமில்லை.. ஆமாம்! நடந்து விட்டது! அதுக்கென்ன! என்ற ஒரு திமிர் இருப்பதாக ஜெயஸ்ரீயிற்கு தோன்ற...

அவனை ஒரு பார்வை பார்த்தவள்.. “எனக்கு எத்தனை நாள் தேவையோ, அத்தனை நாள் தொங்குவேன்” என்றாள்.

இதனைச் சிபி எதிர்பார்க்கவில்லை.. ஜெயஸ்ரீ இப்படி பேசுவாள் என்று அவனுக்குத் தெரியாதே.. என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினான்... ஆனால் அவள் திணறி திக்கி பேசுவது ஏதோ குழந்தை பேசுவது போல தான் அவனுக்குத் தோற்றத்தைக் கொடுத்தது.

அதனைக் கொண்டு, “நமக்குக் குழந்தைங்க இருந்தா! அவங்கச் செய்யற தப்பையெல்லாம் இப்படித் தான் பிடிச்சித் தொங்குவோமா” என்றான்.

“குழந்தைங்களா!” என்றாள் வியப்பாக.

“ஏன்?” என்றான், அவளின் அந்த வியப்பான பாவனை புரியாமல்…

“இன்னும் நான் அதைப்பத்தி யோசிச்சதில்லை!”

“ஏன்?” என்றான் திரும்பும்…

“அது உங்களுக்குத் தான் தெரியணும்.. நீங்க இன்னும் என்னை யோசிக்க வைக்கலை, நம்ம வாழ்க்கையைப் பற்றி” என்றாள்… எல்லாம் திக்கித் திணறி தான் பேசினாள் ஆனாலும் பேசினாள். நேரடியான குற்றச்சாட்டு…

“நீ அப்போ என்னைத் தேடவேயில்லையா?”

“தேடினேன்! ஆனா எங்கப் போயிட்டீங்களோ? என்னாணீங்களோ?.. என்னைப் பிடிக்காம போயிட்டீங்களா?, இப்படி நிறைய நிறைய நினைச்சு இருக்கேன்! ஆனா இதுல நம்ம வாழப் போற வாழ்க்கை, குழந்தைங்க இதெல்லாம் வந்ததேயில்லை…”

மிகவும் சீரியசாக இருந்தது இருவரின் பேச்சு…

இந்த முறை வெளியிலோ வேறெங்கோ பார்க்கவில்லை ஜெயஸ்ரீ. அவனையே நேர் பார்வைப் பார்த்துப் பேசினாள். அந்தப் பார்வையில், ஒரு கோபம், ஒரு அலட்சியம்… நீ செய்த வேலைக்கு என்னை கேள்வி கேட்பாயா, எந்த முகத்தை வைத்து என்னை கூப்பிடுகிறாய் என்ற நேரடி குற்றச்சாட்டு.

திருமணம் ஆன நாள் முதலாக மனைவி என்ற கடமையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த சிபிக்கு, சேர்ந்து இருந்த சில நாட்களும் அந்த உரிமையைக் கொண்டு வந்து பேசிய சிபிக்கு..

அவள் தன்னுடன் வாழ மாட்டாள், அது ஊராரின் முன் இன்னும் தனக்கு தலை குனிவு என்று அசட்டுத்தனமாக அவளை விட்டு விட்டு வந்த சிபிக்கு…

தன்னை அவள் தேடி இருக்கிறாள், அப்படி இருக்கும் போதும் தான்

அவளை விட்டு வந்தது தவறு.. கட்டின மனைவியை அவள் தன்னை தேடும்போதும் விட்டு விட்டு வந்து விட்டோம்! அதை விட வேறு தவறு என்ன இருக்கிறது? என்ற குற்றுணர்ச்சி கொடுத்த உத்வேகத்தினால், இப்போது அவளின் பின்னால் வந்த சிபிக்கு...

அவளின் இந்த நேர்ப் பேச்சுக்கள், முதல் முறையாக மனைவி என்பதை மீறி ஒரு ஈடுபாட்டோடு அவளைப் பார்க்க வைத்தது.

அவன் ஒரு ஆர்வத்தோடு அவளைப் பார்க்கும் போதே.. “நீங்க நினைச்சு இருக்கீங்களா?” என்றாள்.

“என்ன?” என்றான் புரியாமல்.

“நீங்க நினைச்சு இருக்கீங்களா, என்னோட வாழற வாழ்க்கை, குழந்தைங்க எல்லாம்...” கூடவே, “உண்மையா சொல்லணும்!” என்ற தீர்க்கமானதொரு பார்வையோடு. வார்த்தைகள் தான் திக்கின, பார்வை, அப்பா! எதிராளியை நடுக்கம் கொள்ளச் செய்யும்.

மெல்லியப் புன்னகை சிபியின் முகத்தில், கூடவே, “இல்லை” என்ற தலையாட்டாலும் கூட...

அந்தப் புன்னகை என்னவோ தன்னை கிண்டல் செய்வது போல ஜெயஸ்ரீயிற்கு தோன்ற,

“எதுக்குக் கிண்டல் பண்றீங்க, நான் திக்கித் திக்கிப் பேசறதுனாலையா...” என்றாள் ரோஷமாக

“சே! சே!” என்று, “இல்லை! இல்லை!” என்று அவசரமாக மறுத்தான்.

“அப்புறம் எதுக்கு சிரிச்சீங்க...” நினைத்தவனுக்கு மறுபடியும் விரிந்த புன்னகை தானாக மலர்ந்தது... பார்த்த ஜெயஸ்ரீயிற்கு அப்படி ஒரு கோபம் மீண்டும்.

அவள் கோபமாகிறாள் என்று புரிந்தவன்... “என்னைக் கேவலமா திட்டியிருக்க! அப்பவும் எனக்கு கோபம் வராம, சிரிப்பு வருது! நீ ஏன் கோபப்படற” என்றான் புன்னகையுடன்.

“நான் எப்போ திட்டினேன்!” என்பது போல ஒரு பார்வை ஜெயஸ்ரீ பார்க்க..

“என்னோட குடும்பம் நடத்தறதுப் பத்தி உன்னை யோசிக்க வைக்கலை தானே... அது என்னோட தப்பு தானே...” என்றான் புன்னகையுடனே.

ஜெயஸ்ரீயிற்கு நிஜமாகப் புரியவில்லை.. அவள் புரியாமல் பார்க்க, அதற்கும் தோளைக் குலுக்கி சிரித்தான்.

அவன் இவ்வளவு சிரித்தோ, புன்னகைத்தோ பார்த்ததில்லை ஜெயஸ்ரீ... அவனுடைய சிரிக்கும் கண்களையும், சிரிக்கும் முகத்தையும் இவள் சிரிப்பில்லாமல் பார்த்திருந்தாள்.

“இல்லை! இல்லை! கிண்டல் இல்லை...! என்னை நீ தேடியிருக்கன்றது எனக்கு எவ்வளவு சந்தோசம் தெரியுமா, இந்த சிரிப்பை நான் என்னைக்காவது கண்டிப்பா புரிய வைக்கிறேன்!” என்று சொன்னான்.

அதற்குள் கோவை வந்துவிட்டது, பத்மினி இறங்க வேண்டிய இடமும் வந்துவிட்டது. அதன் பிறகே ஜெயஸ்ரீ இறங்கும் நிருத்தம் வரும்.

“அக்கா! நான் இறங்கட்டுமா!” என்று தயங்கிப் பத்மினி கேட்க...

“சரி” என்பது போல ஜெயஸ்ரீ தலையசைக்க...

“உங்களுக்குக் கோபமில்லையே!” என்றாள் திரும்பவும்..

சிபி பத்மினியைப் பார்த்து, “இன்னும் எத்தனை தடவை கேட்ப! அவளுக்கு கோபம் வரலைன்னா கூட வர வெச்சிடுவ போல இருக்கே” என்றான் சின்ன சிரிப்புடன்.

“ஐயோ! இந்த அண்ணன் சிரிக்கிறாரா!” என்பது போல பத்மினியும் பார்த்து நிற்க...

“இறங்கு!” என்பதுப் போல ஜெயஸ்ரீக் கையைக் காட்டவும்... பஸ்சும் அதற்குள் நின்று விட, “ஓகே கா! பை!” என்று மனமேயில்லாமல் அவசரமாக இறங்கினாள், திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே..

அவளின் பாவனைகளைப் பார்த்த சிபி கடுப்பே ஆகிவிட்டான்... “இது என்ன? நான் உன்னை என்ன பண்ணிடுவேன்னு அந்தப் பொண்ணு இப்படி லுக்கு விட்டுப் போகுது!” என்றான்.

கடுப்பான அவனின் முகத்தைப் பார்த்து, இப்போது ஜெயஸ்ரீ புன்னகைக்க... அவளின் கண்களில் தெரிந்த பாவனையைப் பார்த்து லகுவானவன்..

“என்ன நினைச்ச?” என்றான்.

“நான் ஒன்னும் நினைக்கலையே!” என்பது போல அவள் தலையாட்ட..

“இல்லை! நினைச்ச!”

“என்ன? சொல்லுங்க பார்க்கலாம்!” என்று வாயை திறந்து திக்கித் திக்கி உங்களால் முடியாது என்ற பாவனையோடு சொல்ல..

“அது நீங்க என்னை ஒன்னும் பண்ணமாட்டீங்கன்னு தான் அந்த லுக் விடறான்னு தானே நினைச்ச?” என்று சிபி சொல்லவும்...

ஜெயஸ்ரீ வாய் விட்டே சிரித்து விட்டாள். சில வருடங்களுக்குப் பிறகு மனம் விட்டு சிரிக்கும் சிரிப்பு..

## அத்தியாயம் இருபத்தி ஒன்று:

ஜெயஸ்ரீயின் சிரிப்பை சிறிது நேரம் ஒரு புன்னகையோடு சிபி பார்த்திருக்கவும்.. அதற்குள் அவர்கள் இறங்கும் இடம் வரப் போக...

“இறங்கணும்” என்று எழ முற்பட்ட ஜெயஸ்ரீயை, “இரு காந்திபுரம் பஸ் ஸ்டான்ட் போகலாம்” என்றான்.

“என் கிளாஸ் இங்க தான்!”

“பரவாயில்லை ஒரு நாள் போகலைன்னா...!”

“பஸ் ஸ்டாண்ட் போய்...” என்று கேள்வி எழுப்ப...

“எங்கயாவது போகலாம், சாயந்தரம் வீட்டுக்குப் போயிடுவியாம், எனக்கு இன்னும் உன்னோட பேசணும்..”

“இல்லையில்லை! அப்பாக்குத் தெரியாம நான் வரமாட்டேன்….” அவளின் வார்த்தைகளைக் கேட்டு சிறிது நேரம் மௌனமாகி விட்டான்.

“என்னோட முட்டாள் தனத்துனால வாழ்க்கையில நிறைய நாள் வேஸ்ட் பண்ணிட்டேன்… இந்த மாதிரி கொஞ்ச நேரம் பேசியிருந்தாக் கூட உனக்கு என்னைப் பிடிக்காது வரமாட்டேன்னு நானா நினைச்சு இந்த மாதிரி செஞ்சிருக்க மாட்டேன்”.

“எனக்கு ரொம்பத் திமிர் சின்ன வயசுல இருந்தே! எனக்கு தான் எல்லாம் தெரியும்ன்ற மாதிரி… நான் தான் எல்லாம்ன்ற மாதிரி.. அந்த கர்வம் தான் என்னை இந்த மாதிரி தப்பு மேல தப்பா செய்ய வெச்சிடுச்சு..”

“போனவ போறான்னு விடாம… அந்தக் கோபத்தைப் பிடிச்சு அதுக்காக சில வேலைகளைச் செஞ்சு அது பிரச்சனையில் முடிஞ்சு, அது சரி செய்ய வாய்ப்பா உன்னோட திருமணம்”.

“இதுல கிடைச்ச வாழ்க்கையை சரியா வெச்சிக்க தெரியலை… உனக்கு என்னைப் பிடிக்கும்னு தோணவேயில்லை.. இத்தனை நாளா என் கூட இருந்து என்னைப் பார்த்து பழகின பொண்ணுகே என்னை பிடிக்காம போயிடுச்சே..”

“கல்யாணமாகி நாலு நாள்ல இவ்வளவு பிரச்னையை இழுத்து விட்டுட்டாங்க எங்க வீட்ல… இதுல உனக்கு அடி வேற பட்டிடுச்சு! போலிஸ் கேஸ் ஆகிடுச்சு..”

“என்னோட வர மாட்ட! என்னோட உங்கப்பா அனுப்ப மாட்டார்! இன்னும் எனக்கு தலை குனிவுன்னு நினைச்சு அதை சமாளிக்க தெரியாம… உன்னை விட்டுட்டு போயிட்டேன்”.

“உன்னை மட்டுமில்லை! என்னோட அப்பா அம்மா யாரையும் நான் இதுவரைப் பார்க்கலை! பார்க்கப் பிடிக்கலை! நான் போனதுக்கு அவங்களும் முக்கிய காரணம்.. இருந்திருந்தேன் அவங்க கிட்டயும் முகத்தைக் காட்டியிருப்பேன்.. வீட்ல மத்த எல்லார் கிட்டயும் எப்படி நடந்திருப்பேன்னு தெரியாது…”

“உண்மையா என் வாழ்க்கையில நான் ஜெயில் போவேன்னு நினைச்சதேயில்லை... அதுவும் பேப்பேர்ல எல்லாம் என் போட்டோ... மனைவியை வன்கொடுமைன்னு போட்டு... எவ்வளவு அசிங்கமா இருந்தது தெரியுமா... யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்கலை”

“என்னோட வாழ்க்கைத் தோல்வினால எனக்கு யாரையும் பார்க்கப் பிடிக்கலை! அதுதான் உண்மை!”

“நீ சொன்ன மாதிரி இப்ப ஊருக்குள்ள நான் ஓடிப் போயிட்டேன்னு தான் பேசுவாங்க! எல்லாம் நானா தேடிக்கிட்டது... போனது போகட்டும்! இன்னும் இப்படி வேண்டாம்!” என்றான் தீர்க்கமாக...

அந்தக் கைதுப் படலம் அவனை மிகவும் பாதித்து இருப்பது புரிந்தது. அதே சமயம், அவனின் ஆதங்கம், எல்லாவற்றையும் எப்படியாவது சரி செய்துவிட வேண்டும் என்ற உத்வேகம் ஜெயஸ்ரீயிற்கு நன்கு புரிந்தது.

“நான் சரியா சூழ்நிலையை எதிர்கொள்ளாம போனது பெரிய தப்பு தான். ஆனா உண்மையா சொல்லு நீ என்னோட அன்னைக்கு திரும்ப வந்திருப்பியா.. உங்கப்பா என்னோட அனுப்பியிருப்பாரா?”

கண்டிப்பாக அன்றைய மனநிலையில் ஜெயஸ்ரீயிற்கு அந்த வீடு பிடிக்கவில்லை, அந்த வீட்டு ஆட்களோடு தனக்கு ஒத்து வராது என்ற எண்ணம் தான்.

அந்த நிலைமையில் கண்டிப்பாக தந்தையும் அனுப்பியிருக்க மாட்டார் தான். ஆனால் அதற்காக சிபி விட்டுப் போனது சரி என்று ஆகிவிடாதே.

திரும்ப திரும்ப அதை சொல்ல விருப்பமில்லாமல்... அவனுக்கு சற்று ஆசுவாசதைக் கொடுப்போம் என்று நினைத்தவளாக, “வந்திருக்க மாட்டேன்!” என்பது போல தலையசைத்தாள்.

அதற்குள் காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் வந்திருந்தது... இறங்கினார்கள். சிபியிடம் இருந்த லகுதன்மை மறைந்து இருந்தது, மீண்டும் இருகி இருந்தான்.

“சாரி! பஸ் ஸ்டாப் போயிடுச்சு! கிளாஸ் எங்க? ஆட்டோல போயிடலாம்!” என்றான்.

ஜெயஸ்ரீயிற்கு அவனுடன் நேரத்தை செலவிட வேண்டும் போல இருந்தாலும், அப்பாவிற்குத் தெரியாமல் போவது ஏதோ பெரிய தவறு செய்வது போல ஒரு மனநிலையைக் கொடுத்தது...

அப்பாவை மீறி எப்போதும் அவளால் எதுவும் செய்ய முடியாது... அதே சமயம் சிபி அவரிடம் சண்டையிடுவதையோ, அவரை எந்த வகையிலும் நிர்பந்திப்பதையோ அனுமதிக்க முடியாது...

“எங்க அப்பாவை நீங்க கஷ்டப்படுத்தக் கூடாது” என்றாள்.

“என்ன பண்ணினேன் நான்?” என்றான் புரியாமல்.

“நீங்க தானே சாம பேத தான தண்டம் ஏதேதோ சொன்னீங்க..”

“அதுக்குள்ள தெரிஞ்சிடிச்சா?”

மொபைலைத் தூக்கிக் காட்டினாள், “பார்த்துட்டேன்.. எங்கப்பா கிட்ட எந்த கலாட்டாவும் பண்ணக் கூடாது, பண்ணுனீங்க, அப்புறம் நாம சேர்ந்து வாழ வாய்ப்பே இருக்காது” என்றாள் திக்கி திக்கி.

சிபி என்ன தான் செய்வது என்று தெரியாமல் நின்றான்.. “அப்பா! அனுப்ப மாட்டேன் என்கிறார்.. இவளும் வரமாட்டேன் என்கிறாள்.. நான் இவளை வற்புருத்தவோ நிர்பந்திக்கவோ கூடாது என்கிறாள். என்ன தான் செய்ய?”

அந்த பஸ் ஸ்டாண்டில் இருவரும் நின்றனர். காலை வேலை ஆளுக்கு ஒரு புறம் பரபரப்பாக ஓட.. தன்னுடைய பதிலுக்காக ஜெயஸ்ரீ பார்த்திருப்பதை உணர்ந்தவன்..

“சரி, ஒன்னும் பண்ண மாட்டேன்! உங்கப்பாவைக் கஷ்டப்படுத்த மாட்டேன்.. வா ஏதாவது சாப்பிட்டிட்டு போகலாம்.. உன்னை பார்க்க வர்ற பரபரப்புல இன்னும் எதுவும் சாப்பிடலை...”

பக்கத்தில் இருந்த ஹோட்டலில் அமர்ந்தார்கள்...

சிபி அமைதியாக இருப்பதைப் பார்த்து, தன் பேச்சுக்கு விளக்கம் கொடுத்தாள்.

“அது, அப்பா எனக்காகவே நான் பொறந்ததுல இருந்து பார்த்து பார்த்து செய்யறார்! எல்லா அப்பா அம்மாவும் அப்படி தான்! ஆனா இங்க அம்மா இல்லை… அவரோட கல்யாணமும் விவரம் தெரியாத வயசுல வேண்டாம் பண்ணிக்க கூடாது சொல்லிட்டேன்…”

“அப்புறம் எனக்கு இப்படி ஆன பிறகு அவரோட எண்ணம் சொல் செயல் எல்லாம் என்னைச் சுத்தித் தான்…”

“இப்போ அவரா அனுப்பாம நான் வரமுடியாது.. அப்புறம் வாழ்க்கையில அதை விட என்ன சுயநலம் இருக்க முடியும்…”

ஆரம்பித்த இடத்திற்கே வந்து நின்றார்கள் இருவரும்… சிறிது நேரத்திற்கு முன் பேசியது கனவு போல தோன்றியது.

ஜெயஸ்ரீயும் காலை உணவு உண்ணவில்லை.. சிபியும் உண்ணவில்லை.

“முதல்ல சாப்பிடலாம் அப்புறம் பேசலாம்.. நீ என்னை விட்டுடுவியோன்னு தான் நான் உன்னை விட்டுப் போனேன். எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம்… இனிமே அது நடக்காது… அதனால இருக்குற இந்த நொடியை அமைதியா கொண்டு போவோம்”.

சிபி என்ன வேண்டும் என்று கேட்டு அதை பேரரிடம் சொல்லவும், உணவு வர காத்திருந்த நேரத்தில்..

“நீங்க, நீங்க என்ன பண்றீங்க…” என்றாள்.

“வேலை!” என்று சிபி சிரிக்க முற்பட்டான். ஆனால் அது வருவேனா என்றது.

“என்ன வேலை..?”

“பேங்க்ல..” என்றான்.

“என்ன பேங்க்லையா?” என்று வியப்பாகக் கேட்க..

“அச்சோ! பெரிய போஸ்ட்ன்னு நினைக்காத! டெம்பரவரி போஸ்ட்.. கன்சாலிடேடட் பே…”

“ஆனா அக்ரி படிச்சு இருக்கீங்க!”

“ஆமா! அதுக்கு தனியா என்ன வேலை தேட.. அதை நான் வேலையானதுனால தான் படிச்சேன்! ஆனா இப்போ என் கிட்ட நிலமில்லை.. சாப்பிட என்ன செய்ய... கூடவே இன்னும் சில வேலையும் செய்யறேன்! அதுக்கும் பணம் வேணும்... அதான் ரொம்ப தேடி ஒரு வருஷம் முன்ன தான் இந்த வேலைக் கூட அமைசிக்கிட்டேன்..”

அவன் சொன்ன போது அவனின் வார்த்தைகளில் தெரிந்த துயரத்தில்... ஜெயஸ்ரீக்கு பேச்சு திக்கியும் வரவில்லை.. “அதுக்கு முன்னே என்ன?” என்பது போல சைகை செய்ய...

“கூலி வேலை வயல்ல...?”

கேட்க கேட்க நெஞ்சம் பதறியது.. பெரிய பணக்காரர்கள் அல்ல தான் சிபியின் வீட்டினர்... ஆனால் உழைத்து ஓரளவு வருமானம் வரும் நிலத்திற்கு சொந்தக்காரார்கள் தான்.

“அப்போ அன்னைக்கு...” என்று அந்த ஞாயிற்றுக் கிழமையை ஞாபகப்படுத்த..

“அன்னைக்குக் கூட கூலி வேலை தான்...”

“என்ன எம் எஸ் சீ அக்ரி படிச்சிட்டு கூலி வேலையா...”

“எனக்கு அந்த வேலை தான் ரொம்பத் திருப்தி.. வயல்ல வேலை பார்க்கிறது. அதுக்கு தானே நான் அதை விரும்பிப் படிச்சேன். ஆனா அதுல பெருசா வருமானம் இல்லை... நான் மனத்திருப்திக்காக செய்யற வேலைக்கும் அது பத்தலை...”

“அப்படியே வாழ்க்கை போக முடியாது இல்லையா? அதனால இந்த பேங்க் வேலைக்கு முயற்சி செஞ்சு போனேன். ஆனாலும் லீவ் நாள் முழுசும் வயல் வேலை... அது சார்பா படிச்சு இருக்கறதால கூட கொஞ்சம் சேர்த்து மரியாதைக் கிடைக்கும்”.

“நான் செய்யற வேலைக்கு இந்த வருமானம் பத்தலை” என்று சிபி சொன்னதைக் கவனிக்கத் தவறினாள். அது அவளின் கவனத்தில்

படவில்லை. அதே சமயம் பேங்க் வேலையோடு சேர்த்து மற்றுமொரு வேலையும் வருமானத்திற்கு செய்தான் சிபி, அதையும் சொல்லவில்லை.

கூலி வேலை என்றதுமே அவளின் முகம் மாறியதைப் பார்த்தான். இதில் இன்னொரு வேலையும் செய்வதை சொன்னால் வருத்தப்படுவாள் என்று சொல்லவில்லை.

என்றுமே வயலில் இறங்கி வேலை செய்வது அவனுக்கு குறையே இல்லை... இதுவரை அதனை விட வேறு சந்தோஷம் உலகில் இல்லை.. இயற்கை வளங்களை காக்கவும் வளர்க்கவும் எப்போதும் விரும்புவான், அதற்காக எப்போதும் முயற்சி எடுப்பான். ஆனால் சொன்னால் பையித்தியக்காரன் என்பார்கள். அதனால் செய்யும் வேலையை அதிகம் காட்டிக் கொள்வதில்லை.

அதுவும் இப்போது எல்லோரையும் விட்டு வந்த பிறகு அவன் மனதிருப்திக்காக செய்யும் வேலையே அவனை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

அவன் அதை செய்யும் போது நிச்சயம் உதட்டளவில் பாராட்டுகள் இருக்கும். ஆனால் கண்களில் பலருக்கு பைத்தியக்காரன் திரியறான் என்பது போல தான் தோன்றும்.

“நெவெர் மைன்ட்...” அது தான் சிபி.

ஆனால் குடும்ப வாழ்க்கையில் எங்கே சறுக்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை. இனி நினைத்தும் பயனில்லை.

அவளைப் பார்த்து பளிச்சென்று புன்னகைத்தான்.

எதற்கு இந்த புன்னகை என்று ஜெயஸ்ரீ புரியாமல் பார்த்து... வந்தப்போ ஜாலியா இருந்தாங்க, அப்புறம் மூடி ஆகிட்டாங்க.. இப்போ மறுபடியும் சிரிக்கறாங்க... இவர் சீரியசானவரா ஜாலியானவரா என்ற கேள்வி மனதினுள் எழ.. அந்த பாவனையோடு சிபியைப் பார்க்க..

“என்ன யோசனை?” என்றான் புன்னகையுடன்..

ஜெயஸ்ரீ மனதை மறையாது கேட்டும் விட்டாள்... “நல்லா ஜாலியா

பேசற மாதிரி தான் எனக்குத் தோணுது.. ஆனா எப்பவும் சீரியஸா இருக்கீங்க நான் பார்த்தவரை! எது நிஜம்?" என்றாள்.

"ஜாலியாப் பேசறனான்னு எனக்குத் தெரியலை! சீரியஸ் தான்னு எல்லோரும் சொல்லுவாங்க.. ஆனா ரொம்ப சீரியஸ் கிடையாது.. வாழ்க்கையை அனுபவிச்சு தான் வாழ்ந்தேன்! எனக்குப் பிடிச்ச படிப்பு! நான் நேசிச்ச வேலை என்னோட விவரம் தெரிஞ்ச வயசுல இருந்து, இப்படிதான் இருந்தேன். என்ன எல்லார்கிட்டயும் எப்பவும் கொஞ்சம் அதட்டலா தான் பேச்சு வரும். அது என்னோட திமிர்"

"இப்போ அந்தக் கல்யாணம் நின்னதுக்கு அப்புறம் தான் ரொம்ப முசுடு ஆகிட்டேன் போல!" என்று அவனுக்கு அவனே விமர்சித்த விதம்..

சுத்தமாக மீண்டும் ஜெயஸ்ரீயைக் குழப்ப, இவன் நல்லவனா? கெட்டவனா? என்று எப்போதும் ஒலிக்கும் டைலாக் மனதிற்குள் ஒலித்தது.

பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்திருந்தார்கள்...

பிறகு சற்று தயங்கி, "நான் உனக்கு ஒன்னு வாங்கிட்டு வந்தேன்! வாங்கிக்குவியா?" என்றான்.

"என்ன?" என்பது போலப் பார்க்கவும்... அவனின் ஜோப்பில் இருந்து ஒரு சிறிய நகை டப்பாப் போன்றதை எடுத்து நீட்டினான்...

"என்ன?" என்று அவளையும் மீறி ஆர்வமாக வாங்கினாள். திறந்தவுடன் முகம் கலவையான உணர்வுகளைக் தான் காட்டியது.

அங்கே இருந்த பொருள் கொலுசு...

ஆனால் சலங்கைகள் இல்லை.

"நீ நடக்கும் போது யாரும் உன்னைத் திரும்பிப் பார்க்கிறதை நீ விரும்ப மாட்ட, அதான் சலங்கைகள் எடுத்துட்டேன். ஆனா கொலுசு வாங்கணும்னு தோணினது இப்போ இல்லை! கல்யாணம் ஆன போது உன் காலை ஒரு தரம் பார்க்கணும் காட்டுன்னு சொன்னேன்... அது தீயில கருகி இருந்தது... அப்போ என்ன இப்படி கவனமில்லாம

பண்ணிக்கிட்டன்னு எனக்குப் பேசின ஞாபகம் கூட..”

“ஆனா பேசும் போதும் அந்தக் காலுக்கு ஏன் கொலுசு போடலைன்னு தோணிச்சு... அப்புறம் அதுக்கான சந்தர்ப்பமில்லை... நேத்து திடீர்னு தான் வாங்கினேன்”.

“போட்டுக்கிறியா” என்றான்.

“சரி” என்றும் சொல்லவில்லை, “வேண்டாம்” என்றும் சொல்லவில்லை... ஆனால் அதைக் கையில் எடுத்து அதன் வேலைப்பாடை ரசித்தாள். எனாமல் கோட்டிங் ஆங்காங்கே பச்சையிலும் சிகப்பிலும் கொடுத்து, அழகிய வேலைப்பாடுடன் நகாசு வேலைகள் அதிகமாக செய்து இருந்தது.

ரசிகன் தான் என்று சிபியைப் பற்றி தோன்றியது.

பிறகும் ஒன்றும் சொல்லாமல் அதை அவளுடைய ஹேண்ட்பேகில் வைத்துக் கொண்டாள்.

“எப்படி ஆச்சு இந்த மாதிரி?” என்றான்.

“என்னுடைய அஜாக்கிரதையால” என்று திக்கித் திணறி நேர்ப் பார்வை பார்த்துச் சொல்ல..

அன்று அவன் அவளை அதட்டிச் சொன்ன வார்த்தைகள். சொன்ன இவனுக்குக் கூட சரியாக ஞாபகமில்லை. ஆனால் அவளுக்கு நன்கு இருந்தது, புரிந்தது.

“சாரி! அது தெரியாம சொல்லிட்டேன்! எப்படி ஆச்சு இது...?”

ஜெயஸ்ரீ பேசாமல் அமர்ந்திருக்க..

“சொல்லு ஸ்ரீ” என்று திரும்பக் கேட்கவும்..

அன்றைய நாளின் நினைவுகள்... அவளின் வாழ்வின் பொன்னாளும் அதுதான்! கருப்பு நாளும் அதுதான்...

அவளின் பள்ளி கோவை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது.

இப்போதெல்லாம் பிள்ளைகள் எப்படிப் படிக்கிறார்கள் என்று சொல்வதைப் போல, எங்கு படிக்கிறார்கள் என்று சொல்வதும் ஒரு பெருமை. அப்படி பெருமையாக சொல்லக் கூடிய பள்ளியில் பணத்தைக் கொட்டி ஜெயஸ்ரீயை வஜ்ரவேல் படிக்க வைத்தார்.

அவள் பத்தாவது படித்த சமயம், அவர்களின் பள்ளி முடிந்து பள்ளி வேன் இவர்களின் ஊருக்கு செல்லும் ஒற்றையடிப் பாதையில் திரும்பி சற்று தூரம் வந்த சமயம், வேன் கட்டுபாட்டை இழந்து தாறு மாறாக ஓடாத துவங்கியது.

அந்த வேனிலேயே இவள் தான் பெரிய பெண். அவளில்லாமல் இன்னும் பதினான்கு பேர் இருந்தனர்.. எல்லாம் மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்பு சிறுவர் சிறுமிகள்.

வேனை என்ன செய்தும் டிரைவரால் நிறுத்த முடியவில்லை... அது ஒற்றையடிப் பாதை... ரோடின் இருமருங்கிலும் சற்று பள்ளம்...

கட்டுப்பாட்டை இழந்தவுடன் அது வேகமாகச் சென்று, சற்றுப் பள்ளமாக இருந்த இடத்தில் சடாரென்று இறங்க குழந்தைகள் வேனிற்குள்ளேயே ஆளுக்கொரு மூலையில் தூக்கி வீசப்பட்டனர். பின்பு பள்ளத்தில் மோதி செங்குத்தாக வேன் நின்றது.

எங்கும் குழந்தைகளின் ஓலங்கள்.. அந்த பகுதியில் அப்போது பார்த்து வண்டிகளும் வரவில்லை.

ஜெயஸ்ரீ தாறுமாறாக ஓட ஆரம்பித்தவுடனே கெட்டியாக அமர்ந்திருந்த இருக்கையைப் பிடித்து அமர்ந்து இருந்தாள். “எல்லோரும் நல்லா சீட் பிடிச்சு உட்காருங்க” என்றும் கத்திச் சொல்லியிருந்தாள்.

அப்போதும் வேன் இறங்கியவுடன், தலையில் சற்று அடி அடி பலம் தான், ஆனாலும் சுதாரித்தவள் அவள் மட்டுமே..

விழுந்த வேகத்தில் முன் புறம் தீப்பொறி கிளம்பியது. டிரைவர் அண்ணாவைப் பார்த்தாள், அவர் மயங்கியிருந்தார். அவசரமாக குழந்தைகளை இறக்கிவிட ஆரம்பித்தாள்.

“இறங்குங்க! இறங்குங்க! தூரமாப் போய் நில்லுங்க! பேக் எடுக்க

வேண்டாம், போனாப் போகுது ஓடு, அழாத ஒன்னுமில்லை” என்று கத்தி கத்தி, அவள் இறக்கிவிட ஆங்காங்கே அடிபட்டு இருந்தாலும்... எப்படியோ ஒருவரைப் பற்றி ஒருவர் பிள்ளைகள் இறங்கி ஓட ஆரம்பித்தனர்.

அவர்களை இறக்கி விட்டாள், ஆனால் தீ அதிகமாக எரிய ஆரம்பித்தது.. டிரைவரை அண்ணா அண்ணா என்று கத்தி கத்திக் கூப்பிட்டாலும் அவர் விழிக்கவில்லை.

அவரை விட்டுப் போகவும் மனமில்லை.

தீ பரவ பரவ, அதன் வெப்பம் தாக்க ஆரம்பித்த போதும்... ரிஸ்க் எடுத்து, டிரைவரின் புறம் உள்ள கதவை திறந்து அவரை அப்படியே வெளியே தள்ளினாள்... அவளால் முடியாத ஒரு செயலை மிகுந்த தம் கட்டித் தள்ளினாள். ஏற்கனவே பள்ளத்தில் பாய்ந்து இருந்ததினால் அதிக உயரமில்லை.. அதனால் அவருக்கு தள்ளுவதால் அடிபட வாய்ப்பில்லை.

அதற்குள் இருவர் அந்தப் பக்கம் டூ வீலரில் வந்தவர்கள் பிள்ளைகளின் ஓலம் கேட்டு விரைந்து வர...

ஒருவர் கீழே விழுந்த டிரைவரை தூரமாக இழுத்து விட்டார்.

“பொண்ணு நீ இறங்கு!” என்று ஒருவர் படியின் புறம் நின்று கத்தினார். மிகுந்த வெப்பம் மேலே ஏற முடியவில்லை. பேனட்டின் புறம் ஒரு காலை வெளியே வைத்து ஒரு காலை உள்ளே வைத்து டிரைவரை தள்ளியிருந்தாள்.

அவரைத் தள்ளி விட்டு ஜெயஸ்ரீ அவசரமாக கால் எடுப்பதற்குள் அவளின் கட் ஷூ அணிந்த காலில் இருந்த சாக்சில் தீ பட்டது தான் போதும் அது எரியத் துவங்கியது.. அந்த நைலான் சாக்ஸ் காலோடு பிடித்துக் கொண்டது.

அதில் கால் எடுக்க முயன்றாலும் முடியவில்லை.

ஜெயஸ்ரீ கத்திய கத்தல்... அவளின் சாக்ஸில் தீ பற்றி அது ஷூவில் பிடித்து எரியத் துவங்கியது..

அதற்குள் வெப்பத்தையும் மீறி அந்த இரு மனிதர்களும் வந்து அவளின் காலை இழுத்தனர்.

ஒரு மனிதர் காலில் மேலும் தீ பரவாமல் அவருடைய தோளின் துண்டை எடுத்து தட்டி தட்டி விட இன்னொருவர் காலை இழுத்தார்.

அப்பா! ஜெயஸ்ரீ கத்திய கத்தல் எப்போதாவது திக்கிப் பேசும் அவளின் குரலையும் சேர்த்து மொத்தமாக பாதித்தது.

எப்படியோ அவளை வெளியே இழுத்து வந்து தூர நின்ற சமயம், வேன் திகு திகு வென எரிய ஆரம்பித்தது...

அவர் தட்டிய துண்டிலேயே தீ பிடிக்க, அதற்குள் தீயின் ஆதிக்கம் சற்று அவளின் காலில் குறைய, அந்த மனிதர் கையாலேயே தட்டி தட்டி அவளின் தீயை அணைக்க... இன்னொரு மனிதர் மண்ணைப் போடா... அந்த சாக்சும் ஷூவும் அதிகம் காலோடு ஒட்டிக் கொள்ள... மிகுந்த சேதாரம் ஆகியிருந்தது.

அதுவரையிலும் ஜெயஸ்ரீ கத்திய கத்தலில், அவளின் காலுக்கு மட்டுமல்ல குரலும் சேதாரம் ஆகியிருந்தது. அதை அவளின் வாய் மொழியாகக் கேட்கக் கேட்க சிபி பிரமித்து அவளைப் பார்த்திருந்தான்.

## அத்தியாயம் இருபத்தி இரண்டு :

சிபி அவளைப் பிரமிப்போடு பார்த்து, “பெரிய வேலை, அந்தச் சின்ன வயசுல.. எல்லோருக்கும் இந்த தைரியம் வராது... தீயைப் பார்த்தா முதல்ல இறங்கி ஓடத் தான் தோணும்” என்று புன்னகையோடு பாராட்டியவன்..

“எப்படியும் ஒரு நாலஞ்சு வருஷம் முன்ன தானே.. எப்படி இத்தனைப் பேரைக் காப்பாத்தினது வெளில அதிகம் தெரியலை... கல்யாணத்தப்ப கூட வெந்தது வேகாததுன்னு அத்தனையும் பேசிட்டு இருந்த சொந்தக்காரங்க, இதைப் பத்தி ஏன் அதிகம் பேசாமப் போனாங்க..”

“அதிகம் பேருக்குத் தெரியவே தெரியாது... இந்த விஷயம் வெளிலயே வரலை.. அப்படியே அமிங்கிடுச்சு... ஸ்கூல் பேர் கெட்டுப் போயிடும்னு ஸ்கூல் மேனேஜ்மென்ட் வெளிய வரவே விடலை”.

“பெற்றோர் எல்லாம் எப்படி விட்டாங்க..”

“எல்லாம் சின்னக் குழந்தைங்க... யாருக்கும் ரொம்ப அதிகமான பாதிப்பு இல்லை, ரெண்டு மூணு பேருக்கு எலும்பு முறிவு.. அந்தச் செலவை ஸ்கூல் ஏத்துகிடுச்சு! அதோட அந்தப் பிள்ளைங்க எல்லோரும் ஸ்கூல் முடிக்கறவரை ஃபீஸ்னு எதுவும் கிடையாதுன்னு சொல்லவும்..”

“யாரும் இதைப் பிரச்சனையாக்கலை... எல்லோரும் எனக்கு நன்றி சொன்னாங்க! என்னோட இந்த வெந்து போன காலைக் கூடத் தொட்டுக் கும்பிட்டாங்க! அவ்வளவு தான்! மேட்டர் ஃபினிஷ்!”

“என் விஷயம் அவங்களுக்கும் ஒரு விஷயமாயிடுச்சு...”

“அதுல பாதிப்பு எனக்கு மட்டும் தான்... கால் மட்டுமில்லை... குரலும் போச்சு.. முன்ன கொஞ்சம் திக்கிப் பேசுவேன்... ஆனா ரொம்ப இல்லை. அதுல என்னோட பேச்சு வர்ற தசைகள் ஏதோ ஸ்பேசம் ஆகிடுச்சு.. அதனால இப்படி பேச முடியலைன்னாங்க...”

“அப்படினா?”

“பேச நினைக்கும் போது அந்த தசைகள் டைட் ஆகிடும்... ரிலாக்ஸ் ஆகாது.. ரொம்பப் பேசினா வலிக் கூட எடுக்கும்..”

“ஸ்கூல்ல எங்களுக்கும் நிறைய பணம் குடுக்க வந்தாங்க... ஆனா எங்கப்பா பைசா வாங்கலை யார்கிட்டயும்.. முதல்ல கேஸ் அது இதுன்னு திரிஞ்சார். அப்புறம் ஸ்கூல்ல மிரட்டினாங்க.. சாட்சியும் யாருமில்லை... அதை விடவும் நம்ம தானே பொண்ணுக்குத் துணை! நமக்கு ஏதாவது ஆகிடிச்சுன்னா அவளை யார் பார்த்துக்குவான்னு அவரும் விட்டுட்டார்”.

“அதனால தான் ஸ்கூல் அனுப்பலை, டென்த் கூட ப்ரைவேட்டா தான் எழுதினேன். அப்புறம் பாலிடெக்னிக் சேர்த்துட்டார்”

“ஆனா அதுல அவர் ரொம்ப மனசு விட்டுட்டார்! அந்த சமயத்துல தான் கல்யாணம் யார் பண்ணிக்குவா.. பொண்ணு... அப்படி இப்படின்னு மனசைக் குழப்பி அந்தக் கண்ணனைப் பத்தி சொல்லி...”

“அய்யே! அவன் முகமே எனக்குப் பிடிக்கலை” என்று அவள் முகத்தை சுளித்துச் சொன்ன விதம்.. ஒரு விரிந்த சிரிப்பைத் தான் சிபியின் முகத்தில் கொடுத்தது.

“கடவுள் கிட்ட வேண்டிக்கிட்டே இருப்பேன்! அவன் எனக்கு வேண்டாம்னு... கல்யாணம் அவனோடன்னு பேசியிருந்தாங்க தான். ஆனா நாள் குறிக்கற அந்த மாதிரி ஒரு சூழ்நிலை வரும் போது நிச்சயம் அப்பாக்கிட்ட சொல்லிப் புரிய வெச்சிருப்பேன்!, நானா ஆரம்பிக்க வேண்டாம்னு தான் நினைச்சு அமைதியா இருந்தேன்”

“இதுல எனக்கு அவன் வாழ்க்கை குடுக்கறான்னு டைலாக் வேற... எரிச்சலா இருக்கும்.. அப்போதான் தெரிஞ்சது அவன் லவ் பண்றான்.. நான் குறையோட இருக்கறதால என்னை வேண்டான்னு சொல்ல முடியாம எனக்கு வாழ்க்கை குடுக்கறான்னு..”

“நான் சொன்னேன் எனக்கு நீ வேண்டாம்னு... அப்போ சாட்சிக் கையெழுத்துப் போடறீங்களான்னு கேட்டான்... ஹப்பா விட்டது கெட்ட நேரம்னு நினைச்சேன்”

“அதைவிட எனக்கு வேற என்ன வேலை? சொன்ன நாள், சொன்ன டைம் போய் போட்டேன்...”

“இதுல அந்தப் பொண்ணு உங்களுக்கு நிச்சயமாகிருக்குன்னு தெரியாது... தெரிஞ்சிருந்தாலும் போட்டிருப்பேன் அது வேற விஷயம்..”

எல்லாவற்றையும் திக்கித் திணறி சொன்னாலும், மடை திறந்த வெள்ளமாகப் பேசிக் கொண்டே இருந்தாள்.. நிறுத்தவேயில்லை... வாங்கிய ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் முடிந்து மீண்டும் அவள் தண்ணீருக்காகப் பார்க்க...

அது இல்லை என்ற போதும் தொடர்ந்து பேச... அவன் மீண்டும் ஒரு பாட்டில் கொண்டு வரச் சொல்லி அவள் முன் வைத்த போதும் பேசிக்கொண்டு இருந்தாள்.

முன்பு எப்படியோ, இப்போது ராதாவின் திருமணத்தைப் பற்றி ஜெயஸ்ரீ பேசும் போதும் சிறிதும் வருத்தமாகவோ கஷ்டமாகவோ இல்லை..

அந்த விஷயத்தை விடுத்து, “இப்படி உன் காலைப் பண்ணிக்கிட்டு அந்தக் குழந்தைங்களைக் காப்பாத்தி இருக்க.. இப்படி உன் கூட நிக்காதது கஷ்டமா இல்லையா…”

“முன்ன கஷ்டமா இருக்கும்! யாரவது என்னை பரிதாபமா பார்க்கும் போது கோபமா வரும்… ரொம்பக் மனசுக்கு கஷ்டமா இருக்கும்!”

“ஆனா இப்போ அதிகமில்லை.. இந்த உலகத்துல எத்தனையோ பேர் எத்தனையோ நல்லது மத்தவங்களுக்கு செய்யறாங்க! எல்லோரையும் பாராட்டுறாங்களா என்ன? என்னை மாதிரி செஞ்ச விஷயம் வெளில கூட வராது”.

“வருத்தமா இருக்கும் போது எல்லாம் நினைச்சிக்குவேன், நான் மிலிட்டரில வேலை செஞ்சு இப்படி ஆகிடுச்சுன்னு. நாட்டுக்காக எத்தனைப் பேர் எத்தனை கஷ்டப்படறாங்க, எத்தனைப் பேர் உயிரை விடறாங்க! எல்லாம் நமக்கு ஒரு செய்தி தானே.. அது நல்ல விஷயம்னு தெரியும்! அதுக்காக நம்ம அதை பாராட்டிட்டே இருக்குறோமா என்ன? அப்படித்தான் இதுவும்..”

“அத்தனை வார்த்தைகளும் தடுமாறி தான் வந்தன! ஆனால் அவளின் வார்த்தைகளில் தான் தடுமாற்றம்! சிந்தனையில் இல்லை”.

முன்பு பார்த்த ஜெயஸ்ரீயிற்கும் இப்போது பார்க்கும் ஜெயஸ்ரீயிற்கும் நிறைய மாற்றங்கள்.. அவள் அப்போது பேசவே மாட்டாளே? இப்போது எப்படி இப்படி பேசுகிறாள்!.

கண்டிப்பாக் திக்கி, சிரமப்பட்டு தான்.. ஆனால் பேசுகிறாள்! அப்போது பேசவில்லை… ஒரு வேளை அவளுக்குப் பேசும் சந்தர்ப்பத்தை தான் கொடுக்க வில்லையோ என்று சரியாக நினைத்தான் சிபி.

அதே சமயம் மிகவும் சிரிப்போடு கலகலப்பாக இருந்திருப்பாள், இந்த நிகழ்வுக்கு முன் என்று தான் தோன்றியது.

பின்பும் அவளையேப் பார்த்திருக்க..

சிபி அவளையே பார்த்திருப்பதை உணர்ந்தவள்.. “நீங்க பேசக் கூட்டிட்டு வந்தீங்க! நானே பேசிட்டு இருக்கேன்… இப்போ

சொல்லுங்க!” என்றாள்.

“அவனை வேண்டாம்னு எப்படியும் சொல்லியிருப்பேன்னு சொல்ற! என்னை மட்டும் எப்படிக் கல்யாணம் செஞ்சிகிட்ட…”

சற்றும் யோசிக்காமல் தயக்கமேயில்லாமல் உடனே பதில் சொல்ல ஆரம்பித்தாள். “அது அவன் முகத்தைப் பார்த்ததுமே பிடிக்கலை… உங்களைப் பார்த்ததும் அப்படித் தோணலை..”

“அப்போப் பிடிச்சி இருந்ததா”

“அப்படிச் சொல்ல முடியாது… ஆனா பார்க்க சகிக்காம இல்லை…” என்று அவள் சொன்னதும், “டேய் சிபி, இந்தக் கேள்வியை நீ கேட்காமையே இருந்திருக்கலாம்” என்று மனதிற்குள் நொந்து கொண்டான்.

“அப்புறம் அப்பா நிறையப் பேசி என்னை ஒத்துக்க வைச்சார்.. அவரும் உங்களைப் பத்தி நிறைய விசாரிச்சு நேர்ல பார்த்து, அப்புறம் தான் என்னை சம்மதிக்க வெச்சார்..” என்று அவள் சொல்லிய விதம்…

அதற்கு மேல் என்ன கேட்க… என்ன சொல்ல… கேட்பதற்கோ சொல்வதற்கோ எதுவும் இருப்பது போல தெரியவில்லை சிபிக்கு..

“இல்லை! எனக்கு ஒன்னும் பேசயில்லை! என்றான்.

“அப்போ சொன்னிங்க” என்று சைகையில் கேட்டாள், பேசிப் பேசி களைத்து இருந்தாள்.

“அப்போ நிறைய பேசணும்னு தோணிச்சு! இப்ப பேச ஒன்னுமேயில்லாத மாதிரி இருக்கு.. ஏற்கனவே எனக்கு தலைக்கணம் திமிர்ன்னு எல்லோரும் சொல்லுவாங்க! இப்போ இன்னும் சொல்வாங்க!” என்றான் சம்மந்தமில்லாமல்.

“ஏன்?” என்று சைகையால் கேட்கவும்…

“உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கறது நிஜமான கர்வமான விஷயம்.. என் வாழ்கையில நடந்த எந்த விஷயத்துக்கும் இனிமே எனக்கு வருத்தமே கிடையாது” என்று பளிச் புன்னகையோடு சொல்ல…

மெல்லிய வெட்கத்தின் சாயல் ஜெயஸ்ரீயின் முகத்தில்.

புகழ்ச்சிக்கு மயங்காத ஆட்கள் யார்? அதுவும் பிடித்தமானவர்களிடம் இருந்து வரும் போது.

சிபிக்கு மனதிற்குள் மிகவும் வருத்தமாக இருந்தது… “இறைவன் இப்படி ஒரு வாழ்க்கைத்துணையைத் தனக்காக வைத்திருக்கும் போது தான் இப்படி முட்டாள் தனமாக தன்னை வேண்டாம் என்று சொன்ன ஒருத்திக்காக எத்தனை பிரச்சனையை இழுத்து விட்டுக் கொண்டிருக்கிறேன்!” என்பது போல.

முகத்தில் சற்று வருத்தத்தின் சாயலும்…

அவனின் முக மாற்றத்தைக் கவனித்தவள், என்ன? என்று கேட்க.. “ஒன்றுமில்லை” என்பது போல தலையாட்டினான்.

“உங்க வீட்ல எல்லாம் எப்படி இருக்காங்க?” என்று ஜெயஸ்ரீயாகக் கேட்கவும்..

“தெரியாது” என்பது போல தலையாட்டியவன், “அன்னைக்கு என்ன நடந்தது?” என்றான். ஏற்கனவே அவள் சொன்னதுதான், ஆனால் முழுமையாகச் சொல்லவில்லை..

முதல் நாள் உணவருந்தாததால் சற்று களைப்பாக எழும்போதே உணர்ந்தது.. டீ குடிக்க சென்ற போது, குளித்து வருமாறு தேவி பணித்தது, பின்பு வந்த போது புடவையைச் சரியாகக் கட்டாமல் வந்ததால் அந்த அவசரத்தில் ஸ்டிக் எடுக்காமல் வந்தது.

அப்போது மணிமேகலை புடவையை இழுத்து அவளுடன் விளையாடியது.. விடு என்ற வார்த்தைக் கூட வராமல் புடவை சரிந்து விடுமோ என்று பதட்டமாக புடவையை விடாமல் பதிலுக்கு இழுத்தது.. அப்போதும் குழந்தையும் வேகமாக இழுக்க, சற்று வேகமாக இவள் பதிலுக்கு இழுக்க… குழந்தை தூரப் போய் விழுந்தது, விழுந்ததும் பெரும் குரலெடுத்து அழுதது… வீட்டினர் பேசியது.

பின்பு தான் கையில் ஸ்டிக் இருக்காததை உணர்ந்தவள்.. புடவையை நன்றாகக் கட்டி அதை சென்று எடுத்து வரும் போது, மணிமேகலை

அங்கிருந்த ஒரு இரும்பு முக்காலியின் மேல் நின்று அங்கிருந்த பிளாக் பாயிண்டில் சிறு சாவியை உள்ளே நுழைத்துக் கொண்டிருந்தது..

பார்த்தவுடன் ஷாக் அடித்துவிடும் என்று கையில் இருந்த ஸ்டிக்கால் சற்று வேகமாக தான் மணிமேகலையைத் தள்ளி விட்டது... அதற்குள் மணிமேகலைக்கு ஷாக் அடித்து இருந்ததா அதனால் தூக்கி எறியப்பட்டாளா இல்லை ஜெயஸ்ரீ வேகமாகத் தடியால் அடித்ததா தெரியவில்லை.

அவள் தடியால் அடித்த சமயம் மாமல்ல வர்மன் பார்த்துவிட...

குழந்தைக்கு தலையில் அடிப்பட்டு ரத்தம் வேறு வர..

எல்லோரும் மீண்டும் பேசியது... சிபி சற்று அதிகமாகப் பேசியது... பின்பு அவர்கள் குழந்தையை ஹாஸ்பிடல் கொண்டு போக... தான் உள்ளே நுழைந்த சமயம் ரூமின் வாயில் கால் தட்டியா இல்லை இந்த பேச்சுக்கள் எல்லாம் கொடுத்த பாதிப்பா கீழே அப்படியே பின்புறம் விழுந்தது.. தலையில் அடிப்பட்டது... யாரும் விழுவதைப் பார்த்தார்களா இல்லையா தெரியவில்லை.

என்று அத்தனையும் சொன்னாள்..

“விழுந்தது தான் தெரியும்! அப்புறம் என்ன ஆச்சுன்னு தெரியலை!” என்றாள்.

“எனக்கு எதுவுமே வருத்தமில்லை... சூழ்நிலை அந்த மாதிரி ஆகிடுச்சு... ஆனா நான் குழந்தையை அடிச்சேன், தள்ளிவிட்டேன், இதெல்லாம் வேணும்னு செஞ்சேன்னு எப்படி இவங்க நினைச்சாங்க. அது தான் இந்த மாதிரி ஆகிடுச்சு...”

“என்னவோ சரியில்லாம ஆகிடுச்சு... ஆனா அப்பா கம்ப்ளைன்ட் கொடுத்தது எனக்குத் தெரியாது! வாசு அண்ணா தான் சொன்னாங்க... அப்பா கிட்ட கேட்டேன் வாபஸ் வாங்கச் சொல்லி செய்யலை... அப்புறம் நான் சாப்பிடலை ஒரு நாள் முழுசும்! அப்புறம் தான் வாபஸ் வாங்கினாங்க”.

“உடனே நீங்க வந்து பணம் நகை எல்லாம் குடுத்துட்டுப் போயிட்டீங்க

நான் எப்படி இருக்கேன்னு கூடப் பார்க்கலை! அதுதான் அப்பாக்கு இன்னும் வருத்தம் ஆகிடுச்சு…”

“எனக்கு இதையெல்லாம் ஜீரணிச்சிக்கவே கொஞ்ச நாள் ஆச்சு…”

சிபியும் அதற்கு மேல் எந்த விளக்கமும் சொல்லவில்லை. நடந்தது நடத்தது தான்… அது தப்பும் கூட… அமைதியாக அமர்ந்திருந்தான்.. ஜெயஸ்ரீயும் திரும்ப பேசவில்லை..

நடந்ததற்கு எங்கே யாரை குற்றம் சொல்ல… ஆனாலும் இவளை ஏன் நம்பாமல் போனார்கள், குழந்தையை அடிப்பாள், தள்ளி விடுவாள் என்று எப்படி நினைக்க முடிந்தது என்ற ஒரு கோபம் அப்போதும் மனதினில் எழுந்தது.

அவர்கள் அப்படி நினைக்காமல் இருந்திருந்தால் இத்தனை அனர்த்தங்கள் நடந்து இராது. மனது பாரமானது.

சிபி யோசனையின் பிடியில் இருக்க… அவன் முகத்தை சிறிது நேரம் ஆராய்ந்தவள்… தன்னுடைய ஃபோனை நொண்டி… “இது உங்களுக்காக” என்பது போல சைகை காட்டி நீட்டினாள்..

என்னவென்று புரியாமல் அதை வாங்கினான்.

**NEVER LEAVE A TRUE RELATIONSHIP FOR FEW FAULTS...**

**NO BODY IS PERFECT**

**NO BODY IS CORRECT AT THE END**

**AFFECTION IS ALWAYS GREATER**

அதை படித்த சிபி அதன் சாரம்சம் உணர்ந்து புன்னகைதான்.. “அப்போ என்ன சொல்ல வர்ற? உன்னை விட வேண்டாம்னா?” என்று அவளைச் சீண்ட..

அவன் சீண்டுகிறான் என்று புரிந்த போதும்.. “மறுபடியும் விடப் போறீங்களா” என்றாள்… அந்தக் குரல் நிச்சயமாய் சொன்னது அவனை மிகவும் தேடியிருக்கிறாள் என்பது..

அதுவரை எதிர் எதிர் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தவன், எழுந்து அவளின் பக்கம் சென்று அமர்ந்தான்.

அவளின் போன் அவன் கையில் தான் இருக்க... அதில் தேடி...

இதயம் என்பது வினோதமான சிறை ஏனெனில்,

இதில் குற்றம் செய்பவர்கள் மாட்டிக் கொள்வதில்லை

பாசம் வைப்பவர்கள் மட்டுமே மாட்டிக் கொள்கிறார்கள்

என்ற வரிகளைக் காட்ட..

“இது உங்களுக்கு இல்லை! எனக்கு!” என்று சைகையால் காட்டினாள், பேச வரவில்லை...

“எவ்வளவு வெச்ச?...பாசம்..” என்றான் சிறு சிரிப்போடு.

“வழுக்கி விழற அளவுக்கு” என்றாள் வாய் மொழியாக...

“எங்கெங்கே அடிபட்டு இருக்கோ, அங்க எல்லாம் மருந்து போடலாம்”

“ஐயோ” என்றாள்.

அவள் சொன்ன பாவனையில், “என்ன?” என்று புரியாமல் கேட்க,

“இவ்வளவு அதிர்ச்சி எல்லாம் ஒரே நாள்ல நான் தாங்க மாட்டேன்! நீங்க சிரிக்கறதே என்னால இன்னும் நம்ப முடியலை! நீங்க என்னோட நல்ல முறையில பேசறது அதை விட.... இப்போ இந்த டைலாக் ஆஆஆஆ தாங்க மாட்டேன்!” என்று நெஞ்சைப் பிடித்து, திணறி வசனம் பேச...

வாய்விட்டே சிரித்து விட்டான் சிபி...

“ரொம்ப நேரமாகிடுச்சு... போகலாம்!” என்பது போல கூடவே சைகை செய்தாள்.

கண்டிப்பாக இவளோடு என் வாழ்க்கை நன்றாக இருக்கும்... அந்த ஒரு உணர்வை நானும் இவளுக்கு கொடுக்க வேண்டுமே என்று தான்

தோன்றியது.

எழுந்தனர்.. வெளியே வந்ததும்... “இனி கிளாஸ் போக முடியாது வீட்டுக்குப் போறேன்” என்றாள்..

இவ்வளவு நேரம் இருந்த கலகலப்பு அப்படியே மாறியது.. “இனி என்ன?” என்ற எண்ணம் இருவரிடமும்..

“மறுபடியும், உங்க அப்பா கிட்ட பேசட்டும்மா...?”

“வேண்டாம்!” என்பது போல தலையசைத்தவள், “நான் உங்களைத் தேடினேன் தான்.. ஆனா பிடிச்சு தான் தேடினேனான்னு கேட்டா என்கிட்டே பதில் கிடையாது... நீங்க என்னை ஏன் விட்டுட்டுப் போனிங்கன்னு தெரிஞ்சிக்க தேடினேனா அதுவும் தெரியாது... இல்லை கணவர் அப்படின்ற ஒரு எண்ணம் கொடுத்த உணர்வால தேடினேனா, இது எதுக்குமே என்கிட்டே பதில் கிடையாது..”

“முதல்ல இதுக்கு எனக்கு பதில் வேணும்..”

“பதில் தெரிஞ்சு என்ன பண்ண போற? என்னோட சேர்ந்து வாழலாமா வேண்டாமான்னு முடிவு செய்யப் போறியா”

“இல்லையில்லை”

“அப்புறம்”

“தெரியலை” என்பது போல உதடு பிதுக்கினாள்.

“என்ன பண்ணட்டும் ஸ்ரீ? தெளிவாச் சொல்லு! இல்லை என் போக்குல போக விடு! என்ன பண்ணட்டும்?”

“ஒன்னும் பண்ண வேண்டாம்! உடனே எதுவும் சரி ஆகாது! அப்பாக்கு உங்க மேல நம்பிக்கை வந்து என்னை அனுப்புற வரை நீங்க இருந்து தான் ஆகணும்” என்று மிகவும் திணறலாகத் தான் வந்தது வார்த்தைகள்.

அவளை அறியாமல் தொண்டையைத் தடவி விட.. “வலிக்குதா ஸ்ரீ பேசறது” என்றான்.

அதற்கு பதில் சொல்லாமல், “ஒரு வேலை நான் வரலைன்னா…” என்று அவள் கேட்ட விதத்திற்கு…

“தப்பு என்னோட பக்கம் இருந்து, அதனால கொஞ்ச நாள் பொறுத்துப் போறேன்… ஆனா பொதுவா எனக்குப் பொறுமை கிடையாது… சொல்லப் போனா அதனால தான் இவ்வளவு பிரச்சனை கூட… சீக்கிரம் என்னோட வரப் பாரு…” அவனின் இயல்பான அதட்டல் பேச்சு வந்திருந்தது.

“வரலைன்னா..”

“ப்ச்! கொஞ்சம் சீரியஸா இரு ஶ்ரீ… விளையாடாத!”

“இல்லை! நான் விளையாடலை! அப்பா அனுப்பாம வரமாட்டேன்..”

“ஶ்ரீ இதே பேசிட்டு இருக்காத, நான் ஒன்னும் பெரிய ஹீரோ கிடையாது சில நாள்லயே ஏதாவது செஞ்சு உங்கப்பா மனசு மாறி என்னோட உன்னை அனுப்பி வைக்கறதுக்கு… நான் ஒரு சாதாரண மனுஷன்.. சில தப்பை என்னை அறியாம செஞ்சிட்டேன்.. அதுக்கான படிப்பினையும் அனுபவிச்சிட்டேன்…”

“முடிஞ்சவரை இந்த மாதிரி தப்பு இனி வராது… ஆனா அதுக்காக நான் நல்லவன், வல்லவன், நிறைய சம்பாரிக்கறேன், இப்படிப் பொய்யெல்லாம் சொல்ல முடியாது”.

ஜெயஶ்ரீ ஏதோ சொல்ல வர..

“நீ வரணும் ஶ்ரீ…”

“வரலைன்னா..”

“சிம்பிள், கடத்திடுவேன்..!”

“சாதாரண மனுஷன்னு இப்போ தான் சொன்னீங்க! சாதாரண மனுஷன் கடத்த மாட்டாங்க!” முகத்தில் வலியின் சாயல்… வார்த்தைகள் கொடுத்த வலியா இல்லை பேசுவதாலா தெரியவில்லை.

“இப்போ என்ன தான் பண்ணனும்ங்கிற… “,

“நான் வீட்டுக்குப் போறேன்.. அதோ என் பஸ் நிக்குது…”

“அப்போ பதில் சொல்ல மாட்ட..”

“மாட்டேன்” என்பது போல தலையசைத்தாள்.

“சரி, உன் பஸ்ல ஏறு!” என்றான்..

அவள் ஏறியதும், அவனும் ஏற. “நீங்க எங்க வர்றீங்க?” என்பதுப் போல பார்க்க… “உன்னை வீட்ல விட்டுட்டுப் போறேன்..”

அவ்வளவு தான் இருவருக்குள்ளும் பேச்சு… பின்பு இருவருமே பேச முயற்சிக்கவில்லை… அவளின் ஊர் வந்து இறங்கியதும்.. இவனும் இறங்கினான்.

ஜெயஸ்ரீ சிறு தலையசைப்புடன், நான் செல்கிறேன் என்று விடை பெற்றாள். அவள் தலையாட்டிய விதமே இனி நீ வரவேண்டாம் என்று சொல்லியது. வீட்டிற்கு வா என்றும் அழைக்கவில்லை.

அங்கிருந்து அவளின் வீட்டிற்கு சிறிது தூரம் நடக்க வேண்டும்… வெயில் கொளுத்தியது..

ஆனாலும் அந்த வெயிலில் மெதுவாக கோல் ஊன்றி நடந்து தான் சென்றாள்.. என்ன செய்வது என்று புரியாமல் ஒன்றும் செய்ய இயலாதவனாகப் பார்த்துக் கொண்டு தான் இருந்தான்.

முன்பானால் வேறு! அவனாகத் தவறாக நினைத்திருந்தான்! தன்னுடன் வர மாட்டாள் என்பது போல! ஆனால் இப்போது.. ஆமாம் தேடினேன்! ஆனால் எதற்கு என்று தெரியாது! பிடித்ததாலா! கணவன் என்பதாலா! என்று திமிர் பேசலாம்.. ஆனால் அவளுக்கு அவனை பிடித்திருப்பது அவனுக்கு இப்போது நிச்சயம்..

ஆனாலும் வரமாட்டேன் என்று பிடிவாதம்…

ஆரம்பித்த இடத்திற்கே மீண்டும் வந்தது போல இருந்தது சிபிக்கு..

## அத்தியாயம் இருபத்தி மூன்று :

என்ன செய்வது என்று தெரியாமல் அவள் செல்லும் வழிப் பார்த்து நின்றவனுக்கு.. இப்போது அவன் வளர்ந்து, வாழ்ந்த நிலத்தைப் பார்க்க வேண்டும் என்று இடைவிடாத உந்துதல்.. அவன் குழம்பும் போது தஞ்சமடையும் இடம் அதுதானே! அங்கே சென்றாலாவது மனதிற்கு அமைதி வருகிறதா என்று பார்ப்போம்! அதையும் ஒரு பார்வை பார்த்து விடுவோம் !

சென்றவனுக்கு மூச்சே அடைத்து.. எப்படி இருந்த நிலம் இப்போது பொட்டல் காடு போல அங்கே எதுவுமில்லை... தண்ணீரைப் பார்த்தே பல நாட்கள் ஆகியிருக்கும் போல...

தென்னை மரங்கள் மட்டும் இருந்தன.. வேறு எதுவும் இல்லை, நெல் விளையும் பூமி எதுவும் பயிரடப்படாமல் அப்படியே இருந்தது.. அவர்களுடைய இருபத்தி ஐந்து ஏக்கரும் அப்படியே தான் இருந்தது. அதில் இருபது ஏக்கரில் எப்போதும் நெல் பயிரிடுவர்... இரண்டரை ஏக்கர் தென்னை இரண்டரை ஏக்கர், அவனின் பொக்கிஷங்கள் ஆம் தேக்கு மரங்கள்... அதன் பண்ணையம்... வருடங்கள் ஆக ஆக தான் லாபம்.

குறு நில விவசாயியாக இருந்த அவனது தந்தையும்,அவரோடு இவனும் சேர்ந்து சிறுகச் சிறுக இந்த நிலத்தைப் பெருக்கி இந்தளவு கொண்டு வந்து இருந்தனர்.

இது கிட்ட தட்ட அவனுடைய தந்தையின் இருபத்தி ஐந்து வருடத்திற்கும் மேலான உழைப்பு, இவனும் கிட்ட தட்ட பன்னிரெண்டு வருடம் அவனுடைய பன்னிரெண்டாவது வயதில் இருந்து இருந்திருக்கிறான்.

ஆட்கள் மிகவும் அதிகம் என்பதால் நடுத்தர ஜீவனமே! ஆனால் இவர்கள் வைத்திருக்கும் நிலத்திற்கு பண்ணைகாரார்கள் என்று சொல்லக் கூடிய வகையறாக்குள் தான் வருவார்கள்.. ஆனால் அதிக வசதிகள் இல்லை.. எடுக்கும் பணத்தை நிலத்தில் போடுவதோடு, ஐந்து பிள்ளைகளின் படிப்பு, சாதாரண விஷயம் அல்லவே...

மனம் பதறி விட்டது சிபிக்கு.. நிலம் இப்படி இருந்தால், ஐயோ அப்பா! அப்பா எப்படி இப்படி விட்டார்! அவருக்கு என்ன என்பது போல...

என்ன செய்வது யாரிடம் கேட்பது என்று தெரியாமல் வாசுவிற்கு அழைத்தான். வாசு என்ற இவனின் அழைப்பு கேட்டது தான் போதும், "சிபி! எங்கடா இருக்க...?" என்று கத்தியே விட்டான்.

"எங்க நிலத்துல தான் நிக்கறேன், வா உடனே!" என்றான்.

அவன் பேசிய பத்து நிமிடத்திற்குள் எல்லாம் வாசு வந்துவிட்டான்... அவன் வந்த நேரத்திலேயே அவன் வந்த வேகம் தெரிந்தது.

அந்த நிலத்தில் நடுவில் அந்த வெயிலில் கீழே அமர்ந்திருந்தான் சிபி...

"ஏண்டா? ஏண்டா? இப்படி உட்கார்ந்து இருக்க!" என்று பதறினான் வாசு.

"என்னடா ஆச்சு? ஏண்டா நிலம் இப்படி இருக்கு... எங்கடா என் பயிரெல்லாம்..?" சிபி கேட்ட விதம் அவனின் சித்தம் தான் கலங்கி விட்டதோ என்று வாசுவிற்கு தோன்றியது.

அவசரமாக அவனின் தோற்றத்தை ஆராய்ந்தான்... எப்போதும் உடுத்துவதை விட சிபி அன்று நன்றாக கச்சிதமாக உடை அணிந்திருந்தான்.. அது காட்டிக் கொடுத்தது அவன் நன்றாக தான் இருக்கிறான் என்பது போல்..

"என்ன ஆச்சு? எங்க இருந்த?"

"ப்ச்! ஏன் எங்க நிலம் இப்படி இருக்கு.. எங்க நிலம் தானே இது" என்றான்.

"உங்க நிலம் தான்... நீ போனதுக்கு அப்புறம் உங்கப்பா இந்த இடத்துல காலை வைக்கலை தெரியுமா!" என்றான்.

"உங்க நிலத்துக்கு இப்படி கவலைப் படறியே! உங்க வீடு எப்படி இருக்கு தெரியுமா?" என்று பதிலுக்கு வாசு ஏறக்குறைய கத்தினான்.

சிபி என்ன வரப் போகிறதோ என்று பயந்து அவனைப் பார்க்க.. "எல்லோரும் உயிரோட இருக்காங்க! அவ்வளவு தான்..."

"என்னோட சிபி இப்படிக் கிடையாதுடா... எப்போ இருந்துடா

இவ்வளவு சுயநலவாதியா மாறின... எல்லோரையும் கஷ்டப்பட விட்டுட்டு நீ போயிட்ட..”

“எவளோ ஒரு பொண்ணுப் போயிட்டான்னு இந்தக் கலாட்டாவா! அப்போ இருந்து கோபத்துல மேல மேல நீ என்ன செஞ்சு வெச்சிருக்க...”

“உங்கப்பா உன்னை எப்படித் தேடினார் தெரியுமா... ரெண்டு வருஷம் யாரையும் பார்க்கணும்னு உனக்குத் தோணலையா... இவங்க ஒரு பக்கம் உன் மனைவி ஒருபக்கம்னு இத்தனைப் பேரைத் தவிக்க விட்டுட்டு எங்கடாப் போய் தொலைஞ்ச... உயிரில்லாத இந்த நிலம் வாடிக்கிடக்கிறதுக்கே உன் மனசு பதைக்குதே! உங்க அப்பா அம்மா அவங்களை ஏண்டா தவிக்க விட்ட..?”

எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல வராமல், இந்த நேரடிக் குற்றச்சாட்டில் அந்த பூமிக்குள் புதைந்து போனால் பரவாயில்லை என்பது போல அமர்ந்து இருந்தான்.

“பாவம்டா எனக்கு அந்த மனுஷரைப் பார்க்கவே முடியலை! எப்படி இருந்த வரை நீ எப்படி ஆக்கிட்ட... யாருக்குடா உலகத்துல கஷ்டமில்லை.. அவனவன் டாட்டா காட்டிட்டு ஜெயிலுக்குப் போயிட்டு வர்றான்.. நீ என்னன்னா ஒரு தடவை போயிட்டு வந்தா ஆளுங்களை வெறுத்துப் போயிடுவியா..”

“வர்ற ஆத்திரத்துக்கு சப்புனு ஒரு அரை விடணும் போல தோணுது! ஆனா நீ திருப்பி அடிச்சிடுவன்னு பேசாம இருக்கேன்!” என்று படபடவென பொரிந்தவன், அவனும் அந்த நடு நிலத்தில் தொப்பென்று ஏதோ புல்வெளியில் அமர்வது போல நண்பனோடு அமர்ந்தான்.

செய்ய வேண்டியது என்ன என்று சிபிக்கு புரியாத போதும்... ஆற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புகள் தன்னை தளைக்குள் பூட்ட ஆரம்பிப்பதை உணர்ந்தான்... மீளாத் தளை, மீள முடியாத தளை.. மீள விரும்பினால் அவன் மனிதன் என்னும் வகைக்குள் வரமாட்டான் போல தோன்றியது.

போனது போகட்டும் அவனின் வாழ்கையின் இந்த இரண்டு வருடங்கள் இல்லாமல் போகட்டும்...ஏதாவது செய்! அவர்களும் உன் குடும்பம் தானே! மனது எடுத்துரைத்ததா இடித்துரைத்ததா அவனே அறியான்..

நிலத்தில் பயிரிடப்படவில்லை என்றால் ஜீவனதிற்கு என்ன செய்திருப்பர்.. மனம் பாரமாக அழுந்தியது.

அங்கே அந்த வரண்ட நிலத்தைப் பார்த்து அமர்ந்திருந்தான்... பவானி சாகர் ஆற்றுப் பாசனம் கைவிட்டதா... இல்லையே! எல்லோர் நிலமும் செழிப்பாக இருக்கிறதே..

அமர்ந்து விட்டான் செய்வதறியாது... நிலத்தில் தந்தை கால் வைக்கவேயில்லை என்றால் அவரின் மனது என்ன மாதிரி காயப்பட்டிருக்கும் தான் சென்றது என்று உணர்ந்து கொள்ள முடிந்தது.

நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து, “டேய்! முதல்ல மனுஷங்களைப் பாரு! நீ நல்லா இருக்கன்னு தெரிஞ்ச அப்புறமாவது அவங்க நிம்மதியா சாப்பிடட்டும்... அப்புறம் இதைப் பார்ப்பியாம்! எழுந்திரு! உன் வீட்டுக்குப் போகலாம்!” என்றான் வாசு..

போய்த் தானே ஆக வேண்டும்...

வீட்டை தூரத்தில் இருந்து பார்த்த போதே தெரிந்தது... வருடா வருடம் சுண்ணாம்பு அடித்து பளிச் வெண்மையோடு திகழும் வெளிச் சுவர்கள் பொலிவிழந்து இருந்தது.

வீட்டின் உள் அதனை விட அதிகம்.. அவன் வீட்டின் உள் நுழைந்ததும் முதலில் பார்த்தது தேவி தான்... மகன் வந்துவிட்டானா? கண் சிமிட்டினாள் மறைந்து விடுவானோ என்று விடாமல் பார்த்திருந்தார்...

“அம்மா!” என்றவனின் அழைப்பைக் கேட்டதும், அவன் தான் என்ற நிஜம் புரிந்து, கால்கள் தொய்வுற அமர்ந்து விட்டார். மூன்று மக்கள் பெற்று விட்டால் ஒருவன் போனாலும் பரவாயில்லை, மற்ற இருவர் இருக்கிறார்களே என்ற சமாதானம் எந்தப் பெற்றோருக்கும் பொருந்தாது.

ஆனால் பிள்ளைகளின் மனநிலை அப்படித்தான்... அதுதான், “இன்னொருத்தன் கூட தான நீ இருக்க! இதுல நான் இருந்தா என்ன? இல்லாட்டி என்ன?” என்ற சொற்கள் பல மக்கள் இன்று அனாயாசமாக பேசுகிறார்கள்.

மாற்றம் அவர்கள் பெற்றோர் ஆன பின்தான் வருகிறது! சிலருக்கு அதுவுமில்லை. தாங்கள் தங்களின் மக்களுக்குப் பார்த்து பார்த்து செய்வது போல தான் தங்களின் பெற்றோர்களும் தங்களைப் பார்த்திருப்பார்கள் என்பது நினைவில் வர மறுக்கிறது என்பது தான் உண்மை. கண்டிப்பாகத் தெரியாமல் இருக்காது.

“அம்மா!” என்று அவரின் அருகில் அமர.. தேவியால் அழுகையை நிறுத்தவே முடியவில்லை... சிபிக்கு என்ன சமாதானம் சொல்வது என்றும் தெரியவில்லை... அமர்ந்து விட்டான்.

வீட்டில் அம்மா, அத்தை, பாட்டி, தாத்தா மட்டுமே இருந்தனர்... மற்ற எல்லோரும் வேலைக்குச் சென்று இருந்தார்கள். அதிலும் தாத்தா படுக்கையில் நினைவு மழுங்கிய நிலையில்...

“தாத்தாவைப் பாருடா..!” என்று பாட்டி சுலோச்சானா ஒரு புறம் அழ.. அங்கே சென்று பார்த்தால், அவருக்கு நினைவு இருப்பது போல தெரியவில்லை.

“தாத்தா! தாத்தா!” என்று அவன் கத்த... மெதுவாக கண்ணை திறந்தவர், அவனைப் பார்த்து விட்டு பிறகு கண்கள் மூடிக் கொண்டார்.

“எத்தனை நாளா இப்படி இருக்கு?” என்றான்.

“ரெண்டு மாசமா.. அவருக்கு ஒரு சாவு வந்துட்டாப் பரவாயில்லை.. சாப்பாடே இல்லை இந்த பத்து நாளா! வெறும் நீராகாரம் தான்! பால், ஜூஸ், இப்படி தான் ஆகாரம் குடுக்கறோம்” என்றார் பாட்டி..

“நீயும் கொஞ்சம் ஊத்து! அப்பவாவது அவருக்கு இந்த உலகத்துல இருந்து மோட்சம் கிடைக்குதான்னு பார்ப்போம்.. இப்படி ஒரு உயிர் அவருக்கு வேண்டாம்!” என்றார்.

“ஏன் பாட்டி இப்படிப் பேசறீங்க..?”

“வயசானா எல்லோரும் போக வேண்டியது தானேப்பா.. இந்த வலியோட ஒரு வாழ்க்கை எதுக்கு..”

ஆம்! படுக்கையில் இருந்ததால் படுக்கைப் புண்கள்.. ஆறாத ரணத்தை

வேறு அவருக்கு கொடுத்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு அப்படிச் சொன்ன பிறகு பால் ஊற்ற கைகள் வரவில்லை... மௌனமாக வெளியே வந்தான்.. அத்தை ராஜலக்ஷ்மி இன்னும் பரிதாபமாக இருந்தார்... மெலிந்து கண்கள் உள்ளே சென்று.. பார்க்கவே பரிதாபமாக..

கணவனை இழந்து ஒரு குழந்தையின் கையைப் பிடித்து, இன்னொரு குழந்தையை கையில் ஏந்தி வந்தவர்... இவர் கண்ட சுகம் தான் என்ன... சுற்றி எத்தனை பேர் இருந்தாலும் வாழ்க்கைத் துணையன்றி இருப்பது பெரும் கொடுமை.

“என்ன அத்தை சாப்பிடறிங்களா இல்லையா? என்ன உடம்பை இப்படி கெடுத்து வெச்சிருக்கீங்க?” என்றான்.

சிபி அவருடன் பேசுவதை நம்ப முடியாதவர் போல பார்த்தார்... “ப்ச்! என்ன அத்தை இது! அப்பா எங்கே?” என்றான் அவரைப் பார்த்து...

“வேலைக்கு” என்றவரின் பதிலைக் கேட்டு அதிர்ந்து விட்டான்... “என்ன வேலைக்கா? என்ன வேலைக்கு? அவருக்கு என்ன தெரியும் விவசாயத்தை விட்டா? எங்க வேலைக்கு போறார்” என்று பதறினான்.

“உரக்கடைக்கு! காலையில பத்து மணிக்குப் போனா, ராத்திரி எட்டு மணிக்கு தான் வீட்டுக்கு வருவார்!” என்றார்.

“என்ன நடக்கிறது?” என்று பதறிவிட்டான் சிபி... இன்னும் அவன் தெரிந்து கொள்ளாதது நடராஜன் வீட்டினர் யாருடனும் அதிகம் பேசுவதில்லை... அதிலும் மனைவி தேவியுடன் இந்த இரண்டு வருடமாக ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

மாமல்ல வர்மனும் ஒடுங்கியிருந்தான் உள்ளுக்குள், அதிகம் யாருடனும் பேசாமல், “தன்னால் தானோ! தான் தான் அண்ணி அடித்ததாக எல்லோரிடமும் சொன்னேன்... அதனால் தான் இவ்வளவும்!” என்று ஒரு புறம் மருகி இறுகி விட்டான்.

தன்னால் சிபி வீட்டை விட்டுப் போய்விட்டான் என்பது அவனால் தாளவே முடியவில்லை... இன்னும் தங்களின் வீட்டுக் குழந்தையை

காப்பாற்ற போனவர்களை, அநியாயமாக வேறு குற்றம் சாட்டி விட்டான்.

எப்படி அவ்வாறு அவனுக்குத் தோன்றியது... அன்று ஜெயிலில் இருந்து வந்தவுடன் சிபி அவனிடம் கேட்டான் கூட, ஜெயஸ்ரீ குழந்தையைத் தள்ளி விடுவா, அடிப்பான்னு நீங்க எப்படிடா நினைச்சீங்க... அவ விழறது பார்த்தும் அப்படியே விட்டுட்டு போயிருக்கீங்க... ஒரு வேலை அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தா...”

மொத்தத்தில் வீடு வீடாக இல்லாமல், வசிக்கும் இடமாக மட்டும் இருந்தது. உயிர்ப்பு என்பது இல்லாமல் இருந்தது.

கோவையை நெருங்கும் இடத்தில் உள்ள ஒரு உரக்கடை... அவர்கள் எப்போதும் அங்கே தான் உரம் வாங்குவார்கள்... அங்கே வாசுவுடன் செல்ல... அவனின் அப்பா அந்தக் கடையில் ஒரு சேர் போட்டு அமர்ந்து இருந்தார்... உள்ளே உரங்களோடு உரங்களாக... இந்த மூட்டைகளை அவர் தூக்கியிருக்க வேண்டும் என்று நினைத்தப் போது, இதற்கா மூன்று ஆண்மக்களை பெற்று அவர் வளர்த்தார். என்ன செய்து விட்டேன் நான்.

இவன் இருந்த திசையில் தான் அவரின் பார்வை இருந்தது... ஆனால் இவனை அவர் உணரவில்லை.

முன் உட்கார்ந்து இருந்த முதலாளி தான் முதலில் இவனைப் பார்த்தார்... நன்கு அறிந்தவரே.. “தம்பி!” என்று கூப்பிட்டவர்... அவரும் ஏதும் பேசாமல் பார்த்தது பார்த்தபடி இருந்தார்.

“அப்பா!” என்று அவர் அருகில் சென்று அழைத்தும் தான் உணர்வு பெற்று திரும்பினார். சிபியைப் பார்த்ததும் நம்பாதவராக அவனைக் கைபிடித்து பார்த்தார். அவ்வளவு தான் அவனின் கையை விட்டவர், அதன் பின் எதுவும் பேசவில்லை.

“அப்பா!” என்று அவரின் காலடியில் அங்கேயே மண்டியிட்டான், அப்போதும் பேசவில்லை.. அவருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை...ஏனென்றால் கொஞ்சிக் கொஞ்சிப் பேசி அவர் பிள்ளைகளை வளர்த்ததில்லை.

அதற்காக பிள்ளைகளிடம் பாசமில்லை என்பதா... அதுவும் சிபி வீட்டை சென்ற அன்று ஏதாவது செய்து கொள்வானோ என்று அவரின் நெஞ்சம் பதறியது அவருக்குத் தான் தெரியும்.

பின்பு அவரே அவரை தேற்றிக் கொண்டார், அவ்வளவு கோழைகளாக அவரின் பிள்ளைகளை வளர்க்கவில்லை என்று.. அதே சமயம் வாழ்வை விட சாவை நோக்கி செல்வதற்கு இன்னும் தைரியம் வேண்டும் என்று எங்கோ படித்த ஞாபகம்... அன்று அவர் பட்ட துன்பம்... இத்தனைப் பெரிய மகனை எங்கே போய் தேடுவது.

அவருக்கே ஆலோசனைகள் சொல்வது அவன் தானே... இன்று தீடிரென்று நேரில் வந்து நிற்கவும், அவருக்கு இன்னும் அதை நம்ப முடியவில்லை.

“வீட்டுக்குப் போகலாம்பா!” என்றான்.

உடனே எழுந்து கொண்டார்... “அண்ணா அவர் இனிமே வரமாட்டார்! உதவிக்கு வேற யாரையாவது வெச்சுக்கோங்க... அதுவரைக்கும் ஆள் வேணும்னா நான் வர்றேன்!” என்றான்.

“இல்லை, தம்பி! நான் சமாளிச்சுக்குவேன்.. நீங்க போங்க...” அவர்கள் படியிறங்க ஆரம்பித்ததும், “அப்போ எப்போ வர்றீங்க கடைக்கு” என்றார்

சிபி சில நொடிகள் புரியாமல் நின்றவன், பிறகு அவர் உரம் வாங்கக் கேட்கிறார் என்று புரிந்தவனாக, “இன்னம் கொஞ்ச நாள்ல” என்று சொல்லி வந்தான்.

“வாசு! நான் வந்துக்கறேன் நீ அவரைக் கூட்டிட்டு போ” எனவும் வீடு வந்தார்கள்.

மதிய நேரத்தைக் கடந்து இருந்தது, உணவு உண்ணாததும் ஞாபகம் வர...

“அம்மா! சாப்பாடு போடுங்கம்மா!” என்று கை கழுவி அமர்ந்தான். “நீங்கல்லாம் சாப்பிட்டுட்டீங்களா” என்று கேட்க... அவர்கள், “இல்லை” என்பது போல தலையாட்டவும்... “எனக்குப் போட்டுக் குடுத்துட்டு

சாப்பிடுங்கம்மா" என்று சொன்னவன்... வேகமாக உண்டு எழுந்து...

"அப்பா! நான் வயலுக்குப் போயிட்டு வர்றேன்... நீங்க அப்புறம் வாங்க!" என்று சொல்லி விரைந்தான். என்ன செய்தான்! எங்கு இருந்தான்! யாரிடமும் விளக்கம் சொல்லவில்லை.

அங்கே சென்று முதலில் வரண்ட நிலத்திற்கு எல்லாம் தண்ணீர் பாய்ச்ச ஆரம்பித்தான்... நேரம் சென்றதே தெரியவில்லை...

ஆங்காங்கே தண்ணீர் பாய்ச்சும் கருவிகள் பல நாட்களாக உபயோகத்தில் இல்லாமல் சரியாக வேலை செய்யவில்லை. தென்னை மரங்களும் தேக்கு மரங்களும் மட்டும் நன்றாக செழித்து இருந்தது.

தேக்கு மரங்களுக்கு அது பத்தாவது வருடம் கூட சில மரங்களை வெட்டி எடுத்து சீர் படுத்த வேண்டியிருந்தது. அதையும் பார்வையிட்டான்.

இருள் கவிழ ஆரம்பித்தது. அப்போது தான் நேரத்தைப் பார்த்தான்! கிட்ட தட்ட மூன்று மணிநேரம் ஆகியிருந்தது. பேய் மாதிரி வேலை செய்திருந்தான், ஆனால் மூன்றில் ஒரு பாகத்தைக் கூட முடித்து இருக்கவில்லை.

அப்பாவை வரச் சொன்னோமே என்று பார்க்க.. அவர் நிலத்தில் இறங்கவில்லை... ஒரு மேட்டின் மீது அமர்ந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவனும் சென்று அவரின் அருகில் அமர்ந்தான்.. அவனைத் திரும்பி பார்த்தவர்... "வேண்டாம்னு விட்டுட்டுப் போனியோ? இல்லை வெறுத்து விட்டுட்டுப் போனியோ? ஒரு தகவல் கொடுத்திருக்கலாம் தானே, நான் நல்லா இருக்கேன்னு" என்றார்.

இதற்கு அவனிடம் பதிலில்லை.. அதனால், "சாரிப்பா" என்றான்.

"எப்படி திடீர்ன்னு வந்த?" என்றார் கூடவே..

"என்ன சொல்லுவான்? என் மனைவி என்னை தேடுகின்றாள் என்று தெரிந்தது வந்தேன் என்றா.. அதற்காக உங்களைப் பார்க்க வந்தேன் என்று பொய்யுரைக்கவும் மனமில்லை..."

ஒரு தவறிர்காக சென்று, அதைவிட இன்னும் அதிக தவறுகள் நடக்கக் காரணமாய் இருந்து விட்டான். அமைதியாக அமர்ந்திருந்தான்.. "இருப்பியா? போயிடுவியா?" என்று அவர் கேட்கவும் தான்,

ஆமாம்! இன்னும் அவன் அதைப் பற்றி யோசிக்கவேயில்லை! அவன் வேலைகள்... நிலத்தைப் பார்த்ததும், வேறு எதுவும் அவனின் ஞாபகத்தில் இல்லை, ஏன் ஜெயஸ்ரீயைக் கூட மறந்து விட்டான்..

என்ன செய்வது இனி என்று தெரியவில்லை, "தெரியலைப்பா" என்றான் மனதை மறையாமல்..

அப்படியே அப்பாவும் மகனும் அமர்ந்து இருந்தனர். சிறிது நேரத்தில் சிபியும் அருள் மொழியும் தேடிவந்தனர். இருவரும் அமர்ந்திருந்த கோலத்தைப் பார்த்து இருவருக்கும் பேச வார்த்தையே வரவில்லை.

அவர்களும் சிபியின் இருபுறமும் அமர்ந்து விட்டனர். ஒருவன் தோளைப் பற்ற ஒரு கைகளைப் பிடித்தான்.

யாருமே பேசவில்லை... நொடிகள் நிமிடங்களாகி நகர ஆரம்பித்தது. அப்போது பார்த்து சிபியின் செல் அடித்தது... யார் என்று பாராமல் அனிச்சை செயலாய் எடுத்தான்...

எடுத்து "ஹலோ" என்க.. "நான் தான்!" என்று ஜெயஸ்ரீயின் குரல் திக்கி ஒலிக்க.. ஜெயஸ்ரீயின் போனை எதிர்பார்க்கவில்லை! "நானே கூப்பிடறேன்" என்று சொல்லி உடனே வைத்து விட்டான்.

தந்தையிடம் அவனைப் பற்றிப் பேசவா என்று கேட்க ஆர்வமாக அழைத்தவள்... இப்படி அவன் போனை வைப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. முகம் சுருங்க அமர்ந்து விட்டாள்.

அவனை பார்ப்பதற்கு முன்னும், பார்த்த பிறகும் எப்போதும் அவனைப் பற்றி நினைத்திருக்க...

அன்று காலை அவளை விட்டு போனபிறகு ஒரு நொடி கூட சிபி அவளை நினைக்கவில்லை என்பது தான் உண்மை. நினைக்கக் கூடாது என்பது இல்லை ஆனால் நினைவில் இல்லை.

அதைத் தாங்கும் சக்தி அவளுக்கு இருக்கிறதா?

## அத்தியாயம் இருபத்தி நான்கு :

அன்று இரவு வரையிலும் அந்த வயல் வரப்பில் இருந்தான்.. “ஏன்பா இப்படி விட்டீங்க” என்று அவரிடம் சண்டையிட்டான்... இப்படிப் பலப் பல... பிறகு அது என்ன பருவகாலம் என்பதைப் பார்த்து, அதில் என்ன பயிரிடலாம் என்று விவாதித்தான்... பின்பு தேக்கு மரங்களைப் பார்வையிட்டான், அதை சீர் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தான்.

அதற்கும் என்ன செய்வது என்று முடிவு செய்து, அப்பாவிடம் இன்னம் இரண்டொரு நாளில் அதை ஆரம்பிக்கலாம் என்று சொல்லி வைத்தான்.

அப்பா, அருள் மொழி, மாமல்ல வர்மன் என்று யாரும் அவனின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசவில்லை, என்ன சொன்னாலும் தலையாட்டினர். முன்பும் அப்படிதான்.. இப்போது இன்னும் அதிகம்.

திரும்ப வீடு வந்தார்கள்.. மணிமேகலை எங்கே என்பதுப் போலத் தேட.... வீட்டில் ஹாலில் விளையாடிக் கொண்டிருந்தவள், இவனைப் பார்த்ததும் ஓடி அன்னையின் பின் மறைந்தாள்.

வளர்ந்துவிட்டாள் என்று குழந்தையைப் பற்றி நினைத்துக் கொண்டே அண்ணியைப் பார்க்க.. இதென்ன என்று தான் தோன்றியது... அப்படி வயதானது போல ஒரு தோற்றம்... உடையா, தோற்றத்தில் அக்கறை இல்லாத தன்மையா, தெரியவில்லை. வீட்டில் இருந்தாலும் எப்போதும் பளிச்சென்று நேர்த்தியாய் உடையணிந்து, தலைசற்றும் கலையாமல் இருக்கும் பெண். இப்போது பார்ப்பதற்கே பரிதாபமாய்...

இவனைப் பார்த்து சிரிப்பதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டே பார்த்தாள். “ஐயோ! என்ன அண்ணி இது! இப்படி இருக்கீங்க!” என்று வார்த்தைகள் அவனையறியாமல் வந்தது.

தன்னிடம் தான் பேசினானா என்று விழியகற்றாமல் பார்த்தாள். “என்ன அண்ணி என்கிட்டே பேசமாட்டீங்களா?” என்றான்.

“உனக்கு என் மேல கோபம் இல்லையா?” என்று கேட்கும் போதே

கண்கள் கலங்கியது.

“உங்க மேல எதுக்கண்ணி கோபம்?”

“என்னால தான் நீ வீட்டை விட்டு போயிட்டன்னு எல்லோரும் திட்டுறாங்க...”

“ச்சே! ச்சே! என்ன அண்ணி நீங்க? யாரு சொன்னா... மேகி பாப்பா இங்க வாங்க” என்று அம்மாவின் புடவையை பிடித்து நின்ற மணிமேகலையை தூக்கினான்... அது சற்று மிரண்டு பார்க்கவும்... “சித்தப்பாடா! மறந்துட்டியா, என்னை!” என்று கேட்க... குழந்தை என்ன சொல்ல என்று தெரியாமல் விழித்தது.

வனிதா கண்கள் கலங்கியபடி நிற்கவும்.. “யாரு சொன்னா உங்களை அப்படி” என்று மீண்டும் சிபி கேட்க...

“எல்லோரும் அப்படித் தான் சொல்றாங்க” என்று தேம்ப...

“ஐயோ! அண்ணி அழாதீங்க!” என்றான்.

ஆனாலும் வனிதா தேம்பித் தேம்பி முகத்தை மூடிக் கொண்டு அழ... அம்மா அழுவதைப் பார்த்த குழந்தையும் அழ.. இந்த அருள் மொழி எங்கே என்பது போல பார்க்க.. அவன் எங்கோ பார்த்துக் கொண்டு நின்றான்.

“டேய்! அருள் என்னடா பண்ற? அண்ணி அழறாங்க! சமாதானப்படுத்த மாட்டியா... என்னவோ எல்லாமே மொத்தமா தப்பா போச்சு! அதுக்கு யார் என்ன செய்ய முடியும்..” என்று எப்போதும் போல அதட்ட.. அப்போதும் அசையாமல் தான் நின்றான்.

சிபிக்கு கண்மண் தெரியாத கோபம் பொங்கியது, என்ன எல்லோரும் இப்படி இருக்கிறார்கள் என்பது போல...

யாரும் யாருக்கும் பரிந்து கொண்டு வரவில்லை... யாரும் யாருடனும் பேசவுமில்லை. ஆளுக்கு ஒரு பக்கம் தான் நின்றனர். என்ன பேசுவதென்று சிபிக்கும் தெரியவில்லை.

“அண்ணி அழாதீங்க! நீங்க காரணமில்லை! யார் சொன்னாலும்

நம்பாதீங்க சரியா... எனக்கு எப்படி சூழ்நிலையைக் கையாள்றதுன்னு தெரியாம இருந்திருக்கலாம்.. இனி பேசி பிரயோஜனமில்லை.. இப்படி அழாதீங்க எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்கு.."

"இவனுங்க ரெண்டு பேரும் எனக்கு எப்படியோ அப்படிதான் நீங்களும்!" என்று அருளையும் வர்மனையும் காட்டியவன்.. "நீங்களும் என்னோட தானே அண்ணி வளர்ந்தீங்க.. நான் வீட்டை விட்டுப் போகணும்னு நீங்க எப்பவும் நினைச்சு இருக்க மாட்டீங்க! விடுங்க அழாதீங்க!" என்று வெகுவாக சமாதனம் செய்தான்.

பின்னர், "அம்மா நேரமாகுது! எனக்கு சாப்பாடு போடுங்க!" என்று சொல்லவும், வீடே மீண்டும் அவனை என்ன போகிறாயா என்பது போல பார்த்தது.

"அங்க எனக்கு வேலை இருக்கும்மா... திடீர்ன்னு விட முடியாது! என்னன்னு சொல்றேன்... இப்போ நான் போகணும்..!"

"காலையில போ!" என்றனர்...

"இல்லைம்மா என்னால காலையில எழுந்து போக முடியாது... என் கால் என்னை வயலுக்கு தான் கொண்டு போகும்..."

"அப்போ நீ இங்க வரமாட்டியா"

"இல்லம்மா கண்டிப்பா வருவேன்! ஆனா உடனே முடியாது! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ வர்றேன்!" என்று கிளம்பவும், நடராஜன் அவனிடம் அவன் மாமனார் அனுப்பிய விவாகரத்து வக்கீல் நோட்டீசை கொடுக்க...

அதை வாங்கிப் பார்த்தவன்... "தூக்கிப் போடுங்கப்பா! நான் டைவர்ஸ் எல்லாம் கொடுக்க மாட்டேன்! என்ன பண்றாங்கன்னு பார்போம்!" என்றான். ஜெயஸ்ரீயின் முகம் கண் முன் வந்தது.

அவன் டைவர்ஸ் கொடுக்க மாட்டேன் என்று சொன்னது ஏதோ ஒரு வகையில் வீட்டினருக்கு வெகு திருப்தி, நம்மால் இவர்கள் பிரிந்து விடவில்லை என்பது போல..

“நம்ம வேணாப் போய் கூப்பிடலாம்!” என்றார் நடராஜன்.

அவன் சென்று அழைத்ததை சொல்லவில்லை... “பார்த்துக்கலாம் பா..!” என்று கிளம்பினான்.

படி இறங்கும் போதே ஜெயஸ்ரீயின் ஞாபகம் தான்... வர்மன் வண்டியை எடுத்து நிற்கவும், அவனை பஸ் ஏற்றிவிட... “நீ போடா அருள் வரட்டும்!” என்றான்.

வர்மனின் முகம் சுருங்கி விட... “எனக்கு அவன் கூட பேசணும்டா! வேற ஒன்னுமில்லை!” என்று அவனை சாமாதானம் செய்து கிளம்பியவன்...

அருள் பின் உட்கார்ந்து வண்டி சிறிது நகர்ந்ததுமே... அவனை திட்ட ஆரம்பித்தவன் தான், பஸ் ஸ்டாப் வரும் வரை நிறுத்தவில்லை. “ஏண்டா அண்ணி அழறாங்க! நீ சமாதானம் செய்யவேயில்லை.. என்ன பழக்கம் டா இது! அடுத்தவங்க முன்னாடி நீ இப்படித்தான் செய்வியா! அப்போ நீ தான் அவங்களைத் திட்டிட்டே இருக்கியா...”

“அவங்க பொறந்ததுல இருந்து உனக்கு அவங்களை தெரியும்... பட படன்னு யோசிக்காம பேசுவாங்க! அவ்வளவு தான்! ஆனா கெட்ட மனசு இல்லைடா.. நம்மளை விட்டா அவங்களுக்கு யாரும் கிடையாது.. என்னதான் நம்ம வீட்ல குறையில்லாம வளர்ந்தாலும் அப்பா இல்லாம வளர்ந்தவங்க மனசு கஷ்டப்பட விடாத...”

“தப்பு பண்ணாதவங்க யாரு... அவங்க தப்பே செஞ்சிருந்தாலும் கூட நிற்கணும்டா. என்னடா இப்படி பண்ணி வெச்சிருக்குற அவங்களை.. என்னை விட அவங்க தான் உனக்கு முக்கியம்! தயவு செஞ்சு அவங்களை நல்லா பார்த்துக்கோ!” என்று அவனின் காது தீயும் அளவிற்குத் திட்டி இறங்கினான்.

“அடுத்த முறை நான் அவங்களைப் பார்க்கும் போது அவங்க முகத்துல சந்தோசம் தான் தெரியணும்...”

“அடுத்த முறைன்னா?” என்று அருள்மொழி கேட்க...

“ம்ம்ம்ம்! நாளைக்கு டா!” என்று அவனை கடித்து விட்டு கிளம்பினான்.

“ஒரு நாள்ல எப்படி முடியும்...?”

“குடும்பம் நடத்தி ஒரு குழந்தைக் கூட பெத்திருக்க... இப்படி முழிக்கற.. என்னை மாதிரி கட்டிக்கிட்டவளோட மனசு புரியாம சுத்த வேஸ்ட்ன்னு நீயும் ப்ரூவ் பண்ணாத போடா” என்றான் சிரிப்போடு.

திட்டுகிறான்! சிரிக்கிறான்! அவன் என்ன சொல்கிறான் என்று புரியாமல் அருள் மொழி, “என்ன சொல்ற?” என்று புரியாத பாவனையில் கேட்க...

“என்னை நானே திட்டிக்கறேன்! இது உனக்கு புரியாது! போடா!” என்றான் லகுவாகவே.

“என்னவோ நீ பேசறதே புரியலை!” என்று பாவமாக அருள் மொழி சொல்ல...

“புரிஞ்சிக்கவே வேண்டாம்! அண்ணியைப் பாரு போ.. நீங்கள்லாம் சந்தோஷமா இருந்தா தான் நான் என் வாழ்க்கையை பார்க்க முடியும்..”

“ஜெயஸ்ரீ வருமா உன்னோட” என்றான் அருள்மொழி.

“வரலைன்னா யாரு விடறா? போ! நீ வீட்டைப் பாரு... இப்படி இருக்காதீங்க.. என்னை, என்னைப் பார்த்துக்க விடு!” என்று அண்ணன் மேல் பாரத்தைப் போட்டுக் கிளம்பினான்.

பஸ் ஏறியவுடன் செய்த முதல் வேலை ஜெயஸ்ரீயிற்கு போன் அடித்தது தான்... ஆனால் அவள் எடுக்கவே இல்லை...

அடித்துக் கொண்டே இருந்தான்... அவள் எடுக்கவே இல்லை... சற்று பயமானது! ஏன் எடுக்கவில்லை என்பது போல... வருத்தத்தில் இருக்கிறாளா இல்லை கோபமாக இருக்கிறாளா! எதுவாகினும் மீண்டும் அவளைக் கஷ்டப்படுத்திப் போக இஷ்டமேயில்லை! பஸ் கால் வாசி தூரமே கடந்து இருந்தது... அடுத்த வந்த ஊரின் நிறுத்தத்தில் இறங்கினான்.

மணி அப்போதே இரவு ஒன்பது... திரும்ப ஜெயஸ்ரீயின் ஊருக்கு பஸ் ஏறினான். அதுதான் சொல்லப் போனால் கடைசி பஸ்...

அவளின் ஊரில் இறங்கிய போது மணி பத்து... நடந்து போகும் பாதையில் யாருமில்லை... அவள் வீடு தென்படும் தூரம் வந்ததும் திரும்பவும் போன் அடித்தான்.

ஆள் அரவமற்ற நிசப்தம்... எட்டு மணிக்கே அந்தப் பகுதியில் எல்லாம் அடங்கி விடும்... அங்கொன்றும் இங்கொன்றுமாய் தூரமாக இருக்கும் வீடுகள்... எல்லோரும் வீட்டின் உள்... அதுவும் பலர் தூக்கத்தில்.

இந்த முறை போன் அடித்ததும் எடுத்தாள்... “ஸ்ரீ இருக்கியா?” என்று பதட்டமாக சிபியின் குரல் கேட்கவும்...

“ம்ம்ம்!!!” என்றாள்...

“ஏன் இவ்வளவு நேரம் போன் எடுக்கலை?”

பதிலில்லை... எடுப்பதா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன் என்றா சொல்லுவாள். ஆர்வமாக, “நான் அப்பாவிடம் பேசவா?” என்று கேட்க அழைத்தாள், “நான் அப்புறம் கூப்பிடறேன்!” என்று சொன்னதும், என்னவோ ஒரு ஏமாற்றம்! எதற்கென்று தெரியாமல் ஒரு அழுகை!... அழுது அழுது அவளின் முகமே வீங்கியிருந்தது.

அப்பாவிடம் தலைவலி, சளி பிடித்து இருக்கிறது என்று பொய் சொல்லி, அவரை நம்ப வைப்பதற்காக விக்சை வேறு அள்ளி அப்பி இருந்தாள்.. அது வேறு எரிந்தது.

“ப்ச்! ஸ்ரீ இப்போ நான் உன் வீட்டுக் கிட்ட தான் இருக்கேன்... நீ போன் எடுக்கலைன்னதும் கொஞ்சம் டென்ஷன் ஆகிடுச்சு உன்னைப் பார்க்கணும் போல! அதான் வந்துட்டேன்...!” என்றான்.

என்ன வீட்டின் அருகிலா..? தன்னைத் தேடி வந்திருக்கிறான் என்பது தெரிந்ததும், அவளையும் மீறி முகம் பளிச்சென்று மலர்ந்தது... அவனை உள்ளே வாருங்கள் என்று அழைக்க மனம் பரபரத்தது.

ஆனால் அழைக்க முடியாதே.. அப்பா எப்படி எடுத்துக் கொள்வாரோ தெரியாதே... அப்பாவிடம் கேட்டு விடுவோமா? பரபரத்தவள்... அப்பா என்ன செய்கிறார் என்பது போல ரூமை விட்டு வெளியே வந்து

மெதுவாக எட்டிப் பார்த்தாள்... அவர் நல்ல உறக்கத்தில் இருக்கவும்... எழுப்ப மனமில்லை. எப்போதும் அவள் நடக்கும் சத்ததிற்கே விழிப்பவர் அன்று எழவில்லை.

கதவை திறந்து வெளியே போவோமா என்று மனம் பரபரத்தது.

காலில் இருந்த ஷூ சத்தம் செய்யக் கூடும் என்று அதைக் கழற்றினாள். பிறகு ஸ்டிக் சத்தம் செய்யும் என்று அதையும் ஓரமாக வைத்தாள். பிறகு மெதுவாக சுவரைப் பிடித்து கதவை திறந்து அவன் எங்கே என்பது போல் பார்த்தாள்.

ம்கூம், இருட்டில் அவளின் கண்களுக்கு எதுவும் தெரியவில்லை. ஆனால் இவள் கதவை திறந்தது மங்கிய ஒளியிலும் சிபிக்குத் தெரிய... விரைவாக அவளின் புறம் நடக்கத் துவங்கினான்.

அதுவரை நாளா புறமும் ஜெயஸ்ரீ அவனைத் தேடுவது நன்கு தெரிந்தது. பக்கம் செல்ல செல்ல அவளின் முகத்தில் தெரிந்த ஆர்வம், ஒரு தவிப்பு இன்னும் விரைவாக அவனை எட்டு எடுத்து வைக்கச் சொன்னது.

அவளின் பார்வை வட்டத்திற்குள் சிபி வரவும்... முகத்தில் ஒரு சந்தோஷ ஜொலிப்பு..

வீட்டின் அருகில் சிபி வந்துவிட.. "இருங்க! நான் வர்றேன்!" என்பது போல சைகை காட்டியவள்.. மெதுவாக சத்தம் செய்யாமல் கதவை மூடி முன் புறம் தாழ் போட்டு படியிறங்க முற்பட்டாள்.. ஆனால் ஷூ இல்லாதது, ஸ்டிக் இல்லாதது, பிடிமானத்திற்கு சற்று தடுமாற... வேகமாக இரண்டே எட்டில் அவளை அடைந்தவன்... அவளின் கை பற்றி இறக்கி விட...

மெதுவாக அவனின் கை பிடித்து இறங்கினாள். இறங்கியவள் அவனின் முகத்தை ஆர்வமாய் பார்க்க...சிபியும் அவளைத் தான் பார்த்தான்! கண்கள் அழுது அழுது சுருங்கி இருந்தது. விக்ஸ் வேறு தடவி இருக்க மூக்கின் மேல் அது வேறு பளபளத்து.

"எதுக்கு இவ்வளவு அப்பி இருக்க! எரியாது?" என்று கேட்க...

"எரியுது" என்பது போல அவள் தலையாட்ட,

“அப்போ துடை!” என்றவன்..அவனிடம் துணியோ, கர்சீப் போல எதுவும் இல்லாததால்.. அவள் இடுப்பில் சொருகியிருந்த புடவையை எடுத்து அதைத் துடைக்க முற்பட்டான். அது அப்படியே இழுத்தாலே வரும், ஆனால் வேண்டுமென்றே அவளின் இடுப்பில் விரல் விட்டு அதை எடுத்து விட.. இதை எதிர்ப்பார்க்காத ஜெயஸ்ரீ கூசி சிலிர்த்தாள்.

அதை உணராதவன் போல.. அவள் முகத்தில் இருந்த விக்சை துடைத்து விட, அது இன்னும் எரிச்சல் கொடுத்தது. “ஷ்!” என்று அவள் சத்தம் எழுப்ப, துடைக்காமல் ஒற்றி எடுத்தான். அவனின் கைகள் இந்த வேலையைச் செய்ய, ஜெயஸ்ரீயின் கைகளை விட்டு இருக்க.. இப்போது ஜெயஸ்ரீ அவனின் புஜங்களை பிடித்து நின்றிருந்தாள்.

“எதுக்கு இவ்வளவு அழுதிருக்க..” அவன் கேட்டது தான் போதும்... இந்த முறை தயங்கி நிற்காமல்,பதில் பேச ஆரம்பித்தாள்...

“நீங்க போன் உடனே வெச்சிட்டீங்களா அழுகை வந்துடுச்சு... எனக்கு ராசியே இல்லை போல, எதுவும் சரியா நடக்கறது இல்லைன்னு” என்று திக்கினாலும் பேசினாள்.

“என்ன உனக்கு ராசியில்லையா?” என்று அதட்டினான் என்ன பேச்சு இது என்பது போல.

“ஆமாம்!” என்பது போல தலையாட்டினாள்... “சின்ன வயசுல இருந்தே எப்பவும் எல்லோருக்கும் ஹெல்ப் பண்ணுவேன்! ஆனா அதுல எப்பவும் பிரச்னையில மாட்டிக்குவேன்!”

“பின்ன அத்தனை குழந்தைகளைக் காப்பாத்தினது எவ்வளவு பெரிய விஷயமா எல்லோரும் பேசுவாங்க, பாராட்டுவாங்க! ஆனா என் விஷயம் யாருக்கும் தெரியாது... அதையும் விட எனக்கு வாழ்நாள் முழுசும் வேதனை, என்னோட இந்த பாதிப்பு”

“அந்தக் கண்ணனை சும்மாக் கூட நான் திரும்பிப் பார்க்க மாட்டேன்! அவனோட என் கல்யாணம்னு சொல்லி, ஒரு மூணு வருஷ டென்ஷன்... பிடிச்சு தான் உங்களை கல்யாணம் பண்ணினேன், ஆனா ரெண்டு வருஷம் காணாமப் போயிட்டீங்க...”

“காலையில தான் அவ்வளவு நல்லா பேசினீங்க... திரும்ப நான்

கூப்பிட்டா உடனே வைக்கறீங்க” என்று திக்கித் திணறி சொல்லும் போதே கண்களில் நீர் முட்டியது.

அவள் பேசி முடிக்கும் வரை பொறுமையாகக் கேட்டு நின்றான். “ப்ச்! என்ன இது? இனிமே போகவே மாட்டேன்! நீ துரத்தினா கூட... போதுமா! இப்படி அழாத!” என்று சமாதானம் செய்தான்.

மெதுவாக, “என்னோட இப்படியே வந்துடறியா?” என்று அவளின் முகம் பார்த்துக் கேட்க.. “மாட்டேன்!” என்பதுப் போல தலையாட்டவும்.

புடவையை விட்டவன், அவள் எதிர்பார்க்கும் முன் அப்படியே கையில் தூக்கவும்.. என்ன செய்கிறான் என்பது போல இறங்க முற்பட்டவள், யாராவது பார்க்கிறார்களா என்பதுப் போல பதட்டமாக பார்வையை சுழற்ற..

“ஷ்! அமைதியாயிரு! இல்லை மாமான்னு கத்தி உங்கப்பாவைக் கூப்பிடுவேன்” என்று சொல்ல, கப் சிப் பென்று அடங்கினாள். பிறகு, அப்பாவைக் கூப்பிட வேண்டாம் என்பது போல தலையசைக்க, “அப்போ அமைதியாயிரு!” என்று சொல்லி, அவளை அப்படியேத் தூக்கி கொண்டு நடந்தான்.

சுற்றி யாராவது பார்க்கிறார்களா என்று ஜெயஸ்ரீ மீண்டும் பார்வையை ஓட்டவும், “அந்தப் பக்கம் ஒரு பேய், இந்தப் பக்கம் ஒரு பிசாசு பார்க்குது!” என்று சீரியசாக சொல்ல..

உண்மையில் இருட்டு என்றால் ஜெயஸ்ரீயிற்கு சற்று பயம், அவன் நெஞ்சினில் முகத்தைப் புதைத்துக் கொள்ள...

அவன் சிறிது தூரம் நடந்து, அவர்களின் தோப்பின் ஆரம்பத்தில் இருந்த ஒரு திட்டின் புறம் வந்ததும் அவளை இறக்கி விட்டவன்.. கைபிடித்து அமர வைத்தான். பின்பு, “அம்மா!” என்று முதுகை நெட்டி முறிக்க...

“என்னைத் தூக்க முடியலையா?” என்பது போல ஜெயஸ்ரீ கிண்டலாக பார்க்க..

“ம்! இது உன்னால இல்லை... நாலு மணிநேரம் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி இருக்கேன்.. அதான்!” என்று சொல்லியபடி, பிறகு அவனும்

அருகில் அமர்ந்து கொண்டான்.

“ஏன்?” என்ற பார்வையை ஜெயஸ்ரீ செலுத்த... வீட்டில் நடந்த அத்தனை கதையையும் சொன்னான். “அப்பா! நிலத்துல கால் வைக்கவே இல்லை! மூணு பசங்களைப் பெத்துட்டு ஓய்வெடுக்க வேண்டிய வயசுல வேலைக்கு போறார், மனசுக்கு கஷ்டமா இருந்தது.. அது மட்டுமில்லாம எங்க நிலமே வறண்டு இருந்தது. தென்னந் தோப்பும் தேக்குத் தோப்பும் மட்டும் தான் இருந்தது. வீடும் வீடாவே இல்லை”.

பேசி முடித்தவனிடம், “இவ்வளவு கவலைப்படறவர் ஏன் வீட்டை விட்டுப் போனீங்க...” என்று திக்கி திக்கி கேட்க..

“அந்த சமையத்துல இங்க இருந்திருந்தேன், என்னால யாரோடயும் இப்படி பேச முடிஞ்சிருக்காது! என்னோட இந்தப் பாசம், இந்தத் தெளிவு இருந்திருக்காது! உறவே முடிஞ்சிருக்கும்... இன்னைக்கு என்னால எல்லோரையும் எதிர் கொள்ள முடியுது, அன்னைக்கு முடிஞ்சிருக்காது!”

“இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்” என்பது போல பார்க்கவும்...

“என்ன செய்யட்டும்?” என்றான் அவளைப் பார்த்து.

“நீங்க என்ன செஞ்சாலும் சரி...” என்றாள்.

“ஏதாவது செய்யலாம்!” என்று சொல்லிக் கொண்டே அவளைப் பார்த்தான்.. புடவையைப் போர்த்தி அமர்ந்து இருந்தாள் ஜெயஸ்ரீ... வெட்ட வெளி குளிரெடுக்க ஆரம்பித்தது... காற்றும் சிலு சிலுவென வீச... இன்னும் நெருங்கி அவளின் பக்கத்தில் அமர்ந்தான்.

“குளிருது” என்று அவளைப் பார்த்து சொல்லவும் செய்தான். போர்த்திக்கொள்ள என்ன இங்கே கிடைக்கும் என்பது போல ஜெயஸ்ரீ பார்க்க..

“நீ போர்த்தியிருக்கறதை, எனக்கும் சேர்த்து போர்த்தி விடு!” என்று சொல்லவும்... “ஆங்! என்ன இது.. வெட்ட வெளியில் அமர்ந்து கொண்டு என்ன பேச்சு இது!” என்பது போல முறைத்துப் பார்த்தாள் ஜெயஸ்ரீ..

“ப்ச்! என்ன லுக்கு!” என்று சொல்லிக் கொண்டே அவளின் தோள்

சுற்றியிருந்த புடவையை விலக்கி, அவனின் தோள் சுற்றியும் போட்டுக் கொண்டு நெருங்கி அமர...

“யாரும் பார்க்கிறார்களோ?” என்று பதட்டமாக சுத்தி முத்திப் பார்க்க... அப்போதுதான் இருந்த இடம் தெரிந்து ஆசுவாசமானாள். அது அவர்களின் தோப்பின் ஆரம்பம், வீட்டைத் தாண்டி வரவேண்டும், யாரும் வரமாட்டர்.

“பகல்லயே உங்க வீட்டை யாரும் பார்க்க மாட்டாங்க! இப்போ யாரு பார்ப்பா!” என்று நெருங்கி அமர்ந்திருந்தவன் கூற..

“யாரும் பார்த்தாலும் பார்க்கலைன்னாலும் வெளில இப்படி உட்காருறது தப்பு!” என்று விலகி அமர முற்பட்டாள்..

“ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் பொண்டாட்டி பக்கத்துல இப்படி நெருக்கமா உட்காருறேன்! அது உனக்கு பொறுக்கலையா..!” என்று அவளைப் பார்த்தபடி அதட்டலாக கேட்க..

ஜெயஸ்ரீ பதில் பேசாமல் அவனை பார்த்தாள்... அந்தப் பார்வையே சொன்னது, “நான் எப்போ உட்கார வேண்டாம்னு சொன்னேன்!” என்பது போல..

வாயை சிரிப்பது போல இழுத்துப் பிடித்தவன்.. “மச்சான்! கொஞ்சம் லேட் பிக் அப்..” என்று சொல்ல..

“அய்யே! நீங்க அதை சொல்லவே வேண்டாம்!” என்று ஜெயஸ்ரீ பதில் பார்வை பார்த்தாள். ஆனாலும் விலகி அமர்ந்து இருந்தாள்... அவன் சுற்றியிருந்த புடவையும் எடுத்து இடுப்பில் சொருகியிருந்தாள்.

“செம ஃபாஸ்ட் போ!” என்று சிபி கடுப்பாக சொல்ல...

“வீட்ல ரெண்டு பேருமே ஸ்லோவா இருக்கக் கூடாது!” என்று வாய் திறந்தே சொல்லிவிட...

“அப்போ என்னை விட நீ ஃபாஸ்ட்ங்கற!” என்று சிபி சிரிப்போடு சொல்ல...

ஜெயஸ்ரீ அவனை முறைக்க முற்படவும், அவளின் தலையில் செல்லமாக

முட்டினான். ஜெயஸ்ரீயிற்கு முகம் கொள்ளா சிரிப்பு...

அந்த சிரிப்பைப் பார்த்தவன்... “நிஜமா! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? என்னை தேடுனியா..?”

“ஐயோ! முதல்ல இருந்தா...! என்னால முடியாது!” என்று திக்கித் திணறி சொல்லி ஒரே காலில் ஊணி பாதி எழுந்தவளை, இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டான்.

அவளின் பாரம் அழுத்த, அந்த மேட்டிலேயே சாய்ந்தான்.. கூடவே அவளையும் விடாமல் மேலே சாய்த்தான்.

வெகு அருகில் இருந்த அவளின் முகம் பார்த்து, “ரொம்ப ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் பார்பேன் ஃலைப்ல! எல்லாம் பெர்பெக்ட்டா இருக்கணும்னு! அதுதான் எதுவுமே சரிவரலை போல.. இனிமே பிரேக் தி ரூல்ஸ் தான்...” எனவும்.. அப்போது ஜெயஸ்ரீ பார்த்த பார்வை சத்தியமாய் புரியவில்லை.

“நீயே சொல்லிடு...” என்றான்.

“ரெண்டு வருஷம் கழிச்சுக் கட்டிப் பிடிச்சுட்டு, பிரேக் தி ரூல்ஸ்ன்னு டைலாக்! அதுவும் உங்க பொண்டாட்டிகிட்ட.. நான் பாவம் தான் போல!” என்று ஜெயஸ்ரீ சொல்ல..

“ஆங்!” என்று வாய் பிளந்து பார்த்தான் சிபி...

அந்த பாவனையைப் பார்த்து ஜெயஸ்ரீ கலகல வென்று சிரிக்க... அது இரவின் நிசப்தத்தில் நன்கு சப்தம் செய்ய...

“நல்லா பேச நீ!” என்றான்.

“எனக்கு பேச்சே வரலை! இதுல நல்லா பேசறனா!” என்று திக்கித் திக்கி சொல்லி மீண்டும் சிரிக்க..

“சத்தமா சிரிக்காத! பேய் தான் சிரிக்குதுன்னு எல்லோரும் பயந்துக்க போறாங்க!” என்று சொல்லவும் இன்னும் சிரித்தாள்...

“ஆனா பேய் இவ்வளவு அழகா இருக்காது, இவ்வளவு அழகா

சிரிக்கிறது” என்று அவளின் கலகல சிரிப்பைப் பார்த்துக் கூடவே சொன்னான்.

பொதுவாகவே சிறு பிள்ளையில் நிறைய சிரிப்பால் ஜெயஸ்ரீ… சில வருடங்களாக மறைந்திருந்த அந்தச் சிரிப்பு, இப்போது கரை புரண்டு ஓட.. அவள் அதை நிறுத்தும் வழி காணாததால்…

அதை நிறுத்தும் பொருட்டு சிபி செய்த வேலை..

இரு கைகளும் அவளை இருக்கிப் பிடித்து இருந்ததால்.. கைகளால் அவளின் வாயை மூட முடியாமல், அவசரமாக அவளின் இதழ்களைச் சிறை செய்தான்.

முதல் மயக்கம் இருவருக்குமே… தயக்கங்கள் பின்னோக்கி செல்ல முயலும் போதே சுதாரித்து விலகினர்.

ஜெயஸ்ரீயின் முகத்தில் இருந்த வெட்கம்.. சிபி தன்னிடம் வந்து விட்டான் என்ற நிம்மதி கொடுத்த பூரிப்பு, பார்க்க பார்க்க அழகியாக ஜொலித்தாள்.

இந்தச் சிறையில் இருந்து மீள நினைப்பவன் முட்டாள் என்பது சிபிக்குப் புரிய… தானாக காரணங்கள் கற்பித்து கொண்டு, விட்டுச் சென்றதற்கு, “சாரி!” என்றான் மனமார..

## அத்தியாயம் இருபத்தி ஐந்து :

சிபி, “சாரி!” என்றதும்… “அதைப் பத்தி பேசவேண்டாம்! விட்டுடுவோம்!” என்றவள்..

“நடந்து முடிஞ்சதை, நான் எப்பவுமே பிடிச்சு வைக்கறது இல்லை..” என்றாள்.

இப்போது திக்குவது தெரியாமல், நிறுத்தி நிதானமாக பேசுவது போல வார்த்தைகள் பேசினாள். அதாவது வார்த்தைகள் வராமல் திக்குவது அவளுக்கு தெரியும். ஆனால் எதிரில் இருப்பவர் ஏதோ மொழிதெரியாமல் புதிதாக பேசுவது போலவோ அல்ல நிறுத்தி நிதானமாக ஸ்டைலாக பேசுவது போலவோ தோன்றும்.

சிபி ஆச்சர்யமாகப் பார்க்க... “இந்த ரெண்டு வருஷமா ப்ராக்டிஸ் பண்ணினேன் ஒரு ஸ்பீச் தெரபிஸ்ட் கிட்ட... ரொம்ப ஸ்ட்ரெஸ்ல, அவசரத்துல, எமோஷனல்லா இருக்கும் போது வர்றதில்லை. ஆனா மனசு அமைதியா இருக்கும் போது வருது”.

“இதுக்கு தான் சொன்னேன்! நீ நல்லா பேசற! உன்னோட பாசிடிவ் ஆட்டிடியூட்... அது ரொம்ப அழகு! நீ சிரிக்கும் போது இன்னும் அழகு...!” என்று அவன் சொல்ல...

“பொண்ணுங்க சிரிக்கறதை விட, அவங்க சிரிப்பு வாடாம பார்த்துக்குற ஆண்கள் இன்னும் அழகு” என்று ஜெயஸ்ரீ சொல்லவும், தன்னை சாடுகிறாளோ என்று ஸ்தம்பித்து பார்க்க...

“ஐயோ! நோ ஹார்ட் பீலிங்க்ஸ்... பேஸ் புக்ல படிச்சேன்! ரொம்ப பிடிச்சது..!” என்றாள் நெருங்கி அமர்ந்து...

அவளைப் பார்த்து சிரித்தவன்... “இந்த மாதிரி எல்லா விஷயத்தையும் ஈசியா எடுத்துக்குற மனப்பக்குவம் இருந்திருந்தா...” என்று இழுத்தவன்.. “ப்ச், பேசிப் பிரயோஜனமில்லை, என்கிட்டே அது கொஞ்சம் கம்மி! அதான் நிறைய பிரச்சனையை இழுத்து விட்டுகிடேன்..”

“பழசை விட்டுடுடுவோம்!” என்றாள் கண்டிப்பான குரலில் நிறுத்தி நிதானமாக திக்குவது தெரியாமல்...

இப்போது அவன் நெருங்கி அமர்ந்து கொண்டான்... “ஆனா, உங்க அப்பா!” என்று தயங்கிப் பேச..

“அவர் கிட்ட நான் பேசிக்கறேன்...” என்றாள் ஸ்திரமாக..

“இல்லை, நான் பேசினா தானே உனக்கு மரியாதை...”

“உங்களுக்குப் பேசத் தெரியலை! வேண்டாம்!”

“எனக்குப் பேசத் தெரியலையா?”

“பின்ன?” என்று சிரித்தாள்... “ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் தெரியவேயில்லை! இதுல பிரேக் த ரூல்ஸா ஹா ஹா” என்று மீண்டும் சிரித்தாள்..

“மனைவிக் கிட்ட இப்படி தான் நடந்துக்கணும்! அது தான் ரூல்ஸ்! அதுவே தெரியலை! என்ன சொல்ல?” என்று மீண்டும் சிரிக்க..

அவளுடைய மகிழ்ச்சி அவனையும் தொற்றியது. பின்பு சிறிது நேரம் எதுவும் பேசாமல் ஒருவரின் அருகாமையில் அடுத்தவர், அந்த க்ஷணத்தை அனுபவித்து அமர்ந்து இருந்தனர். பேச்சற்ற மௌனமான கணங்கள்... பேச முயலவில்லை... அருகில் நெருங்கி அமர்ந்து இருந்தாலும் தொட முயலவில்லை... மனதின் அலைப்புருதல்கள் எல்லாம் அடங்கி ஒரு அமைதி...

சில நிமிடங்கள் கடந்த பின், “என்ன நேரம்?” என்றான்... பன்னிரெண்டு தான் ஆகியது... “எனக்கு நாளைக்கு காலையில அங்க இருக்கணும் ஸ்ரீ, இங்க இருந்து பஸ் எத்தனை மணிக்கு?” என்றான்.

“அஞ்சு மணிக்கு.. அதுவரைக்கும் கிடையாது...”

“ஓஹ்...” என்று அவன் இழுக்க..

“ரொம்ப நேரம் வேலை செஞ்சிருக்கீங்க! படுத்திருங்க கொஞ்ச நேரம்..”

சிபிக்கும் அசதியாக இருந்தது... வயலில் வெகு நேரம் வேலை செய்தது... ஆனால் எங்கே படுப்பது என்பதுப் போல ஜெயஸ்ரீயைப் பார்க்க...

“தோ அங்கே!” என்று காட்டினாள்... அங்கே ஒரு கயிற்றுக் கட்டில் இருந்தது... “அப்பா, மதியம் இங்கே தான் படுப்பார்.. தூங்குங்க!”

“சரி, நீ வீட்டுக்குப் போ! நான் தூங்கி எழுந்து போயிடறேன்!” என்று எழுந்தான் அவளைக் கொண்டு போய் விட....

மனதேயில்லாமல் மீண்டும் எழுந்தாள் ஜெயஸ்ரீ... எழுந்தவளைத் தூக்க முற்படவும், “வேண்டாம்! வலிக்கப் போகுது...!”

“அதெல்லாம் வலிக்காது... அப்படியே வலிச்சாலும் பரவாயில்லை! இந்த வலி எனக்குப் பிடிச்சிருக்கு” என்று தூக்கி வீட்டின் அருகில் கொண்டு சென்று விட்டான்.

அவள் உள்ளே போகும்வரை நின்றிருந்து... திரும்ப வந்து, அந்தக் கட்டிலில் படுத்தவன் தான் உறங்கி விட்டான்.

அதிகாலை ஜெயஸ்ரீ அவனை உலுக்கி எழுப்பவும் தான் எழுந்தான்... மணி நான்கரை... “சீக்கிரம் போகணும்னு சொன்னீங்க?” என்றபடி...

“ம், ஆமாம்!” என்று நேரம் பார்த்தபடி வேகமாக எழுந்தான்... “ஹப்பா, எழுப்பி விட்டுட்ட.. இல்லை.. எழுந்தே இருக்க மாட்டேன், நேரமாகியிருக்கும்”.

“அங்க டீ இருக்கு” என்று வீட்டின் படியைக் காட்டினாள்.. “நீங்க குடிக்க மாட்டீங்க.. ஆனா வேற என்ன செய்யறதுன்னு தெரியலை” என்றாள், அவன் குடிப்பானோ மாட்டானோ என்பது போல...

“எப்பவாவது குடிப்பேன்!” என்று சொன்னவன், “வா!” என்று அவளை மீண்டும் தூக்கி வந்து வேகமாக அதைக் குடித்தான்.. “என்ன இது எப்போ பார்த்தாலும் தூக்குவாங்களா?” என்று அவள் கிண்டல் செய்ய... “நம்ம குழந்தை வர்ற வரைக்கும் நீ தான் முதல்ல...” என்று சிபி சொல்ல..

“வரும் போது பார்க்கலாம்” என்றாள் மீண்டும் கிண்டலாக...

“எப்போ வரவைக்கலாம்?” என்று சிபி கேட்க..

பதில் சொல்லாமல் ஜெயஸ்ரீ பார்த்த பார்வை, “இதெல்லாம் கேட்பாங்களா” என்று கிண்டல் செய்ய...

சிபியும் திரும்பப் பேசாமல் பார்வை தான் பார்த்தான்.. ஆனால் அதில் பதிலுக்கு கிண்டல் இல்லை, அது சொல்லாமல் சொல்லியது.. “இப்போதைக்குக் கேட்கத்தானே முடியும், நான் அந்த மாதிரியான வேலைகளைத் தானே செய்து வைத்திருக்கிறேன்” என்பது போல.

சட்டென்று லகுவான அந்தக் க்ஷணம், கணமாய் மாறியது.

திடீரென்று ஞாபகம் வந்தவனாக, “அச்சோ டைம் ஆகிடுச்சா” என்ற பதட்டத்தோடு, அவசரமாக நேரம் பார்த்தான். “இன்னும் டைம் இருக்கு பஸ்க்கு” என்று அவனை ஆசுவாசப்படுத்தி... “ஏன் இவ்வளவு காலையிலயே போகணும்? என்ன வேலை?” என்று கேட்க...

தானாக, “ரீடிங் எடுக்கணும்” என்று சொல்லிவிட்டவன், “அச்சோ! உளறி விட்டேனா!” என்பது போல பார்க்க..

“என்ன ரீடிங்?” என்றாள் புரியாமல்…

“செல் போன் டவர்ல” என்று அவன் சொல்லவும்…

“டவர்லன்னா…?”

“மேல ஏறி எடுக்கணும்” என்றான்.

“என்ன?” என்று அதிர்ந்தாள், “ஏன்? ஏன் எடுக்கணும்…? எதுக்கு எடுக்கணும்” என்று ஜெயஸ்ரீ கேள்விகளை அடுக்க…

“பேங்க் வேலையோட அந்த வேலையும் செய்யறேன்… அதுக்கு பன்னிரெண்டாயிரம் சம்பளம், காலையில ஒரு தடவை எடுக்கணும், சாயந்தரம் ஒரு தடவை எடுக்கணும், அவ்வளவு தான் வேலை” என்றான்.

“அதான் பேங்க் வேலை இருக்கில்ல, எதுக்கு அந்த வேலை ரிஸ்க் எடுத்து…” என்று சொல்லும் போதே கண்முன் ஊரில் அவள் பார்த்த உயரமான செல்போன் டவர் வந்துப் போக… பயத்தோடு பார்த்தாள்.

“ப்ச், ஒன்னும் பயமில்லை! நான் ஏறிடுவேன்! இப்போ ரெண்டு வருஷமா இங்க இருந்து போன நாள்ல இருந்து அந்த வேலையை செய்யறேன்.. அதுதானே எனக்கு வருமானம் முன்ன…”

“சரி, ஓகே! இப்போ வேற வேலையிருக்கு தானே! விட்டுடுங்க..!”

“சரி!” என்று உடனே ஒத்துக் கொண்டான்… “ஆனா கொஞ்ச நாள் போகட்டும்.. பயப்படாத.. ரொம்ப ஈசியா ஏறுவேன்…”

“என்ன அவசியம்? தேவையில்லை! உடனே விடுங்க!” என்றவளிடம்…

“ப்ச்! ஸ்ரீ… கவனமா இருப்பேன், பயமில்லை… எனக்குப் பணம் வேணும்… அதுல வர்ற பணத்துல தான் மரக் கன்றுகள் வாங்கறேன்… சில பசங்களுக்கு உதவி செய்யறேன்… அவங்க ஆர்வமா என்னோட துணை நிக்கறாங்க… இந்த ரெண்டு வருஷமா யாருமில்லாத என்னோட தனிமையில என்னை உயிர்ப்போட வெச்சது இந்த வேலை தான்…”

“மரக்கன்றுகள் நடறேன்… இதுவரைக்கும் மூணு லட்சம் மரக்கன்றுகள்

நட்டிருக்கேன்.. ஸ்கூல் பசங்க துணையோட... என்னால முடிஞ்சதை என்னோட இயற்கைக்கு நான் செய்யறேன்...”

“முகத்துக்கு நேரா பலர் புகழ்ந்தாலும், பின்னாடி பைத்தியக்காரன் இவனுக்கு வேலையில்லைன்னு நம்ம வேலையும் கெடுக்கறான்னு தான் சொல்லுவாங்க... யாரும் அவ்வளவாக் கூட நிற்க மாட்டாங்க... கண்டிப்பா உதவிகள் கிடைக்கும், ஆனா தொடர்ந்து கிடைக்காது. என்னை இவ்வளவு நாள் தளர விடாம தொடர்ந்து வழி நடத்தி செல்லறது இதுதான்”.

“இல்லைன்னா என் நிலத்தை விட்டு பிரிஞ்சதுக்கு எனக்கு பைத்தியமே பிடிச்சிருக்கும்! நான் என்னோட வேலையை அவ்வளவு நேசிச்சேன்! ஏன் சுவாசிச்சேன் கூட” என்றான் உணர்வுபூர்வமாக...

“என்னோட வாழ்க்கைக் கோட்பாடுகள் பலருக்கு முட்டாள் தனமா தோணும்...”

கூடவே ஒரு பயம், இவ்வளவு பேசுகிறேனே, என்னை நினைத்தாயா என்று ஜெயஸ்ரீ கேட்டுவிட்டால் என்ன செய்வது என்ன சொல்வது என்பது போல..

உண்மையில் அவன் யாரைப் பற்றியும் அதிகம் நினைக்கவில்லை... இந்த வேலைகளில் முழு மூச்சாக இறங்கியிருந்தான்... திரும்பிப் பார்க்கவேயில்லை.. பார்த்தால் அவன் குடும்பத்தை விட்டு மனைவியை விட்டு வந்த செயல் அவனை கோழை என்று சொல்லாமல் சொன்னது... மிகுந்த மனப்போராட்டங்கள் அவனுக்குள், யாரிடமும் காட்டவில்லை... காட்டவும் மாட்டான், அது ஜெயஸ்ரீ ஆகினும் கூட...

இப்போது ஜெயஸ்ரீயைப் பார்த்த பிறகு.. குடும்பத்தைப் பார்த்த பிறகு அவனுடைய நிலத்தைப் பார்த்த பிறகு அதிக போராட்டங்கள் இல்லை.. சந்தோஷமாகவும் கூட இருந்தான்... ஆனாலும் விட்டுப் போனதை யாரும் கேவலமாக பேசுவார்களோ என்ற பயம் மனதிற்குள் ஓடிக் கொண்டே இருந்தது. ஜெயஸ்ரீ கூட நிற்பது வெகுவான ஒரு மன தைரியத்தைக் கொடுத்தது.

ஆனால் அவனின் பயத்திற்கு அவசியமில்லாமல், அவள் என்னைப் பற்றி நினைத்தாயா என்று கேட்கவேயில்லை..

“கிளம்புங்க டைம் ஆச்சு! இன்னும் பத்து நிமிஷம் தான் இருக்கு! நீங்க நடக்கச் சரியா இருக்கும்!” என்றாள்.

பிறகு பேச நேரமில்லை… சிபி விரைந்து விட்டான்.

காலையில் ஜெயஸ்ரீ கிளம்பாமல் அமர்ந்திருக்க, “இன்னைக்குக் கிளாஸ் போகலையா கண்ணு, உடம்பு எப்படி இருக்கு… சரியாத் தூங்கலையா முகம் வாடிக்கிடக்கு” என்றார் வஜ்ரவேல்…

“அதுப்பா யோசிச்சிட்டு இருந்தேன்!” என்றாள் ஆர்வமான குரலில்.

“என்ன கண்ணு அப்படி யோசிச்ச?” என்றார் வஜ்ரவேல் அவளின் பாவனையில் ஈர்க்கப்பட்டு…

“அதுப்பா டைவர்ஸ் குடுத்துடட்டுமா” என்றாள்.

இதுவரை அதைப் பற்றி ஒரு வார்த்தைக் கூடப் பேசாதவள், இப்போது அதைப்பற்றி பேசவும், ஆச்சர்யமாகப் பார்த்தார்.. அதுவும் அந்த குரலில் ஒரு குதுகலம் இருந்ததோ?

“நீ என்ன கண்ணு சொல்ற?”

“நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படிப்பா…”

“டைவர்ஸ் கொடுத்துடலாம் கண்ணு”

“கொடுத்துடலாம்! ஆனா நீங்க அப்படியே விட மாட்டீங்க! இன்னொரு கல்யாணம் பண்ணச் சொல்வீங்க…”

“ஆமா கண்ணு! அப்படியே உன்னை எப்படி விட முடியும்!”

“ஆனா உங்களுக்கு ரெண்டு செலவுப்பா, கல்யாண அலைச்சல் எல்லாம்… உங்களுக்கு தான் சிரமம்!”

“எனக்கு ஒரு சிரமும் இல்லை கண்ணு… இதென்ன ஒரு செலவு… உன் வாழ்க்கைத் தான் எனக்கு முக்கியம்.

“அப்பா வீண் செலவுப்பா”

“என்ன வீண் செலவு”

“ஒரே மாப்பிள்ளைக்கு ரெண்டு கல்யாண செலவு, வீண்தானே!” என்றாள் கொஞ்சியபடி..

பதில் சொல்ல வந்தவர், அவள் சொல்லிய அர்த்தம், சொல்லிய விதம் பார்த்து அசந்து, தானாக புன்னகை மலர்ந்தது.

இப்படி உற்சாகமாக ஜெயஸ்ரீ பேசியே வருடங்கள் ஆகியிருந்தன… அது மனதிற்கு அவருக்கு அத்துணை சந்தோஷத்தைக் கொடுத்த போதும்… “ஆனா கண்ணு, அவன் உன்னை விட்டுட்டுப் போயிட்டான்! திரும்ப எனக்கு அவனோட அனுப்ப மனசில்லை…”

“அப்பா! முன்னாடியே சொல்லியிருக்கேன்! இப்பவும் சொல்றேன்! மரியாதையில்லாம அவரைப் பேசாதீங்க” என்றாள் மிகவும் ஸ்ட்ரிக்டான த்வனியில்… வார்த்தைகள் தான் திக்கின, வாக்கியங்கள் தெளிவாக வந்தன.

“கண்ணு அவனை…” என்று ஆரம்பித்தவர், ஜெயஸ்ரீயின் பார்வையில், “அவரை நம்ப முடியாது கண்ணு” என்றார்.

“இருக்கட்டும் பா! எனக்கு அவரை பிடிச்சிருக்கு… நானா அவரை கல்யாணம் செஞ்சுக்கலை! நீங்க தான் செஞ்சு வெச்சீங்க… நடுவுல அவர் தான் என்னை விட்டுப் போனார்! நான் எப்பவும் விடலை… இனிமேயும் விட மாட்டேன்…”

“நீங்க அவரோட என்னை அனுப்பறதும் அனுப்பாததும் உங்க முடிவு! அதை நான் மீற மாட்டேன்… ஆனா இந்த ஜென்மத்துக்கு அவர் மட்டும் தான்பா என் வாழ்க்கை துணை..” என்று திக்கி திக்கி பேசினாலும் வார்த்தைகளை அழுத்தமாக உச்சரித்து, இதிலிருந்து நான் மாற மாட்டேன் என்பது முடித்து விட்டாள்.

இனி திரும்ப அதைப் பற்றி பேசமாட்டாள் என்று வஜ்ரவேலிற்கு தெரியும்… ஆனாலும் சொன்னார்… “எனக்கு உன்னை அவங்க வீட்டுக்கு அனுப்ப முடியாதுடா…” என்று.

“நான் தான் சொன்னனேப்பா, உங்க விருப்பம்… கண்டிப்பா உங்களை

மீற மாட்டேன்”

“நீங்க சாப்பிடுங்க பா! எனக்குத் தூக்கம் வருது! நான் தூங்கி எழுந்து சாப்பிடறேன்!” என்று சொல்லி அறைக்குப் போக முற்பட்டாள்... அதுவரை அப்பாவிடம் சொல்லிவிட வேண்டும் அவளின் முடிவை என்ற எண்ணமே.. முடித்ததும் அவன் செல் போன் டவர் மேல் ஏறுவது ஞாபகம் வர சற்று பதட்டம் ஆகியது. அதில் முகம் வாட..

“அக்கா! கிளாஸ் வரலையா?” என்று பத்மினி வந்து நின்றாள்...

“வரலை, நீ போ!” என்பது போல சைகை செய்தாள். பத்மினி பேச வர... “காய்ச்சல்!” என்று சைகை காட்டவும்...

“அக்கா என் மேல கோபமா?” என்றாள் பயந்து பயந்து பத்மினி.

“இல்லை!” என்று அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு, “தேங்க்ஸ்!” என்ற வார்த்தையை உதிர்க்க...

பத்மினியின் முகம் பளிச்சென்று மலர்ந்தது. “அப்போ நிஜம்மா ட்ரீட் டா...?”

“நிஜம்மா... ட்ரீட்...”

“எப்போ போ போ போ”

“என்ன இது?” என்பது போல ஜெயஸ்ரீ சைகை செய்ய,

“இது எக்கோ கா! எத்தனை எக்கோ கேட்குதோ! அத்தனை ட்ரீட்!” என்று பத்மினி சிரிக்க...

“இது நல்லாயிருக்கே!” என்பது போல ஒரு பாவனையை காட்டி, ஜெயஸ்ரீயும் கலகல வென சத்தமாக சிரிக்க...

சிரிப்பது ஜெயஸ்ரீ தானா என்று எட்டிப் பார்த்தார் வஜ்ரவேல்... என்னவோ பொலிவிழந்து இருந்த அவர்களின் வாழ்க்கை ஒரே நாளில் மாறிவிட்டது போல ஒரு தோற்றம்... ஜெயஸ்ரீயின் பேச்சு மற்றும் சிரிப்பு கொடுத்த எண்ணமிது..

எப்போதும் அவளுக்கு தேவையானதைக் கூட எனக்கொன்றுமில்லை உங்களுக்கு தான் லாபம் என்பது போல பேசுவாள் சிறுவயதில் இருந்து, மிகுந்த தன்னம்பிக்கையான பேச்சு... பேச்சு மட்டும் திக்கி வராமல் இருந்திருந்தால் வாழ்க்கையில் இன்னும் உயரத்தில் வந்திருப்பாள் என்று எப்போதும் தோன்றும்.

பேச்சு திக்குவதால், அவளின் ப்ளஸ்கள் யாருக்கும் அவ்வளவு விரைவில் எட்டாது.

சில வருடமாக மறைந்திருந்த அது, இப்போது அவளிடத்தில் காணவும்... அவருக்கும் அப்படி ஒரு சந்தோசம்...

பத்மினி போனதும் மீண்டும் சிபியின் எண்ணம் தலை தூக்க, முகம் வாடியது... அவளையே கவனித்துக் கொண்டிருந்த வஜ்ரவேலிற்கு நன்கு தெரிய... “என்ன கண்ணு?” எனவும்...

“அவர் தினமும் செல் போன் டவர்ல ஏறி ரீடிங் எடுக்கறாராம், ஒருவேளை கீழ விழுந்துட்டா” என்று சொல்லும் போது, ஜெயஸ்ரீயின் முகத்தில் தெரிந்த கலக்கம்... கலங்கிய கண்கள்... சிபியைத் தூக்கி வந்தாவது அவளின் முன் நிறுத்தி முகத்தில் அந்த கலகத்தை துடைக்கத் தோன்றியது.

“ஒன்னும் ஆகாதும்மா! மாப்பிள்ளை நல்ல திடமா வலிமையா தான் இருக்கார். பயிற்சி இல்லாம இருக்க மாட்டார். விடு!” என்று அவளைத் தேற்றினார்.

“நீங்க எப்போ பார்த்தீங்க.. நீங்க தான் அவரை பார்க்கவேயில்லையே” என்றாள், சிபி வீட்டிற்கு அவளைப் பார்த்த மாலையே வந்தது ஞாபகமில்லாமல்.

“அதான் மூணு நாள் முன்னாடி வீட்டுக்கு வந்தாரே!”

“ஆமாமில்லை..” என்று சொல்லிக் கொண்ட போதும், சமாதானம் ஆகவில்லை... அதில் அவர் மாப்பிள்ளை என்று சொல்லியதையும் கவனிக்கவில்லை...

“விடு, வேற வேலைப் பார்க்க சொல்லலாம்!”

“வேற வேலை இருக்கு, பேங்க் வேலை... ஆனா இதையும் செய்யறார்..”

“ஏன்”

“ஏதோ மரம் வெக்கிறாராம்...” என்று சலிப்பாகச் சொல்ல...

“ஏன்மா நல்லது தானே செய்யறார் நல்ல விஷயம் மா...”

“ஆனா இந்த வேலை வேண்டாம்பா.. அவருக்கு ஏதாவது ஆகிட்டா”

“நீ சொல்லும்மா வேண்டாம்னு..”

“சொன்னேன்... அப்புறம் பார்க்கலாம்ன்னு சொல்றார்” என்று சொல்லும் போது பெண்ணின் முகத்தில் தெரிந்த கவலை...

இப்போதுதானே பழைய ஜெயஸ்ரீ திருப்புகிறாள் என்று நினைத்தோம் மீண்டும் கவலையா என்று அவருக்குக் கவலையாகிப் போனது.

“நீ முதல்ல தூங்கி எழுந்துரு! அவருக்கு ஒன்னும் ஆகாது!” என்று சமாதானம் செய்து அவளை உறங்க அனுப்ப முற்பட்டார்.

“இதென்னடா நம்ம வேண்டாம்னு சொல்றது போய், நம்மளே சேர்த்து வெச்சிடுவோம் போல இருக்கே” என்று தோன்றியது. அடுத்து ஜெயஸ்ரீ சொன்ன வாக்கியம்... சிபியை எப்படியும் அவளோடு வாழ வைக்க வேண்டும் என்று அவரை உடனடியாக முடிவெடுக்க வைத்தது.

போ கண்ணு போய் தூங்கு என்றார்.

மெதுவாக சுவரைப் பிடித்து ரூமின் வாயில் அவரை சென்றவள் திரும்பி அவரைப் பார்த்து... “அப்பா! அம்மா போனதுக்கு அப்புறம் உங்களுக்காவது நான் இருந்தேன்! எனக்கு யாருமேயில்லைப்பா!” என்று சொல்ல... வஜ்ரவேல் அப்படியே நின்று விட்டார்.

இது அப்போது சொல்லும் வார்த்தையில்லை.. பல நாட்களாக ஜெயஸ்ரீ அவளின் மனதில் அசை போட்டிருப்பாள் என்று அவள் சொன்ன விதத்திலேயே புரிந்தது. அதுவும் இப்போது அவன் மேலே ஏறுகிறான் என்று தெரிந்த பிறகு வெகுவாக கலங்கியிருக்கிறாள் என்று புரிந்தது.

மகளின் முன் கண்கள் கலங்கி விடாமல் இருக்க மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

மகளிடம் விரைந்தவர்... “அப்படி எல்லாம் எதுவும் நடக்காது! அப்பா இருக்கேனில்லை.. அப்படி எல்லாம் விடமாட்டேன்! போய் தூங்கு கண்ணு” என்று அவளை அனுப்பி, அவள் உறங்கிவிட்டாளா என்று பார்த்தப் பிறகே அந்த இடத்தை விட்டு அசைந்தார். மனம் மிகவும் கணத்துப் போனது.

## அத்தியாயம் இருபத்தி ஆறு :

அன்று மாலையே சிபிக்கு அவனுடைய பாட்டி அழைத்தார், “டேய், தாத்தா ரொம்ப சிரமப்படறார்... நீ வீட்டை விட்டுப் போனது தான் அவர் ஞாபகத்துல இருக்கும். நீ வந்தது அவரால உணர முடியலை.. வந்து அவருக்கு பால் ஊத்து” என்று கெஞ்சலாக பேச... அதற்கு மேல் எப்படி நிற்பான் சிபி, மாலை ரீடிங் எடுத்தது ஊருக்கு கிளம்பினான்.

பஸ் ஏறியதும் தான், ஜெயஸ்ரீயிற்கு அழைத்து, “ஊருக்கு வருகிறேன்! பாட்டி அழைத்தார்கள்!” என்று சொல்லவும்... ஏற்கனவே மனது சஞ்சலமாக இருந்தவளுக்கு மீண்டும் பயம் தொற்ற.. “ஓஹ்!” என்று மட்டும் தான் சொல்ல முடிந்தது.

வைத்து விட்டாள்.. சிபிக்கும் அதற்கு மேல் பேசமுடியவில்லை... “சாவா?” என்பது போல அவனுக்கும் ஒரு மாதிரி இருந்தது.

அவன் வீட்டிற்கு சென்று பாட்டி சொன்னதைப் போல செய்து.. வந்து நேரம் பார்த்த போது மணி இரவு ஒன்பது..

தாத்தாவும் இப்போதோ அப்போதோ என்பது போல இருந்தவர்... இரவு ஒரு மணிக்கு எல்லாம் அடங்கி விட... வீடே விழித்துக் கொண்டது.

எல்லாருக்கும் தகவல் சொல்ல... வீட்டில் ஜனம் குழும ஆரம்பித்தனர்... காலை ஆறு மணிக்கு அழைத்து ஜெயஸ்ரீயிடம் தகவல் சொன்னான்.

சொன்னவன், வேறு பேசவில்லை வைத்து விட்டான்.. “ஐயோ! இது என்ன? அப்பாவிடம் சொல்லுங்கள் என்று சொல்வதற்கு முன் வைத்து விட்டார்”. ஜெயஸ்ரீயிற்கு கோபமாக வந்தது. தானாக அப்பாவிடம்

சொல்வதா வேண்டாமா என்று யோசிக்கும்போதே, கதவின் அழைப்பு மணி கேட்க... திறந்து பார்த்தால் மாமல்லவர்மன் வாசுவுடன் நின்றிருந்தான்.

“தாத்தா காலமாயிட்டார் நைட் ஒருமணிக்கு” என்று தயங்கித் தயங்கி சொன்னவன், “அப்பா சொல்லிட்டு வரச் சொன்னார்” என்று நின்றான்.

“இருங்க!” என்பது போல சைகைக் காட்டியவள்.. அப்பாவைப் போய் எழுப்பி விட... “என்னமா?” என்றவரிடம் வெளியே காட்டினாள்.

“ஐயோ! ஏன் பேசமாட்டேன் என்கிறாள்? இப்போது என்ன பிரச்சனை” என்று வஜ்ரவேல் பதறி வர, அங்கே வர்மனைப் பார்த்ததும் என்னவோ ஏதோவென்று பயமாகி விட்டது... நேற்றிலிருந்து தான் ஜெயஸ்ரீ அவரையும் சேர்த்து பயமுறுத்தி இருந்தாளே...

அவரைப் பார்த்ததும், “தாத்தா காலமாயிட்டாங்க, ராத்திரி ஒரு மணிக்கு, அப்பா சொல்லிட்டு வரச் சொன்னாங்க” என்று அவன் சொல்ல... “உஷ், ஹப்பா!” என்ற பெருமூச்சு எழுந்தது.

“சரி” என்பது போல தலையாட்டினார்.. ஏதாவது கேட்பார்களா? சொல்வார்களா! இருக்கவா? போகவா!” என்று சில நொடி தடுமாறிய வர்மன்.. தலையசைத்துக் கிளம்பினான். “அண்ணியின் அப்பா வருவதற்கு முன்னமே அண்ணியிடம் ஒரு சாரி கேட்டு இருக்கலாமோ” என்று தோன்றியது.

இப்போது கேட்பதற்கு ஒரு பயம் அமைதியாக சென்று விட்டான். தந்தையும் மகளும் யார் முன் பேசுவது என்று ஒருவரை ஒருவர் பார்த்து நின்றனர்.

ஜெயஸ்ரீ பேசுவதாக காணோம் என்ற பிறகு, “என்ன செய்யலாம், போகணுமா?” என்றார்.

“நீங்க போறீங்களா பா! நான் வரலை?”.

“நான் கண்டிப்பா போகணுமா?” என்றார் வஜ்ரவேல்.

“என்னை கேட்டா போங்கன்னு சொல்வேன்! உங்க விருப்பம் அப்பா!

ஆனா உன்னால் தான் போனேன்னு எல்லாம் நீங்க சொல்ற மாதிரி இருந்தா போகாதீங்க” என்று சொல்ல..

“நீயும் போகமாட்ட... என்னையும் போகச் சொல்ல மாட்ட... ஆனா நானா போகணுமா? என்ன இது?” என்று சற்று கோபமாகக் கேட்டார்.

“நீங்க தானே இவரை எனக்குக் கல்யாணம் செஞ்சு வெச்சீங்க! அப்போ நீங்களா தானே போகணும்! நான் ஏன் சொல்லணும்?” என்பது போல ஒரு புது சாஸ்திரம் பேச..

பெண்ணை முறைத்துப் பார்த்தார்.. “எப்போதும் இப்படித் தான் எனக்கு வேண்டும் என்று கேட்காமல், அவராக செய்ய வேண்டும்” என்று எதிர்பார்ப்பது.

ஜெயஸ்ரீயும் அவரை பதிலுக்கு முறைத்துப் பார்த்தாள்.

“போகிறேன்க! போகவில்லை!” என்று சொல்லாமல் வஜ்ரவேல் எழுந்து போய் விட...

ஜெயஸ்ரீயும் போகிறீர்களா கேட்கவில்லை, அவளும் அவளுடைய ரூமிற்குள் புகுந்து கொண்டாள்.

வஜர்வேல் வெகுவாக யோசித்து, எப்படியும் சிபியோடு தான் வாழ்க்கை என்று தெளிவாக சொல்லி விட்டாள்... இனி அவர்களை பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் பழகித் தானே ஆகவேண்டும்... பெண்ணைப் பெற்றவர்களுக்கு நேரும் மிகப் பெரிய கொடுமை இது... எப்போதும் அவர்கள் தான் முதலில் இறங்கி வர வேண்டும்..

“இந்தப் பெண்கள், பெண்கள் தான்! அதென்ன என்ன செய்தாலும் கணவன் என்று அவன் பின் போவது. அவன் தான் விட்டுச் சென்று விட்டானே, அவன் தான் வேண்டும் என்பது போல என்ன... போடா என்று சொல்லாமல்” என்று அவருக்கு மனதிற்குள் பெரும் போராட்டம்.

“உன் பெண் தானே எப்படி இருப்பாள்... ஓரிரு வருடங்கள் உன்னுடன் வாழ்ந்த உன் மனைவியை உன்னால் இன்றும் மறக்க முடிந்ததா..” என்று மனசாட்சி கேள்வி கேட்க..

“ஆனால் என் மனைவி என்னோடு ஒன்றி வாழ்ந்தால்… அந்த வருடங்களின் நினைப்பே என்னை இதுவரை வேறு சிந்தனையின்றி வைத்திருக்கிறது. இவன் விட்டுச் சென்றானே…” இப்படியாக மனதில் அவருக்கு அவரே சண்டையிட்டுக் கொண்டாலும் முடிவில், வேறு வழியின்றி சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினார்.

சொல்ல வேண்டிய முறைக்குத் தான் சொல்லி விட்டனர் சிபியின் வீட்டினர். ஆனால் வஜ்ரவேல் வருவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை… ஏன் சொந்த பந்தங்கள் கூட அவர் வந்ததை ஆச்சர்யமாகப் பார்த்தனர்.

யாரிடமும் எதுவும் விசாரிக்காமல், சம்மந்தியான நடராஜனிடம் மட்டும் கை கொடுத்து விட்டு, அங்கே ஓரிடத்தில அமர்ந்து கொண்டார். வேறு சிலர் சம்மந்தி முறைகளைச் செய்ய முயன்ற போது, “என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள், உரிய பணத்தைக் கொடுத்து விடுகிறேன்” என்று பங்கும் சேர்ந்து கொண்டார்.

நடராஜனுக்கு அவரிடம் என்ன பேசுவது என்று கூடத் தெரியவில்லை… ஒரு பெரிய தயக்கம்… நல்லா இருக்கீங்களா என்று எப்படிக் கேட்பது இவர்கள் செய்து வைத்த வேலைக்கு… அவரும் சம்மந்தி அருகில் அமர்ந்து கொண்டார். வஜ்ரவேல் வந்ததுமே தலையசைத்து போனான் சிபி அவனுக்கு வேலைகள் இருந்தன.

எல்லாம் சிபியின் மேற்பார்வை தான்! அவன் என்ன சொல்கிறானோ அதை தான் எல்லோரும் கேட்டனர்.. பார்க்க பார்க்க எரிச்சலாக வந்தது வஜ்ரவேலிற்கு…

இவ்வளவு ஆளுமை இருப்பவன் எதற்கு விட்டுச் சென்றான் என்பது போல. முடியாதவன், தெரியாதவன், திறமை இல்லாதவன், இப்படி என்றால்… அவன் அவ்வளவுதான், அதற்கு மேல் அவனிடம் எதிர்பார்க்க முடியாது என்று விட்டு விடலாம்… ஆனால் எல்லாம் இருந்து சிபி எதற்குப் போனான்.. கோபமாக வந்தது.

இரண்டு வருடங்கள் எங்கிருந்தான் என்று தெரியவில்லை… ஒரு நாளில் வந்து நின்றால் என் பெண் அவனோடு தான் வாழ்க்கை என்று சொல்கிறது, என்ன செய்வது? தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல தோன்றியது.

ஆனால் இனி கோபத்தைக் காட்டி என்ன செய்வது...

யாருமில்லாத போது அருகில் வந்தவன்... "ஜெயஸ்ரீ வரலீங்களா?" என்று கேட்க... "வரலை" என்றவர்.. கூடவே, "நான் வேண்டாம்னு சொல்லலை" அவளா வரலை! என்றும் சொன்னார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரியாமல், "நான் போய்க் கூட்டிட்டு வரட்டுமா?"

"இல்லை! நீங்க இங்க பாருங்க! அவ வேண்டாம்!" என்று சொல்லவும் சிபி அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாகிவிட்டான். தன்னையே இப்படிப் பார்க்கும் உறவுகள், இதில் ஜெயஸ்ரீ வந்தால் இன்னும் பார்ப்பர்... அவளுக்கு எப்போதும் காட்சிப் பொருள் ஆவது பிடிக்காது, கோபம் வரும், என்று தான் அவர் வேண்டாம் என்று சொன்னார்.

அதுமட்டுமில்லாமல், ஜெயஸ்ரீ வருவாளா? மாட்டாளா? என்று அவருக்கேத் தெரியாது.

அவருக்கே இன்னும் மனது சமனப்படவில்லை...

ஆனாலும் அவனிடம், "நீங்க ஏதோ மேல ஏறி வேலை பார்க்கறீங்கலாமே.. ஜெயஸ்ரீ ரொம்ப பயப்படறா, விட்டுடுங்க!" என்றார்.

"சரி" என்றான் வாயத் திறந்து..

"உடனே விடுங்க... அப்புறம் எல்லாம் வேண்டாம்! ஜெயஸ்ரீ ரொம்ப பயப்படறா" என்றார்.

"இவர் என்ன என்னை மிரட்டுகிறாரா" என்பதுப் போல சிபிக்குத் தோன்றியது. அவராவது அதட்டுவது போல பேசுகிறார், உன் பெண்ணிற்கு இப்படி ஒரு நிலை வந்திருந்தால் நீ எதிரில் இருப்பவனிடம் பேசுவாயா என்ன? அடித்து துவைத்து இருக்க மாட்டாய், விடுடா என்று அவனுக்கு அவனே சமாதானம் செய்து கொண்டான்.

அதன் பிறகு இருவரும் பேசிக்கொள்ளவில்லை, பேசும் அவசியமும் வரவில்லை.

காடு செல்லும் போதும் கூட வந்தவர்… திரும்ப எல்லோரும் வீடு வந்த பிறகே… அவர் வீட்டிற்கு கிளம்பிச் சென்றார்.

அப்பா வந்ததும், என்ன நடந்தது என்பதுப் போல எல்லாம் கேட்கவில்லை. அவரவர் பாட்டிற்கு வேறு பேசினர்… வேறு வேலைகள் பார்த்தனர். சிபியைப் பற்றியோ சிபியின் வீட்டினர் பற்றியோ பேசவில்லை.

இரவு ஜெயஸ்ரீயிற்கு அழைத்தவன், “நீ ஏன் வரலை? உங்க அப்பா வந்திருந்தார்…”

“வரலை!”

“அதான் ஏன்”

“ரொம்ப வருஷம் ஆகிடுச்சு! இப்போ அங்க வந்தா எல்லோரும் என்னையேப் பார்ப்பாங்க… அதான் வரலை…”

“அப்போ எப்போ தான் வருவ?”

“தெரியலை..?”

“உங்கப்பா வேற வேலையை விட்டுடுங்கன்னு சொன்னார்! என்ன சொன்ன நீ அவர்கிட்ட…”

“அதுவா அம்மாக்கு அப்புறம் நானாவது உங்களுக்கு இருந்தேன்… ஆனா எனக்கு யாருமில்லைப்பான்னு சொன்னேன்! அதான் சொல்லியிருப்பார்!” என்று திக்கித் திக்கி சொல்லவும்… அதிர்ந்து விட்டான்.

“என்ன பேசி வெச்சிருக்குற நீ!” என்று…

“நிஜம் அதுதானே!” என்று அவளின் பிடியில் அவள் நிற்க…

என்ன பேசுவது என்றே தெரியவில்லை சிபிக்கு…

“நீ நான் பதில் கொடுக்க முடியாதபடி தான் நிறைய பேசற” என்றான்.

அதற்கு எந்த பதிலுமில்லை ஜெயஸ்ரீயிடம்…

“நான் ஒரு ஒரு வாரம் பத்து நாள் போல, இங்க இருந்து தான் போவேன்.. அந்த ரீடிங் எடுக்கற வேலைக்கு வரமாட்டேன்னு சொல்லிட்டேன்… தாத்தாக்கு சடங்கெல்லாம் முடியும் வரை இங்க தான் இருப்பேன்…”

“அந்த ரீடிங் எடுக்க போக மாட்டேன்” என்றதும் ஆசுவாசப் பெருமூச்சு ஜெயஸ்ரீயிடம்… “அதுக்கு… அப்புறம்…” என்றாள்..

“தெரியலை, அந்த ஒரு வாரத்துக்கு அப்புறம் தான் தெரியும்…” என்றான்.

இருவருக்கும் அதற்கு மேல் பேச எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.. “வெக்கட்டுமா” என்று சிபி கேட்க… “ம்” என்றாள்..

ஆயிற்று தாத்தா இறந்து பத்து நாட்கள் ஆகிற்று… தாத்தாவிற்கு சாமி கும்பிடும் போதும்… வஜ்ரவேலின் வீட்டிற்கு வர்மன் மூலமே சொல்லிவிட அதற்கும் வஜ்ரவேல் மட்டுமே வந்தார். ஜெயஸ்ரீ வரவில்லை..

அன்று காலையில் தான் தொலைபேசியில் அழைத்து, “நீயும் வாயேன்” என்று அத்தனை முறை சொல்லியிருந்தான்… முதலில், “மாட்டேன்” என்றாள், பிறகு அவன் வற்புறுத்திச் சொல்லவும், “சரி” என்பது போல சொல்லியிருந்தாள், ஆனால் வரவில்லை…

சிபிக்கு ஏமாற்றமாக தான் இருந்தது.

இந்த சில நாட்களாக வீட்டில் இருந்த போது தான், அப்பா அம்மாவிடம் பேசுவதே இல்லை என்று தெரிந்தது சிபிக்கு. மனதிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. எவ்வளவு சிறப்பாக வாழ்ந்துவிட்டு இப்போது பேசிக்கொள்வதில்லை என்பது…

இரண்டு வருடமாக விவசாயமும் செய்யவில்லை.. அவன் செல்வதற்கு முன்பே நிறைய கடன்கள் இப்போது இன்னும் அதிகம்.. ஆண்கள் வேலைக்கு சென்று வருவதில் பாதிக்கு மேல் வட்டிக்கேச் சென்றது.

தன்னால் வீட்டில் எல்லாமே குளறுபடி, அதை சரி படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியம் தனக்கு இருக்கிறது. சிபியின் கவனம் எல்லாம் அதுதான்.. பணம், அதை சரி படுத்தி விடும் தைரியம் நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆனால் அப்பா, அம்மா.. ஜெயஸ்ரீ வந்தால் சிறிது சரி படுமோ என்று தான் அவளை வருத்தி, வருத்தி அழைத்து இருந்தான். ஆனால் அவள் வரவில்லை.

“ஜெயஸ்ரீ வர்றேன்னு சொன்னா, நீங்க கூட்டிட்டு வரலையா” என்றான் வஜ்ரவேலிடம் போய்... “என்கிட்ட சொல்லலையே!” என்றார் அவர்.

“நான் போய் கூட்டிட்டு வரட்டுமா?” என்றான்.. அவர் பதில் பேசுமுன்னேயே, “வேண்டாம்னு சொல்லாதீங்க! வரட்டும்!” என்றான் வற்புறுத்தலாக..

அவன் வற்புறுத்தவும், “அப்புறம் ஏன் விட்டுட்டுப் போன” என்று கேட்க மீசை அவருக்கு துடித்தது தான்... ஆனால் சீர்பட வேண்டிய உறவு, அதைத் தன் வார்த்தைகளால் மீண்டும் சிக்கலாக்க வேண்டாம் என்று அமைதியாக இருந்தார்... கூடவே அப்படி சிபியிடம் சட்டென்று பேசிவிட முடியவில்லை. அவன் தோரணை, பேச்சு, பார்வை, விலக்கி நிறுத்தியது..

“ஒரு வார்த்தை கூட அதிகமாக் கேள்வி கேட்கற மாதிரி பேச முடியலை”. அதுதான் அவருக்கு இன்னமும் கோபம்... இப்படி பேசக் கூட எதிராளியை யோசித்துப் பேச வைப்பவன் எப்படி விட்டு சென்றான்.

அவர் யோசித்துப் பார்க்கும் போதே கிளம்பிவிட்டான். அப்பாவிடம், “இன்னும் நேரமிருக்குப்பா! இருந்தாலும் எனக்காகப் பார்த்துட்டு இருக்காதீங்க, நீங்க கும்பிடுங்க...”

“எங்க போற சிபி...?”

“எனக்குக் கொஞ்சம் வேலைப்பா, வந்துடறேன்!” என்று சொல்லிச் சென்றான். வஜ்ரவேல் கேட்டுக் கொண்டு தான் இருந்தார். ஜெயஸ்ரீயை கூப்பிடப் போகிறேன் என்பது போல சொல்லவில்லை.

பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினான்... வீட்டில் தான் இருந்தாள்...

“ஏன் வரலை?” என்று அவள் முன் போய் நின்றான் கோபமாக... சிபி வருவான் என்று தெரியும், ஆனால் முடிந்த பிறகு மாலை வந்து சண்டையிடுவான் என்று எதிர்பார்த்தால்.. இப்படி வந்து நிற்பான் என்று எண்ணவேயில்லை.

“அது, அது” என்று திக்கினாள்...

“சொல்லு” என்பதுப் போலக் கையைக் கட்டி அவள் முன் நிற்கவும்...

“எனக்கு என்னவோ போல இருந்துச்சு... எப்படி எல்லார் முன்னாடியும் வருவேன்... அப்பா உங்க மேல கம்ப்ளைன்ட் கொடுத்து, ஜெயில் எல்லாம் போனீங்க, எல்லோரும் அங்க வீட்ல நான் வேணும்னு செஞ்சேன்னு நினைச்சா?”

“அப்புறம் நீங்க வீட்டை விட்டுட்டு போய்டீங்க.. எல்லோரும் நான் தான் காரணம்னு நினைப்பாங்க.. ஏற்கனவே அங்க என்னை யாருக்கும் பிடிக்கலை! இப்போ இன்னும் பிடிக்காது!” என்று திக்கித் திக்கி அவள் முழுதாக பேசி முடிக்கும்வரை கேட்டவன்.

“பாரு... நீ எதுக்கும் காரணமில்லை... எல்லாம் என்னோட முட்டாள் தனம்... அதை நான் கண்டிப்பா சரி பண்ணனும்... யாருக்கு அங்க உன்னை பிடிச்சா என்ன? பிடிக்கலைன்னா என்ன... எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு”

“பிடிச்சிருந்தா, ஏன் போனீங்க?” என்றது வார்த்தையாக வரவில்லை... கண்களால் வந்தது.

“நீங்களா இப்போக் கூட வரலை!” என்பது வார்த்தையாக வந்தது.

“அப்போ என்னோட வரமாட்டியா நீ...”

செல்ல வேண்டும் போலத் தான் இருந்தது. ஆனாலும் ஒரு தயக்கம்..

ஏதோ ஒரு கோபம், விரக்தி, சென்று விட்டான். ஆனால் இரண்டு வருடங்கள் அவளாகப் பார்க்கும் வரை, அவள் அவனைத் தேடுகிறாள் என்று உணர்த்தும் வரை வரவில்லை... எல்லாம் சரியாகிவிட்டது இருவருக்குள்ளும் என்ற தோற்றம் இருந்த போதும் ஜெயஸ்ரீயிடம்

தயக்கம் தான்.

அதை முகம் தாங்கி நிற்க... சிபி இதை எதிர்பார்க்கவில்லை...

“இப்போ நீ என்னோட வர்ற! அங்க எல்லோர் முன்னாடியும் நல்ல விதமா நடந்துக்கற... நீ யாரோடயும் பேசணும்கிற அவசியமில்லை... முன்ன நான் விட்டுப் போனது கூட, நீ என்னோட வர மாட்ட, உன் அப்பா உன்னை என்னோட அனுப்ப மாட்டார், மத்தவங்க முன்னாடி எனக்கு அசிங்கம்ன்னு தான், நீ சொன்ன மாதிரி ஓடிப் போயிட்டேன்... ஆனா இனிமே அது நடக்காது... கிளம்பு!” என்றான் அதட்டலாக..

அப்போதும் ஜெயஸ்ரீ தயங்க.. “வான்னு சொன்னேன்!” என்று கோபமாக கத்தியவன், அவளின் கையைப் பற்றி இழுக்க, அவன் மேலயே விழுந்தாள்.

“அப்போ உனக்கு என்னைப் பிடிக்கலை அப்படிதானே...”

“இல்லை! அப்படி இல்லை!” என்று அவள் அவசரமாகத் தலையாட்ட முயலும் போதே... அவளின் முகம் பற்றி அதை அசைய விடாமல் நிறுத்தினான்.

“பிடிச்சிருந்தா... எல்லாத்தையும் மன்னிக்க வைக்கும், மறக்க வைக்கும்... உனக்காக சுயமரியாதையைக் கூட அவ்வளவா பார்க்காம, என் மேல அவ்வளவு கோபம் இருந்தாலும், உங்கப்பா வந்து உட்கார்ந்து இருக்கார் தானே.. பொண்ணுக்காக அவர் செய்யும் போது, எனக்காக உன்னால செய்ய முடியலை இல்லை..”

அவன் முகத்தில் அவ்வளவு கோபம், ஆத்திரம், இயலாமை... “நான் செஞ்ச தப்பு உன்னைச் சேராதா? அப்போ நீ வேற தானா...”

“எங்கப்பா எங்கம்மாவோட பேசறதுக் கூட இல்லை என்னால...”

“இன்னும்... இன்னும்... என் தப்பு முடியவே முடியாதா... என்ன செய்யணும் நான் சொல்லு! சத்தியமா எனக்குத் தெரியலை என்ன செய்யணும்ன்னு! நான் வாழணும்னு நினைக்கும் போது எல்லாம் முடிஞ்சி போச்சுன்ற உணர்வைத் தான் குடுக்கறீங்க...”

“ஒருத்தி கல்யாணம் பண்ணாம என்னை அசிங்கப்படுத்திப் போனா! இப்போ நீ கல்யாணம் பண்ணி.. இந்த பயத்துல தான் நான் போனேன்...”

“அவளை மனசுல இருந்து தூக்கி எறியவே, எனக்கு இவ்வளவு நாள் ஆச்சு...”

“வேண்டாம் போ! நீ வரவேண்டாம் போ! என்ன பண்ணணுமோ நான் பார்த்துக்கறேன்..! நீ சொன்ன மாதிரி நான் ஓடிப்போயிட்டேன், உனக்கு தகுதியில்லை, என் உலகம் தனி தான்! அதுல யாரும் தேவையில்லை!”

“பறந்து விரிஞ்ச உலகம் இருக்கு, எனக்கு நிம்மதி குடுக்கற என் இயற்கை இருக்கு... அது போதும் எனக்கு, இந்த ஜென்மத்துக்கு! யாரும் தேவையில்லை!” என்று சோபாவில் அவளை வலுக்கட்டாயமாக அமர்த்தி சென்றான். ஜெயஸ்ரீயிற்கு சந்தர்ப்பமே கொடுக்கவில்லை.

“ஐயோ! இவ்வளவு கோபமா?” என்று ஜெயஸ்ரீ பயந்து விட்டாள். அவனின் இந்தக் கோபம் தானே எல்லா முடிவுகளையும் எப்போதும் அவனைத் தப்பாக எடுக்க வைக்கிறது.

நேரே வீட்டிற்குத் தான் சென்றான்... அங்கே கற்பூரம் பொருத்தும் நேரமாகியிருக்க... முகத்தில் எதையும் காட்டாமல் தாத்தாவின் படத்தின் முன் படையல் வைக்கப்பட்டு கும்பிடப்பட.. அவனும் கும்பிட்டான்.

அவன் தனியாக வருவதைப் பார்த்திருந்தார் வஜ்ரவேல், அருகில் வந்து, “ஜெயஸ்ரீ வரலையா?” என்று மெதுவான குரலில் கேட்க... “வரவில்லை” என்பது போல தலையசைத்தான்.

மகளைப் பற்றி அவருக்கு தெரியும், அதனால் தான் முன்னமே அவன் கேட்டதற்கு, “வேண்டாம்!” என்று சொன்னார்.. ஜெயஸ்ரீ மிகுந்த பிடிவாதம் தானே...

வஜ்ரவேலிற்கு மிகுந்த கவலையாகிப் போயிற்று, அதுவும் சிபியின் முகம் மிகவும் இறுகி இருந்தது, அதுவே சொல்லாமல் சொன்னது... அங்கே இருவருக்குள்ளும் பெரிய பிரச்சனையாகி இருக்க வேண்டும் என்பது.

சாமி கும்பிட்டு முடித்ததும் உணவு பரிமாறப்பட, எல்லோரும் அதை பார்த்துக் கொண்டிருக்க... வஜ்ரவேலை மரியாதை நிமித்தம் நடராஜன், “வாங்க சம்மந்தி” என்று அவரை அழைத்துப் போய் அமர்த்தினார்.

அவர் உண்டு முடித்து வந்ததும்.. அவரிடம் தன்மையாக, “நீங்க எப்போ சொல்றீங்களோ நாங்க வந்து ஜெயஶ்ரீயைக் கூட்டிட்டு வரட்டுமுங்களா” என்று கேட்க... என்ன சொல்வார் வஜ்ரவேல்.. “அதெல்லாம் என் பெண்ணும், உங்கள் பையனும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு” என்றா...

“பொண்ணுக்கிட்ட பேசிட்டு சொல்றேன்!” என்று முடித்துக் கிளம்பினார்.

அவர் சென்றதும் அம்மாவையும் அப்பாவையும் தனியாக அழைத்தவன்... “ஏம்பா சிபின்னு ஒரு பையன் பொறப்பான்... கடைசி வரைக்கும் அவன் என்னை பார்த்துக்குவான்னு தெரிஞ்சா அம்மா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க” என்றான் கோபமாக... அவன் சொல்ல வருவது புரியாமல் நடராஜானும் தேவியும் விழிக்க..

“இல்லை தானே! உங்களை நம்பித் தானே கல்யாணம் செஞ்சிக்கிட்டாங்க. அப்புறம் என்னைக் கொண்டு, அம்மாக்கிட்ட ஏம்பா கோபத்தை காட்டி பேசாம இருக்கீங்க... நான் மட்டும் தான் உங்க சந்தோஷமா? வேற இல்லையா... தயவு செஞ்சு இந்த வயசுக்கு மேல அம்மா கிட்ட பேசாம அவங்களைக் கஷ்டப்படுத்தாதீங்க.. என்னை நிம்மதியா இருக்க விடுங்கப்பா” என்றான்.

“இன்னும் மூணு பசங்க இருக்காங்கப்பா உங்களுக்கு, அண்ணியையும் சேர்த்து தான் சொல்றேன்.. நான் போனா அவங்க இல்லையா உங்களுக்கு... இப்படி செஞ்சு எல்லோர் சந்தோஷத்தையும் நீங்க கெடுக்கறீங்க..”

“நான் பொறக்கறதுக்கு முன்னாடியும் நீங்க வயல்ல தான் இறங்கி வேலை செஞ்சீங்க! இப்போ ஏன் போறது இல்லை.. நான் செத்துப் போயிருந்தா என்ன செஞ்சிருபீங்க?” என்று கத்த..

பதறிவிட்டனர் பெற்றோர்கள்...

“ஏண்டா? ஏண்டா? இவ்வளவு கோபம், அம்மா கிட்ட தானே, நான் பேசறேன்! இவ்வளவு கோபம் வேண்டாம்...! வயலுக்கு தானே, நான் போறேன்! கோவப்படாத வா! முதல்ல நீ சாப்பிடு!” என்றார் நடராஜன்.

காலையில் இருந்து தாத்தாவிற்கு சாமி கும்பிடும் பொருட்டு வீட்டின் ஆண்மக்கள் யாரும் தொண்டையைத் தாண்டி தண்ணீர்க் கூட இறங்க விடவில்லை.

“கொஞ்சம் வயிறு சரியில்லை, எனக்கு மோர் மட்டும் குடுங்கம்மா, நீங்க சாப்பிடுங்கப்பா” என்றான். அம்மா மோர் கொடுத்தும், “நான் வயல் வரை போயிட்டு வர்றேன்” என்று சென்றான்.

உறவுகள் கிளம்பியிருப்பார்கள் என்று தோன்றிய நேரம் வீட்டிற்கு வந்தவன்... “அங்க ஊர்ல எனக்கு கொஞ்சம் வேலைப்பா, நான் போயிட்டு முடிஞ்சா ராத்திரி வர்றேன், இல்லை நாளைக்கு வர்றேன்” என்றான்.

“என்ன அப்படி வேலை இந்த சாயந்தர வேலையில...”

“நான் என்ன சின்னப் பையனா? என்ன வேலைன்னு சொல்ல! எனக்கு வேலையிருக்கு அவ்வளவு தான்!” என்று சொன்னவன்.. வாசு அந்த நேரம் வர, “என்னை பஸ் ஸ்டான்ட்ல இறக்கி விடு!” என்று ஏறி அமர்ந்து கொண்டான். அவன் சென்ற நேரம் பஸ்சும் வந்து விட...

ஏறி அமர்ந்தான்.. பஸ் அவனின் ஊர் போய் அன்று விரைவாகச் சேர்ந்து விட்டது. அவன் வீடு இருந்த இடம்... ஒரு வயல் வரப்பின் ஆரம்பம்... அவனது ஒரு ஓட்டு வீடு... பக்கத்தில் சில வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தள்ளித் தள்ளி..

அங்கிருந்து பார்த்தால் எங்கும் பசுமை அதன் கொண்டே தனிமையை விரும்பி அங்கே வீடு வாடகைக்கு எடுத்து இருந்தான். அந்தப் பசுமையைப் பார்த்தும் மனது சற்று சமன்பட்டது. மாலை ஆறு மணியாகியிருந்தது. வீட்டைத் திறந்தவன்..

அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டான். மிகவும் சோர்வாக இருந்தது.. பசி வேறு காதை அடைத்தது.. அவனே சமைத்துக் கொள்வான் எப்போதும்... இப்போது எழவே பிடிக்கவில்லை...

எவ்வளவு நேரம் சென்றது என்றே தெரியவில்லை… பேச்சுக் குரல் வீட்டின் வெளியில் கேட்டது… “இங்கே யார் வருவர்” என்று யோசிக்கும் போதே கதவு மெதுவாகத் தட்டப்பட..

“யாருங்க” என்று படுத்தவாரே குரல் கொடுத்தான்.. அதன் பிறகு சத்தம் எதுவுமில்லை… “யாரது?” என்று எழுந்து வெளியேப் பார்க்க… அங்கு ஜெயஸ்ரீ அமர்ந்து இருந்தாள் படியில்.. சிறிது தூரத்தில் வஜ்ரவேல் நடந்து சென்றுக் கொண்டிருந்தார்.

“வந்துவிட்டாளா?” என்பதுப் போல ஒரு நிம்மதி, இவளை யார் இப்படி மனதில்லாமல் வரச் சொன்னது போன்ற ஒரு இறுமாப்பு…

சற்று தொலைவில் ஒரு கார் நின்று கொண்டிருக்க, அதில் வந்திருப்பர் என்று புரிந்தது.

“அவர் ஏன் போறார்?” என்றான் ஜெயஸ்ரீயிடம்..

சிபியைத் திரும்பியும் பாராமல், “தெரியாது” என்ற பாவனையில் ஜெயஸ்ரீத் தோளைக் குலுக்கினாள்.

“ப்ச்” என்று அவளிடம் சலிப்புக் காட்டியவாறே.. சிபி விரைந்து இறங்கி வேகமாக எட்டுக்கள் வைத்து அவரை அடைந்தான். “மாமா” என்று அழைக்கவும் திரும்பினார்.. “ஏன் உள்ள வராம போறீங்க… வாங்க!” என்றான்.

“இல்லை, இன்னைக்கு வேண்டாம்.. அவளை இங்க கூட்டிட்டு வர்றதுக்குள்ள எனக்கு ஒரு வழியாகிடுச்சு… அழுதுட்டே இருக்கா! பேசமாடேங்கறா! நானே கொண்டு வந்து விடலாம்னாலும் வரமாடேங்கறா! கட்டாயப்படுத்தி அங்க வீட்டுக்கு கூட்டிட்டு வந்தேன்… அதுக்குள்ள நீங்க இங்க கிளம்பிட்டீங்கன்னு சொன்னாங்க! அதான் இங்க நேரா கூட்டிட்டு வந்தேன்! என்னால அவளை இந்த கொஞ்ச நாளா சமாளிக்க முடியலை…”

“எனக்கு அவ சந்தோஷம் தான் வேணும்! அவளைப் பார்த்துக்கோங்க! நான் அப்புறம் வர்றேன்!” என்று சொல்லி நிற்காமல் நடக்க ஆரம்பித்தார்.

திரும்பவும் அவர் புறம் வேகமாக சென்றவன்.. "நம்புங்க என்னை! கண்டிப்பா அவளை சந்தோஷமா வெச்சிக்குவேன்... நீங்க வருத்தப்படாதீங்க" என்றான்.

"அந்த நம்பிக்கை இருக்கவும் தான் கொண்டு வந்து விட்டேன், இல்லைன்னா கண்டிப்பா கூட்டிட்டு வந்திருக்க மாட்டேன்.." என்று ஆதரவாக சிபியின் தோளைத் தட்டி கொடுத்தவர்...

"பார்த்துக்கோங்க... இப்போ அவ இருக்குற மூட்க்கு ரொம்ப தொந்தரவு கொடுப்பா..." என்று சொன்னார்.

சிபி புன்னகைக்க, அந்த புன்னகை அவரையும் தொற்றியது.

கார் வரை அவருடன் சென்றான்... கார் ஏறும் முன் அவனிடம் ஒரு பேகை நீட்டினார்... "அவ டிரஸ் கூட எடுத்துக்கலை, அவ அலமாரில இருந்ததை அப்படியே கொஞ்சம் இதுல எடுத்து வைச்சேன்" என்று அவனிடம் கொடுத்தார்.

இருவரும் ஜெயஸ்ரீயைத் திரும்பிப் பார்க்க.. இவர்கள் பார்ப்பது தெரிந்ததும் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தவள் அவசரமாக தலையை வேறு புறம் திருப்ப..

இருவருக்கும் அவள் தலையை திருப்பிய விதம் சிரிப்பை தான் கொடுத்தது... அவர் அங்கிருந்தே கை ஆட்டிச் சென்றார்.

அவர் சென்றவுடன் பேகை தூக்கிக் கொண்டு வீட்டின் புறம் சிபி நடக்க... ஜெயஸ்ரீ அவன் புறம் திரும்பவுமில்லை... அருகில் சென்று அமர்ந்தான், அப்போதும் அவன் புறம் திரும்பவில்லை.

"ரொம்ப சுயநலாவாதி ஆகிட்டேனா" எனவும்.

அதற்கு வெடுக்கென்று தலையைத் திருப்பியவள்... "ரொம்ம்ம்ம்பபபப.." என்பதைக் கண்களில் காட்டினாள், பேச முயலவில்லை.

"எவ்வளவு சுயநலாவதி ஆகிட்டேன் காட்டு!" என்று சிபி சொல்ல... கைகளை அகலமாக விரித்து, இவ்வளவு என்பது போல காட்ட..

“அந்தக் கைக்குள்ள நான் வந்துடட்டுமா” என்று சிபி கேட்கவும் அவனை விழியகற்றாமல் பார்த்தாள்.

## அத்தியாயம் இருபத்தி ஏழு :

விழியகற்றாமல் பார்த்தவள்.. சில நொடிகளில் கைகளை இறக்கிக் கொண்டாள் அவன் கேட்பது தேவையில்லை என்பது போல...

“நீ கையை இறக்கிவிட்டுடா, பார்க்கலாம் எப்படி அதுக்குள்ள நான் வராம போறேன்னு?” என்று புன்னகைத்தான்.

அந்தப் புன்னகை ஜெயஸ்ரீயைத் தொற்றவில்லை. அப்படியே தான் அமர்ந்திருந்தாள்... பார்வையை சிபியிடம் இருந்து திருப்பி வயல்வெளியை பார்க்க ஆரம்பித்தாள்.

“வா உள்ள போகலாம்” என்று சிபி அழைக்கவும்,

“நான் ஒன்னும் இங்க வரலை, அப்பா தான் கூட்டிகிட்டு வந்தார்” என்றாள் திக்கியபடி சற்று ரோஷமாக.

“சரி! இப்பவும் நீ உள்ள வரலை, நான் தான் கூட்டிட்டு போறேன்” என்று எழுந்து நின்று அவள் கை பிடிக்க கை நீட்ட.. அவள் கையை நீட்டுவதாக காணோம்.

அவனாகவே கையைப் பற்றி எழுவதற்காக இழுக்கவும், அப்போதும் எழுவதாக காணோம் என்றவுடன்.. குனிந்து அப்படியே அவளை தூக்கினான்... இறங்க, திமிரவெல்லாம் இல்லை, அவன் கையோடு வந்தாள்..

“என்ன நீ ரெண்டு நாள்ல வெயிட் குறைஞ்சிட்ட போல” என்று பேசிக்கொண்டே அவளைப் படியிடம் இறக்கி விட்டவன்... “ஒரு நிமிஷம்” என்று உள் சென்றான்... “ஆரத்தி நமக்கு நாமே எடுத்துக்குறோம்” என்று ஒரு தட்டோடு வந்தவன்.. அவளுடன் நின்று அவர்களுக்கு அவனே அதை சுற்றி... அவனுக்கு பொட்டு வைத்துக் கொண்டு... ஜெயஸ்ரீயிற்கு பொட்டு வைக்க... திரும்ப அவளின் கண்களில் கண்ணீர் நிறைந்து நின்றாள்.

அதைப் பார்த்து திகைத்தவன், எதுவும் சொல்லாமல் பொட்டு வைத்து, அந்தத் தட்டை ஓரமாக வைத்தவன், "வா" என்று அவளை உள் அழைத்துச் சென்று... "இரு வந்துடறேன்" என்று உடனே வெளியே சென்று அதை ஊற்றி வந்தான்.

அதுவரை நின்று கொண்டுதானிருந்தாள்... சிபி அவள் முன் சென்று நின்றவன்... "நீதான் உன் கைக்குள்ள என்னை விட மாட்ட.. நீ என் கைக்குள்ள வந்துடு" என்று கை விரித்து நிற்க...

"முடியாது போ!" என்ற பாவனையை முகத்தில் காட்டி நின்றாள்...

"அட என்ன இது பிடிவாதம், வா ஸ்ரீ!" என்று அவளைச் சற்று வேகமாக இழுக்க, அவன் மேல் மோதி நின்றவளை விடமாட்டேன் என்பது போல இறுக்கி அணைத்துக் கொள்ள... ஸ்ரீயிடம் ஒரு பிரதிபலிப்புமில்லை... அணைப்பை விடாமல் தலையை நிமிர்த்தி அவள் முகத்தை பார்த்தவன், "என்ன? என்ன பண்ணனும் நான், உன் கோபம் போக" என்று கேட்க...

அமைதியாக தான் இருந்தாள்...

"எதுக்கு கோபம்"

"நீங்க... என்னை... வேண்டாம்... போ... சொன்னீங்க..". என்று வார்த்தைகளைக் கத்தரித்து கத்தரித்து பேச,

"அவ்வளவு தானே அதுக்காக வராம இருப்பியா என்ன... பதிலுக்கு நீயும் என்னை வேண்டாம் போன்னு சொல்லிடு சரியாப் போயிடும்... பொதுவா நான் யார் பேச்சையும் கேட்கறது இல்லை, அதனால உன் பேச்சையும் கேட்க மாட்டேன், நீ வேண்டாம் போன்னு சொன்னாலும் வந்துடுவேன்" என்று சொல்ல...

அப்போதும் அவளின் கண்களில் கண்ணீர் தான்...

விளையாட்டுப் பேச்சையெல்லாம் விட்டு, "என்ன ஸ்ரீ?" என்று ஆதுரமாக ஒரு வார்த்தைக் கேட்கவும். அவன் மேலயே சாய்ந்து கொண்டு அழ ஆரம்பித்தவள் தான் நிறுத்தவேயில்லை... அப்படி ஒரு அழுகை தலையை நிமிர்த்தவேயில்லை...

எந்த சமாதானமும் எடுபடவில்லை... அப்படியே பின்னிருந்த கட்டிலில் அமர்ந்து, அவளை அமர்த்த... அவன் மடி சாய்ந்து வெகு நேரம் அழுது கொண்டிருக்க... சிறிது நேரத்தில் அவளிடம் அசைவு எதுவுமில்லை..

அவளைப் புரட்டிப் பார்த்தான், கண்கள் மூடியிருக்க... என்னவாயிற்றோ என்று பதறி பார்க்க... உறக்கத்தில் இருந்தாள்... “ஊப்ஸ்” என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டவன்.. அவளின் நெற்றியில் மென்மையாக முத்திரை பதிக்க, அது அவளின் நித்திரையை கலைக்கவில்லை. அவளை அசையாமல் படுக்க வைத்து, வீட்டில் என்ன இருக்கிறது என்று பார்க்க... ஒன்றுமில்லை...

அப்போது சமைக்கத் தேவையானதை லிஸ்ட் எழுதி... தெரிந்த ஸ்கூல் பையன் ஒருவனுக்கு தொலைபேசியில் அழைத்து சொல்ல... அவன் வந்து பணமும் லிஸ்ட்டும் வாங்கிச் சென்று வாங்கி வந்து கொடுத்தான்.

“எழுந்துவிட்டாளா” என்று பார்க்க எழவில்லை... அவனே சாதம் வைத்து, ரசம் வைத்து, உருளைக் கிழங்கை பொடிமாஸ் செய்து வைத்தான்.

குக்கர் சத்ததிற்கே விழிப்பு வந்து விட்டது... கண் திறந்து பார்த்தால் சிபி ஏதோ சமைத்துக் கொண்டிருப்பது தெரிய... அதை பார்த்துக் கொண்டே படுத்திருந்தாள்.

சிபி அவள் எழும்முன் சமைத்து விடவேண்டும் என்று அவசரமாக வேலை செய்து கொண்டிருந்தான், அதனால் இவள் புறம் கவனம் செல்லவில்லை.

அவன் திரும்பு சமயம் கண் மூடிக் கொண்டாள். அவன் வேலையை முடித்து இவள் புறம் வந்து பார்க்க... இவள் கண்கள் மூடியிருந்ததால் இன்னும் தூக்கம் போல என்று நினைத்து போய் ஒரு குளியல் போட்டு வேஷ்டி பனியனில் வந்தான்.

அதுவரை எழுந்து அமர்ந்திருந்தவள் இவன் வரும் சத்தம் கேட்டதும் படுத்துக் கொள்ள.. வந்தவன் இன்னுமா தூங்கறா என்னடா இது.. என்று முணுமுணுத்து அந்த இடத்தை விட்டு நகரப் போனவன், மூடிய கண்களுக்குள் அவளின் கருவிழிகளின் அசைவைப் பார்த்தவன்... விழித்து இருக்கிறாள் என்று புரிந்து சத்தமில்லாமல் அவளின் கட்டிலின்

பின்புறம் நின்று கொண்டான்.

சத்தம் எதுவும் கேட்காததால் மெல்ல ஜெயஸ்ரீ கண்விழித்து சிபி எங்கே இருக்கிறான் என்பது போல தேட...

சில நிமிடங்கள் அதை பார்த்தவன், “இங்கே இருக்கேன்” என்று குரல் கொடுக்க... விதிர்த்து திரும்பியவள்... பிடிபட்ட பாவனையை முகத்தில் காட்ட...

“எவ்வளவு நேரமா இது நடக்குது?” என்று கையைக் கட்டி மிரட்டலாக கேட்க...

“குக்கர் சத்தம் வந்ததுல இருந்து” என்று நிறுத்தி நிறுத்தி சொல்ல..

“அவ்வளவு நேரமா என்னை சைட் அடிச்சியா..” என்று சிபி கேட்க..

“கல்யாணம் ஆனதுல இருந்து அடிக்கறேன், இப்போ வந்து கேட்கறீங்க” என்ற பாவனையில் பார்க்க...

“புரியலை, சொல்லிடேன்!”

“கல்யாணம் ஆனதுல இருந்து அடிக்கறேன்”

“எதை?”.

அவளின் தலையில் மண்டு என்பது போலத் தட்டிக் கொண்டவள், “சைட்டை” என்றாள் கடுப்பாக.

“ஓஹ்! அது எனக்கு தெரியலைன்னு தான் இவ்வளவு அழுகையா?”

“ஆம்” என்பது போல முறைத்துக் கொண்டே ஜெயஸ்ரீ தலையசைக்க...

“மச்சான் கொஞ்சம் லேட் பிக்கப்” என்றான் வழக்கம் போல..

“இன்னும் எவ்வளவு நாள் சொல்வீங்க”

“நமக்கு பேரக் குழந்தைங்க வர்ற வரைக்கும்” என்று கண்ணடித்து சொல்ல...

ஜெயஸ்ரீ ஏதோ வாயில் முணுமுணுக்க...

“இப்போ என்ன?” என்றான் சிபி.

“பிள்ளைங்களுக்கு இன்னும் வழியைக் காணோம், இதுல பேரன் பேத்திங்களா?” என்று நிறுத்தி நிறுத்தி வாய் விட்டு சொல்ல...

“ஹா, ஹா” என்று சிபி வாய் விட்டுச் சிரித்தான்.

அப்போதும் ஜெயஸ்ரீ புன்னகைக்க வில்லை.

“சரி, முகம் கை கால் கழுவிட்டு வா, சாப்பிடலாம் பசிக்குது, இன்னும் காலையில இருந்து ஒன்னும் சாப்பிடலை” என்றான்.

அந்த வார்த்தைகள் சற்று வேலை செய்ய... எழுந்து நேராக அமர்ந்தாள்... ஷூ கழற்ற வேண்டும், சிபி இருப்பதால் தயங்க... சிபி, “இரு நான் கழட்டுறேன்” என்றுப் புடவையை விலக்க முனைய... “வேண்டாம்!” என்பது போல ஜெயஸ்ரீ இழுத்துப் பிடிக்க...

“விடு” என்று அவளை அதட்டி.. ஷூவை கழற்ற, புடவையை அதுவரை தூக்கினான். முழங்கால்களுக்கு மேல் அந்த இடத்தில் துணி வைத்து அதன் மேலே அந்த ஷூவின் ஸ்ட்ராப்பை கட்டி இருந்தாள்.

அந்த ஸ்ட்ராப்பை விலக்கி, ஷூவைக் கழற்ற, “ஷ்ஷ்” என்ற சத்தம்... என்ன என்பது போல பார்க்க ஸ்ரீயின் முகத்தில் வலியின் சாயல்..

“என்ன ஸ்ரீ?” என்று கேட்டுக் கொண்டே அந்த துணியை விலக்க.. ஷ் என்று அவனையறியாமல் சத்தம் செய்தான் சிபி... அங்கே தீப் புண்..

“ஐயோ, எப்படி ஆச்சு?” என்று சிபி பதற... ஜெயஸ்ரீ அசையாமல் அமர்ந்து இருந்தாள்... அதைப் பார்த்ததும், “நீ... நீயே செஞ்சிகிட்டயா?” என்றான் இன்னும் பதறி,

“ஆமாம்!” என்பதுப் போல, அவள் தலையசைக்க, “ஏண்டி? ஏண்டி இப்படிப் பண்ணின?” என்று சிபி கத்தி... “சொல்லு” என்று அவளை அதட்ட,

“உங்ககிட்ட வரணும் போலவும் இருக்கு, வேண்டாம் போலவும்

இருக்கு, நெஞ்செல்லாம் வலிச்சது... அதான் அந்த வலி தெரியாம இருக்க இந்த வலியை செஞ்சிகிட்டேன்... தானாவும் வலிக்கும், இந்த ஸ்ட்ராப் அழுத்த அழுத்த இன்னும் வலிக்கும், ரொம்ப வலிக்குது" என்று அவள் திக்கி திக்கி கண்களில் நீர் நிறைய சொல்ல...

அப்படியே அமர்ந்து விட்டான்... "தப்பெல்லாம் நான் செஞ்சா தண்டனை உனக்கா...?"

"இந்த வலி மட்டுமில்லை, நீங்க போனது கூட அப்படித்தான்" என்று ஜெயஸ்ரீ சொல்ல...

அப்படியே அமர்ந்து விட்டான், "என்ன பேச?" என்று கூட தெரியவில்லை.

"நீங்க என்னை நினைக்கவேயில்லை தானே!" என்று அவள் கேட்கவும்...

"ப்ளீஸ் ஸ்ரீ! நீ சரியா புரிஞ்சிக்கணும், உன்னை மட்டுமில்லை நான் யாரையுமே நினைக்கலை... அப்படி என் வாழ்க்கைல எல்லாம் தப்பா நடக்கும்னு நான் நினைச்சதேயில்லை. அதோட எதிரொலி நான் யாரையும் நினைக்க இஷ்டப்படலை..."

"சில சமயம் ஞாபகம் வரும் போது கூட அதை ஒதுக்க தான் முயற்சி செஞ்சிருக்கேன். உண்மையா சொல்லணும்னா காதலோடவோ இல்லை நீ வேணும்னா நான் நினைச்சது இல்லை. ஆனா இப்படி விட்டுட்டு வந்துடோமேன்னு என்னை நானே கீழ நினைச்சிருக்கேன். அப்போக் கூட கண்டிப்பா திரும்ப நீ என்னோட வரமாட்ட, உன்னை ஏன் நினைக்கணும் நினைச்சிருக்கேன்... ஆனா இதெல்லாம் உன்னை திரும்ப பார்க்கற வரைக்கும் தான்..."

"அதுதான் எனக்கு கோபமா வருது? இப்போ எதுக்கு உங்ககூட வரணும்னு! எதுக்கு நான் மட்டும் உங்களை நினைச்சிட்டு இருந்தேன்னு..."

"அது உன்னோட தப்பு இல்லை... நம்ம இந்தியப் பெண்களோட தனித்தன்மையே அதுதான்... நம்ம ஊர்ல நடக்கற மிகப் பெரிய காமெடி என்னன்னு கேட்டா கல்யாணம் தான்" என்றான் சிபி.

“இவர் என்ன பேசுகிறார்” என்று ஜெயஸ்ரீ விழி விரித்துப் பார்க்க.. “நிஜமா!” என்றான்.

“யோசிச்சுப்பார் தெரியாத பசங்க கூட ஒரு வார்த்தைக் கூட பேச விடாத பெத்தவங்க.. யார் என்னன்னு தெரியாது, ஆனா ஜாதகம், பொருத்தம்னு பார்த்து... ஒரு ரெண்டு தடவை நேர்ல பார்த்து, குடும்பத்தை பார்த்து... கல்யாணம் பண்ணிக் கொடுத்து... அடுத்த நிமிஷம் அவனோட அனுப்பியும் வெச்சிடறாங்க...”

“ஆனா அந்தப் பெரிய காமெடியை... ஒரு நல்ல விஷயமா மாத்துறது நம்ம பெண்கள் தான்! அவனைப் பிடிச்சாலும் பிடிக்கலைன்னாலும் அவனை விட்டு மாறுறது இல்லை மனசளவுல கூட... எல்லோரும் இப்படி தான்!”

“எங்கயோ ஒன்னு ரெண்டு தப்பலாம்... டைவர்ஸ் கேஸ் அதிகமான இந்தக் கால கட்டத்துல கூட... இப்போ இருக்குற ஜனதொகைக்கு நம்ம திருமணங்கள் அதிகம் இப்படித்தான்! இதுல சேர்ந்து வாழறவங்க தான் அதிகம்! பிரிஞ்சு போறது ரொம்ப கொஞ்சம் பேர் தான்!”

“அதனால நீ இப்படி உன்னை கஷ்டப்படுத்திக்க வேண்டிய அவசியமில்லை. நான் வராமலே போயிருந்தாக் கூட நீ வேற யாரையும் கல்யாணம் செஞ்சிருக்க மாட்ட...”

“அப்போ தெரிஞ்சு ஏன் போனீங்க... மடையன் மாதிரி?” என்று கத்திப் பேச முயன்று முடியாமல் விட்டு விட்டுப் பேச..

“நீ வேற யாரையும் கல்யாணம் பண்ணியிருக்க மாட்ட தான்! அதுக்காக என் கூட அந்த சமயத்துல வந்திருப்பேன்னு தோணலை... அதுவுமில்லாம நீயே சொல்ற தானே நான் மடையன்னு..”

“நீங்க பேசிப் பேசி என்னை குழப்பறீங்க...”

இப்படிப் பேச்சுக்கள் பல நடந்தாலும், இதமாக அந்தப் புண்ணை சுற்றி தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான்... ஜெயஸ்ரீயிற்கு எரிச்சல் சற்று குறைந்தது.

அவளின் முகத்தில் வலியின் சாயல் சற்று மட்டுப் படவும், “சரி, நீ

தெளிவா என்னை என்ன பண்ணலாம்னு சொல்லு! ஆனா முதல்ல சாப்பிடலாம்...” என்று சொல்லிக் கொண்டே அவளின் காயத்தைப் பார்த்தான்.

ஆற்றாமைத் தாங்காமல், “துணிப் பட்டாளே இந்தப் புண் எரியும்! என்ன செஞ்சி வெச்சிருக்குற நீ? எனக்கு சூடு வெச்சிருந்தா அதுல ஒரு அர்த்தம் இருக்கு! நீயேன் வெச்சிக்கிட்ட...” என்றான்.

சில நொடிகள் அவனை பார்த்தவள், “நீங்க சொன்ன மாதிரி நம்ம பெண்கள் அனேகம் பேர் அவங்களைத் தான் வருத்திக்குவாங்க கணவன் மார்களை இல்லை, இது இந்தியப் பெண்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுசும் பொருந்தும்” என்று ஜெயஸ்ரீ நிறுத்தி நிறுத்தி பதில் சொன்ன விதத்திலேயே சற்று தெளிந்து விட்டாள் என்று புரிந்தது.

“இப்போ என்ன பெண்களோட பெருமை பேசவா இங்க இருக்கோம்... இது முட்டாள்தனம்.. இப்படி செய்வியா?” என்று மீண்டும் சிபி கோபப்பட..

“இன்னும் பெருசா யோசிச்சேன், அப்புறம் இது போதும்னு விட்டுட்டேன்” என்பதை வார்த்தையால் சொல்லாமல் சைகையில் தான் சொன்னாள்.

“என்ன பெருசா?” என்றான் கலவரமாக.

“இந்தக் கால்ல வெக்கலாம் போல” என்று சைகையில் காட்டியவள், “அப்புறம் இது ஒண்ணாவது நல்லா இருக்கட்டும்னு விட்டுட்டேன்” என்பதை வார்த்தையால் சொல்ல.. அவளின் முகத்தில் காலைக் குறித்த வருத்தம்.

“ப்ச், யார் வருத்தப்பட்டாலும் நீ இதுக்காக வருத்தப்படக்கூடாது... நீ செஞ்சது வெளில தெரியாம இருக்கலாம், ஆனா அந்தப் புகழை, அந்த ஆசீர்வாதத்தை, கடவுள் நம்ம குழந்தைகளுக்கு கொடுப்பார்”.

“எப்பவும் வருத்தமில்லை, ஆனா சில சமயம் முடியாத போது, இப்படி வலிக்கும் போது, ஏன் இப்படி ஆச்சுன்னு கொஞ்சம் வருத்தமா இருக்கும்” என்று தன் மனதை மறையாமல் உரைத்தாள்.

“சும்மா பேச்சுக்கு சொல்றேன்னு நினைக்காத ஸ்ரீ, இல்லை கணவன்ற உரிமையில் சொல்றேன்னு நினைக்காத, நான் இருக்கேன் உனக்கு...”

“தானா வர்ற வலி வேற, இப்படி நீ தயவு செஞ்சு இழுத்து வைக்காத.. ஏதோ ஒன்னு நடுவுல பிரிஞ்ஜோம், நான் உன்னை விட்டுப் போனேன் தான்! ஆனா உன்னை விட்டுப் போகணும்னு நினைக்கலை, அது நடந்துடுச்சு உனக்கு புரியுதா?” என்றான் தவிப்பாக...

“நான் உன்னை நினைக்கலை தான்... ஆனா வேற யாரையும் நினைக்கலை... அதுவும் இந்த ஒரு மாசம் வரை தான்... நீ என்னை நினைக்கறன்னு தெரிஞ்ச அப்புறம், உன்னைப் பத்தி தான் அதிகம் நினைச்சிருக்கேன்.. இது மனைவின்னு மட்டுமில்லை... ஏன்னா கல்யாணம் ஆன நாள் முதல் காதல் இருந்ததோ இல்லையோ மனைவின்ற நினைப்பை நான் நிமிஷமும் மறந்தது இல்லை” என்றான்

அது ஜெயஸ்ரீயிற்கு நன்கு தெரியும், கூட இருந்த அந்த சில நாட்களில் பல முறை அதை சிபி உணர்த்தி இருந்தான்.

“இது இன்னும் பேசிப் பேசி புரிய வைக்கிற விஷயமில்லை, நாம வாழற வாழ்க்கையில உனக்கு உணர்த்துற விஷயம், உனக்கு உணர்த்துவேன்னு எனக்கு நம்பிக்கையிருக்கு, அந்த வாய்ப்பை எனக்கு குடு” என்றான்.

“வாய்ப்பெல்லாம் கொடுக்க முடியாது” என்பதுப் போலத் தலையை இடமும் வலமும் ஆட்டினாள்..

“ஏன்?”

“எனக்கு” என்பது போல கை காட்டியவள்... “செலக்டிவ் அம்னீஷியா..”

“இன்னைக்கு காலையில தான் கல்யாணம் ஆச்சு, அப்பா இங்க விட்டுட்டுப் போயிருக்கார், அவ்வளவு தான் ஞாபகம் இருக்கு” என்று நிறுத்தி நிறுத்தி ஒரு ஒரு வார்த்தையாகப் பேசினாள்...

முதலில் சிபிக்குப் புரியவில்லை, புரிந்ததும் புன்னைகைக்க..

“மச்சான் லேட் பிக் அப்” இந்த முறை சிபி சொல்லவில்லை... அவளே

சொல்லவும்... சிபியின் முகம் புன்னகைத்தாலும்... ஒரு மலர்ச்சி இல்லாதது போல தோன்ற...

இரு கைகளையும் இப்படிப் பிடிங்கள் என்பது போல காட்ட... சிபி புரிந்தும் புரியாமல் கைகளை விரிக்க... அதில் வேகமாக அடங்கி அவன் கழுதைக் கட்டிக் கொண்டு... "மச்சான் லேட் பிக் அப் இல்லை... பிக் அப் பே இல்லை" என்று நிறுத்தி நிறுத்தி சொல்லி... அவனைக் கலாய்க்க..

"தேங்க்யூ..." என்றான் சிபி அணைப்பை விலக்காமல்... அவளின் அணைப்பில் நிம்மதியுற்றவனாக..

ஆனால் அணைத்த போது, புண்ணில் சேலை பட்டது எரிச்சல் கொடுக்க... "ஷ்" என்று அவளறியாமல் முகம் சுளித்தவள், இருக்கும் சூழலை கெடுக்க விருப்பமில்லாமல்... "இதுக்கு தேங்க்ஸ்ஸா, நான் உங்களைத் திட்டுறேன் புரியலையா" என்று தலை நிமிர்த்தி முகம் பார்த்துக் கேட்க... அவளின் முகத்தில் வலியின் சாயல் பார்த்தவன்...

ஒரு புன்னகை மட்டுமே கொடுத்தான்... காயம் ஆற கண்டிப்பாக நாட்கள் ஆகும் இப்படி செய்துவிட்டாளே என்று வருத்தமாக இருந்தது.

சிபி அப்படியே அமைதியாகிவிட்டது புரிந்தது... ஜெயஸ்ரீயும் எழ முற்பட... இறங்கி இரண்டு எட்டு வைப்பதற்குள் வலியில் துடித்து விட்டாள். அந்தப் புண்ணில் சேலை உராயவும்... வலி... காயம் செய்த போது கூட இப்படி வலியில்லை, இப்போது அதிகம் எரிந்தது.

சிபி சண்டையிட்டுச் சென்றதும், ஏதோ ஒரு ஆத்திரத்தில் செய்து விட்டாள்... சிபியை பார்க்கும் வரை அந்தக் கோபம் ஆத்திரம் இருக்க... அதுவரை ஒன்றும் தெரியவில்லை... இப்போது அது எல்லாம் மறைந்து விடவும்... அந்த இடம் எரிந்தது.

அதுவரை இருந்த லகுதன்மை போய்.. "இப்படி ஆகும்னு தெரியாது ரொம்ப எரியுது" என்று கண்களில் நீரோடு சொல்ல...

தீக் காயம் பார்த்தவுடனேயே அது நிறைய வலியைக் கொடுக்கும் என்று சிபி அறிந்தது தான்.

அவளை தூக்கிக் கொண்டவன்... "சேலை அதுல படாம அதுக்கு மேல

வரை தூக்கு” என்று சொல்ல... ஜெயஸ்ரீ அவன் சொன்னது போல செய்ய உராய்வு இல்லாததால் வலி குறைந்தது...

குளியலறை அருகில் விட்டவன்... “படாம தூக்கிப் பிடி” என்று சொல்லி சென்று அவளின் உடைகள் இருந்த பையை ஆராய... அதில் லாங் ஸ்கிர்ட் டாப்ஸ் இருக்க... “இதைப் போடு” என்று கொடுத்தான்...

“நீங்க போங்க” என்று அவள் சொல்ல...

“சப்போர்ட் இல்லைன்னா விழுந்துடுவ, கஷ்டம்..”. என்று போகமாட்டேன் என்பது போல நிற்க... ஜெயஸ்ரீயின் முகத்தில் தயக்கத்தை வெகுவாகப் பார்த்தவன்... “நான் கண் மூடிக்கறேன்” என்று சொல்லி...

கண்களையும் மூடி, அவள் அவனைப் பிடித்துக் கொண்டு உடை மாற்றும் வரை பொறுமையாக நின்று... பின்பு வெளியே வந்து, அவள் சற்று பிரெஷாகி வந்தவுடன்.. அவளை அமர வைத்து, அந்த இடத்தில் துணி படாமல் தூக்கி வைக்க...

“இப்படியே எப்படி உட்கார்ந்து இருப்பேன்” என்று பாவமாக கேட்டவளிடம்... காலில் இருந்து ஒரு போர்வையால் மூடி விட்டான்.

காயம் இருந்த பகுதி மட்டுமே இப்போது வெளியில் தெரிந்தது... மற்ற பாகங்கள் எல்லாம் மூடி இருக்க... ஜெயஸ்ரீயை வசதியாக சாய்த்து அமர்த்தி உணவை தட்டில் போட்டுக் கொடுக்க..

அவனுடைய கவனிப்பில் ஜெயஸ்ரீ நெகிழ்ந்து இருந்தாள். அதில் பேச்சே வரவில்லை... “நீங்களும் சாப்பிடுங்க” என்று சைகை செய்ய...

அவனும் ஒரு தட்டில் எடுத்து வந்து அவளின் அருகில் அமர்ந்து சாப்பிட்டான்... அவன் உணவே உண்டு முடித்து விட்டான், இருமுறை சாதம் போட்டுக் கொண்டான்.. ஆனால் ஜெயஸ்ரீ அப்படியே வைத்திருக்க...

“நல்லா இல்லையா...?”

“ரொம்ப நல்லா இருக்கு” என்பது போல சைகை காட்டினாள்...

“அப்புறம் ஏன் வெச்சிக்கிட்டே இருக்க...?”

“என்னவோ சாப்பிட முடியலை, அப்புறம் சாப்பிடட்டுமா” என்பது போல அவள் சைகை செய்ய...

அதை வாங்கி மூடி வைத்தவன்..

“தனியா இருப்பியா, ஒரு அஞ்சு நிமிஷத்துல வந்துடறேன்” என்றான்.

“எங்க போறீங்க?” என்று ஸ்ரீயின் கண்களில் கலவரத்தைப் பார்க்கவும்.. “வந்துடறேன்!” என்று சொல்லிச் சென்றவன்... சிறிது நேரம் கழித்து ஒரு பெண்மணியை அழைத்து வந்தான்.

“நம்ம ஜி ஹெச்ல சிஸ்டரா இருக்காங்க..” என்று சொல்லவும்...

அந்தப் பெண்மணியும் அவளின் தீக்காயத்தை ஆராய்ந்து... அவன் தீப்புண் என்று சொல்லியிருந்ததால் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு ஊசியைப் போட்டு... சில மாத்திரைகளையும் கொடுத்து, அந்தக் காயத்தை ஏதோ மருந்து கொண்டு சுத்தம் செய்ய.. அது ஜில்லென்று இருக்க எரிச்சல் சற்று குறைந்தது.

பிறகு ஏதோ ஒரு ஆயின்மெண்டை கொடுத்து, “இதைப் போடுங்க... எப்படியும் ஒரு வாரம் பத்து நாள் ஆகும்... தண்ணி படக் கூடாது, அப்புறம் சீல் பிடிக்கும், தெரியாதது இல்லை... இவ்வளவு பெரிய தீக்காயம் ஏற்கனவே ஆகியிருக்கு” என்று ஜெயஸ்ரீயின் வெந்து போன கால்களை காட்டிச் சென்றார்.

“நீங்க எதுக்கும் ஒரு ரெண்டு மூணு நாளைக்கு வாங்கக்கா” என்றான்.

அதன் பிறகு ஸ்ரீயின் கையில் ஒரு கவரைக் கையில் கொடுத்தான்.. அது ஷார்ட் டாப்ஸ்.. “இது மட்டும் போட்டுக்கோ, இது புண்ல படாது” என்று வார்த்தையோடு..

“எங்க கிடைச்சது எல்லாம் அவ்வளவு சீக்கிரம்...”

“எல்லாம் இங்க கிடைக்கும் கொஞ்சம் தூரம் போனா... இதை மட்டும் போட்டுக்கோ... கீழ பேன்ட் போடவேண்டாம்” என்ற வார்த்தையோடு...

“என்ன?” என்று ஜெயஸ்ரீ கேட்க...

“என்ன? என்ன? நாளைக்கு உங்க அப்பா வந்து பார்க்கும் போது இந்தக் காயம் பத்தி தெரிஞ்சா என்ன நினைப்பார்.. இன்னும் எதுவும் சரியாகலைன்னு வருத்தப்பட மாட்டார்... சீக்கிரம் புண் ஆறணும்... அதுவரை நீ ஷூ போடவே கூடாது” என்றான். குரலில் ஒரு கலக்கம், வருத்தம், கோபம், என்று அத்தனையும் கலவையாக சேர்ந்து இருந்தது.

மீண்டும் அவளின் தட்டைக் கொண்டு வந்து கொடுத்தவன், “சாப்பிடு” என்றான்.

“இல்லை, பசியில்லை” என்றாள்.

“இது பிடிக்கலையா. வேற வாங்கிட்டு வந்து கொடுக்கட்டுமா?” என்று கேட்க...

“அச்சோ, அப்படி இல்லை!” என்று வாங்கிச் சாப்பிட்டாள்.

பின்பும் அவளுக்கு தேவையான உதவிகள் செய்து முடித்த போது மணி பத்திற்கும் மேல்...

“தூங்கு” என்றான், அவள் படுத்துக் கொள்ளவும்... அவனும் கீழே படுத்துக் கொண்டான். அவள் படுத்திருந்தது கயிற்றுக் கட்டில், கண்டிப்பாக இரண்டு பேர் படுக்க முடியாது.

ஜெயஸ்ரீ மேலே படுத்திருந்தாலும், சிபி கீழே படுத்திருந்தாலும் இருவருக்குள்ளும் ஒரே எண்ணம் தான். இரண்டு வருடம் தான் ஓடிவிட்டது... இன்னும் எதுவும் மாறவில்லை, முன்பு போல ஜெயஸ்ரீ மேலே சிபி கீழே...

மாத்திரைகளின் தாக்கத்தால் ஜெயஸ்ரீ கண் அசர.. நடுவில் விழிப்பு வர.. சிபி படுத்திருக்கும் இடத்தைப் பார்த்தால், அவனைக் காணவில்லை எங்கே என்பது போல பார்க்க... வாயிற் கதவு திறந்து இருக்கவும்...

மெதுவாக இறங்கி... தட்டுத் தடுமாறி.. வாயில் கதவை அடைந்து வெளியே பார்த்தால், படியில் இருட்டை வெறித்து அமர்ந்திருந்தான் சிபி..

அவன் அங்கிருந்த தூணில் சாய்ந்து அமர்ந்திருந்த தோற்றம் ஜெயஸ்ரீயை உருக வைத்தது. ‘

## அத்தியாயம் இருபத்தெட்டு :

என்னவோ தடைகள்.. சேர்ந்து வாழவில்லை... இப்போது சேரும் சமயம் தானும் அவனை மிகவும் வருத்தி விட்டது புரிந்தது.

மெதுவாக வெளியே வர.. அந்த அரவம் கேட்டுத் திரும்பியவன்... அவளைப் பார்த்ததும் வேகமாக எழுந்து அருகில் வந்தான்... “எங்க வர்ற நீ? வா படு, காத்து விசு விசுன்னு அடிக்குது” என்றான்.

“நான் இங்க தான் இருப்பேன்” என்று சைகை செய்ய...

“சொன்னா கேட்கணும்! வா உள்ள” என்றான்.

“மாட்டேன்...” என்பதுப் போல தலையாட்டினாள்..

“என்ன பண்ணனும்?”

“இங்க உட்காரணும், அங்க காத்தே வரலை” என்று சைகை காட்டினாள்.

“ஆம், அந்த ஃபேன் மெதுவாக தான் சுத்தும்.. சரி வா!” என்று அவளை அமரவைத்துக் காலை நீட்டி விட்டான்... புண்வரை துணி வருகிறதா என்று பார்க்க அது வரவில்லை..

பிறகு அவனும் பக்கத்தில் அமர... “சாரி, இனிமே, இந்த மாதிரி செய்ய மாட்டேன்... சரியாயிடும், வருத்தப்படாதீங்க!” என்றாள், அவன் தோள் சாய்ந்து.

எதுவும் பேசாமல் சிபி அவளை ஆதரவாக அணைத்துக் கொள்ள.. மீண்டும், “சாரி” என்றாள்.

“ப்ச் விடு!... மாத்தி, மாத்தி, சாரி சொல்லியே நம்ம காலம் ஓடிடும் போல! என்ன சொல்ல...” என்று வருத்தத்தோடு, சிபி சொல்ல... அந்தக் குரல் அவனின் வேதனையை எடுத்துச் சொல்ல..

அந்த வேதனையைக் குறைக்க, இல்லை, இல்லாமல் செய்ய முடிவெடுத்தவள்...

இன்னும் அவன் மேல் நன்றாக சாய்ந்து கொண்டு, அவளும் அவனைச் சுற்றி கையைப் போட்டுக் கொண்டு... “ஆமாம்” என்று சொன்னாள்..

சட்டென்று அவளைப் பார்த்து திரும்பியவன், “என்ன ஆமாமா, இன்னும் என்ன செய்யறதா உத்தேசம்” என்று சிபி கோபமாகக் கேட்க...

“உத்தேசமா? தெரியலை?” என்றாள் நிறுத்தி நிறுத்தி... குரல் சோகத்தைக் காட்ட... முகம் கிண்டலைக் காட்டியது...

“என்ன கிண்டல் பண்ற?”

“ம்ம்ம்ம்! கல்யாணம் ஆனதுல இருந்து சைட் அடிக்கறேன் நான்... ஆனா என் மச்சான் என்னை இன்னும் சைட் அடிக்கலை... அது கூட பரவாயில்லை, நான் டிரஸ் மாத்தினா கண்ணை மூடிக்கறார்... அவ்வளவு சகிக்காம இருக்கேன் போல... நான் ஹாஃல்ப் டிரஸ்ல இருந்தா போர்த்தி விடறார்... நான் இப்படி அரையும் குறையுமா உட்கார்ந்து இருக்கறேன், சோக கீதம் வாசிக்கறார்... ரொம்பா நல்லவர்” என்று முகத்தைப் பாவம் போல வைத்துச் சொல்ல...

அவளை முறைத்த சிபி... “என்ன சைட் அடிக்கலையா? எப்படி அடிக்க... இவ்வளவு புண்ணு பண்ணி வெச்சிக்கிட்டு... முகத்துல வலியைக் காட்டும் போது சைட் அடிப்பாங்களா... கண்ல தண்ணி விடற புண் எரிச்சல்ல... இதுல நீ டிரஸ் மாத்துற வேதனையைப் பார்ப்பாங்களா... ஹாஃல்ப் டிரஸ்ல இருக்கும் போது, அந்தப் புண் தான் கண்ணுக்குத் தெரியுது அப்புறம் எதைப் போய் ரசிக்க..”

“ரொம்ப நல்லவன் எல்லாம் இல்லை நானு, இன்னும் சேன்சே கிடைக்கலை” என்றான் கடுப்பாக...

“சேன்ஸ் எல்லாம் கொடுப்பாங்களா? க்ரியேட் பண்ணிக்கணும்...!”

“என்னத்த க்ரியேட் பண்ணுவாங்க? புண்ணு ஆறுர வரை ஒன்னும் க்ரியேட் பண்ண முடியாது” என்றான்.

“ஆங்!” என்று விழித்தவள், “என்ன? அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...?”

“ம், விளங்கும்! சம்மந்தம் எல்லாம் விளக்க முடியாது! நீ சின்னப் பொண்ணு..”

“ம், எனக்குக் கல்யாணம் ஆகிடுச்சு... நான் சின்னப் பொண்ணா...” என்று முகத்தை சுருக்க...

“கல்யாணம் ஆகி என்ன பண்ண, கிழிஞ்சது... நீ சின்னப் பொண்ணு தான்! இல்லைன்னா இங்கப் போய் சூடு நீயே வெச்சிக்குவியா?” என்றான் கடுப்பின் உச்சமாக...

“அப்போ!!!!!!!! மச்சான் மேல தப்பில்லை! நான் தான் தப்பு...!” என்றாள் பாவனையாக...

“புரிஞ்சா சரி...” என்றான் சிபி...

“இன்னும் புரியவைக்கவேயில்லை... இதுல புரிஞ்சா சரியா?” என்றாள் நக்கலாக...

“நீ எவ்வளவு பேசினாலும் மச்சான் அசர மாட்டேன்..”

“ஓஹ்! அவ்வளவு ஸ்ட்ரிக் ஆபிசரா நீங்க..”

“ம், ரொம்ப... வா! காத்து இன்னும் வேகமாக அடிக்குது...!” என்று அவளை அணைத்திருந்த அணைப்பை விலக்கி எழுந்தான்...

“தூக்கு!” என்பது போல ஜெயஸ்ரீ கையை நீட்ட... அவளை அப்படியே வாரி எடுத்தான்.

பின்பு உள்ளே போய் கட்டிலின் அருகில் இறக்கி விட... “போடாங்க!” என்ற பாவனையை முகத்தில் ஸ்ரீ காட்ட... சிரித்து விட்டவன்..

“தனியா படுத்தா தூக்கம் வரலை! இங்க படுக்கறியா” என்று கீழே இருந்த பாயைக் காட்டினான்.

“எனக்காக ஒன்னும் பொய் சொல்ல வேண்டாம்! நல்லா தூங்குங்க!”

என்று வார்த்தையைக் கத்தரித்து கத்தரித்து ஜெயஸ்ரீ பேச…

“ஓஹ்! பொய்ன்னு தெரிஞ்சு போச்சா” என்று இன்னும் சிரிக்க…

“அய்யே! சிரிப்பை பாரு.. கல்யாணம் ஆன நாள்ல இருந்து பார்த்துட்டு தான் இருக்கேன், சரியான சாமியார்” என்றாள்.

“அய்யே!” என்று அவளைப் போல திருப்பிச் சொன்னவன், “நான் சாமியார் எல்லாம் இல்லை… ஆசாமி தான்!” என்று அவளை இடையோடு அணைத்துப் பிடிக்க முற்பட்டு, அவளுக்கு வலிக்கும் என்று அவசரமாக விட்டவன்…

“பாரு! என்ன செஞ்சு வெச்சிருக்கன்னு என்னோட வேதனை உனக்கு புரியாது! இதுல என்னைக் கிண்டல் பண்ற?” என்றான் வருத்தமாக..

புன்னகைத்தாள்.. “சிரி” என்று செல்லமாக அவளின் தலையில் முட்டினாலும்… அவன் முகம் வேதனையைக் காட்டியது. கைப்பிடித்து, “இங்கேயேப் படு” என்று கீழே அவளைப் படுக்க வைத்து, அவனும் இடைவெளி விட்டு அருகில் படுத்துக் கொண்டான்.

“அப்பாகிட்டயும் அம்மாகிட்டயும் பேசினேன்! நீ இங்க வந்துட்டேன்னு சொல்லிட்டேன்” என்றான்.

“ம்! என்ன சொன்னாங்க?”

“அவ்வளவு சந்தோஷம், அப்பாவுக்கும் அம்மாவுக்கும்… ஆனா இந்த சந்தோஷம் அவங்களுக்கு பத்தாது.. நிறைய கடன் வீட்ல, எல்லாத்தையும் சரி பண்ணனும்! உடனே முடியாது! ஆனா சில வருஷத்துல சரி செய்யணும்..”

“எப்படி, முடியுமா?”

“ஏன் முடியாது? ரெண்டு வருஷமா விளைச்சல் இல்லை.. அதில்லாம தேக்கு மரம் ஒரு ரெண்டு ஏக்கர்ல இருக்கு… சில மரங்களை அதுல வெட்டி எடுத்து சீர் பண்ணனும்… அப்படி செய்யும் போது எப்படியும் அதுல சில லட்சம் லாபம் வரும், ஆனா முழுமையான லாபம் இருபதஞ்சி முப்பது வருஷம் கழிச்சு… கோடில வரும்… அதுவரை நடுவுல இருக்குற

மரத்தை அஞ்சு வருஷத்துக்கு ஒரு முறை வெட்டி எடுத்து சீர் செய்யணும் அப்போ எல்லாம் லாபம் வரும்”.

“இப்போ அப்படி செய்யும் போது முக்கால் வாசி கடன் அடைஞ்சிடும்! அப்புறம் விவசாயம் செய்ய ஆரம்பிச்சா எல்லாம் அடைச்சிடலாம்! நம்பிக்கை இருக்கு… நிலத்துல காலே வைக்கலை அப்பா… இந்த அருள்மொழியும் வர்மனும் என்னத்தை பண்றாங்க… கைக்கும் வாய்க்கும் பத்தாம…”

“இதுவரை நான் பணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கலை! ஆனா இனிமே அப்படி இருக்க முடியாது. அவங்க வாழ்க்கையை எல்லாம் சீர் செஞ்சு கொடுக்கணும்.. அப்போதான் எனக்கு முழுசா நிம்மதி!”

“எல்லாம் சரியாகிடும்!” என்று ஸ்ரீயும் நம்பிக்கை கொடுத்தாள்.

அதன் பிறகு இருவரிடமும் பேச்சில்லை… சிறிது நேரம் கழித்து, “சாரி இனிமே இப்படிப் பண்ண மாட்டேன்” என்று ஜெயஸ்ரீ மீண்டும் மெதுவாகச் சொல்ல…

அவளை ஒட்டிப் படுத்துக் கொண்டவன், “தூங்கு எல்லாம் சரியாயிடும்… சரியாகலைன்னாலும், சரி பண்ணிடறேன்…” என்று புன்னகையோடு அவள் முகம் பார்த்து சொல்ல…

அந்தப் புன்னகை ஜெயஸ்ரீயையும் தொற்ற… அவனை இன்னும் ஒட்டிப் படுத்தாள்.

“என்னை உசுப்பேத்தி ரணக்களமாக்காம விடறதில்லைன்னு ஒரு முடிவோட இருக்கியா” என்றான்.

“ஆமாம்!” என்பதுப் போலத் தலையாட்ட.. எழுந்து உட்கார்ந்தவன்… “உன் டிரஸ் எடுக்கும் போதே பார்த்தேன்! மறந்துட்டேன்!” என்று எழுந்து போய்… அவளின் ஹேண்ட் பேகை எடுத்து வந்தான்…

அதில் அவன் கொடுத்த கொலுசு டப்பா…

“என் டிரஸ் எடுக்கும் போது இதை எதுக்கு பார்த்தீங்க…”

அசடு வழிந்தவன், “கோபத்துல இதை தூக்கி போட்டுட்டியான்னு பார்த்தேன்”

“நான் ஒரு வேலை பீரோல வெச்சிருந்தா…?”

“உன்னோட வெச்சிருப்பன்னு ஒரு நம்பிக்கை” என்று புன்னகைக்க… அவனின் மலர்ந்த முகம் ஸ்ரீயை வசீகரிக்க… அவனைப் பார்த்திருந்தாள்.

“போட்டுவிடட்டுமா?” என்று அவன் கேட்க விரும்புவது தெரிந்து, போட்டு விடுங்க” என்று அவளே சொல்ல…

அவளுக்கு வலிக்காமல் காலைத் தூக்கி மடியில் வைத்து இரண்டு கால்களிலும் அணிவித்தான்.

“இது போட்டதுக்கு அப்புறம் என் கால் கொஞ்சம் அழகா இருக்கில்ல” என்றாள் கருகிப் போன அவளின் கால்களை பார்த்துக் கொண்டே…

“கொஞ்சம் இல்லை, ரொம்ப அழகு… உன் கால்… உன் முகம்… உன் சிரிப்பு..” என்று சொன்னவன் அதற்கு மேல் சொல்ல வராமல் நிறுத்த…

“அப்புறம்?” என்று ஸ்ரீ ஆர்வமாக கேட்பது போலக் கிண்டல் செய்ய…

“அதான் எனக்கு வர்ணிக்க வரலைன்னு தெரியுதில்ல..” என்று சிபி அசடு வழிந்தான்.

சிரித்தவள், படுத்துக் கொள்ள… அவனும் படுத்தான்… இந்த முறை ஸ்ரீயை ஒட்டி சிபி படுத்துக் கொள்ள… அவள் இன்னும் நெருங்கிப் படுத்துக் கொள்ள… “கால் வலிக்கப் போகுது…” என்று அவன் சொல்லி முடிக்க முடியும் முன்…

விலகிப் படுத்து, “என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?” என்ற பாவனையோடு அவனைப் பார்த்து முறைக்க…

“என்னைப் பேசி முடிக்க விடு!” என்றவன்… திரும்பவும் அவளுடன் நெருங்கிப் படுத்து, “காலைத் தூக்கி என் மேல போட்டுக்கோ! வலிக்காது!” என்று சொல்ல…

“நீயா பேசியது!” என்பதுப் போல ஜெயஸ்ரீப் பார்க்க…

“அய்யே நானா தான் சொல்றேன், நீ முறைச்சதால இல்லை” என்று சிபி பாவம் போல சொல்ல... மெல்லிய புன்னகை ஸ்ரீயின் முகத்தில். நெருங்கிப் படுத்தவளால் காலைத் தூக்கி மேல போட முடியவில்லை... கூச்சம் தடுத்தது...

“வெறும் வாய்ப் பேச்சு தான்!” என்று சிபி சொல்லிய போதும் ஜெயஸ்ரீ போடவில்லை...

வெட்கத்தில் முகத்தை திருப்ப.. புன்னகைத்த சிபி... “போட்டுக்கோ, இல்லைன்னா தூக்கத்துல நான் போட்டுடுவேன் வேணும்னே” என்று அவளின் காதில் கிசுகிசுப்பாக சொல்ல...

கண்களில் மின்னிய வெட்கத்தோடு, அவன் மீது வாகாக கால்களை போட்டவள்... மிகுந்த நிம்மதியோடு உறங்க முற்பட...

ஆதரவாக அவளின் மீது கைகளை போட்டுக் கொண்டு சிபியும் உறங்க முற்பட...

“ஐயோ! இதுக்கே இவ்வளவு பில்ட் அப்பா... அதெல்லாம் ஸ்பீடா சுத்த முடியாது, உங்களுக்கு இவ்வளவு காத்து போதும்” என்று மேலே இருந்து அவர்களைப் பார்த்து சுற்றிக்கொண்டிருந்த காற்றாடி கூட அவர்களைப் பார்த்து சுழற்றலைக் குறைக்க...

“நீ காத்து கொடுத்தா என்ன? கொடுக்கலைன்னா என்ன? அவங்க மனசுல நிறைஞ்சு இருக்குற சந்தோஷம் அவங்க தூக்கத்தைக் கலைக்காது...” என்று இயற்கைச் சொன்னது.

ஆம்! என்னதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும், மனதின் பாரம் ஒரு நிம்மதியான உறக்கத்தைக் கொடுக்காது... ஆனால் மனதின் நிம்மதி வெற்றுத் தரையிலும் அப்படி ஒரு ஆழ்ந்த தூக்கத்தைக் கொடுக்கும்.

அப்படித்தான் கணவனும் மனைவியுமாகி விட்ட போதிலும்... இதுவரை இல்லாத ஒரு அமைதியை இருவரின் மனமும் தாங்கி நிற்க... உடலின் தேவைகள் கூட பின் செல்ல.. ஒரு நிம்மதியான உறக்கம் அமைதியான முகத்தோடு இருவரிடமும்.

அதுவே சொன்னது அவர்களின் வாழ்க்கை செழிப்பாக எந்த தடைகளும்

இன்றி உணராத காதலை உணர்த்திவிடும் நோக்கோடு செல்லுமென்று.

## அத்தியாயம் இருபத்தி ஒன்பது :

சில வருடங்களுக்குப் பிறகு...

கோவையில் ஒரு திருமண மண்டபத்தில்.. அய்யர், “பொண்ணை வரச் சொல்லுங்கோ” என்று சொல்ல... பத்மினி மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு மணமேடைக்கு அழைத்து வரப்பட்டாள்.

அதைக் கீழே அமர்ந்து... ஜெயஸ்ரீ ரசித்துக் கொண்டிருக்க, அவளின் மடியில் ஒரு வயது மகன் சத்ருகன் சமர்த்தாக அமர்ந்திருந்தான்... அருகில் இருந்த சேர்களில், சிபியின் மொத்த குடும்பமும் அமர்ந்திருந்தது, அவனைத் தவிர...

சிபி தான் அவளின் மகளின் பின் சுற்றிக் கொண்டு இருந்தானே.. ஆம், அவனின் நான்கு வயது மகள்... வானதி, மிகவும் சுட்டி என்பதை விட அவ்வளவு வாய்... ஓயாமல் அப்பாவிடம் கேள்வி கேட்டே இருப்பாள்... அவனைத் தவிர யாராலும் அவளை சமாளிக்க முடியாது என்பது தான் உண்மை. ஆம் படுத்தி எடுப்பாள்.

இப்போதும் அப்பாவிடம், “இங்க எதுக்கு இது கட்டியிருக்காங்க, நம்ம வீட்ல ஏன் இல்லை?” என்று அங்கிருந்த வாழைமரத்தைக் காட்டிக் கேட்டுக் கொண்டிருக்க... அவசரமாக அதன் பலன்களை கூகுளில் தேடிக் கொண்டிருந்தான் சிபி.

அப்போதும் வாய் தானாக, “கல்யாண வீட்டுல கட்டுவாங்க செல்லம்” என்று மகளிடம் சொல்ல..

அடுத்த கேள்வி பறந்து வந்தது, “கல்யாண வீடுன்னா என்ன?”

“ங்கே” என்று விழித்தான் சிபி.

தப்பான விளக்கங்களையோ, இல்லை ஏனோ தானோவென்று ஏதாவது ஒன்றை கொடுத்தால் ஜெயஸ்ரீ சண்டையிடுவாள். சரியான காரணம் சொல்லுங்க என்று.

மணிமேகலை இவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஆம், அவளும் ஓயாமல் சித்தப்பாவோடு தான் சுற்றுவாள்.

அதற்குள் வர்மன் வந்து, “அண்ணி கூப்பிடறாங்க” என்று சொல்ல...

“அம்மாவும் பொண்ணும் என்னை ஒரு வழியாக்கறாங்க” என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டே உள்ளே சென்றான்.

“தாலி கட்டப் போறாங்க! எங்க போனீங்க?” என்று கண்களால் ஜெயஸ்ரீ கேட்க... “கேள்வி கேட்டு என்னை ஒரு வழி பண்றா” என்றான் பாவமாக சிபி மகளைக் காட்டி.

“இவளைத் தூக்குங்க” என்று சைகை காட்டவும், மடியில் இருந்த மகளைத் தூக்கி அருகில் அமர... ஒரு விரல் உதட்டின் மேல் வைத்து மகளை அடக்கியவள்... “உட்கார்” என்று ஒரு சேரைக் காட்டவும், “முடியாது போ” என்று மழலையில் மிளிற்றி அம்மாவின் மடியில் தான் அமர்ந்தாள்.

“உன்னை மாதிரியே ரொம்ப பிடிவாதம்” என்று சிபி முணுமுணுக்க...

ஸ்ரீ ஒரு பார்வை பார்க்க, அது சொல்லாமல் சொன்னது, “உங்களை விடவா” என்பதுப் போல...

தாலி கட்டி முடித்ததும் தாரை வார்க்க... பத்மினியின் அண்ணனும் அண்ணியும் தான் நின்றனர்... ஆம்! கண்ணனும், ராதாவும்...

மறக்க... மன்னிக்க... கற்றுக் கொண்டான் சிபி... அதன் எதிரொலி பத்மினியை அவனின் அண்ணனுடன் பேச வைத்திருந்தாள் ஜெயஸ்ரீ... பின்னணி ஒன்றுமில்லை! தன் கணவனால் யாரும் மன வருத்தத்தில் இருக்கக் கூடாது என்ற எண்ணமே...

கண்ணனும் இப்போது ராகினியுடனும், ஜெயஷங்கருடனும் பேச... ஓரளவு சுமுகமான சூழ்நிலை... ராதா அவளின் அம்மாவிடமும் இப்போது பேசினாள். யாரும் பழையதை பிடித்துத் தொங்கவில்லை... சிபியின் வீட்டில் எல்லோரும் ராதவுடன் பேசினர்! ஏன் ஜெயஸ்ரீக் கூட... ஆனால் சிபி பேச மாட்டான்.

“ஏன்?” என்ற ஜெயஸ்ரீயின் கேள்விக்கு, “எனக்கு இஷ்டமில்லை! விட்டுடு!” என்பதாக சொல்ல.. அதன் பிறகு ஜெயஸ்ரீ அதைப் பற்றி பேசியதேயில்லை.

திருமணத்திற்கு பாதி செலவை வஜ்ரவேல் செய்ய, மீதிம் சிபி செய்தான். மாப்பிள்ளை தேர்வு கூட சிபி தான்! அவனுடன் பேங்கில் வேலை பார்ப்பவன்... ஆம்! சிபியின் வேலை பெர்மனன்ட் ஆகிவிட்டது! வேலை கோவையில்... காலையில் வயல் வேலை, பின்பு பேங்க் வேலை, மாலை முழுவதும் குடும்பத்துடன் என்று ஒரு திவ்யமான வாழ்க்கை தான் சிபிக்கு.

லீவ் நாட்களில் மரம் நடுதல் என்று அதுவும் ஒரு பக்கம் சென்றது. இந்த ஒரு வருடமாக பத்மினியை திருமணம் செய்யும் மாப்பிள்ளை அவன் கீழ் தான் வேலை செய்தான்.

அவனின் குணம் பார்த்து பத்மினிக்கு பொருத்தமாய் இருப்பான் என்று தோன்ற... இப்போது திருமணம் நடந்தேறிவிட்டது.

மதிய விருந்து முடிந்ததும், தனத்தையும் ராஜவேலையும் அழைத்த வஜ்ரவேல், “இனிமே நீங்க பார்த்துக்கோங்க! நாங்க கிளம்பறோம்!” என்று சொல்ல...

விரைந்து வந்த பத்மினி... “ரொம்ப நன்றிப்பா!” என்றாள்.. ஆம் அவர்கள் மூவரையும் அவர் தான் படிக்க வைக்கிறார். பத்மினி முடித்து விட்டாள், இன்னும் ராகினியும் ஜெய்சங்கரும் படித்துக் கொண்டு இருந்தனர்.

இப்போது அவளுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கின்றனர். எந்த எதிர்பார்ப்பும் பிரதிபலனும் இல்லாத உதவிகள். மிக சிலருக்கே இந்த மனப்பான்மை அமையும்.

சிரித்தவர்... “நல்லா இரும்மா!” என்று ஆசீர்வதித்துக் கிளம்பினார். அவருக்கு என்ன வேண்டும் அவரின் மகளின் சௌக்கியம் மட்டுமே வேண்டும். இப்போது அதற்கு எந்த குறையுமில்லை. ஜெயஸ்ரீ மிகவும் பிடிவாதமான் பெண்...

ஆனால் அவளை நன்கு சமாளித்து சென்றான் சிபி என்பதை விட,

அவளுக்கு மனதளவில் எந்த குறையுமின்றி பார்த்துக் கொண்டான். சிறு சிறு விஷயத்திற்கு கூட முகத்தை தூக்கி வைக்கும் மகள் சிபியோடான இந்த சில வருட வாழ்க்கையில் முகத்தை தூக்கி வைத்ததே இல்லை என்று வஜ்ரவேல் அறிந்ததே.

சத்ருகன் உறங்க ஆரம்பிக்க... சிபியும் ஜெயஸ்ரீயும் கூட கிளம்பினர். காலையில் முகூர்த்தம் முடிந்ததும், நடராஜன் குடும்பத்தினருடன் கிளம்பி விட்டார்.

அவர்களின் செல்வ நிலைக்கு இப்போது ஒரு குறையுமில்லை. எல்லாவற்றையும் சிபி சீர் செய்திருந்தான். வயலில் எல்லாம் அவன் பார்த்துக் கொண்டாலும், அப்பாவிடம் சொல்லி அவரவர்களுக்கு என பகுதி கட்ட சொல்லி... அருள் மொழியையும் வர்மனையும் கூட இப்போது அதை பார்த்துக் கொள்ளுமாறு செய்திருந்தான்.

வஜ்ரவேல் காரை எடுத்தவர், மகனும் மருமகளும் வருவதற்காக காத்திருந்தார். சிபியிடம் பைக் தான்... அதனால் திருமணத்திற்கு அவர் தான் அவர்களை அழைத்து வந்திருந்தார்.

சிபியும் ஸ்ரீயும் மகனுடன் மட்டும் வந்தனர்.

“எங்க வானதி?” என்று வஜ்ரவேல் கேட்க...

“அவ அண்ணியோட போயிட்டா மாமா! எனக்கு பதில் சொல்லி முடியலை.. என்னைவிட சலிக்காம அண்ணி அவளுக்கு பதில் சொல்றாங்க! அதான் அனுப்பிவிட்டுடேன்!” என்றான் சிபி. ஆம்! வனிதாவுடன் அனுப்பியிருந்தான்.

எல்லாம் சேர்ந்து பிடித்து இருந்தாலும், அங்கே பவானியில் இருந்து வந்த பிறகு சிபி வீட்டினருடன் சேர்ந்து இருக்கவில்லை.

தனியாக வீடு பார்த்து தான் இருந்தான். அப்பாவிடமும் அம்மாவிடமும், “இப்படியே இருக்கட்டும்பா!” என்று சொல்லிவிட.... சிபி இவ்வளவு சரியாகி வந்ததே பெரிய விஷயம் என்று அவர்களும் அதை ஏற்றுக் கொண்டனர்.

இந்த சில வருட வாழ்க்கையில்... இருவருக்கும் நல்ல புரிதல்! ஜெயஸ்ரீ

சிரமப்பட்டு பேசும் அவசியமே வரவில்லை... அவள் பேச ஆரம்பிக்கும் போதே என்ன என்று தெரிந்து கொள்வான் சிபி.

மிக சில தருணங்கள் மட்டுமே புரியாது. அவர்களின் வயலின் ஆரம்பத்தில் இருந்தது அவர்களின் வீடு... சமீபமாகத் தான் ஓட்டு வீடாக இருந்ததைத் தார்ஸ் வீடாக மாற்றியிருந்தான் சிபி... பெரிய வீடெல்லாமில்லை, ஒரு சமையலறை, ஒரு ரூம், ஒரு ஹால்... வீடு சிறியது தான்! ஆனால் அவர்களின் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக சென்றது.

வீடு வந்து விட்டு, அப்படியே சென்றார் வஜ்ரவேல். "உள்ள வாங்கப்பா!" என்று ஜெயஸ்ரீ கேட்டதற்கு கூட... "கொஞ்ச நேரம் தூங்கணும்மா..." என்று அவர் சென்று விட..

காரில் வரும் போதே சத்ருகனும் உறங்கியிருக்க... உள்ளே வந்தவுடனே சிபி அவனை படுக்கையில் சௌகர்யமாக படுக்க வைத்து நிமிர... அவனின் தொலைபேசி அடித்தது... வனிதா தான் அழைத்திருந்தாள்.

பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீயிற்கு சிரிப்பு, கண்டிப்பாக வீட்டுக்கு வருவதற்கு வானதி பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். எப்போதும் அப்படி தான்! செல்வாள்... ஆனால் ஒரு சில மணிநேரங்கள், உடனே அம்மாவிடம் போக வேண்டும் என்று ரகளை செய்து விடுவாள்.

"சிபி! உன் பொண்ணுக்கு வீட்டுக்கு வரணுமாம்! கொண்டு வந்து விடட்டுமா!" என்று கேட்க...

"அண்ணி!" என்று அலறினான்... அவனின் அலறலைப் பார்த்து இன்னும் சிரிப்பு ஜெயஸ்ரீயிற்கு,

"அண்ணி! ரெண்டு நாளா கல்யாண அலைச்சல்... எனக்கு முடியலை! நான் கொஞ்ச நேரம் தூங்கணும்! ப்ளீஸ் சமாளிங்க...!"

"நான் சொன்னா அந்தக் கத்து கத்துறா... நீயே சொல்லு!" என்று சொல்லி போனை கொடுக்க...

"செல்லம்! அப்பா இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவேன்டா.. அதுவரைக்கும் நீ மேகி அக்காவோட தோட்டத்துல இருக்குற பூ

பறிப்பியாம்!” என்று மகளுக்குப் பிடித்த வேலையை சொல்ல...

“சரிப்பா!” என்றாள் சமர்த்தாக வானதி..

வனிதாவிடம் சொல்ல... “எனக்கு இது தோணாமப் போச்சு!” என்று போனை வைக்க...

பொங்கி பொங்கி சிரித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீ... “என்ன சிரிப்பு?” என்று கடுப்பாக சிபி கேட்க...

“என்ன புத்திசாலித்தனம்? பொண்ணையும் சமாளிக்கறீங்க! கூடவே உங்க பக்கமும் அவளை இழுக்கறீங்க, உங்க தோட்ட வேலைக்கு!” என்றாள் நிறுத்தி, நிறுத்தி,

“என்ன இழுக்கறேன்?” என்று சொல்லிக் கொண்டே ஜெயஸ்ரீயை அருகில் இழுக்க...

“நான் உங்க பொண்ணைத் தான் சொன்னேன்... என்னைச் சொல்லலை”

“போறதானா, போ!” என்று சிபி சொல்ல..

“ஏன்... போக... மாட்டேனா...” என்று ஸ்ரீயின் வாய் தான் சொன்னது... உடல் அவனை இன்னும் நெருங்கி தான் நின்றது.

“இதுதான் போகிற லட்சணமா..”

“ஆமாம்!” என்பது போல ஜெயஸ்ரீயின் தலை அசைந்தது...

அவளின் இடையோடு அணைத்துப் பிடித்தவன், “எங்க போகற?” என்ற சிபியின் கேள்விக்கு...

“உங்க கிட்ட!” என்று அவனைத் தொட்டுக் காட்டினாள்... கூடவே, “நீங்க என்னை விட்டுட்டுப் போனாலும்” என்ற வார்த்தையும் வர இருக்க... அப்படியே அடக்கினாள்.

சிபியின் கருப்புப் பக்கங்கள் அவை... அவனே நினைக்கப் பிரியப்படாத ஒன்று... அது குறித்து அவனுக்கு மிகுந்த குற்ற உணர்ச்சி. இருவரும்

சேர்ந்து வாழ ஆரம்பித்த அந்த ஆரம்ப நாட்களில் ஒரு கட்டத்தில் புரிந்தவள், அதைப் பற்றி பேசவேயில்லை.

அப்போதும் வானதி பிறந்த போது சிபி கேட்டது தான்... “நான் விட்டுட்டுப் போனேன்னு என் பொண்ணுக்குத் தெரியக் கூடாது, எவ்வளவு கோபம் வந்தாலும் நீ அதை மட்டும் சொல்லக் கூடாது... உன் பார்வையில் நான் எப்படி இருக்கேன்னு தெரியலை... ஆனா போனேன்றது ரொம்ப கீழான ஒரு செயல், என் பொண்ணு பார்வையிலும் நான் கீழ போக விரும்பலை” என்று...

சிபி போனதை விட, அவன் தன்னை நினைக்கவேயில்லை என்பது இன்னும் வருத்தம் ஜெயஸ்ரீயிற்கு... ஆனால் மாறுவது தானே மனம்.

அதுவும் ஒரு சமயம், “நான் சாமியாரா போயிடலாமான்னு உன்னை விட்டுப் போன சமயம் நினைச்சிருக்கேன்” என்று சொன்னது அவ்வளவு பயத்தைக் கொடுத்தது ஸ்ரீக்கு... சிபி சொன்ன விதமே அதைப் பற்றி தீவிரமாக அவன் யோசித்து இருக்கிறான் என்று புரிந்தது. அதன் பிறகு ஸ்ரீ ஏன் சிபியிடம் அதைப் பற்றி ஏன் பேசப் பேசுகிறாள்.

இப்போது க்ஷணமும் விடாமல் நினைக்கும் மனிதனை, “நீ முன்பு என்னை நினைக்கவில்லை” என்று சொல்லிக் குத்திக் காட்டுவது... என்றுமே இருவருக்கும் ஒரு நிம்மதியை தராது.

திக்கி திணறி என்றாலும், “ப்ச்! என்ன நீங்க? கண்டிப்பா என் பிள்ளைகளுக்கு அவங்கப்பா ஹீரோ தான்... அதை நான் என்னைக்கும் குறைய விட மாட்டேன்” என்று பதில் சொன்னாள்.

அப்போதும் வெகு சில நாட்களில் ஒரு தடுமாற்றம் சிபியின் செய்கையில் இருக்கும் தன் செயல் குறித்து.. அந்த நினைவே வராத படி ஜெயஸ்ரீ அவனை வெளிக் கொணர்ந்தாள்.

இப்போது ஓங்கிய நினைவுகளை ஒதுக்கி தள்ளி சிபியை பார்த்துக் கொண்டே, “இங்கே” என்று மறுபடியும் அவனின் இதயம் இருந்த பகுதியைக் காட்ட...

“அதான் இங்க தானே இருக்க...” என்று சிபி இன்னும் நெருங்கி நிற்க...

“அப்படியா!” என்பது போல ஒரு அறியாத பாவனையை முகம் காட்டியது.

அவளின் பாவனையைப் பார்த்தவன்… சிரித்து விட்டான்.. ஸ்ரீயை வசீகரிக்கும் சிரிப்பு.

“உட்காரு!” என்று சொல்லி அவளின் ஷூவைக் கழற்றவும், அவனின் செய்கையை விடாமல் பார்த்திருந்தாள். பார்த்து, பார்த்து செய்கிறார்… எப்படி இவரால் முடிகிறது என்று… அதுவும் பிரசவத்தின் போது அவ்வளவு நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

அம்மா இல்லாத… அம்மா வீடு… தனியாக வளர்ந்தும் பழக்கப்பட்டு விட்டாள்… குழந்தையை… சிபி அம்மா, அண்ணி என்று எல்லோரும் பார்த்துக் கொண்டாலும், அவளின் தேவைகளுக்கு சிபி தான் வேண்டும்.

அவளுக்குத் தானாக செய்வதும் சிரமம், சில வேலைகள். ஆனால் உதவிக்கு யாரும் வருவதை எப்போதும் விரும்பமாட்டாள்… அதை அடுத்தவர் உணராமல்… யாருக்கும் அவள் இப்படித்தான் என்று தெரிய வராமலேயே சிபி சமாளித்து விட்டான்.

அதெல்லாம் ஞாபகம் வர… “ரொம்ப சிரமப்படுத்தறேனா உங்களை… நானே செஞ்சிக்குவேன்! நீங்க விட மாட்டேங்கறீங்க!” என்று திக்கித் திணறி சொல்லி… அந்த ஸ்ட்ராபை அவளே கழற்றப் போக…

“அடி வாங்கப் போற நீ…” என்று அவளின் கைகளை விலக்கினான்.

“இல்லை! சில சமயம் தோணுது! இப்படி உங்களை டார்ச்சர் பண்ணினா… எல்லா வேலையும் உங்களை செய்ய வெச்சா! உங்களுக்கு என்னைப் பிடிக்காம போயிடுமோன்னு, சலிப்பு தட்டிடுமோன்னு.. எல்லாரும் அவங்க கணவரை அவ்வளவு நல்லா கவனிச்சிக்கிறாங்க! ஆனா நான் அந்த மாதிரி பார்த்துப் பார்த்து எதுவும் செய்யறதில்லை”.

“என்ன இது உளறல்! என்ன செய்யறாங்க எல்லோரும்? நீ என்ன செய்யறதில்லை!”.

“அது எனக்கு சொல்லத் தெரியலை… நான் எல்லோர் மாதிரியும் ஓடி ஆடி எந்த வேலையும் செய்யறது இல்லை… சரளமா பேசறது இல்லை”

என்றாள் திக்கித் திக்கி…

“நான் செய்ய நினைக்கறது, எனக்கு சிரமம் குடுக்கக் கூடாதுன்னு நீங்களே செய்யறீங்க… என்னால குழந்தைகளை தூக்கிட்டு கூட நடக்க முடியலை”.

“ஏய் மக்கு! என்ன பேச்சு இது! நான் என்ன யாருக்காவது உதவி செய்யறனா என்ன? நீ இப்படிப் பாராட்ட இல்லை ஃபீல் பண்ணிப் பேச… நான் என் பொண்டாட்டி புள்ளைங்களுக்கு செய்யறேன்.. அப்போ என்ன அர்த்தம்? எனக்காக செய்யறேன்..! புரிஞ்சதா…!”

“எனக்கு உன்கிட்ட எந்தக் குறையுமில்லை… எனக்கு இந்த எல்லா வேலையும் பிடிச்சிருக்கு… தயவு செஞ்சு இந்த மாதிரி பேசி என்னவோ நான் பெருசா செய்யற மாதிரி ஒரு பில்ட் அப் இல்லை ஃபீல் கொடுக்காத… வேற ஏதாவது கொடு!” என்று அவளைக் காதலாக பார்த்துக் கொண்டே அவளின் உதடுகளை வருட…

“வேற என்ன கொடுக்க…!” என்றாள் மயங்கிய குரலில்.

“நீயே முடிவு பண்ணு…!”

“மச்சானோட சேர்ந்து… ஸ்ரீயும் லேட் பிக் அப் ஆகிட்டா… அவளுக்குப் புரியலை…” என்றாள் நிறுத்தி…

“என்ன பண்ணணும்…”… “புரியவைக்கணும்” என்று டோரா புஜ்ஜி ஸ்டைலில் சிபி சொல்லவும் முகம் சிவந்தாள். மகளுக்கு அந்த மாதிரி கதை சொல்லிச் சொல்லி சிபிக்குப் பழக்கம்.

இதெல்லாம் செய்யச் சொல்வதும் ஜெயஸ்ரீ தான்! எங்கே தன் மகளுக்கும் தன்னைப் போல பேச்சு திக்குமோ என்ற பயம். எந்த பயத்திற்கும் அவசியமேயில்லாமல் அவளின் மகள் பேச்சாலேயே கலக்கிக் கொண்டிருந்தாள்.

மறுபடியும், “என்ன பண்ணணும்! புரிய வைக்கணும்!” என்று சிபி சொல்ல…

மெதுவாக தலையில் தட்டிக் கொண்டாள் ஜெயஸ்ரீ…

“என்ன இப்போ?” என்று சிபி அதட்ட..

“நீங்க... இதை... சொல்லி முடிக்கறதுக்குள்ள அவன் எழுந்துடுவான்” என்று சத்ருகனைக் காட்டினாள்...

“உன்னை...” என்று மறுபடியும் ஸ்ரீயை வளைத்துப் பிடித்தான் சிபி...

“கொஞ்ச நேரம் தூங்கறேன்னு வானதியை அங்க விட்டு வெச்சிருக்கோம்!” என்று ஸ்ரீ, நிறுத்தி நிறுத்தி சொல்ல..

பிடித்திருந்த மனைவியை விட்டவன்... “இவன் எழறதுகுள்ள கூட்டிட்டு வந்துடறேன்! இல்லைன்னா உனக்கு சிரமம்... இப்போ இவனும் ரொம்ப ஓடறான்” என்று இப்போது தான் இரண்டடி எடுத்து வைத்திருக்கும் மகனைக் காட்டிச் சொல்ல...

சிரித்துக் கொண்டே, “போய் கூட்டிட்டு வந்துடுங்க!” என்று ஸ்ரீயும் சொல்லக் கிளம்பினான்.

இதுதானே அன்றாட வாழ்க்கையின் நிதர்சனங்கள்! எப்போதும் கணவனும் மனைவியும் என்ன கொஞ்சிக்கொண்டா இருக்கிறார்கள்.. இல்லையே.. கடமைகள் தானே முன்னிறுத்தப் படுகின்றன...

அதுவும் பிள்ளைகள் என்று வரும்போது எதுவாகினும் பின் சென்று விடும். அவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை.

அதையும் மீறி என் கணவன், என் மனைவி, என்ற சொந்தம் கொடுக்கும் பந்தம் மிக மிக அதிகம். புரிதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த சொந்தம் கொடுக்கும் பிணைப்பு தான் பலருடைய வாழ்க்கையைத் தங்கு தடையின்றி பயணிக்கச் செய்கிறது.

மெதுவாக வெளிக் கதவை தாழிட ஜெயஸ்ரீ வர... “நான் வர்றதுக்கு கொஞ்சம் நேரம் ஆகும்! எப்போ வருவேன்னு பார்த்துட்டே இருக்காத! தூங்கு!” என்று ஒரு அதட்டல் போட்டு சிபி கிளம்பினான்...

“என்ன மாறினாலும், இவரின் அதட்டல் மாறாது!” என்ற புன்னகையோடு, உள்ளே வந்து மகனை அணைத்தவாறு படுத்துக் கொண்டாள்.

மனம் முழுவதும் சிபி சக்ரவர்த்தி மட்டுமே!

“வாழ்க்கையில் எனக்கு சில குறைகளைக் கொடுத்த கடவுள்.. அந்தக் குறைகள் இனி குறைகளாகத் தெரியவிடாமல், இவரை எனக்கு வாழ்க்கையில் கொடுத்திருக்கிறாரோ!” என்று தான் தோன்றியது. சிபியை நினைக்க நினைக்க முகம் தானாகப் புன்னகையில் மலர்ந்தது.

என் வாழ்வில் நீ வந்தது விதியானால் நீ எந்தன் உயிரன்றோ

அவர்களின் இல்லறம் சிறந்து... நல்லறம் பெருக.. இயற்கை துணை நிற்கும்.

( நிறைவடைந்தது )